Koviloor Digital Library

திருமலை திருப்பதி புராணம்

பிரேமா™ பிரசுரம்

Acc. No. 26437
01:38



Koviloor Digital Library

Koviloor Digital Library

34-1



திருமலை திருப்பதி புராணம்

தயாரிப்பு:

ரவி ராமநாதன்

எழுதியவர்:

தூர்க்காதாஸ் எஸ்.கே. ஸ்வாமி

KOVILOOR ANDAVAR LIBRARY. KOVILOOR

A. No. 26437

பிரேமா™

பிரசுரம்

59, ஆற்காடு சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

✆ :24800325, 24833180, 24811755.
Website: www.premapirasuram.com


Koviloor Digital Library

பிரேமா பிரசுரம் - 371

1952 ஸ்தாபிக்கப்பட்டது

முதற் பதிப்பு : மார்ச் 2005
இரண்டாம் பதிப்பு : நவம்பர் 2011
மூன்றாம் பதிப்பு : நவம்பர் 2015

© சகல உரிமைகளும் பெற்றது



விலை ரூ.80/-

கணிப்பொறி வடிவமைப்பு : ஏ.ஆர். எண்டர்பிரைசஸ், சென்னை - 24.
அச்சிட்டோர் : காரிஸ் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 29

Koviloor Digital Library

34-1

ஸ்ரீ

ஹரி ஓம்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம

ஸ்ரீநிவாசன் திருவடிகளே சரணம்



செடியாய வல்வினைகள்
தீர்க்கும் திருமாலே,
நெடியானே! வேங்கடவா!
நின்கோயி லின்வாசல்,
அடியாரும் வானவரு
மரம்பையரும் கிடந்தியங்கும்,
படியாய்க் கிடந்துன்
பவளவாய் காண்பேனே.

– ஸ்ரீகுலசேகரப் பெருமாள்

Koviloor Digital Library

பொருளடக்கம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

1. திருமலை திருப்பதி

தமிழகத்தின் வட எல்லைப் பகுதியாக விளங்கிய திரு வேங்கடம் என வழங்கும் திருமலை திருப்பதியின் வரலாறும் புராணமும் இன்றுவரை தெளிவாக எந்த நூலிலும் எழுதப்பெறவில்லை.

செல்வம் கொழிக்கும் திருமலை ஒன்றைத்தான், உலகிலுள்ள மலைகள் அனைத்தையும் விடத் திருமகள் வாழும் மலை என்ற காரணத்தால் திருமலை என்று வழங்குகிறோம். தல புராணங்களில், திருமலை ஆதிசேஷனின் அம்சம் எனக் கூறப்பட்டுள்ளன. ஏழுமலைகள் தொடர்பாக அமைந்துள்ள திருமலைத் தெய்வத்தை ஏழுமலையாண்டவன் எனவும் வழங்குகிறோம். ஸ்ரீநிவாஸப் பெருமாள் எனவும் திருமகள் நாயகன் எனவும் போற்றுகிறோம்.

தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று புகழும் தமிழகத்தில் சைவத் திருமுறைகள் சிறப்புற்று, சைவம் தழைத்து வந்த காலத்தில் தமிழகத்தில் தோன்றிய ஸ்ரீமத் ராமானுஜர் ஸ்ரீவைஷ்ணவத்தைப் பரவச் செய்யப் பெரிதும் முயன்று வந்தார். அவர் வாழ்ந்து வந்த காலத்தில் தமிழகத்தில் குலோத்துங்க சோழன் மிகத்தீவிரமாக சைவத்தை வளர்த்து வந்தான். ஸ்ரீமத்ராமானுஜர் திருவரங்கத்தில் வசித்து வந்தார். சைவத்தைத் தவிர வேறு மதங்களே தமிழகத்தில் தலைதூக்காத வண்ணம் செய்த குலோத்துங்க மன்னன், ஸ்ரீவைஷ்ணவர்களையும் சைவர்களையும் தனது அரசவைக்கு அழைத்துத் தர்க்கவாதஞ்செய்வித்து, கூரத்தாழ்வார் என்ற இராமானுஜரது மாணவரைத் தண்டித்துவிட்டான். அதனால் இராமானுஜர் வடநாடு நோக்கிச் சென்றதாக

Koviloor Digital Library

வரலாறு கூறுகிறது. தமிழகத்தில் குலோத்துங்க சோழன், தில்லையிலிருந்த கோவிந்தராசர் சிலையைக் கடலில் தூக்கியெறியச் செய்து, "அவர்க்கு இடம் கடலே யாதலின் அவர் அங்கிருத்தலே நலம்" என்று கூறி தில்லையிலிருந்த சில வைணவர்களைத் துன்புறுத்தி வந்ததாகத் 'திருமலை ஒழுகு' என்ற நூல் கூறுகிறது. இந்த நிகழ்ச்சி நிகழ்ந்தது கி.பி. 1082. அப்போது ஸ்ரீமத் ராமானுஜருக்கு வயது நாற்பது.

அந்தக் காலம் வடநாட்டிலும் ஆந்திரக் கர்நாடகப் பகுதியிலும் ஸ்ரீவைஷ்ணவ மதம் பரவியிருந்த காலம். அதைவிட வடநாட்டிலிருந்த சைவ வைஷ்ணவ சமயங்களைச் சார்ந்த கோயில்களை எல்லாம் டெல்லியை ஆண்டு வந்த முகம்மதிய அரசர்கள், தங்கள் வீரர்களை அனுப்பி இடித்துக் கொள்ளையடித்து ஆக்ரமித்து வந்த காலம். விஜய நகரப் பேரரசர்கள் பெரும்பாலும் ஸ்ரீவைஷ்ணவர்களாக இருந்தகாலம் அது! எனவே, ஸ்ரீமத்ராமானுஜர், ஸ்ரீவைஷ்ணவத்தைத் தழைக்கச் செய்ய கர்நாடகப் பகுதிக்குச் சென்றார். அதன்பின்னர் அதுபோலவே, திருமலை திருப்பதிக்கும் சென்றார்.

அப்போது திருமலையில் உள்ள தெய்வத்தைக் குறித்து, அங்குள்ள தெய்வம் முருகனா, விஷ்ணுவா, சிவனா என்ற கேள்விகள் எழுந்தன. சைவர்கள் முருகன் என்றனர்; வைஷ்ணவர்கள் விஷ்ணு என்று சாதித்தனர்; திருவாழ்வார்களே, திருமலைத் தெய்வத்தை, நீள்முடியும் தாழ்உடையும் கொண்ட தெய்வமாகப் பாடிப் புகழ்ந்தனர். அந்தக் காலத்தில் திருமலைப் பெருமானை, ஸ்ரீவிஷ்ணுதான் என்று நிலைநிறுத்தியவர் ஸ்ரீமத் ராமானுஜர்; அவருக்கு அக்காலத்தில் உதவியாக இருந்தவன் கட்டியம் யாதவ நாராயணன் என்ற சிற்றரசன். வைரச்சுரங்கங்களுக்கு அதிபதிகளாக விளங்கிய சந்திரகிரி அரசர்கள் பக்கபலமாக இருந்தனர்.

Koviloor Digital Library

எனவே, திருவேங்கடத்தில் ஸ்ரீவைஷ்ணவத்தை நிலைநிறுத்திய ஸ்ரீமத்ராமானுஜருக்கும் திருவேங்கடப் பெருமானின் திவ்வியத்திருத்தல வரலாற்றுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. தென்னாட்டில் சில நூற்றாண்டுகள் சிறப்பாக வாழ்ந்துவந்த பேரரசர்கள் எல்லாம் திருமலை தெய்வத்தை வணங்கியும் திருப்பணிக் கைங்கரியங்கள் பலவற்றையும் செய்துமுள்ளனர். எனினும் திருமலைத் திருப்பதி ஆகிய ஈரிடங்களிலும் தாம் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடித்து இராமானுஜர் திருவரங்கம் சென்றருளினார் என்று திருமலை ஒழுகு என்ற கல்வெட்டு ஆய்வு நூல் கூறுகிறது.

2. ஸ்ரீமத்ராமானுஜரும் திருமலைத் தெய்வமும்

ஸ்ரீமத் இராமானுஜர், திருமலைக்கு மூன்று முறைகள் எழுந்தருளினார். முதல்முறை, திருமலை நம்பி என்ற அவரது அம்மானிடம் வால்மீகி இராமாயணப் பாடம் கேட்பதற்குச் சென்றார். அப்போது அவர் மலையடிவாரத்திலேயே தங்கியிருந்தார். ஆழ்வார்கள், திருமலையை மிதித்து ஏறுவதால், அந்தப் புனிதமலையின் தூய்மை கெட்டுவிடும் என்று அஞ்சி, மலையின் அடிவாரத்திலிருந்தே பெருமாளை மங்களாசாசனம் செய்தருளினார்கள் என்பதைக் கேள்வியுற்று இராமானுஜரும், நாள்தோறும் திருமலை மேல் கால்வைத்து ஏறுவதற்கு அஞ்சி அடிவாரத்திலேயே இருக்க திருமலை நம்பியே தினந்தோறும் திருமலையினின்று இறங்கி வந்து ஓராண்டுக்காலம் இராமானுஜருக்கு வால்மீகி இராமாயணத்தைக் கற்பித்தருளினார்.

இரண்டாவது முறையாக இராமானுஜர் திருமலைத்திருப்பதிக்குச் சென்ற கி.பி. பன்னிரண்டாம்

Koviloor Digital Library

நூற்றாண்டின் துவக்கத்திலிருந்துதான், திருமலை, ஸ்ரீவைணவத் திருக் கோயிலாகவும் வைணவத்தலமாகவும் விளங்கலாயிற்று. அப்போது திருவேங்கடமுடையானைச் சைவர்கள் ஸ்ரீசுப்பிரமணியக் கடவுள் என்று உரிமை கொண்டாடினர். எனவே சைவர்களும் வைணவர்களும் திருவேங்கடமுடையானைத் தத்தமது தெய்வமென வாதித்தபோது வேங்கடத்து அப்பனுக்குத் திருவாழித் திருச்சங்குகளைச் சாத்தியருளுவதற்காகவும் வேறு பல சீர்திருத்தங்களைச் செய்வதற்காகவுமே இராமானுஜர் திருமலைக்கு எழுந்தருளினார்.

திருவேங்கடமுடையானைச் சைவர்கள் சுப்பிரமணியக் கடவுள் என கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் மட்டுமே உரிமை கொண்டாடத் தலைப்பட்டனர். அதற்கு முன்னர் அந்தப் பிரச்சனை எழவில்லை. அதற்கு முன்பும் திருவேங்கடமுடையான் திருக்கரங்களில் சங்கு சக்கரங்கள் இல்லாமலிருந்தும் இந்த உரிமை வழக்கு ஏற்படாமலேயே இருந்தது. எல்லாமதத்தைச் சேர்ந்தவர்களும் அப்பெருமானைத் திருமால் என்றே போற்றி வணங்கி வந்தார்கள். அப்படியிருக்க இராமானுஜர் காலத்தில் மட்டும் இந்த வழக்கு ஏன் நிகழ்ந்தது? எனின், வைகாநச அர்ச்சகர்கள் அக்காலத்திய அரசனால் தண்டிக்கப்பெற்று, வெறுப்புற்று வேங்கடவனுக்குப் பூஜை முதலியவற்றைச் செய்யாமல் தவிர்த்திருந்தனர். அதனால் சைவர்கள் அந்தச் சமயத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தீர்மானித்தார்கள். குலோத்துங்க சோழன் ஆழ்ந்த சைவப்பற்றுடையவனாகையினாலே மற்ற சமயங்களைத் தாழ்வு படுத்தியும் அந்தச் சமயங்களைச் சேர்ந்தவர்களைத் துன்புறுத்தியும், மக்கள் பலருக்கும் சைவசமயத்தில் ஊக்கம் உண்டாகுமாறு செய்தும்

Koviloor Digital Library

வந்தான். ஆகையால் காளத்தி மலைச் சைவர்கள் அரசனது ஆதரவு தங்கள்பால் உள்ளது என்று நினைத்து திருவேங்கடமுடையானை முருக்ன் என்றனர். இதற்காக அவர்கள் வழக்கிட்டு வாதாடினர்.

இராமானுஜர் இந்த வழக்கினைத் தீர்த்துத் திருவேங்கடமுடையானைத் திருமாலே என்று நிருபிக்க முனைந்தார். முருகன் தவஞ்செய்ததாகக் கூறப்படும் இடம் குமாரதாரை என்ற தீர்த்தக்கரையில் இருந்திருக்கக்கூடும். குன்று தோறாடும் குமரனது புகழைப் பாடிய அருணகிரிநாதரும் ஆழ்வாராதிகளைப்



Koviloor Digital Library

போலவே, திரு வேங்கடமலையில் உறையும் பெருமானைத் திருமாலே என்று தமது திருப்புகழில் பாடியுள்ளார். இதனை,

உபசாந்த வித்த குருகுல
பவ பாண்ட வர்க்கு வரதன்மை
உருவோன்ப்ர சித்த நெடியவன்
ரிஷிகேசன்
உலகீன்ற பச்சை யுமையணன்
வட வேங்க டத்திலுறைபவன்
உயர்சார்ங்க சக்ர கரதலன்
மருகோனே

என்று திருப்புகழிலிருந்தும் அறியலாம்.

இவ்வாறு திருமலையிலும் திருப்பதியிலும் ராமானுஜர் செய்தருளிய சீர்திருத்தங்களுக்கும் புதிய வகையில் கோயில் திருப்பணிகளைச் செய்வதற்கும் பெருந்துணையாக இருந்த அரசன் கட்டியம் யாதவராயன் என்பவனாகும். இவன் சோழமன்னனுக்கு அடங்கிய சிற்றரசன். நாராயண வனத்தைத் தலைநகராகக் கொண்டு, அப்பகுதியை ஆண்டுவந்தான். இராமானுஜரது பெருமைகளை அறிந்து அவருக்கு சீடனாயினன். இவனது காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் துவக்கம் என்பது கல்வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றது. ராமானுஜரது சீடனாக விளங்கிய கட்டியம் யாதவராயன் கட்டித்தேவன் என்றும் வழங்கப்படுகின்றான். அவன், இராமானுஜரின் சீடனாகிய பிறகுதான் யாதவநாராயணன் என்ற பெயரைப் பெற்றனன். திருமலையிலும் திருப்பதியிலும் ராமானுஜர் செய்த திருப்பணிகள் அனைத்துக்கும் அவனே துணைபுரிந்தவன். அவன்தான் தன் ஆசார்யர் கட்டளைகளை நிறைவேற்றியவன்.

Koviloor Digital Library

திருமலையில் இராமானுஜர் செய்தருளிய திருத்தங்களும் புதிய ஏற்பாடுகளும் பலப்பல. அவற்றுள் மிகவும் முக்கியமான நிகழ்ச்சி, வரலாற்றிலே குறிப்பிடத்தக்க சம்பவமாகத் திகழ்வது திருவேங்கடத்திலிருந்த திருப்பதி தெய்வத்தைச் சங்காழி தரிக்கச் செய்தது. ஆனால் அதற்கு முன்பு, எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே, அந்தத் தெய்வம் சங்கும் சக்கரமும்தான், தரித்திருந்தது. ஆனால் அது ஆண் தெய்வமாக அல்ல; பெண் தெய்வமாகத்தான் இருந்தது. விஷ்ணுவின் சக்தியான, விஷ்ணு மாயை விஷ்ணு துர்க்கையாக விளங்கினாள். இதனையே, (பகையணங்கு) என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

சிலப்பதிகாரத்தில்,

வீங்குநீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்குயர் மலயத்(து) உச்சி மீமிசை
விரிகதிர் ஒராயிரும் திங்களும் விளங்கி
இருமருவ(டு) ஓங்கிய இடைநிலைத்தானத்து
மின்னுக்கோடி உடுத்து, விளங்குவில்பூண்டு
நன்னிற மேகம் நின்றது போலப்
பகையணங்கு ஆழியும் பால்வெண்சங்கமும்
தகைபெறு தாமரைக் கையினில் ஏந்தி
நலங்கிளர் ஆரம் மார்பிற்பூண்டு,
பொலம்பூ ஆடையில் பொலிந்து தோன்றிச்
செங்கண் நெடியோள் நின்ற வண்ணமும்

என்று மூல நூல் ஏட்டுப் பிரதிகளில் இருந்திருக்க வேண்டும். நெடியோள் என்பது நெடியோன் ஆகியது இடைச் செருகல். திருப்பதி மூலத்தானத்தில் அமைந்திருந்த தெய்வத்தின் திருக்கோலம் ‘கொற்றவை’ என்று சொல்லும் நூல், (பகையணங்கு) ஆகும். அதனால்தான் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள்,

Koviloor Digital Library

"பகையணங்கு, ஆழியும் பால்வெண்சங்கமும்
தகைபெறு தாமரைக் கையினில் ஏந்தி,
நலங்கி[ர் ஆரம் மார்பிற்பூண்டு
பொலம்பூவாடையில் பொலிந்து தோன்றி

என்று கூறுகிறார். பொலம் பூவாடை அணிவது பெண்தெய்வம். பெண் தெய்வத்தைப் 'பூவாடைக்காரி' என்று சொல்வது சொல் வழக்கில் உள்ளது. ஆணாக இருந்தால் அவர் 'பொலம் பாண் ஆடை' என்றிருப்பார்.

3. இராமனுஜரின் தொண்டு

தமிழ் கூறும் நல்லுலகம் என்ற எல்லைக்கு உரியதாக, வடவேங்கடமும் தெற்கில் கன்னியாகுமரியும் இருந்திருக்கிறது. வடவெல்லைக்கு விஷ்ணுதுர்க்கை என வழங்கும் கொற்றவை; தெற்கே கன்னியாகுமரி, மேற்கிலும் கிழக்கிலும் பகவதி என்ற முறையில் தமிழகத்தின் எல்லைகளுக்குக் காவல் தெய்வங்கள் இருந்திருக்கின்றன.

இப்படியிருக்க சைவர்கள் முருகன் என்றும் வடவேங்கடத்துத் தெய்வத்தை திருப்பதிப் பெருமாள் என்றுதான் அழைக்கின்றனரே தவிர பெருமான் என்றழைப்பதில்லை. தமிழறியும் பெருமாள் என்று ஒரு பெண்பாற்புலவர் தமிழகத்தில் சிறப்புற்று விளங்கியதாக வரலாறு உள்ளது. ஆகவே இத்தகைய கேள்விகளுக் குரிய விவரத்திற்குரியதாக திருவேங்கடத்துத் தெய்வத்தினை, சங்கும் சக்கரமும் தரிக்கச் செய்து வைத்த நிகழ்ச்சி வரலாற்றிலே முக்கியத்துவம் உடையது!

கட்டியம் யாதவநாராயணன் என்பவன் ஸ்ரீமத் ராமானுஜரின் சீடனாக இருந்தகாலத்தில் தமிழகத்தில்

Koviloor Digital Library

குலோத்துங்கசோழன் ஆட்சி நடைபெற்று வந்தது. கட்டியம் யாதவராயன் என்பவன் சோழராஜ்யத்தின் ஒரு அதிகாரியாகத் திகழ்ந்தவன்.

அந்தக் காலத்திலே, சில சைவ ஜனங்கள் அந்த தேசாதிபதியின் ஆஸ்தானத்திலே தங்கள் தேவதையான குமார ஸ்வாமியானவர் இந்த மலையிலே வந்து தவம் செய்கிறார், என்று வாமன புராணத்திலே ஸ்ரீ வேங்கடாசல மகாத்மியத்தில், கிருகியாத்யாயத்திலே விஸ்தாரமாக இருக்கையாலே "இந்தக் கோனேரிக் கரையில் இருக்கும் ஸ்வாமியானவர் குமாரஸ்வாமியே ஆகும். இவர் தவம் பண்ணுகிறவர். ஆகையாலே, அவராயுதங்களான பாசாங் குசங்கள் இல்லையென்றும் ஸ்வாமியென்னும் பெயரையுடைய சுப்பிரமணியன் பேராலே, இந்தத் தீர்த்தத்துக்கு ஸ்வாமி புஷ்கரிணி என்று பெயருண்டாகியது என்றும் இந்தப் பர்வதம் சிவக்ஷேத்திரம் என்றும் நடுவில் சில வைஷ்ணவர்கள் கூடி ராஜபுகழ் பாடிக் கொண்டு, விஷ்ணு விக்ரகங்களைப் பண்ணிக் கொண்டு வந்து கோயிலிலே வைத்து உத்ஸவாதிக்கம் செய்தார்கள்'' என்றும் வாதிட்டனர்.

அப்போது ஸ்தலத்திலே அதை எதிர்த்து வாதிடும் பெரியோர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் அங்கு இல்லாமையினாலே, இருந்தவர்கள் அரசவைக்குப் போய்ப் புராணர்த்தங்களைச் சொல்லி, மூலத்தானத்தில் இருக்கும் தெய்வத்தை விஷ்ணுவென்று நிர்வகிக்க முடியாமல் அசக்தர்களாக, கோயிலில் எழுந்தருளியிருந்த எம்பெருமானார் சந்நிதிக்கு இந்த விர்த்தாந்தத்தை எழுதியனுப்ப, எம்பெருமானாரும் இதைக் கேட்டருளி விரைவாக திருப்பதிக்கு எழுந்தருளிச் சென்று, தேசாதிபதியை ஆசீர்வதித்து, அஷ்டாதச புராணங்களில் வேங்க்டாசல விஷயமான புராணங்களிலிருக்கிற

Koviloor Digital Library

வேங்கடாசல மகிமைக்குரிய வசனங்கள் பூர்வோத்திர விரோதமில்லாமல், ஒரு பொருளுக்கு இயைந்தும்படியாக உபன்யாசம் செய்து, அவரே ஸ்ரீ மகாவிஷ்ணு என்று அருளிச் செய்தார்.

அரசனும் அதைக்கேட்டு, புராணவசனங்களில் ஒரு நிச்சயமுமில்லாமல் மத்யஸ்தனாக இருக்க ஸ்ரீமத் இராமானுஜர், அரசனான யாதவராயனை நோக்கி, "கலியுகத்தில் ஸ்வாமியானவர், தம்முடைய பக்தனான தொண்டைமான் சக்கரவர்த்திக்கு, சத்ரு சம்ஹார்த்தமாகச் சங்கு சக்கரங்களைக் கொடுத்தாரென்று துவங்கி இப்போது திருவாழி திருச்சங்கின்றியே இருக்கிறார் என்று விசேஷித்த புராணர்த்தத்தை அருளிச் செய்தார். அப்போது எம்பெருமானார் பிரத்யக்ஷமாகவே ஒரு தீர்வு உண்டாகும்படி ஒருவார்த்தை சொல்கிறேன்" என்றார். அதாவது, "நான் ஸ்ரீமகாவிஷ்ணு வென்று உரைத்தேன் சைவர்கள் சுப்ரமணியன் என்றார்கள். இந்த சந்தேகம் நீங்குவதற்கு நான் விஷ்ணுவுக்கு அசாதாரணமான சங்கு சக்கரங்களைப் பண்ணிக்கொண்டு ஸ்வாமி சன்னிதியிலே வைக்கிறேன். சைவர்கள் சுப்ரமண்யனுக்கு அசாதாரணமான பாசாங்குசங்களை பண்ணி வைக்கக்கடவர்கள்; எந்த ஆயுதங்களை எடுத்துத் தரித்தாரோ அந்த ஆயுததரரான தேவராகக் கடவர்" என்றார். அதைக் கேட்ட அரசரும் 'அவ்வாறே செய்யுங்கள்' என்று சொல்ல, இருதரப்புவாதிகளும் அந்தந்த ஆயுதங்களைப் பண்ணிக்கொண்டு அரசனையும் அழைத்துக் கொண்டு திருமலை ஏறி, இரவு நேரத்திலே ஸ்வாமியின் கர்ப்பக்கிருஹத்திலே வைத்து ராஜமுத்திரை இட்டுக் காவலாக இருக்க, பின்பு அதிகாலையில் கதவைத்திறந்து பார்க்கும் போது, ஸ்வாமியானவர் சங்குசக்கரங்களைத் தரித்துக் கொண்டிருக்க, பின்பு அரசனும் மகிழ்ந்தான்.

Koviloor Digital Library

எனவே, இராமானுஜர் இரண்டாவது முறையாக திருப்பதிக்குச் சென்ற சமயத்தில்தான், சைவர்களும் வைணவர்களும் திருவேங்கடமுடையானைத் தமது தெய்வமென வாதித்த போது, வேங்கடமலையானுக்குத் திருவாழி, திருச்சங்குகளை சாத்தியருளுவதற்காகவும் வேறு பல திருத்தங்களைச் செய்வதற்காகவும் திருமலைக்கு எழுந்தருளினார். முதல்முறை திருமலைக்குச் சென்றபோது, மலைமேல் ஏறுவதற்கு விரும்பாமலிருந்த இராமானுஜர், இரண்டாவது முறையாக திருமலை ஏறுவதற்கு முன்பு, மூன்றுநாட்கள் வரை எதையும் உட்கொள்ளாமல் உபவாசமிருந்து தம் உடலைத் தூய்மையாக்கிக் கொண்டு திருமலை ஏறித் தம் செயல்களை முடித்துக் கொண்டு மூன்று நாட்களுக்குள் மலையிலிருந்து இறங்கியருளினார்.

இவ்வாறு இராமானுஜர் மலை ஏறும்போது அதனைத் தம்திருவடிகளால் மிதியாமலிருப்பதற்காக முழங்கால்களை ஊன்றவைத்துச் சென்றார் என்றும் இடையில் செங்குத்தான ஓரிடத்தில் அவரால் ஏறமுடியாமல் முழங்கால்கள் முறிந்து விட்டன என்றும் அதனை அறிந்த திருவேங்கடமுடையான் அவருக்கு முன்பு தோன்றி இடையூறுகளைப் போக்கிக் கால்களை பழையபடி வரம்பெற்று ஏறுவதற்குத் தகுதி உடையனவாகத் திருவருள் செய்து மறைந்தார் என்றும் அதனால்தான் அவ்விடத்தை "முழங்கால் முறிச்சான்" என்று இன்றும் கூறப்படுகிறது என்று கர்ணபரம்பரைச் செய்தியொன்று உலாவுகிறது. இந்த இரண்டாவது முறையில்தான், கோவிந்தராசரை இவர் திருப்பதியில் நிறுவி வழிபாட்டு முறைகளையும் ஏற்படுத்தித் திருக்கோயிலைப் பெரியதாக்கினார். இராமானுஜர் செய்தருளிய திருத்தங்களில், திருவேங்கடமுடையானைச்

Koviloor Digital Library

சங்காழி தரிக்கச் செய்தது மட்டுமின்றி, அவர் திருக்கோயில் கோபுரத்திலுள்ள விமானத்தில் வைகாநச ஆகமத்தில் கூறியபடியே வராக, நரசிம்ம, வேங்கடேச தேவதைகளை அமைத்து 'அந்தக் கோயிலைத் திருமாலுக்கே உரியதென உலகத்திற்கு அறிவிக்கச் செய்ய சம்புரோட்சனம் செய்வித்தார். பிறகு பெருமான் திருமார்பில் திருமகளை இருகைகளையுடைய திருவுருவோடு ஒரு நல்ல நாளில் அமைத்தும், திருமஞ்சன காலத்தில் திருமகளை மார்பிலிருந்து பிரிந்திருக்கும்போது, திருப்பாவை என்ற மிகச் சிறந்த இனிய கவிதைகளை இயற்றிய தமிழ்நாட்டின் சூடிக்கொடுத்த சுடர்க் கொடியான ஸ்ரீ ஆண்டாளின் நாச்சியார் திருமொழியை ஓதும்படிச் செய்தும், திரு மஞ்சனத்துக்குப் பிறகு பெருமாளின் திருநெற்றியில் இருகோடுகளான திருமண்காப்பைக் கற்பூரப் பொடிகளால் அமைத்து, மூன்று நாட்கள் காட்சியளிக்கவும் மற்றைய நான்கு நாட்களிலும் முத்துப் பொடிகளால் அமைத்துக் காட்சியளிக்கவும், திருக்கண் மலர்களுக்கு அஞ்சனக் காப்பு இடவும் ஏற்பாடு செய்தார்.

பிறகு திருமலையில் புரட்டாசித் திருவிழாவைச் செய்யத்தகுந்த முறையில் திருவீதியை அமைத்தும், மலைகுனியநின்ற பெருமாளை உற்சவமூர்த்தியாக்கி, அவர்க்கு முன்பு உற்சவமூர்த்தியாக் இருந்த வேங்கடத்துறைவாரை (போக சீனிவாசன்) நிலைத்துள்ள மூர்த்தியாக்கியதும், தண்ணீர் அமுது வழி திருத்தல், பூந்தோட்டத்தில் பெருமான் பூப்பறித்த விழா ஆகியவற்றை ஏற்படுத்தியதும், வேங்கடத்தரியை திருவேங்கடமுடையான் திருக்கோயிலிலேயே பிரதிஷ்டை செய்து வைத்ததும், திருவேங்கடமுடையானது, இடக்கரத்திலும் வலக்கரத்திலும் வைகுண்ட ஹஸ்தம் உள்ளது போலவே, ஆவப்பணி என்னும் நாகாபரணத்தை

Koviloor Digital Library

அணிவித்ததும் திருமலையில் இருப்பவர்கள் மேற்கொள்ள வேண்டிய வழிகளை ஏற்படுத்தியதும் சிறந்தவை. இவை தவிர, திருவேங்கடமுடையானது செல்வம் நாளுக்கு நாள் வளர்ச்சியடைவதற்காக அவர் ஒரு யந்திரத்தை மந்திர பூர்வமாக அமைத்து வைத்தமையால் அந்தத் திருக் கோயிலின் செல்வம் என்றும் குறைபடாது வளர்ந்து கொண்டே வருவதாயிற்று. இந்தத் திருக்கோயிலில் ஆதிசங்கரர் ஷண்மதாப்தாபனார்த்தமாக, தன ஆகர்ஷண யந்திரத்தைப் பதிய வைத்திருப் பதனாலேயே, எங்குள்ள தனமும் திருமலை உண்டியில் சேர்கிறது என்று பழைய நூல்கள் கூறுகின்றன.

திருப்பதியில் கோவிந்தராஜப்பெருமானை, பார்த்தஸாரதி சுவாமி கோயிலில் திருப்பிரதிஷ்டை செய்ததும், அவருக்கு வலப்பக்கத்தில் செங்கழுநீர்ப் பூவைத் தரித்த கையுடன் ஆண்டாளை பிரதிஷ்டை செய்ததும், இருவருக்கும் விழா முதலியவை செய்வதற்குரிய ஏற்பாடுகளையும் மண்டபங்களையும் கோபுரங்களையும் கட்டுதலையும் கட்டியம் யாதவராயனின் துணையைக் கொண்டும் செய்வித்தார். திருவேங்கடமுடையானும் கோவிந்தராசனும் வேறுபாடின்றி ஒருவர் எனவே கருதுமாறு பலகட்டளைகளையும் அமைத்தார்.

கோவிந்தராஜன் தில்லையில் திருச்சித்திரகூடத்தில் இருந்த திருக்கோலத்தோடு அன்பர்களுக்குக் காட்சியளித்துக் காத்துவந்தவர். அப்போது முதற்குலோத்துங்கன், அப்பெருமானைக் கடலுள் எறியச் செய்து, “அவர்க்கு இடம்கடலே ஆகையால் அவர் அங்கிருத்தலே நலம்” என்று கூறி, தில்லையிலிருந்த சில வைணவர்களைத் துன்புறுத்தியும் வந்தான். கூரத்தாழ்வாரின் கண்களையே பறித்துவிட்டதாக

Koviloor Digital Library

இராமானுஜர் வரலாறு கூறுகிறது. இதனால் அந்த அரசனை வைணவர்கள் பெயர் கூறத்தகாதவன் என்று வெறுத்தனர். அவன் இறுதிக் காலத்தில் தான் செய்த அடாத செயலின் காரணமாகக் கழுத்தில் ராஜப்பிளவை என்ற கட்டியால் துன்புற்று புழுக்கள் நிறையப்பெற்று வருந்தி இறந்தானாதலின் அவனைத் திருமாகண்டசோழன் என்று அழைக்கத் துவங்கினர். இரண்டாம் முறையாக இராமானுஜர் திருமலைக்கு எழுந்தருளித் திருப்பதியில் தங்கியிருந்த காலத்தில்தான் சில வைஷ்ணவர்கள் கோவிந்தராஜரின் உற்சவவிக்ரகத்தை எடுத்துக் கொண்டு அங்கு வந்து நடந்த செய்திகளை அவரிடம் புகன்றனர் என்று திருமலை ஒழுகு கூறுகிறது. ஆனால், அழகிய மணவாளர் திருக்கோயில் என்ற திருவரங்கம் கோயிலில் தங்கியிருந்த இராமானுஜர் 'வெள்ளைச்சாத்துபடி' எனவழங்கும்படி, துறவியாடையை நீக்கி, திருமலைக்குச் சென்றதாக வரலாறு கூறுகிறது. எனவே, இராமானுஜர், திருப்பதியே அரசனின் இடையூற்றுக்கு இலக்காகாத இடம் என்று கருதி, திருவேங்கட முடையானுக்கும் கோவிந்தராசனுக்கும் ஒற்றுமை தோன்ற அருளிச் செய்திருக்கும் திருமங்கை யாழ்வாரின், பெரிய திருமடலின்

"தென்தில்லை சித்திரகூடத்தென் செல்வனை
மின்னி மழைவழும் வேங்கடத் தென்வித்தகனை"

என்ற கருத்தினை உய்த்துணர்ந்து, அதனை நிறைவேற்றத் தக்கது என்று எண்ணி, அவ்வுருவத்தைத் திருப்பதியில் ஏற்கெனவே நிலைபெற்றிருந்த பார்த்தசாரதி சுவாமியின் கோயிலில் அவருக்கு வலது புரத்தில் தன் சீடனாகிய யாதவராயனைக் கொண்டே, மண்டபமும் கர்ப்பக் கிருஹமும் கட்டச் செய்து அங்கே திருப்பிரதிஷ்டை செய்தருளினார். பார்த்தசாரதியின்

Koviloor Digital Library

திரு உருவம் சிதைவுபட்டதனால் அதற்குப் பூஜை நைவேத்தியம் முதலியன இல்லாமற்போகவே, கோவிந்தராசனுக்கு எல்லாவிதமான உபசாரங்களும், விழாக்களும் நடைபெறலாயின. இவற்றுக்கெல்லாம் இராமானுஜரே காரணமாகத் திகழ்ந்தார்.

கட்டியம் யாதவராயன் செய்துள்ள திருப்பணிகளில், கோவிந்தராசப்பெருமாள் கோயிலின் இரண்டாவது கோபுரமும் ஒன்று. அது யாதவநாராயணன் திருக்கோபுரம் என்றும் பெரிய திருக்கோபுரம் என்றும் கல்வெட்டுகளில் பெயர்கள் காணப்படுகின்றன. திருப்பதியில் கோவிந்தராசனை இராமானுஜர் பிரதிஷ்டை செய்த ஆண்டு நௌமிய வென்றும் பங்குனி மாதத்துப் பௌர்ணமி உத்திர நட்சத்திரம் திங்கட் கிழமை கூடிய நாள் என்றும் சொல்லப்படுகிறது. அதற்கு இணைப்புடைய ஆண்டு கி.பி 1130. முதற் குலோத்துங்கசோழன் கி.பி.1120ல் இறந்தான். பத்தாண்டுகளுக்குப் பிறகே, இந்தப் பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ளது. இதற்குத் துணையிருந்த கட்டியம் யாதவராயன் காலம் கி.பி.12ஆம் நூற்றாண்டின் துவக்கம் என்று நெல்லூர் கல்வெட்டு ஒன்றால் அறியப் பெறுகிறது. "யாதவராயன் கட்டி தேவராசன் பிரதானி ராஜராஜ தேவர்க்கு ஆண்டு 11வது'' என்று அந்தக் கல்வெட்டு கூறுகிறது. அந்த ராஜ ராஜன் தேவர் கி.பி. 1133 முதல் 1163 வரையில் ஆண்டவன்.

திருவேங்கடமுடையானுக்குக் கொடித்திருநாள், ஆரம்பத்தில் திருச்சுகனாரிலேயே நடத்தப்பட்டது. இம்முறை "திருவேங்கடத்து எம்பெருமான் அடிகளுக்கு எழுந்தருளிவித்ததிவிளங்கோயிலில் பெருமானடிகளுக்குச் சோழ நாட்டுச் சோழனுள், உலகப்பெருமானார் வைத்த திருவிளக்கு முதல் முப்பதின் கழஞ்சு'' என்று கூறும்

Koviloor Digital Library

கல்வெட்டு கி.பி. 830ல் இந்தக் கொடை வழங்கப் பெற்றதாக அறிவிக்கின்றது. பத்தாம் நூற்றாண்டில் பல்லவர் மரபில் வந்த சாமவை என்ற அரசியார், திரு விளங்கோயிலில் வெள்ளியால் ஒரு உற்சவமூர்த்தியைச் செய்வித்து அதற்கு .மணவாளப்பெருமாள் என்னும் பெயரிட்டுப் பலமணிகள் அழுத்திய திருமுடி, திருக்கழுத்துமாலை, திருக்கரங்களுக்குரிய மணிப்பறைகள் யாவையும் அணிவித்து வேறு பலதானங்களும் செய்திருக்கிறார். எனவே, அந்தமுறையை மாற்றித் திருமலையிலேயே அந்த உற்சவத்தை நடத்துவதற்காக இராமானுஜர் ஏற்பாடுகளைச் செய்தார். கி.பி. 1224ல் திருவேங்கட நாட்டை அப்போது ஆண்டு கொண்டிருந்த வீரநரசிங்க யாதவராயனது கட்டளையைப் பெற்ற திருப்புல்லாணி திரர் என்ற அன்பர் ஒருவர், திருமலை நடுக்கோயிலை அந்த ஆண்டில் புதுப்பித்தார். அந்த அரசன் கி.பி. 1245ல் துலாபாரம் புகுந்து தானம் செய்த பொன்னைக் கொண்டு, அக்கோயிலின் விமானத்துக்கு முதன்முதலாகப் பொன்பூச்சு பூசப்பெற்றது. அதேகாலத்தில் மாறவர்மன் சுந்தர பாண்டியன் என்ற அரசன் அதற்குப் பொற்கலசம் அமைத்து வைத்தான். கி.பி. 1359ல் சாளுவமங்கிதேவன் விமானத்துக்குப் பொற்கலசம் அமைத்தான். கிருஷ்ணதேவராயர், முப்பதாயிரம் வராகன் பொன் கொடுத்து விமானத்துக்குப் பொன்பூசினார்.

இராமானுஜர் காலத்தில் இருந்தவிமானம் சிதிலமடைந்தது. அந்த விமானம் எந்தத் தேவதையின் வடிவமும் அமைக்கப்படாமல் இருந்தது. எனவே, அதன் நான்கு திசைகளிலும் திருமாலின் திருக்கோயிலுக்குரிய விமான தேவதைகளை அவரே அமைத்து வைத்தார். திருமலைக் கோயிலில் இருந்த திருமகாமணி மண்டப

Koviloor Digital Library

கல்சாரம், குறடு முதலாக மேற்கூரை, விமானம் ஈறாக, உள்ளவற்றை கி.பி. 1417ல் வாழ்ந்த மல்லண்ணா என்ற மாதவதாசர், தெய்வீகத்திருப்பணியாகச் செய்து வைத்தார். கி.பி. 1468ல் திருமலையில் ஒரு கோபுர மண்டபமும் திருக்கோனேரி தீர்த்தத்தில் நீராழி மண்டபமும் கட்டப்பெற்றன.

ஆரவீட்டு மரபைச் சேர்ந்த திருமலைராயன், திருமலைச் சம்பங்கிச் சுற்றுக்குள், துவஜஸ்ம்பத்திற்குத் தெற்காக கி.பி. 1561ல் ஒரு ஊஞ்சல் மண்டபம் கட்டி அதில் உற்சவ மூர்த்தியை வசந்தத் திருநாள், ஊஞ்சல் திருநாள், திருக் கொடித்திருநாள் ஆகிய காலங்களில் எழுந்தருளச் செய்து அமுது செய்விப்பதற்குப் பல தானங்களை ஏற்படுத்தினான். இப்போது அதனைத் ‘திருமலைராயன் மண்டபம்’ என்று வழங்குகிறார்கள். அச்சுத தேவராயன் காலத்தில், அந்த அரசர் திருமலைமேல் உள்ள கோனேரி தீர்த்தத்துக்கு மேற்கே, தமது பெயரால் அச்சுதக் கோனேரி என்ற தீர்த்தத்தை உண்டாக்கி அதன் கரையின் மேல் வசந்த மண்டபம் ஒன்றைக் கட்டுவித்து மலைகுனிய நின்ற பெருமாளை உற்சவ நாட்களில் எழுந்தருளப் பண்ணித் திருவமுது கொள்ள ஏற்பாடுகளைச் செய்து வைத்தான்.

இவ்வாறு விஜயநகரத்தரசர்களில், கிருஷ்ண தேவராயர், அச்சுதராயர் போன்றவர்களும் தென்னகம் எங்குமிருந்த சிற்றரசர்களும் திருவேங்கடமுடையானுக்குப் பல திருப்பணிகளைச் செய்திருக்கிறார்கள். அந்த விவரங்களைக் கல்வெட்டுகளின் தொகுப்புரையிலிருந்து அறியலாம்.

யாதவராயர் மரபினராகிய ஓபளநாதன் என்பவன் தஞ்சாவூரில் வாழ்ந்துவந்தவன். அவன் வட வேங்கடத்துறையும் பெருமான் தன்னுடைய திருவடியைக்

Koviloor Digital Library

காட்டியபடி அமைந்திருக்கும் வலத்திருக்கைக்கு (வைகுண்ட ஹஸ்தம்) பொன்வேய்ந்து அழகு படுத்தினான். இதனை

ஓதவனர் வணர்மை ஒபளநாதன் தஞ்சை
யாதவர்கோன் வாழ இனிதாழிபோத
மருக்குலவு சோலை வட வேங்கட வானர்க்குத்
திருக்கைமலர் தந்தான் சிறந்து

என்ற இந்தக் கருத்தமைந்த சமஸ்கிருதச் சுலோகமும் கல்வெட்டில் காணப்படுவதாகச் சொல்லப் பெறுகிறது. இது நிகழ்ந்தது கி.பி. 1370.

முகம்மது பின் துக்ளக் என்பவன் கி.பி. 1328ல் மதுரையையும் மற்ற ஊர்களையும் கொள்ளையடித்துக் கோயில்களைச் சூறையாடிய காலத்தில் திருவரங்கத்தில் இருந்த ஸ்ரீரங்கநாதரைத் தப்புவிப்பதற்காக, சில நம்பிமார்கள், அந்த விக்கிரகத்தை எடுத்துக் கொண்டுவந்து, திருமலையில் பாதுகாவலாக வைத்திருந்தார்கள். ஸ்ரீரங்கத்திலிருந்து அதைத் திருமலைக்குக் கொண்டு செல்வதற்குக் குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது ஆகியிருக்கும். எனவே கி.பி. 1330ல் அந்தப் பெருமானை, திருமலைக் கோயிலின் முன் இடத்திலுள்ள மண்டபத்தில் எழுந்தருளச் செய்ததால் அதற்கு இன்றும் 'அரங்க மண்டபம்'என்ற பெயரே வழங்குகிறது.

4. திருமலை வரலாறு

திருமலை, திருப்பதி, திருவேங்கடமுடையான் திருக்கோயிலை முதன்முதலாகத் தொண்டைமான் சக்கரவர்த்தி கட்டியதாகப் புராணநூல்கள் கூறுகின்றன.

Koviloor Digital Library

ஆனால் அப்போது அந்தக் கோயில் சிறியதாக இருந்திருக்க வேண்டும். யாத்திரை செய்வோர் அதிகமாகச் செல்வதற்கு வசதிகள் இல்லாமற் போனதால் அத்தகைய குறையை நீக்குவதற்காகவே திருச்சுகனூரில் திருவேங்கடமுடையானுக்குத் திருக்கோயில் கட்டப்பெற்றது. ஆனால் அந்தத் திருக்கோயிலைத் திருமலையிலிருந்த பாலாலயம் என்று சொல்வது பொருந்தாது.

திருமலையிலுள்ள வேங்கடேசப் பெருமானுக்குத் தொண்டைமான் சக்கரவர்த்தி பல திவ்யாபரணங்களை அணிவித்தான். பிறகு கி.பி. 1001வது ஆண்டில் இரண்டாவது பராந்தகசோழன் மனைவியாகிய பராந்தகதேவியம்மன், திருவேங்கடமுடையானுக்குத் தங்கத்தால் செய்யப்பட்ட பலவகைக் கற்கள் இழைத்த பட்டம் ஒன்றை அணிவித்தார். இராமானுஜர் யாதவராயனின் துணைகொண்டு பலவித அணிகலன்களைச் செய்து அணிவித்தார். சாமவை என்னும் பல்லவர் பேர்க்காடயார்மனைவி, வைரஆபரணங்களைச் சூட்டினார். அவர்களுக்குப் பிறகு விஜயநகரப்பேரரசர் கிருஷ்ணதேவராயர் ஏழுமுறைகள் திருவேங்கடத்திற்கு யாத்திரையாக வந்து ஒவ்வொருமுறையும் பொன் ஆபரணங்களையும் வைரமுடியும் தோரணவாயிலும் பொற்சின்னங்களுமாகப் பெருமாளுக்கு அளித்துப்பேறு பெற்றார். பல ஊர்களையும் நன்கொடையாக வழங்கினார். அவனது மனைவியர் செய்தளித்த திருவாபரணங்களுக்கும் கணக்கில்லை. மற்றும் பல அரசர்களும் ஆபரணங்களைச் செய்து சூட்டினர். கி.பி.17ஆவது நூற்றாண்டின் முற்பகுதியில் மட்லகுமார அனந்தராயன் என்ற அரசன் பொற்குதிரை, பொன்யானை, திருத்தேர், பஷ்மபீடம்,

Koviloor Digital Library

ரத்தினமுடி, நைவேத்தியத்திற்குரிய பொன், வெள்ளிப் பாத்திரங்கள் ஆகிய பலவற்றையும் அளித்தான்.

திருமலை அடிவாரத்திலுள்ள இரண்டாவது கோபுரமும் காளகோபுரமும் அவனாலேயே கட்டப்பெற்றன. காளகோபுரம் இல்லாதிருந்தபோது அந்த இடத்திற்கு 'பெரிய ஏற்றத்தலை' என்றபெயர் வழங்கி வந்தது. அங்கு புரட்டாசித் திருநாளில் சேவிக்க வருகின்ற யாத்ரீகர்களுக்குத் தண்ணீர்ப்பந்தல்களை கி.பி.1488ல் சாளவநரசிம்மன் அமைத்திருக்கிறான்.

செல்வன் என்ற இடையன் ஒருவனே, திருமலைக்கு ஏறும் படிக்கட்டுகளை முதல் முதலில் அமைத்தவன் என்று திருமலை ஒழுகு என்ற நூல்கூறுகிறது. அதற்குப் பிறகு கந்தாடை ராமானுஜ ஐயங்கார் கி.பி.15ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் திருமலைக்கு ஏறும்படிகளைச் சீர்திருத்தினார். மட்லகுமார அனந்தராயன் என்பவனும் படிகளை ஒழுங்கு செய்தான். இந்தப் படிகள் ஏற்படுவதற்கு முன்பு, யாத்ரீகர்கள், ஆழ்வார் தீர்த்தங்கள் வழியாக, காளகோபுரம் வரை சென்றனர். எனவேதான் இன்னும் ஆழ்வார் தீர்த்தத்தில் நீராடியபிறகு மலையேறவேண்டும் என்ற வழக்கம் உள்ளது. தொண்டைமான் சக்கரவர்த்தி, ஆழ்வார்தீர்த்தக் கரையிலுள்ள நரசிங்கர் சன்னிதி வழியாக, ஒரு பிலத்தினுள்ளே நுழைந்து வேங்கடவனை வணங்கி வந்தான் என்று கூறப்படுகிறது. கட்டியம் யாதவராயன் அனந்தாழ்வார் கூறியபடி திருமாலை தொடுப்பதற்காக ஒரு மண்டபம் கட்டினான். அதற்கு யமுனைத்துறை என்று பெயர். இப்போதும் அங்குதான் பூமாலைகளைக் கட்டிப் பெருமாளுக்கு சாத்துகிறார்கள்.திருமலைக்கோயிலில் அமைக்கப் பெற்றுள்ள இராமானுஜரது திருவுருவம்,

Koviloor Digital Library



அவருடைய நாற்பதாவது ஆண்டில் செய்யப்பட்டது என்றும், அவர் அதனை நோக்கியருளித் தழுவிக்கொண்டு, தம் மாணவராகிய அனந்தாழ்வாரிடத்தில் தந்தார் என்றும் கூறப்படுகின்றது. அனந்தாழ்வார் அதனை, கோயிலில் யாதவராயன் துணைக்கொண்டு அமைத்தான். இந்தவுருவம் ஞான முத்திரையுடைய திருக்கையோடு காட்சியளிக்கிறது. ஸ்ரீபெரும்புதூரிலிருக்கும் திருவுருவம் உப்பிய கைகளுடன் விளங்குகிறது. இராமானுஜர், அவதரித்த ஆண்டு கி.பி.1017. குலோத்துங்கன், தில்லைக் கோவிந்தராஜரைக் கடலில் எறிந்த ஆண்டு கி.பி.1082. திருமலையில் கோவிந்தராஜரை பிரதிஷ்டை செய்த ஆண்டு கி.பி.1130. ஆக, 48 ஆண்டுகளுக்கு பிறகுதான் திருமலையில் கோவிலில் கோவிந்தராஜரைப் பிரதிஷ்டை செய்தனர். அப்போது ராமானுஜருக்கு வயது 113 ஆகத்

Koviloor Digital Library

தெரிகிறது. ஆயினும் திருமலை ஒழுகு என்ற நூல் 40 என்று கூறுகிறது. குலோத்துங்கன் கி.பி.1120ல் இறந்த பத்தாண்டுகளுக்குப் பிறகுதான், தில்லை கோவிந்தராஜர் சிலையைத் திருப்பதியில் பிரதிஷ்டை செய்தனர்.

இராமானுஜர் திருமலை திருப்பதி ஆகிய இடங்களில் பலவகையான தருமங்களை நிலைநாட்டியும் புதிய ஏற்பாடுகளைச் செய்தும் திருவேங்கட முடையானுடைய செல்வத்துக்கு வளர்ச்சிக்குரிய பற்பல நற்செயலைச் செய்தும், தாம் அளித்தருளிய திருவாழித் திருச்சங்குகளை திருவேங்கடமுடையான் ஏற்று கொண்டு, அவரையே ஆசார்யர் போலக் கருததக்க சிறப்பும் பெற்றதனால்தான், அங்கு ராமானுஜரது திருவுருவம் ஞானமுத்திரையோடு அமைத்தனர்.

இத்தகைய திருமலையிலுள்ள இராமானுஜர் கோவிலுக்குத் திருவிளக்கும் திருமாலையும் வைஷ்ணவர்கள் தருமமாகக் கொடுத்து வரவேண்டும் என்று வீரநரசிம்ம யாதவராயன் காலத்துக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

திருப்பதிகோவில்கள்

இராமானுஜர், தில்லைக் கோவிந்தராசனைத் திருப்பதியில் பிரதிஷ்டை செய்த பிறகு கட்டியம் யாதவராயன், அவர் சந்நிதியின் முன்பு ஒரு மண்டபம் கட்டினான். அதன் பெயர் திருச்சித்திரகூட மண்டபம் என்றும் தில்லைக்கு வாய்த்தான் மண்டபம் என்றும் வழங்கப்பெறுகிறது. அவன் வேறு பல மண்டபங்களையும், திருப்பதியில் இராமானுஜர் கோயிலையும் கல்யாண மண்டபத்தையும் கோபுரங்களையும் கட்டியவன். இவன் இராமானுஜர் காலத்துக்குப் பின்பு வாழ்ந்திருந்தான்.

Koviloor Digital Library

முதற்கோபுரம்

சாளுவ நரசிம்மன் கி.பி.1482ல் திருமலை அடிவாரத்திலுள்ள முதற்கோபுரத்தைக் கட்டினான். அதற்கு ராயர் கோபுரம் என்று பெயர். அது இடிபட்டுப் போனதால், திரு'மலை திருப்பதி தேவஸ்தானக் கமிட்டியினர் அதனைப் புதுப்பித்தனர். இவன், திருமலையிலும் திருப்பதியிலும் வேறு சில கோபுரங்களையும் மண்டபங்களையும் கட்டுவித்தான். திருமலைக்குக் காவல் தெய்வமாக அழகிய சிங்கர் திருவுருவத்தை கி.பி. 1482ல் நிறுவினான். இப்பெருமான் அடிப்புளி அழகிய சிங்கர் என்றும் சீனிவாசபுரம் அழகிய சிங்கர் எனவும் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளன.

அடிப்புளிக்கு சீனிவாசபுரம் என்று வேறுபெயர் இடப்பட்டிருத்தல் கூடும். அடிப்புளி என்பதை இப்போது 'அளபிரி' என்று தவறாக வழங்குகிறார்கள். இராமானுஜர், திருமலை அடிவாரத்திலிருந்த ஒரு புளியமரத்தின் அடியிலிருந்துதான் திருமலை நம்பியிடம் இராமாயண பாடத்தைக் கேட்டு வந்தார். அந்தப்புளிய மரம் இருந்த இடத்தைத்தான் அடிப்புளி என்று ஓர் கல்வெட்டும்,

திருப்பதியும் ஆழ்வார் தீர்த்தமும் பூங்கா
விருப்பும் அடிப்புளியின் வீறும்

என்று, திருவேங்கடவுலாவிலும் இவ்வடிப்புளி பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

முன்பொரு காலத்தில் ரங்கபூபாலன் என்ற பாண்டிய மன்னன் ஒருவன், திசைகள் தோறும் திக்விஜயம் செய்து பல அரசர்களை வென்று, திருமலையில் தனது வெற்றிக்கு அறிகுறியாக ஒரு வெற்றிக் கம்பத்தை நாட்டினான். அவனே இரகுநாதன் திருக்கோயிலைக் கட்டினான்.

Koviloor Digital Library

இந்தப் பாண்டிய மன்னன் முதலாவது மாறவர்மன் சுந்தர பாண்டியனாதல் வேண்டும். இவன்தான் திருமலைக் கோயிலுக்கு கி.பி.1245ல் பொற்கலசம் அமைத்தான் என்று கல்வெட்டு அறிவிக்கிறது. பல ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் கோயில் மிகவும் பள்ளத்தில் ஆழ்ந்தது. ஊரின் தெருக்கள் மேடாகி, உயர்ந்ததுதான் அதற்குக் காரணமாகும். இதனை அறிந்த கந்தாடை ராமானுஜர் ஐயங்கார், சாளுவ வீரநரசிம்ம ராயரின் கட்டளையைப் பெற்று கி.பி. 1480ல் அந்தக் கோயிலை உயர்த்தி, இரகுநாதனின் திருவுருவத்தை உயர்த்தி, மண்டபங்கள் முதலியவற்றைக் கட்டினார்.

பெரிய இரகுநாதனின் திருக்கோயிலுக்கருகே குலசேகராழ்வார் என்ற தன்குலத்தைச் சேர்ந்த ஆழ்வாருக்கு அப்பாண்டிய மன்னன், ஒரு திருக்கோயிலைக் கட்டினான். ஆழ்வார் தீர்த்தக்கரையிலுள்ள நம்மாழ்வார்கோயிலை பல்லவராயர் என வழங்கிய வான் எடுத்த கையழகியார் என்ற அரசன் கி.பி. 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கட்டினார். இந்த அரசன், ஜெய வர்மன் திரிபுவனச் சக்கரவர்த்திகள் இரண்டாவது சுந்தரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் பத்துப் பதினொன்றாவது ஆண்டில் இருந்தவன்.

கி.பி. 1513ல் அச்சுத தேவராயர், திருமலைக்கு வந்தபொழுது ஆழ்வார் தீர்த்தக்கரைகளுக்குக் கற்படிகளைக்கட்டி, கிழக்கு மேற்கு ஆகிய இருதிசைகளிலும் சந்தியாவந்தன மண்டபங்களையும் அமைத்து அந்தத் தீர்த்தத்தின் நான்கு மூலைகளிலும் திருவாழி பொறிக்கப் பெற்ற கற்களை நாட்டி, சக்கரதீர்த்தம் என்று பெயரிட்டு, திருவேங்கட முடையானுக்கு உரியதாகச் செய்தான். இவன் திருவாழிக்கற்களை நட்டதற்குக் காரணம், அறம்,

Koviloor Digital Library

பொருள், இன்பம், வீடு என்ற நால்வகைப் பேறுகளையும் பெறுவதற்காகவென்று கல்வெட்டுகள் கூறுகின்றன. காளத்தி சைவர்கள், திருவேங்கட நாட்டின் அரசன் இறந்து போனதைத் தமக்குரிய வாய்ப்பாகக் கொண்டு, அந்தத் தீர்த்தத்தை கபிலதீர்த்தம் என்றும் அதற்குரியவர் கபிலேஸ்வரர் என்றும் வழக்கிட்டு உரிமை கொண்டாடியபோது ஏகாங்கி நாராயண ஐயங்கார் என்பவர், சைவர்களோடு வாதம் புரிந்து அதனை ஆழ்வார் தீர்த்தம் என்று வலியுறுத்தி நான்கு புறங்களிலும் நடுவித்தார் என்று திருமலை ஒழுகு அறிவிக்கின்றது.

இதைத்தவிர வேறொரு கல்வெட்டு, கோவிந்தராஜர் உபாகர்ம நாளில் ஸ்ரீதேவி பூதேவிகளுடன் தேவர்கள் வந்து நீராடித் தூய்மை பெறுகின்ற தீர்த்தத்தில், இராமானுஜர் செய்த ஏற்பாட்டின்படி ஸ்நானத்துக்கு எழுந்தருள வேண்டும் என்று அறிவிக்கிறது. இதன்காலம் கி.பி.1467. இன்றும் கோவிந்தராஜர், தீர்த்தவாரிக்காக ஆழ்வார் தீர்த்தத்திற்கு எழுந்தருளுகிறார். இதைவிடத் தூய்மையானதீர்த்தம் திருப்பதியில் வேறெங்குமே இல்லை என்று கூறப்படுகிறது. இராமானுஜர், கோவிந்தராஜருக்கு உரிய தீர்த்தமாக ஏற்படுத்தியது ஆழ்வார் தீர்த்தமாகும்.

இந்தத்தீர்த்தத்தின் கரையில், நம்மாழ்வாரின் திருக்கோயில் இருப்பதனாலோ அல்லது சக்கரத்தாழ்வார் தீர்த்தவாரியில் மூழ்கி தூய்மை செய்வதனாலோ இதற்கு ஆழ்வார் தீர்த்தம் என்ற பெயர் வழக்கத்திற்கு வந்திருக்க வேண்டும். கி.பி.1531ல் இதற்கு சக்கரத்தீர்த்தம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

தானப்பாந்தம் திருமலை ஐயங்கார், ஆழ்வார் தீர்த்தத்தின் தென்கரையில் தீர்த்தவாரி மண்டபத்தைக் கட்டி அதில் லஷ்மிநாராயணப் பெருமாளை பிரதிஷ்டை

Koviloor Digital Library

செய்தார். திருப்பதியில் பாஷ்யகாரர் அக்கிரகாரத்தில் கோவிந்தராஜர் வடவண்டைமாட வீதியில் கி.பி.1541ல் ஒரு நம்மாழ்வார் கோயிலை ஆரவீடு கொண்டராஜா என்ற அரசன் கட்டினான்.

அதையடுத்துக் கிழக்கில் இருக்கும் பெரியஜீயர் மடத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 5713 ரேகைப் பொன் வருவாயுள்ள பத்து ஊர்களைத் தானமாகத் தந்து, வைஷ்ணவ யாத்ரீகர்களுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்தான். இந்த இராமானுஜர் கூடத்தில் ஒரு நாளைக்கு ஏறக்குறைய 500 மரக்கால் அரிசி செலவிடப்பட்டதாக அறிகிறோம். இந்த நம்மாழ்வார் சந்நிதிக்கு இராமானுஜர் கூடத்து நம்மாழ்வார் கோயில் என்றும் கூறப்பட்டது. இங்கு கி.பி.1553ல் பன்னிரண்டு நாட்கள் திருவிழா நடந்து வந்தது.

ஆழ்வார் தீர்த்தத்துக்குப் போகும் வழியில் கிழக்காக ஒரு கோபுரம் மட்டுமே காணப்படுகிறது. இந்தக் கோயில் அச்சுததேவராயனால் கட்டப்பட்டது. அதைச் சுற்றிலும் 120 வீடுகள் அடங்கிய அக்கிரகாரத்தைக் கட்டி, அதற்கு அச்சுதராயபுரம் என்று பெயரிட்டான். கி.பி.1538ல் திருவேங்கடமுடையான் ஸ்ரீபண்டாரத்தில் நானூறு பணம் கட்டி, அச்சுத பெருமாள் கோயிலும் அக்ரகாரமும் கோட்டூரில் கட்டுவதற்கு நிலமும் வாங்கினான். ஆனால் அந்த அரசனின் காலத்துக்குப் பின் கோயிலும் ஊரும் சீர்கெட்டுப் போயின. கோபுரம் மட்டுமே சாட்சியாக நிற்கிறது.

அடிப்புளியில் கி.பி.1300க்கு முன்பு பெரியாழ்வார் கோயில் கட்டப்பட்டது. மற்ற ஆழ்வார்களுக்குப் பல்வேறு காலத்தில் கோயில்கள் கட்டப்பெற்றன. சாளுவ நரசிம்மன், திருமலையிலும் திருப்பதியிலும் இராமானுஜ

Koviloor Digital Library

கூடங்களைக் கட்டி, அவற்றுக்குத் தன் ஆசார்யரான கந்தாடை இராமானுஜ ஐயங்காரைத் தலைவராக நியமித்தான்.

5. நாரதமுனிவர், திருப்பாற்கடல் சென்ற கதை

அழுக்காறு, அவா, வெகுளி, முதலிய மூவகைக் குற்றங்களும் இல்லாத சௌனகாதி முனிவர்கள், சூத புராணிகரை அடிவணங்கி, திருமால், நிலவுலகில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளியுள்ள புண்ணிய திருப்பதிகளில் சிறந்தது யாது என்று கேட்க, அவர் கூறியதாவது: "நாரதமுனிவர், முன்பு ஒருகாலத்தில் பிருகு முனிவருக்கு அருளியதை, வியாசமுனிவர் எனக்கு உரைத்து அருளினார், அதை நான் உங்களுக்குக் கூறுகிறேன். கேட்பீர்களாக"

பிருகு முனிவர் நாரதரை நோக்கி, "பூவுலகத்தில் சிறந்த தெய்வத்தலம் எது?" என்று கேட்டார். அதற்கு அவர், "பல தீர்த்தங்களால் சிறந்து, எந்தப் பாவத்தையும் போக்கி, பெரும்பயனை அளிக்கவல்லதும், கடுந்தவமுனிவர்களால் புகழப்பெறுவதும் இந்திரன், தேவர்கள், யானைமுகன், முருகவேள், சிவன், பிரமன் ஆகியவர்கள் எப்போதும் போற்றுவதும் எல்லாவகையான மங்களங்களையும் நல்குவதும் ஆகிய வேங்கடமலை ஒன்று உண்டு. சிவனும் பிரமனும் சேர்ந்து புகழ்ந்தாலும் அதன் சிறப்பினைக் கூறமுடியாது. உலகிலுள்ள புண்ணிய நதிகள் எல்லாம் ஏத்துமாறு உயர்வு பெற்ற கோனேரித் தீர்த்தக்கரையிலே ஸ்ரீவைகுந்த நாதன் திருமகளுடன் என்றும் தங்கியுள்ளான்" என்றார் நாரதர். உடனே, பிருகுமுனிவர், அந்தப் பெருமான், அங்கு உறைவதற்குக் காரணம் என்னவென்று கேட்டார்.

Koviloor Digital Library



அதற்கு நாரதர், "நான் ஒருசமயம் திருமாலை வணங்கவேண்டும் என்ற ஆர்வத்தோடு, திருப்பாற்கடலை நோக்கிச் செல்லும் போது, சுவேதத்வீபத்தின் அழகுகளையெல்லாம் கண்டுகளித்தேன். பாரிஜாத மலர்மணம் வீசும் திருப்பாற்கடலின் நடுவில், எண்ணில்லாத தூண்களுடன் மண்டபம், மாடம் கூடம், மாளிகை, கோபுரம், விமானதலங்கள் யாவும் கோடி சூரியப்பிரகாசமாக இருக்கக் கண்டேன். கருடன், விஷ்வக்சேனர் முதலிய நித்திய சூரிகள் சூழவும், சுகன், மார்க்கண்டன், பாரத்வாசன், புண்டரீகன், யாஞ்ஞுவால்கியன், மாருதி, ஜாபாலி முதலிய முக்தர்கள், இருகைகளையும் கூப்பிக்கொண்டு நான்மறைகளால் துதிக்கவும் பிரமன், சிவன், இந்திரன் முதலிய தேவர்கள் அனைவரும் மனத்தில் தியானித்து வாக்கால் துதித்து வணங்கவும், சனக சனந்தனர் முதலியவர்கள் பூஜைகள் செய்யவும், பலகோடி சந்திரனைப்போல திருமுகம்

Koviloor Digital Library

விளங்க திருக்கண்களில் கருணை துலங்க, ஆதவன் ஆயிரம் கதிர்போல விளங்கும் ஆதிசேஷன் மீது மேகம் போலத் திருமேனி விளங்க, ஊழி ஒரு கணமாகச் செல்லப் பள்ளி கொண்டு ஸ்ரீதேவி பூதேவி, ஸ்ரீநாதேவியர் திருவடி மலரை வருட திருமேனியில் கௌஸ்துப மணியின் ஒளி பரவத் திருமார்பில் வலப்பக்கம் ஸ்ரீவத்சம் ஒளிரவைஜயந்தி வனமாலை விளங்க, பிரம்ம சூத்திரம், மின்னல் கொடி போலத் திருத்தோள்களில் விளங்க, அதர்சனம், நாந்தகம், சார்ங்கம், கௌமோதகீ, பாஞ்ச சன்னியம் ஆகிய ஐந்து ஆயுதங்கள் துலங்க, பொன்னுலகோர் பொழியும் மலர்மழைமலிய விளங்கிய திருப்பால் ஆழி நாதனை, மெய்சிலிர்க்கக் கண்டு அந்த ஆனந்தத்தால் ஆடிப்பாடி அடிமலர் சூடிப்பணிந்து நின்ற என்னை, அப்பெருமான், தனது திருவிழிப் பார்வையால் நோக்கி, "பிரம்ம புத்ரா! நிலவுலகில் யான் திருவிளையாடல் புரியத் தகுதியான இடம் யாது எனத் தெரிந்து சொல்லுக!" என்று எனக்குக் கட்டளையிட்டார்.

நான், "எம்பெருமானே! நீங்கள் அறியாத தலம் ஒன்று உளதோ! எனினும் என்னை நீங்கள் கேள்வியாகக் கேட்டு விட்டதால், நான் பதில் சொல்கிறேன்.

உமது திருவடியில் பிறந்த கங்கைப்பிரதேசத்தின் தெற்கே, தண்டகாரணிய வனம் உள்ளது. அது முன்னூறு யோசனை பரப்பளவு உடையது. தென்கடலுக்கு வடமேற்காய் கீழ்க்கடலுக்கு மேற்காக நான்கு யோசனைக்கு அப்பால் மிகவும் அழகுவாய்ந்த நல்லநிலம் உலகின் நடுத்தலமாக அமைந்துள்ளது. அந்த நிலத்தைச் சேர்ந்தவர்கள் உமது திருநாமத்தையே என்றும் நினைத்திருப்பவர்கள் ஆகையால் அந்த நிலப்பரப்பே, பிரமன் முதல் எவ்வுயிருக்கும் திருவருள் செய்யுமாறு தேவரீர் எழுந்தருளத் தகுதியுடையது" என்றேன்.

Koviloor Digital Library

அப்பொழுது எம்பெருமான், சோழன் புதல்வன் ஆகி, ஆணை செலுத்து மன்னவனாக என்மீது பக்தியுடையவனாக, இனித் தோன்றவிருக்கும் அவனைக் காப்பது காரணமாக, நீ கூறிய அந்தத் தலத்தில் யாம் எழுந்தருளுவோம் என்று திருவாய் மொழிந்தருளினார்'' என்று பிருகுமுனிவருக்கு நாரதர் கூறினார். இவ்வாறு சூதமுனிவர் சொல்வதை சௌனகாதியர் கேட்டு உள்ளமகிழ்ந்து ஸ்ரீதரன் அங்கு வந்தடைந்த செய்திகளையெல்லாம் எங்களுக்குச் சொல்லவேண்டும் என்று வேண்டினர். இவையெல்லாம் பதினெண் புராணங்களில் ஒன்றாகிய பிரமாண்ட புராணம் என்ற புராணத்தில் உள்ளன. அவைகளை முறையே சொல்கிறேன், கேளுங்கள் என்றார்

6. திருமலையின் தோற்றம்

திருப்பாற் கடலில், பள்ளிகொண்ட அனந்தசயனப்பெருமாள் ஆதிசேஷனை நோக்கி, “அனந்தா! நாரத முனிவர், என்னிடம் கூறியவற்றையும் கேட்டிருந்தாய். அவரிடம் நான் கூறிய வண்ணம் பூவுலகத்தில் சென்று தங்குவதற்கு விரும்புகிறேன். ஆகையால் நீயே, தென்னகத்தின் எல்லையிலே மலையுருவங் கொண்டு விளங்குவாயாக!'' என்று கட்டளையிட்டார். அவ்வாறே ஆதிசேஷனும் திருமலையாக உருவங்கொண்டு நின்று, “ஐயனே! நீங்கள் கட்டளையிட்ட திருத்தலத்தில் நானே திருமலையாக உருவாகி நிற்கின்றேன். நீங்கள் என் தலையின் மீது திருமகள், நிலமகள், நீளாதேவி, ஆகிய உமது திருத் தேவியர்கள், உமது மலரடிகளைப் போற்றி நிற்க, யாவருக்கும் அவர்கள் விரும்பிய வரங்களை அளித்தல் வேண்டும். பக்தர்கள் நீராடிக் குளிப்பதற்கும், பாவங்களைத் தீர்ப்பதற்கும் உரிய தூய்மையான

Koviloor Digital Library



தீர்த்தங்களையும் தோன்றும்படிச் செய்யவேண்டும்" என்றான் பகவானும் அவ்வாறே ஆதிசேஷனுக்கு வரம் தந்துவிட்டு, பின்னர் தமது தேவியரையும் அங்கு செல்லும்படிக் கட்டளை இட்டு சேனா முதலியைப் பார்த்துப் பிரமன், அரன், இந்திரன், முதலிய தேவர்களையும் ஆதிசேஷன் மலையாக அமைந்த இடத்துக்குச் செல்லுமாறு பணித்தார். இறைவன் பெரிய திருவடிமீது விளங்கி, தேவியர் மன்றல் கமழ் மேனியராக விலகாது பொருந்தியிருக்க தேவர்களுடன் அங்கு அடைந்து அவர்களுக்குத் திருவருள் செய்யும் சீனிவாசனாக அமர்ந்தருளினார் என்று நாரத முனிவர், பிருகு முனிவரிடம் கூறினார். அதைக்கேட்ட பிருகுமுனிவர், "சேஷமலையில் தலை எது? உடல்எது? வால்எது? ஆதிசேஷனே உலகில் இந்த மலையாகிய புதுமையினைக் கூறுக" என்று வேண்ட, அதற்கு நாரதர் "ஆதிசேஷனின் தலைதான் திருவேங்கடத்திருமலை, ஸ்ரீசைலமே அவருடைய உடல், நரசிங்க மூர்த்தி எழுந்தருளியுள்ள அகோபிலமே வால்! என்று கூறினார். அகத்தியர் முதலிய முனிவர்கள் அந்த மலையிலுள்ள தீர்த்தங்களில் தோய்ந்து, பலநாட்களாக

Koviloor Digital Library

மனதை அலையவிடாமல் இந்திரியங்களை அடக்கித் தவம் புரிகிறார்கள். ஆயிரம் நாமமுடைய திருமேனியே திருவேங்கடவன். அனந்தாழ்வானாகிய ஆதிசேஷனே அங்கு மலையாகி நின்றான். தேவர்களும் முனிவர்களும் சராசரங்களும் அங்கு பகவானை வணங்கி வழிபட்டனர்'' என்று சூதமுனிவர் சௌனகாதியருக்குச் சொன்னார்.

7. ஸ்ரீநிவாசன் நாராயண முனிவருக்கு அருள் செய்த கதை

திருமலையில் ஸ்ரீநிவாசன் செய்த திருவிளையாடல்களையெல்லாம் நான் அறியும்படிச் சொல்க! என்று பிருகு முனிவர், நாரதரைக் கேட்க நாரதர் கூறுகிறார். "ஒரு சமயம் நாராயணமுனிவர், ஸ்ரீமந்நாராயணனைக் காண்பதற்காக உலகம் எங்கும் திரிந்து, பிரமனை நோக்கித் தவஞ்செய்து வந்தார். அப்போது பிரமன் ஒருநாள் அவர் முன்பு தோன்றினார். அப்போது அந்தமுனிவர், "அரியின் பாதத்தைக் காண்பதற்கு அருள்செய்க'' என்று வேண்ட பிரமன், "உலக கருணாமூர்த்தியாகிய பெருமாள் திருமகளோடும் சேஷாசலத்தில் திருக்கோனேரிக்கரையில் எழுந்தருளி உள்ளார். ஆகையால் அந்தத்தெய்வத் திருமலையின் மீது தவம் புரிக!'' என்றார். அவ்வாறு நாராயணமுனிவரும் தவஞ்செய்தார். பகவான், அவர்முன்பு தோன்றி, "முனிவனே! நீ என்னைக் குறித்து தவஞ் செய்த காரணம் என்ன'' என்று கேட்க, "ஆதிமூலமே உம்மைக் கண்களால் காணவேண்டிப் பல நாட்களாக வருந்தி உழன்றும் காணமுடியாமல் பிரமன் உபதேசத்தால் இங்கு வந்து தவமிருந்தேன். பூமியிலுள்ளவர்கள் வருத்தந்தரும் தவம், யோகம் என்ற மார்க்கங்களில் நிற்கச் சரீர வலிமையற்றவர்கள். ஆகையால் தேவரீர் இங்கு எல்லாவுயிர்களுக்கும் அருள் சுரந்து. காட்சி அளித்து

Koviloor Digital Library

அகலாது இருக்க வேண்டும். மேலும் இந்த மலைக்கு எளியேன் பெயர் அமைய வேண்டும்" என்று வேண்டினார். இறைவனும் அவ்வாறே வரம் தந்து அருளினான். பிறகு அந்த முனிவர், பரமபதத்தையடைந்தார். திருமகள் நாயகன், திருக்கோனேரிக்கரையில் இவ்வாறு எழுந்தருளி, வேண்டுவோருக்கு வேண்டியவற்றை ஈந்து, ஆனந்த நிலையவிமானத்தில் அமர்ந்துள்ளான்" என்று நாரத முனிவர் பிருகுமுனிவருக்குச் சொன்னார்.

8. இடபாசுரனைக் கொன்ற கதை

ஒருசமயம், திருமலை நாதனான ஸ்ரீநிவாசன், தனது, சேனைத்தலைவரைப் பார்த்து, "நாம் வேட்டையாடக் கருதுகிறோம். நீ உன் சேனையோடு வருக" என்று ஆணையிட்டுத் தமது குதிரை மீது ஏறிச் சென்றார். சேனைத் தலைவனும் தன்படைகளுடன் விரைந்து சென்றான். இருவரும் வனவிலங்குகளை வேட்டையாடிக் களைத்தார்கள். பின்னர் மணங்கமழும் மலர்ச்சோலை ஒன்றின் வழியாக வரும்போது குன்றுகளைப் போன்ற தோள்களையுடையவனும் சிவபக்தனும் ஸ்ரீ சைலத்தின் தென்திசையில் வசிப்பவனும் ரிஷபன் என்ற பெயரையுடைய அசுரன், பகவான் முன்பு தோன்றி, இறைவனை அறியாமல், "ஏ, மானிடா! இந்தக் காடு என்னுடையது; ஒருவரும் இதனுள்ளே நுழையக்கூடாது. நீ சிறிதும் பயமில்லாமல் இதனுள் வந்துவிட்டாய். உன்னை ஒரே அம்பினால் கொன்று விடுவேன்" என்றான்.

அப்போது திருமலை நாதன், தன்னுடைய படைத்தலைவர்கள் ஒவ்வொருவரையும் அவனுடன் போர் செய்ய ஏவினார். கடும் போர் நிகழ்ந்தது. இடபன் சேனைநாதன் முன்பு நிற்பதற்கு அஞ்சித் தனது

Koviloor Digital Library

மாயையினால் விண்ணில் மறைந்து, அம்புகளை சரமாரியாக பொழிந்தனன். இறைவன் அவனது மாயையை அறுக்க வேண்டித் தமது சக்கரப் படையை ஏவினான். அந்தப் படைக்கலம் கோடி சூரியனைப் போன்ற ஒளியுடன் வருவது கண்ட அந்த அசுரன் மெய்ந்நடுங்கி, "இஃது ஆதிபராபரரான ஆதியே. இதனால் என் உடல் அறும். ஆவிபரமபதம் எய்தும். என் பேதைமையால் இறைவனை எதிர்த்ததும் தீது அன்று முன்பு யான் செய்த தவப் பயனே!" என்று எண்ணி இறைவன் திரு முன்பு அடைந்து "உலகங்களை யெல்லாம் உண்டு உமிழ்ந்த பெருமானே! பிரமன் முதலிய தேவர்களால் காணமுடியாத உம் திருவுருவத்தை யான் கண்எதிரே கண்டனன். உமது சக்கரப்படையால் என் உடலை அறுத்து ஒழித்து, எனக்குப் பரமபதத்தை அருளி, இந்தத் திருமலைக்கு என் பெயரிடவேண்டும்" என்று வேண்டினான்.

அப்போது இறைவன் அவனை நோக்கி, " நீ உனது மரணகாலத்தில் என்னைப்பரன் என்று கருதி, சரணம் அடைந்தாய். ஆகையால் உனக்குப் பரமபதத்தைத் தருகிறேன். இம்மலைக்கு உன்பெயர் வழங்கட்டும்" என்ற அளவில், சக்கரப்படை அவனுடலை அறுத்துத் தள்ளியது. இடபன் இறந்தான். திருமலை நாதனும் திருமலையில் எழுந்தருளினான். அன்றிலிருந்து அந்த மலைக்கு 'இடபாசலம்' என்ற பெயர் நிலைபெற்று விளங்கலாயிற்று. முன்பு திரேதாயுகத்தில் கேசரி என்பவன் சிவபிரானை உள்ளத்தில் நினைத்து புத்திரப்பேறு அடைய வேண்டி அருந்தவஞ் செய்து வந்தான். அவன் முன்பு சிவபெருமான் தோன்றி "உன்தவத்துக்கு மகிழ்ந்தோம். நீ விரும்புவது யாது?" என்று கேட்க, கேசரி சிவனை நோக்கி, "வெற்றியும் திறமையும் மிக்கவனாய் யாராலும்

Koviloor Digital Library

கொல்லப்பட மாட்டாத ஒரு வீரப் புதல்வனை வேண்டுகிறேன்" என்றான். அதற்குச் சிவபெருமான் "உனக்கு ஒரு புதல்வி தோன்றுவாள். அவளுக்கு, ஆண்மகவு ஒன்று, நீ விரும்பியவாறு உண்டாகும்" என்று அருளி கைலாயத்துக்கு திரும்பினார்.

சிவபெருமான் அருளியவாறு கேசரிக்கு ஒருபெண் பிறந்தாள். அவன் அவளைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து அஞ்சனை என்று பெயரிட்டு மகிழ்ந்தான். அப்போது ஒரு வானரத் தலைவன் கேசரியை அணுகி, தனக்கு அந்தக் கன்னியைத் திருமணஞ் செய்து கொடுக்க வேண்டினான். கேசரியும் மனமுவந்து, அவளை அவனுக்குத் திருமணம் செய்து வைத்தான். பிறகு, அஞ்சனையும் அவளுடைய கணவனும் பூங்காவிலும் குன்றுகளிலும் தடாகங்களிலும் மலர்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருந்தனர் என்று நாரதர், பிருகு முனிவருக்குக் கூறினார் என்று சூத புராணிகள், நைமிசாரணிய முனிவர்களுக்கு எடுத்துரைத்தார்.

9. அஞ்சனாதேவியின் தவம்

பிருகுமுனிவருக்கு, நாரதமுனிவர் கூறியதாவது, "அஞ்சனை தன் கணவனுடன் பலகாலம் கூடியிருந்தும் புத்திர பாக்கியமில்லாமல் துயரமடைந்தாள். தருமதேவதை, அவளுடைய துயரத்தை ஒழிக்கக் கருதி, குறத்திவேடம் பூண்டு, கையில் கோலும் இடையில் ஒரு குழந்தையையும் கொண்டு, அஞ்சனையின் முன்பு தோன்றி, "அஞ்சனையே! மகப்பேறு இல்லாமல் நீ கவலைப்படுகிறாய். ஆனால் உனக்கு அளவில்லாத வலிமையுடைய ஆண்மகன் ஒருவன்பிறப்பான். நீ திருவேங்கடமலையை அடைந்து அங்கு தவம் புரிக!" என்றாள் குறமகள். தன் மனக்கருத்தை உணர்ந்து, குறி சொன்னதால் மகிழ்ச்சியடைந்த அஞ்சனாதேவி, அந்தக் குறத்திக்குப் பரிசுகள் பலவற்றையும்

Koviloor Digital Library



கொடுத்து அனுப்பினாள். பிறகு அஞ்சனை திருமலையை அடைந்து ஆகாய கங்கையில் நீராடி, இந்திரியங்களை அடக்கிக் காற்றையே உணவாகக் கொண்டு ஸ்ரீ ஹரியை மனத்தில் இருத்திக் கடுந்தவம் புரிந்து வந்தாள். மழை, பனி, வெய்யில் ஆகியவற்றால் சலிப்படையாமல் தவத்தைப் பேண, வாயு பகவான், அவளுக்கு தான் உணவாதலை உண்ர்ந்து மகிழ்ந்து, நாள்தோறும் அவளுக்கு ஒரு கனியைக் கொடுக்க, அஞ்சனை அதையுண்டு தீவிரமாகத் தவம் புரிந்து வந்தாள். இவ்விதமிருக்க ஒருநாள், சிவபெருமான், தன் தேவியுடன் அங்கு சென்று வசித்து வந்தார். அங்கு ஒரு கடுவன் தன் மந்தியோடு மகிழ்ந்திருப்பதைக் கண்டு, பார்வதியிடம் அதைச் சொல்லி, அவர்கள் இருவருமே வானர உருக்கொண்டு கலவியில் திளைத்ததினால், தோன்றிய வீரியத்தை ஒரு இலையினுள் சேர்த்து வாயு தேவன் அஞ்சனையின் கையில் சேர்ப்பிக்க அவள் அதனைக் கனியெனக் கருதி உண்டனள்.

Koviloor Digital Library

பிறகு, அவளுடைய தவம் முடிவதற்கு உரிய நாள் நெருங்கியது. அவளது கருப்பம் முதிர வயிறு கனத்து நிற்க, அவள் மிகவும் அதிசயமடைந்து பதைபதைத்து இந்த மலையில் தவம் புரிந்ததைத் தவிர, வேறு விருப்பமற்றிருந்த எனக்கு இந்தக்கர்ப்பம் எப்படி உண்டாகியது என்று அவள் திகைப்பையடைந்தாள். அப்போது ஓர் வானொலி "அஞ்சனையே! உன் வயிற்றிலுள்ள கருவானது சிவனது அம்சமுடையது. உனக்குப் பிறக்கும் பிள்ளையைப் பற்றி நான் கூறுவதைக் கேள். சூரிய குலத்தில் திருமால் இராமனாகத் தோன்றி, அறம் வளர்க்க வருவான்.

அவன் திருவடியைத்தாங்கும் பாக்கியமுடையவன் உன் மகன்! எனவே உன் துயரத்தினை விடுவாயாக" என்று கூறி மறைந்தது. பிறகு அஞ்சனை, தன் தந்தையை அடைந்து, நடந்தவற்றை அவரிடத்தில் கூறினாள். பிறகு பத்தாவது மாதத்தில் வானர உருவங் கொண்ட ஒரு புதல்வனைப் பெற்றாள் அஞ்சனை! அவன் உதயகாலத்துச் சூரியனை, ஒரு செங்கனியாகக் கருதிப் புசிப்பதற்குத் தாவிச் சென்றான். அதைக் கண்டு தேவர்கள் அலறினர்.

பிரமதேவன், அவனை விலக்குவதற்காகத் தமது பிரமாஸ்திரத்தை உபயோகித்தார். அதனால் தாக்குண்ட அஞ்சனையின் புதல்வன், பூமியின் மீது மயங்கி வீழ்ந்தான். அதை யறிந்த அஞ்சனை, தன் மகனைத் தன் மடிமீது வைத்து கண்ணீர் விட்டுக் கதறியழுது பிரமனை நோக்கி, "என் மகனைக் கொல்வதற்கு பிரமாஸ்திரத்தை ஏன் ஏவினீர்கள். உங்களுக்கு இவனைப் போன்ற ஒரு மகன் இருந்தால், அந்தச் சிறு பிள்ளைமீது, பெருமைக்குரிய ஒருவன் இதுபோன்ற சக்தி வாய்ந்த ஆயுதத்தைப் பிரயோகித்தால், நீங்கள் மௌனமாகவா இருப்பீர்கள்?" என்று அழுதாள்.

Koviloor Digital Library

அப்போது தேவர்களனைவரும், தமது காரியமாகச் சிவபெருமானின் வீரியமே மகவாக அவதரித்த உண்மை அறிந்து அஞ்சனையை நோக்கி, "உன் பிள்ளை சகல வித்தைகளிலும் வல்லவனாகத் திகழ்வான். விண்ணவர், மனிதர்கள், விலங்குகள், பறவைகள், படைக்கலங்கள் ஆகியவற்றினால் அவன் மரணமடையமாட்டான். திருமாலின் பக்தனாகத் திகழ்ந்து பெருமையும் புகழும் பெற்றுத் திகழ்வான். ஆகையால் நீ துயரம் அடைய வேண்டாம்" என்றார்.

"உன் மகனுக்குக் குறைவற்ற தோள் வலிமை ஏற்படுவதற்கு நான் வரம்தருகிறேன்" என்று பிரமனுக்காக சிவபெருமானும் அவளுக்கு ஆறுதல் கூறினார். பிறகு, பிரமன் அஞ்சனையை நோக்கி, "நீ சேஷாசலத்தில் பலகாலம் தவமிருந்து உலகத்துக்கு உபகாரமானதொரு பிள்ளையைப் பெற்றாய். ஆகையால், உன்பெயரையும் இந்த மலை பெற்றுத் திகழும்" என்று அருள்செய்து தன்னுலகம் சென்றார். அஞ்சனையும் தன் மகனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு, தன் உலகம் அடைந்தாள்" என்று நாரதர் பிருகுமுனிவருக்குச் சொன்னார் என்று சூதமுனிவர், நைமிசாரணிய முனிவர்களுக்குக் கூறினார்.

10. வேங்கடாசலம் என்ற பெயர் பெற்ற கதை

பிருகு முனிவர் நாரதரை நோக்கி, 'சேஷாசலத்துக்கு, வேங்கடாசலம் என்ற பெயர் எப்படி வந்தது?' என்று கேட்க, நாரதர் கூறுகிறார்.

"ஸ்ரீ சைலத்தின் மேற்புரத்தில் நந்தனபுரம் என்று ஒரு நகரம் உண்டு. அந்த நகரத்தில் நந்தன் என்ற அரசன் ஒருவன் வருணாசிரம தர்மங்கள் குறைவின்றித் திகழ ஆட்சி புரிந்துவந்தான். அப்போது அங்கு புரந்தரன் என்ற

Koviloor Digital Library

பிராமணன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு மாதவன் என்ற மகன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு சிறந்த கலைஞன், அவனுக்கு சந்திரரேகை என்ற ஒருபெண்ணைத் திருமணம் செய்து வைத்தனர். அவர்கள் இருவரும் தடாகங்கள், நதிகள், மலைகள் முதலியவற்றில் மிகவும் மகிழ்ச்சியாக விளையாடி மகிழ்ந்திருந்தார்கள். ஒருநாள், ஒரு தாமரைத்தடாகத்தின் அருகே அவர்கள் இருவரும் சுகமாக மகிழ்ந்திருந்தார்கள். அப்போது, தீவினையின் காரணமாகப் புலைப் பெண்ணொருத்தி அங்கு தோன்றினாள்.

அவளைக் கண்டு, அவள்மீது இச்சை கொண்ட அந்தப் பிராமணன் தன் மனைவியைவிட்டு, அவளைப்பின் தொடர்ந்தான். அவளும் அவனுடைய காதல் மொழிகளில் மயங்கி, அவனுக்கு இணங்கினாள். மறையவனும் இகழ்ச்சியைக் கருதாமல், அந்தச் சண்டாளர் பெண்ணோடு கலந்து, கோமாம்சம் மதுபானம் முதலியவற்றை அருந்தலானான். யாத்திரைக்கு வரும் பக்தர்கள் கூட்டத்தை தடியால் தாக்கிப் பொருள் கவர்ந்து அவளிடம் கொடுத்து வாழ்ந்து, பின்னர் அவன் நோயுற்றான். அப்போது அந்தப் புலைச்சி அவனை இகழ்ந்து பின் நீங்கினாள். கொடிய பாவங்களைச் சுமந்த அந்தப் பிராமணன் பித்தனாகி பல இடங்களிலும் அலைந்து, பிறகு சேஷகிரியின் பக்கத்தில் வந்தான். அவன், அனந்தன் வடிவாகிய அந்த மலையின்மீது ஏறிவந்து கொண்டிருந்தபோதே, அவனுடைய பாவங்கள் எல்லாம் சட சடவென்று ஓசையிட்டுச் சாம்பலாகிப் போயின. அவனும் புடத்தில் இட்ட பொன்னைப் போலப் பிரம்மதேஜஜசைப் பெற்று, விளங்கினான்.

அப்போது அங்கிருந்த முனிவர்கள் அவனுடைய வரலாற்றைப்பற்றி விசாரித்தனர். அவனும் தன் பிறப்பிலிருந்து தன்னுடைய சரிதம் முழுவதையும்

Koviloor Digital Library

சொன்னான். மாதவன் என்ற அந்த மறையவனின் பாவமானது, அந்த மலையின் மாண்பினாலே வெந்து நீறானபடியினாலே, முனிவர்கள் அந்த மலைக்கு வேங்கடாசலம் என்று பெயரிட்டனர். 'வேம்' என்பது பாவத்தைக் குறிக்கும். 'கட' என்ற இரண்டாவது பதம் கொளுத்தப்படும் என்ற பொருளைத்தரும். வெம்பவம் வெந்து ஒழியச் செய்வதால் வேங்கடமலை என்ற பெயரை எய்தியது என்று கூறி, அந்த முனிவர்கள் தம்முடைய ஆசிரமங்களுக்குச் சென்றார்கள். பிரம்மதேஜஸைத் திரும்பப் பெற்ற மாதவனும் அந்தமலையின் மீது, அளவில்லாத காலம் இந்திரியங்களையடக்கி அருந்தவமாற்றித் திருமகள் கொழுநன் அருளைப் பெற்றுப் பரமபதத்தை எய்தினான். இவ்வாறு பிருகுவுக்கு நாரதமுனிவர் இந்தச் சரிதத்தைக் கூறினார்.

11. சோழனுக்கு, சக்கரவர்த்தி பிறந்த கதை

பிருகுமுனிவர், நாரதரை நோக்கி, "இறைவன் முன்பு நியமித்த சோழ அரசனின் புதல்வன் பூமியில் எங்கே இருந்தான்? அவன் யார்? சேஷாசலத்தின் மீது அவன் அன்புற்ற வரலாறு யாது கூறுக" என்று கேட்க நாரதர் கூறுகிறார். இந்தக் கலியுகத்தில் அறநெறி தவறாமல் அரசாட்சி செய்து வந்த ஒரு சோழ அரசன் ஒருநாள், காட்டுமிருகங்களை வேட்டை ஆடுவதற்கு விரும்பினான். எனவே அவன் பலகாடுகளில் யானை, புலி, சிங்கம் முதலிய மிருகங்களை வேட்டையாடிப் பின்னர் சேஷகிரி வனங்களில் நாடித்திரியும் போது மின்னொளி வாய்ந்த கன்னி ஒருத்தியைக் கண்டான். மலர்களைப் பறித்துக் கொண்டிருந்த அந்த மங்கையும் அவன்மீது மையல் கொண்டாள். அரசன், அந்த மங்கையை நெருங்கி, "இந்தக்காட்டில் தனியாக வந்த நீ யார்? உன்னைப்

Koviloor Digital Library

பெற்றவர் யார்? எவரேனும் உன்னைத் திருமணம் செய்து கொள்ளவிருக்கிறார்களா? நீ யாரை மணம் செய்து கொள்ள விரும்புகிறாய்?" என்று கேட்க, அதற்கு அவள், "என் தந்தை நாகலோகத்தின் வேந்தர்! அவர் பெயர் தனுசர். நிலவுலகில், உயர்ந்த குணமும், அழகும், கல்வியும், வீரமும் வெற்றியும் வாய்ந்த அரசனுக்கே என்னைத் திருமணம் செய்து கொடுக்க விரும்புகிறார். நீங்கள் அவரை அணுகிக் கேட்பீராக!" என்றாள்.

அப்போது அந்த அரசன் "நீ சொல்வது உண்மையென்றால் நான் சொல்வதைக் கேட்பாயாக! பாதாள உலகம் சென்று உன் தந்தையாரின் அனுமதியைக் கேட்கும் வரையில் நான் காத்திருக்க மாட்டேன். ஆகையால் அறிஞர்கள் கூறியுள்ள எட்டுவகைத் திருமணங்களில் ஒன்றாகிய, கந்தருவ முறைப்படி உன்னை மணந்து கொள்கிறேன்! நீயும், உனக்கு என்மீது விருப்பம் இருந்தால், இந்த மணமுறைக்கு இசைவாயாக!" என்றான். அப்போது அந்த அரசகுமாரி அவனுக்கு இசைந்தாள்.

இருவரும் மனம் ஒருமித்து, மாதவிப்பந்தலின் கீழ் மருவி இன்புற்றார்கள். பின்னர், சோழ அரசனின் உத்தரவைப் பெற்ற அந்த நாகலோக மங்கை தன்னுலகம் சென்று, தன் தந்தையிடத்தில், சோழ அரசனுக்கும் தனக்கும் நிகழ்ந்த கந்தருவ மணத்தைப் பற்றிக் கூறினாள். நாகவேந்தனும் தக்க மணம் என்று கருதி, மகிழ்ந்திருந்தான். நாககன்னிகை, கருவுற்று, பின்னர், பத்தாவது மாதத்தின் இறுதியில் எவ்வுலகத்தையும் புரக்கும் தகைமையுடையவனாகத் திருமாலின் திருவடியில் மெய்ப்பற்று உடையவனாக, அறங்களைக் காக்கும் இலக்கணம் வாய்ந்த ஒரு புதல்வனைப் பெற்றாள்" என்று நாரதமுனிவர், பிருகுமுனிவருக்குக் கூறினார்.

Koviloor Digital Library

12. சோழன் மகனுக்கு முடிசூட்டுவிழா!

நாரதமுனிவர், மேலும் கூறியதாவது, "நாகவேந்தன், தன் புதல்வி ஈன்றெடுத்த புதல்வனின் ஜாதகத்தையும் வடிவத்தையும் கண்டு, இந்தப் புதல்வன் அரசர்கள் யாவருக்கும் அரசனாகத் திகழ்வான் என்று அறிந்து மகிழ்ந்து, அந்த ஆண்மகனைப் பேணி வளர்த்து வருங்காலத்தில், பாலபருவம் அடைந்த அந்தக் குழந்தை தன் அன்னையின் அடியினை வணங்கி, "என் தந்தை யார்? அவரது சொந்த ஊர் யாது?" என்று கேட்டான். அதற்கு அவனுடைய அன்னை, "இந்த நிலவுலகத்தில் அரசுபுரியும் சோழபூபதிதான் உனது தந்தை. ஒருநாள் வேங்கடமலைச் சோலையொன்றில் என்னைக் கண்ணுற்றுக் கந்தர்வ முறையால் மணந்தார்" என்றாள். உடனே அவன் தன் தந்தையைக் காணவேண்டும் என்ற ஆசையினால், தாயின் ஆசியைப் பெற்று, நிலவுலகம் சென்று தன் தந்தையின் தேசத்தை அடைந்து, அவன் முன்பு தன் வரலாறு முழுவதையும் கூறினான்.

சோழன் திகைப்படைந்து நின்றான். அப்போது ஆகாய வாணி தோன்றி, "சோழ மன்னனே! நீ ஐயப்பட வேண்டாம் நாககன்னிகைக்கும் உனக்கும் பிறந்த மகன் இவன். இவன் மன்னாதிமன்னனாகப் புகழ்பெற்று தருமமும் நீதியும் தழைக்க அரசு புரிந்து சக்கரவர்த்தியாகத் திகழ்வான். திருவேங்கட மலைமீது விளங்கும் திருமாலுக்கு அடியவனாகத் திருத்தொண்டு செய்து திருவிழாக்கள் முதலியவற்றைச் சிறப்பாக நடத்தி பெருமைக்குரியவனாகத் திகழ்வான். எனவே, நீ இவனுக்குத் தடையின்றி முடி சூட்டுவாயாக!" என்று அரசவையிலிருந்த அவனது அமைச்சர்களெல்லாம் வியக்கக்கூறியது. அந்த அசரீரி வாக்கின்படியே சோழஅரசன், அவனுக்கு மாலைசூட்டி முடிசூட்டி

Koviloor Digital Library

நிலவுலகை ஆள்வதற்கு நியமிக்க, அவனும் புகழ்பெற்றவனாகப் பூமியை ஆட்சிபுரிந்து வந்தான். இவ்வாறு அவன் வாழ்ந்து வரும் காலத்தில் ஒரு நாள் இடையர் குலத்து மாந்தர்கள் சிலர், அரசன் முன்பு வந்து "அரசே! உமது ஆணையினால் சோலை சூழ்ந்த திருவேங்கட மலையில் நாங்கள் ஆடுமாடுகளை மேய்த்து வாழ்கிறோம். தங்கள் சமூகத்திற்குத் தவறில்லாமல் பால்குடங்களைக் கொண்டுவரும் வழியில் ஒரு புற்று உண்டு. அந்தப்புற்றின் அருகே வரும் போது, நாள்தோறும் அந்தக் குடங்கள் எல்லாம் முறைமுறையாக இரண்டாகப் பிளந்து விழுகின்றன. இந்த அதிசயத்தைத் தெரிவிக்கத்தான் நாங்கள் இங்கு வந்தோம்" என்றார்கள்.

அதைக் கேட்ட அரசன் ஆச்சரியமடைந்தான் அன்றிரவு அரசன் ஒரு கனவு கண்டான். மறுநாள், விடியற்காலையில் அவன் தன் அரசவையை அடைந்து அமைச்சர்களைக் கூட்டி அமரச் செய்து, "அமைச்சர்களே! நான் நேற்றிரவு கனவு ஒன்றைக் கண்டேன். கரிய மேகம் போன்ற மேனியில், மின்னொளி போன்ற பெண்ணுருவத்துடனும் வில்லுடனும் தாமரைச் செங்கண்ணனாய்ப் பொன்னாடை புனைந்த பரமபுருஷனாக ஒருவன் என்முன்பு தோன்றி நிற்க, 'நீர் யாவர்? இங்கு வந்த காரணம் என்ன?' என்று நான் கேட்டேன்.

அவன், "திருமலைமேல் வைகும் சீனிவாசப் பெருமான் என்னை நோக்கி, உன்னை இப்போதே அழைத்து வரக் கூறினார்" என்றான். நானும் என் உடல் பூரிக்க, உள்ளம் மகிழ சேஷகிரிக்கு அவனுடன் சென்றேன். அங்கு ஒளிமிக்க விமானத்தின் கண், "திருமகள் நிலமகள், நினைவோடு சதுர்ப்புயமும் சக்கர சங்கமும் மகரக்குழையும் துளபமாலையும் விளங்க சூரியர் ஆழ்வார் உதயம் செய்ததைப் போல, இறைவனின்

Koviloor Digital Library

தோற்றம் கண்டு, இதயம் உருகி இறைஞ்சினேன்" என்றான். மந்திரிகள் அரசன் கூறியதைக்கேட்டு, "அந்தத் திருமலையின்மேல் ஒருபுற்றின் கண் இறைவன் மேவி அமர்ந்துள்ளான். அந்தப் புற்றினைப் பாலால் திருமஞ்சனம் செய்து கரைத்தால், அவன் வெளிப்பட்டுத் திருவருள் பாலிப்பான்" என்றார்கள். அந்தச் சமயத்தில் அங்கு ஒரு வேடன் வந்தான். அவன், அரசனை நோக்கி, "அரசே! நாங்கள் திருமலைமேல் 'நத்தைச்சூரி' என்ற விதையைத் தேடி எடுத்து, இடித்து மாவை நாள்தோறும் மனைவிமக்கள் சுற்றம் எல்லாம் உண்டு வாழ்கிறோம். என் வீட்டை நாள் தோறும் ஒரு ஆண் வெண்பன்றி அடைந்து, அதனைத் தின்றுவிட்டு விரைவில் போய் விடுகின்றது.

என் புதல்வனைக் காவல் வைத்து, நான் வேட்டைக்குச் சென்று திரும்பி வருவேன். ஒருநாள், அவன் அந்த மாவை வெண்ணையோடு கலந்து உண்டு கொண்டிருக்க, நான் அவனை நோக்கி "ஏனடா! ஆதிபகவன் உவப்ப அமுது செய்யாமல் நாங்கள் உண்பதை தவிர்த்திருக்கிறோம். நீ அதனை அறிந்தும், நீ அவனுக்கு அமுது செய்யாது உண்கின்றாயா!" என்று சினந்து என் வாளை ஓங்கி, அவனை வெட்டுவதற்கு நெருங்கியபோது ஆகாயத்தில் இடிபோல, "மகனைக் கொல்லாதே! சர்வ குலோத்தமன் உன்பால் கிருபையால் நத்தவித்தையமுது செய்தான். இவையெல்லாவற்றையும் நீ அரசனிடம் தெரிவிப்பாய்! அவன் கனாக் கண்டுள்ளான்" என்று கூறியது என்று அந்த வேடன் சொன்னான். இடையர் கூறியதும் கனவு கண்டதும் மந்திரியர் கூறியதும் கொண்டு, எல்லோருமாக திருமலை சென்று மறுநாள் பால்குடங்களை யெல்லாம் அங்கு கொண்டு வரும்படி கட்டளையிட்டான். இவ்வாறு நாரதர் பிருகு முனிவருக்கு கூறினார்.

Koviloor Digital Library

13. தொண்டைமானின் திருப்பணி

பிறகு, நாரத முனிவர் கூறியது; "தொண்டைமானுக்கு அந்த வெண்பன்றி செல்லும் இடத்தை அந்த வேட்டுவன் சொல்ல, அதனைக் காண வேண்டும் என்று அவன் அதைத் தேடிச் செல்லும்போது, புங்கம் விதையை உண்ணும் அந்தப் பன்றியைக் கண்டு வியப்புற்று நோக்கும் சமயத்தில் அது ஒரு புற்றுக்குள் நுழைய, வேடன் அரசனை நோக்கி, "இரண்யாட்சன் முன்பு, கடலினுள்ளே பூமியைப் பெயர்த்துச் செல்லும்போது அவன் உடலைக்கிழித்து இந்தப் பூமியைத் தாங்கிக் கொண்டு வந்த ஆண்பன்றிதான் இது! ஐயமில்லை. இப்போது, இந்தப் புற்றினைத் தோண்டி எறிந்தால், அந்தப் பரமர் வெளிப்படுவார்" என்று சொல்ல, அரசன் அதைக் கேட்டு, உன் மொழிப்படியே செய்யின் பிழை ஏற்படும் என்று கூறி, பக்தியுடன் அந்த இடையர்கள் கொண்டு வந்த பாலைக் கொண்டு, அந்தப்புற்றைக் கரைத்த அளவில், மிகவும் ஒளிவாய்ந்த அற்புதமான விமானத்தைக் கண்டு கைதொழுது பக்தியோடு நிற்க அந்தவிமானத்தின் இடையில் நீத்தமூலப் பரஞ்சுடராகிய நின்மலனின் திருமார்பு தோன்ற, அந்த வராக மூர்த்தியைத் தரிசித்து அஞ்சலி செய்து துதித்து ஆனந்தக் கடலில் நின்றான்.

அரசனை அந்த வராகமூர்த்தி தமது திருக்கண்களால் நோக்கி, "அரசனே எனக்குத் தெற்குப்பாகத்தில் சாமி புஷ்கரிணி தீர்த்தத்தின் மேற்குப் பாகத்தில் அமைந்த மணிவிமானத்தில் திருப்புளிய மரத்தின் கீழாகத் திருமகள் திருமார்பில் விளங்கத் தன் இருமுழந்தாள்கள் வரை புற்று வளர்ந்திருக்க ஸ்ரீநிவாசன் எழுந்தருளியிருக்கிறான். நிமித்தம் யாது எனின் பரமபதத்தில் அர்த்த சப்தத்துக்கு உவந்து திருச்செவி கொடுத்துப் பாற்கடலில் துயின்று

Koviloor Digital Library

சராசரங்கள் புரியும் பாவத்தொடர்பைத் தொலைத்து இகபரநலன்கள் தருவதற்கு என்று இந்தத்தலத்தை அடைந்துள்ளான்.

ஆகையால், அவனை அடைந்து அஞ்சலிசெய்து ஆங்குத்திருப்பணிகள் புரிந்து, புஷ்கரணியின் மேல் சார்பில் ஸ்ரீநிவாசன் திருக்கோயிலுக்கு வடக்கே எனக்குத் திருக்கோயில் அமைத்து, நாள்தோறும் ஆராதனைகள் செய்வாயாக!" என்று கூறி மறைந்தருளினான். அவற்றைக் கேட்ட அரசன் அந்தத் திருப் புளிய மரத்தின் கீழ் எழுந்தருளிய ஸ்ரீநிவாசனைப் பாலால் திருமஞ்சனம் செய்யப் புற்றிலிருந்து அந்தப் பெருமான் வெளியாகிக் காட்சிதந்தருளினான். அரசன் உள்ளம் குழைந்து ஸ்ரீநிவாசனைப் பரவி நின்றான். அப்போது இறைவன் அரசனை நோக்கி, உனக்கு உரிய வரத்தினைக் கேட்பாயாக" என்று கேட்க, அரசன், "தவம் செய்வதில் வல்லவர்களும் யோகிகளும் காண்பதற்கு அரியதாகிய இந்தத்திரு வடிவத்தை, நாட்டில் உள்ள அனைவரும் தொழும்படி இங்கு என்றும் இருக்கவேண்டும்" என்று இறைஞ்சினான். ஸ்ரீநிவாசமூர்த்தியும் இந்தத்திருமலையின் மேல் என்றும் உறைவோம். உன்னைப் போலப் பக்தி செய்பவர்கள் இல்லை. எனக்கும் வராகமூர்த்திக்கும் திருக்கோயில் திருப்பணிகளை நடத்தி மூன்று காலமும் ஆராதனை முறைகள் தவறாமல் சான்றோரைக் கொண்டு செய்வாயாக" 'என்று ஆணையிட்டருள, அரசன் அவ்வாறே மூன்று காலத்திலும் வைபவத்தோடு, நடத்தி நித்தியவிழா, பக்ஷவிழா, மாதவிழா, முதலியனவும் நிகழ்த்தி பிரம்மோத்சவத்தைத் திருவேங்கடநாதனுக்குச் செய்விப்பதற்குக் கன்னிமாதத்தில் கொடியேற்றம் செய்ய விண்ணவரும் மண்ணவரும் வியந்து நயந்து கொண்டாடினார்கள். இந்தத் திருவிழா ஒன்பதாம் நாளாகிய திருவோண நட்சத்திரத்தில், சாமி

Koviloor Digital Library

புஷ்கரிணியில் திருவாழியாழ்வான் தீர்த்தம் ஆடிய பின் அன்று இரவில் கொடியிறக்கம் செய்து, தூபதீப நைவேத்தியம் முடித்து, பன்னிரண்டு திருவாராதனத்துடன் புஷ்பயாகமும் விதியாக நடத்தி முடித்தான். ஆனந்த நிலைய விமானத்தில் எழுந்தருளித் தொழுவார்க்கு எல்லாம், திருவருள் செய்து நின்றான். அரசனும் தனது அரண்மனைக்குச் சென்றான்.

14. கிருஷ்ணசர்மாவின் சரித்திரம்

திருவேங்கடநாதனுக்குப் பிரம்மோற்சவத்தை நிறைவேற்றிய அரசன், உலகத்தில் தர்மம் தழைக்க அரசு புரிந்துவரும் காலத்தில், வேதியன் ஒருவன் தன் மனைவியுடன் தன் எதிரில்வர, அரசன் அந்த வேதியனின் வரலாற்றைக் கூறும்படிக் கேட்டான். அதற்கு அந்த வேதியன் "நான் தென்திசையில் சக்ரபுரியில் சர்மன் என்ற பிராமணனின் புதல்வன். என்பெயர் கிருஷ்ணசர்மா. என்மனைவியின் பெயர் சுதாமணி. மூன்றுமாதக் குழந்தையைக் கையில் ஏந்திக் கொண்டு, தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டு என்னிடம் வந்த அவள், நடக்கமுடியாமல் வருந்துகிறாள். காசியாத்திரைக்குச் செல்லும் நான் திரும்பி வரும் வரையில், அவர்களை இங்கு உமது பாதுகாப்பில் வைத்துச் செல்ல விரும்புகிறேன். திரும்பி வந்ததும் அவளை அழைத்துச் சென்று விடுகிறேன்" என்றான். அரசனும் அதற்குச் சம்மதித்தான். அந்தணன் காசியாத்திரைக்குச் சென்றான். அரசன் அந்த அந்தணனின் மனைவியையும் குழந்தையையும் ஒரு வீட்டில் குடியிருக்கச் செய்து ஆறுமாத காலத்துக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் பிறவற்றையும் திரட்டிக் கொடுத்து அவளை நோக்கி, "அம்மையே? இந்த வீட்டை விட்டு வெளியே போகாமல், நாள்தோறும் நீ வேண்டுவதை

Koviloor Digital Library

உண்டு, இங்கேயே தங்கியிருப்பாயாக'' என்று கூறிவிட்டு, அந்தவீட்டின் புறக்கதவைத் தாளிட்டு முத்திரையிட்டு தன் அரண்மனைக்குச் சென்று ஆட்சிமுறையில் மனம் செலுத்தி வந்தான். கிருஷ்ண சர்மா, தனது காசியாத்திரையை முடித்து, திரும்பி அரசனிடம் வந்து, “அரசே! என் மனைவியையும் குழந்தையையும் உமது அடைக்கலமாக ஒப்படைத்துவிட்டு, கங்கையில் நீராடி, கயையில் சிராத்தம் செய்து முன்னர் சொன்னது போல நான் திரும்பி வந்து விட்டேன். என் மனைவியும் கைக்குழந்தையும் எங்கே இருக்கிறார்கள்?'' என்று கேட்டான்.

அரசன் திடுக்கிட்டு, அடைக்கலம் அளித்த அவர்களைப்பற்றி, இத்துணைக் காலமும் கவனமின்றி இருந்து விட்டோமே என்று அஞ்சி, அருகில் இருந்த பணியாளனிடம் திறவு கோலைக் கொடுத்து, அந்தமனையைச் சென்று பார்த்து வர அனுப்பினான். அவன் திரும்பி வந்து, ‘தாயும்சேயும் இறந்து விட்டார்கள்’ என்று தெரிவிக்க, அரசன், “ஐயோ! பிரம்ம குலஸ்திரீஹத்தி சிசுஹத்தி தோஷங்கள் என்னைப்பற்றிக் கொண்டனவே!'' என்று துயர் கொண்டு வேங்கடத்து இறைவனை மனதில் தியானித்து எதிரில் நின்ற வேதியனைநோக்கி, “மறையோரே! உமது மனைவி குழந்தையுடன், என் ஆணையினால் வேங்கடத்து இறைவனை தொழுவதற்குச் சென்று இருக்கிறாள். நாளை நீங்கள் இங்கு வந்து அவளைக் கூட்டிச் செல்வீர்'' என்று கூறிவிட்டு, மனம் நொந்து திருமலை மீது ஓடிச் சென்று இறைவனின் திருவடியைப் பற்றி இறைஞ்சிப் பலவாய் துதித்து “ஈசனே! கொடும் பாவம் செய்து வந்தேன். இப்போது அது விலக அருள் செய்யவேண்டும். ஒரு மறையோன், கங்கைக்குத் தீர்த்த யாத்திரை செய்து காசிக்குச் சென்று திரும்ப வேண்டும். அதுவரையில் என்

Koviloor Digital Library

மனைவியையும் குழந்தையையும் உம்மிடம் ஒப்படைத்து செல்கிறேன்'' என்று அவர்களை என் பாதுகாப்பில் விடுத்துச் செல்ல, நான் அவர்களுக்கு ஒரு தனி வீடு அமைத்து அங்கு அவர்களை வசித்துவரச் செய்து, ஆறுமாத காலத்துக்கு வேண்டிய உணவுக்குத் தேவைப்படும் பொருள்களையும் சித்தஞ்செய்தேன். பிறகு எனது அரசாங்க வேலைகளில், அவர்களை நான் மறந்து போய்விட்டேன். பிறகு, கங்கையில் நீராடி, காசியில் பிதுர்க்கடன்களை நிறைவேற்றித் திரும்பி வந்த அந்தப் பிராமணன் மீண்டும் என்னிடம் வந்து, தன் மனைவியையும் குழந்தையையும் அனுப்புமாறு வேண்டினான். நான் எனது ஏவலாளை அனுப்பி, அவர்களைப்பார்த்துவரச் செய்தேன். அவர்கள் இறந்து விட்டார்கள் என்று சொன்னான். நான் துயரமடைந்து, அந்த மறையவனிடத்தில் உமது மனைவியும் மகனும் திருவேங்கடத்தானைத் தொழுவதற்குச் சென்றிருக் கிறார்கள். நாளை வருவார்கள் உடன் கொண்டு செல்க'' என்று சொல்லியனுப்பி வைத்தேன். என் பாவம் அகலுமாறும் அவர்கள் உயிர்பெறுமாறும் அருள்க'' என்று வாய்புதைத்து நின்றான்.

இறைவன் அரசனைக் கடைக்கணித்து "அந்த மறையவன் நீராடச் செல்லும்போது, என்னைத் தொழுது என்னிடம் விடைபெற்றுச் சென்றனன். அவன் மனைவியும் என் மீது பக்தியுடையவள் ஆகையால் அவர்கள் உயிர்பெறச் செய்வோம்'' என்று சொல்லி சேனைமுதலியை அழைத்து, ஈசானதிசையில் பாவங்களையெல்லாம் நீக்கி அருள் செய்கின்ற 'சோரம்' என்ற தீர்த்தம் ஒன்றுண்டு அதன் நீரை முகந்து கொண்டு வந்து அவள் மேனியிலும் அவள் மகனின் மேனியிலும் தெளித்தால் அவர்கள் உயிர்பெற்று எழுவார்கள்'' என்று ஆணையிட அந்தச் சேனை நாதரும் அவ்விதமே செய்து

Koviloor Digital Library

உயிர்ப்பித்து அருளினார். அப்போது திருவேங்கடத்து இறைவன் அந்தணனை அருகிலே அழைத்து வரச் செய்து, "நீ வேண்டும் வரம் யாது?" என்று கேட்க, அவன், "இறைவனே! உனது திருவடிப்பக்தியே எனக்குத் தழைக்க அருள்க!" என்று வேண்ட அதனை அருளினான். தேவர்களனைவரும் போற்றினர். அப்போது இறைவன் சோழனை நோக்கி, "உனக்கு நிகர் ஒருவரும் இல்லை. இந்த மறையவன் சிறு தெய்வவழிபாடு செய்தது போல என்னையும் பலநாட்களாக நினைத்து வந்தான். இனி வரும் பிறப்பில் வேதாந்தத்தினில் தெளிவுபெற்றுப் புனிதனாகப் பரந்தாமம் அடைவான்" என்று அருளிய அளவில் அரசன் அந்தணனுக்கு நன்கொடைகள் பலவற்றை வழங்கி, அவனை அனுப்பிவைத்தான். அரசனும் இறைவனை வணங்கி, விடைபெற்று பக்தி செய்து வந்தான். இந்தக் கதையைச் சௌனகாதி முனிவர்களுக்கு சூதமுனிவர் கூறியருளினார். இது பிரம்மாண்ட புராணத்திலுள்ள கதை.

15. மேரு புத்திரனின் கதை

சூரிய வமிசத்து அரசனாகிய திலீபச் சக்கரவர்த்தியின் அரண்மனையை நோக்கி, துருவாசமுனிவர் என்ற அருந்தவச் செல்வர் வருவதைக் கண்டதும், அவரை அவன் எதிர் கொண்டு உபசரித்து, உயர்ந்த ஆசனத்தில் அமரச் செய்து தொழுது! "சேஷாசல தீர்த்த மான்மியத்தையும் திருமகள் நாயகன், அங்கு எழுந்தருளியதையும் எமக்கு அருளிச் செய்க" என்று வேண்டினான். அப்போது, அந்த முனிவர், "திருவேங்கட மலையானது சுவர்ணமுகி நதிக்கரைக்கு ஐந்து யோசனை நீங்கி, ஐம்பது யோசனை நீளமுடையதாகவும் மேருமலையின் மகவாய், ஆதிசேஷனோடு அடைந்த

Koviloor Digital Library

காரணத்தினால் அதனை சேஷாத்திரி என்று வழங்குவர்'' என்றார். அந்த "வரலாற்றைக் கூறுக'' என்று கேட்ட அரசனுக்கு மேலும் கூறுவார். "ஒரு காலத்தில் ஆதிசேஷன் எண்ணில் ஒரு கோடி அண்டங்களையும் தன் வயிற்றில் வைத்துக் கொண்டான். இறைவனுக்குப் படுக்கையானோம் என்றும் உலகம் யாவும் நாம் சுமக்கிறோம் என்றும் தேவர்கள் அனைவரும் தன்னைவிடச் சக்தியில் குறைந்தவர்கள் என்றும் கர்வம் கொண்டான். அப்போது வாயுதேவன், திருப்பாற்கடலில் விளங்கும் திருமகள் கேள்வனைப் பணிவதற்கு நெருங்கிய போது அவ்விறைவன் திருமகள் முதலிய தேவியருடன் பிரமானந்தவனத்தில் தங்கி அருள் செய்யும் தருணமாகியபடியால், ஆதிசேஷன் எதிரில் நின்று "நீ இங்கே வருதல் கூடாது!'' என்று வாயுதேவனைத் தடுக்க வாயுதேவனுக்குக் கோபம் வந்தது. "எங்கும் உலாவும் என்னைத் தடுக்கும் பூரண சக்தியுடையவனோ நீ!'' என்று அவன் ஆதிசேஷனைக் கேட்டான். ஆதிசேஷன், "நான் திருமாலுக்குப் படுக்கையாகவும் இருக்கையாகவும் குடையாகவும் அடிநிலைகளாகவும் இருந்து தினந்தோறும் அவருக்குத் தொண்டனாகப் பணிசெய்து கொண்டு, அவரையே நீங்காமல் இருக்கிறேன். நீயும் என்னைப்போல அடியவனாக சக்திமானாக என் முன்பு வருக'' என்று கூறினான்.

உடனே வாயுபகவான் கோபத்துடன் நகைத்து, "நீ காவல் செய்பவன். பூஜை என்ற பெயரில் ஒளிந்து வசிப்பவன். நானோ யானையைப் போல எங்கும் எவ்வுயிர்க்கும் ஆதரவாகத் திரிபவன். பலம் ஞானம், விஷ்ணுபக்தி ஆகியவற்றில் எனக்குச் சரிநிகர் என்று சொல்ல யார் இருக்கிறார்கள்?'' என்று கூறினான். அதற்கு ஆதிசேஷன் "நீ தற்புகழ்ச்சி செய்வது சரியல்ல. பிறரல்லவா உன்னைப்புகழ வேண்டும்? வீணாகப்

Koviloor Digital Library

பிதற்றாதே! வேண்டுமானால், இருவர் வீரமும் விளங்கக் காணலாம்" என்று கோபத்தோடு கூறினான். அப்போது திருமகள் நாயகன் அங்குவரவும், அவர்கள் இருவரும், தங்களுக்கு இடையே நிகழ்ந்த பகைமையைக் கூறினார்கள். அவர்கள் கூறியதைக் கேட்டு ஆதிசேஷனின் திறமையை அறிந்து, அவனது மமதையை ஒழிக்க வேண்டி, அவனை நோக்கி, "உனக்குச் சக்தி ஏது? காற்றுத்தேவனே, எவ்வுயிர்க்கும் ஜீவாதாரமாக விளங்குபவன். நீ என்னை தாங்குபவன் என்றும் பூமியைச் சுமப்பவன் என்றும் எண்ணிக் களிக்க வேண்டாம். எவ்வுலகினையும் நானே கூர்மவடிவில் தாங்குகிறேன்" என்று கூறியருளினார். அதைக் கேட்டு வருந்திய ஆதிசேஷன் திருமாலின் திருவடிகளை வணங்கி, "எங்கள் வெற்றியை தேவரீர் காணவேண்டும். நான் மேருபுத்திரனைச் சுற்றிக் கட்டிச் சேர்க்கிறேன். இந்த வாயுதேவன் அதிக வலிமையுடையவனாயின், அதனை எடுக்கட்டும்" என்றான். இறைவன் வாயுவையும் ஆதிசேஷனையும் நோக்கி, "அவ்வாறே செய்க!" என்றார்.

ஆதிசேஷன் அந்த மலையைத் தன் உடலால் பிணைத்து, தீ விழியோடு வாயுவைப்பார்த்து, "உன்னுடைய வலிமையையெல்லாம் கொண்டு இந்த மலையைத் தாக்குக!" என்றான். வாயுதேவன் திருமாலின் அருளினால், அந்தமலையை ஆதிசேஷனுடன் பெயர்த்து ஒன்றறைலட்சம் யோசனைக்கு அப்பால் சுவர்ணமுகி நதிக்கரையில் உள்ள ஒரு சோலையில் வீழ்த்தினான். மேரு, தன் மகனுக்குப் பெருமையும் உயர்வும் ஏற்பட்டதற்காக மகிழ்ந்தான். வாயுவும் மகிழ்ச்சியுற்றான். ஆதிசேஷன் இறைவனின் ஆணையினால் அம்மலையுடனே, சேஷகிரியாகக் கிடந்தான்" என்று கூறினார்.

Koviloor Digital Library

16. ஸ்வாமி புஷ்கரிணியின் பெருமை

பின்னர், திலீபன், திருவேங்கட மலைமேல் இறைவன் எழுந்தருளிய காரணத்தைக் கேட்க, துர்வாசமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

"இறைவனால் கர்வம் ஒடுங்கப்பெற்றுச் சாந்தனாகிய ஆதிசேஷன் திருமலையின் வட பாகத்தில் உள்ள சிகரம் ஒன்றில் தீர்த்தங்களில் எல்லாம் சிறந்த தீர்த்தமாகி, கோனேரி ஸ்வாமிபுஷ்கரிணி என்ற இரண்டு திருப்பெயர்களுடன் விளங்கும் தீர்த்தத்தின் வாயுதிக்கில் உள்ள நாகதீர்த்தம் என்ற தீர்த்தக்கரையை அடைந்து, திருமகள் கேள்வனை நினைந்து, பலவருஷங்கள் தவம் புரிந்துவந்தான். அவனது தவத்திற்கு இரங்கிய திருமால் அவன் முன்பு தோன்றி, "உனக்கு யாது வேண்டும்" என்று கேட்க, அதற்கு ஆதிசேஷன் "ஐயனே, அடியேன் மமதையினால் தீமைபுரிந்து அபராதியானேன். நான் செய்த பிழையைப் பொறுத்து மலையாகி நின்ற என்மீது தேவரீர் எழுந்தருளி உலகத்திலுள்ளவர்களுக்குக் காட்சி தந்தருளவேண்டும்" என்று வேண்டினான்.

இறைவன், "நான் முன்பே, உலகில் எழுந்தருளத்தக்க சிறந்த இடம் எது என்று நாரதமுனிவனைக் கேட்டு, உன்னை, அங்கு மலையுருவம் பெற நியமித்தோம். அப்படிச் சொன்ன எமது ஆணை நிறைவேறுவதற்காகவே இவ்வாறு நிகழ்ந்தது. உன் பிழைகளை யாம் பொறுத்தோம். நாம் திருமகளோடும் அங்கு என்றும் விளங்குவோம்" என்று கூறிக் கோனேரிக் கரையில் ஸ்ரீநிவாச மூர்த்தி வீற்றிருக்கிறார் என்று துருவாச முனிவர் கூறிமுடித்தார். திலீபன் முனிவரை நோக்கி, "அந்த மலையில் தீர்த்தங்கள் பலவும் இருக்கின்றனவே

Koviloor Digital Library

அப்படியிருக்கத் திருக்கோனேரி தீர்த்தத்தைத் தேர்ந்து எடுத்துக் கொண்டதற்குக் காரணம் யாது?" என்று கேட்டான். முனிவர் மேலும் தொடர்ந்தார். "வாணிதேவி, முன்பு தீர்த்தங்கள் அனைத்துக்கும் மேலான தீர்த்தம் என்று எண்ணம் கொண்டு பிரம்ம ஆவர்த்தனம் என்ற இடத்தில் நதிவடிவங் கொண்டிருந்தாள். அந்த நதியின் அருகில், ஒருநாள் புலஸ்திய முனிவர் வந்தார். சரஸ்வதி அவனை மைந்தன் என்ற முறையினால் உபசரிக்காமல் இருந்து விட்டாள். அதனால் கோபங் கொண்ட புலஸ்தியன், "நீ நதிகளுக்கு எல்லாம் உயர்வானவள் என்று எண்ணிவிட்டாய். திருமாலின் திருவடியில் வரும் திரிபதகை தான் சிறந்தது என்று எவருமே சொல்வார்கள். அத்தகைய உயர்வை உன்னால் அடைய முடியாது" என்று கடுமையாகக் கூறினான். அப்போது சரஸ்வதி கோபித்து, "ஹரிக்கு எதிரிகளாகிய அரக்கர்கள் குலத்தில் மிகவும் கொடியவனாக நீ பிறப்பாயாக!" என்று சபித்தாள். அப்போது புலஸ்தியன் மனம் வாடி, "அன்னையே! இந்தச் சாபம் எப்போது நீங்கும்?" என்று கேட்க, அவள், "நீ சிலகாலம் தீமைபுரிந்து வாழ்ந்து பின்னர் இறைவன் ஸ்ரீராமபிரானாக அவதரித்து வருங்காலத்தில், அவன் தொண்டன் என்று சொல்ல விபீஷணனாகப் பிறந்து சிரஞ்சீவிப்பதம் பெறுவாயாக!" என்று அருள் செய்து, பிறகு பகவானை நோக்கித் தவம் புரிந்தாள்.

அப்போது இறைவன் கருட வாகனனாக அவள் முன்பு தோன்றினார். அவரை வணங்கி, "பரமனே நான் சகல நதிகளுக்கும் சாமிநதி யாகும்படி அருள் செய்க" என்று வேண்டினாள். அதற்கு இறைவன் "நீ நதியுருக்கொண்டு தவம் செய்யும் போது ஓர் மறையவன் இட்ட சாபத்தையடைந்தாய். ஆகையால் திருவேங்கட மலையின் மேல் புஷ்கரணி உருவமாக எம்மையடைவாய்.

Koviloor Digital Library

நாம் தக்கணத்தில் திருமகளோடு உறைவோம். மூன்று உலகங்களிலுமுள்ள முப்பத்து முக்கோடி தீர்த்தங்களும் அங்கு எம் முன்பு தோன்றித் தமது பாவங்கள் தொலைவதற்காக யாசிக்கும். அவற்றின் பாவங்கள் தீரும்படித் தன்மாத சுக்கில பக்ஷத்தில் துவாதசி நாளில் சூரிய உதயகாலத்தில் உன்பால் மூழ்கிடச் செய்து அதனால் உனக்குத் தீர்த்தங்களின் அரசு உயர்ந்த அபிஷேகம் என இயற்றுவிப்போம். அன்று முதல் சாமிபுஷ்கரணி என்ற பெயரைப் பெற்று உயர்வாய்" என்று அருளிச் செய்து பிராட்டியின் புருடாகாரத்தால் தளிகை செய்து அளிக்கும் வகுளமாலிகை என்பவளை சரஸ்வதியாகிய பொய்கைக்குப் பூமிரூபமாகும்படி ஆணையிட்டு அருளினார். அவ்வாறே வகுளமாலிகை பூமியாகவும் சரஸ்வதி பொய்கையாகவும் அமைந்தார்கள். அதற்குத் தென்கரையில் இறைவன் திருமகளோடு எழுந்தருளினான்.

17. வாயு, அகத்தியன், சங்கனுக்கு அருள் புரிந்த கதை

திலீபச் சக்கரவர்த்தி, மேலும் துர்வாசமுனிவரைப் பார்த்து "திருவேங்கட மலையின் சிறப்புகளைச் சொல்லுங்கள்" என்று கேட்க, முனிவர் கூறுகிறார்.

வாயுதேவன் திருமாலைப்போன்ற மேனியழகைப் பெறுவதற்காக வேங்கட மலையை அடைந்து தேவவருஷம் ஆயிரம் வரை திருமாலைக்குறித்து அருந்தவம் புரிந்து வர, இறைவன் லக்ஷ்மியுடன் அவன் எதிரில் தோன்றி, "நீ ஒளி உடம்பைப் பெறுவாய். குமாரதாரிகை என்ற தீர்த்தத்தினிடத்தில் என்னைத் தியான யோகத்தால் பூசிப்பாயாக" என்று கூறி அங்கிருந்து நீங்கி, அந்தத் தீர்த்தக் கரையில்

Koviloor Digital Library

சுப்பிரமணியனுக்கு தபோபதேசம் செய்து நீங்கினார். பிரமன், அரன் முதலியோர் அவ்வாறு ஒளிபெற்று விளங்கிய வாயுவைக் கண்டு ஹரிபக்தியால் இவ்வாறு ஆயிற்று என்பதை அறிந்து, அந்த மலையில் அருந்தவம் புரிந்து இத்தகைய சித்தியைப் பெற்றனர்'' என்று திலீபனுக்குக் கூறினார். மேலும் அகஸ்திய முனிவர், திருமாலைக் காணவிரும்பிப் பொதிகை மலையில் தவம்புரிந்து வரும்போது, ஆகாயவாணி அவரை நோக்கி, "இந்தத் திருமலையில் ஆயிரத் தெட்டு தீர்த்தங்கள் உள்ளன. அவைகளில் மூல மந்திரத்தை உச்சரித்து முழுகுதலோடு இந்த மலையினுடைய மகிமையைக் கூறி வலம் வந்து தியானஞ் செய்தால், திருமகள் நாதனை கண்ணிற் காணலாம்.'' என்று உரைத்தாள். அவ்வாறே அகஸ்திய முனிவர் செய்து, சுவாமி புஷ்கரிணியின் அருகில் ஸ்ரீஹரியை சிந்தித்து இருந்தபொழுது இறைவன் வரம் அளித்தனன். அன்றிலிருந்து அகஸ்தியர் திருமாலை வழிபட்டுவந்தார் என்று துர்வாசர் கூறினார்.

மேலும் அவர் திலீபனை நோக்கி, "திலீபா! சூரியவமிசத்தில் தோன்றிய சங்கன் என்ற அரசன் ஒருநாள் வசிஷ்டமுனிவரை வணங்கி, "இந்தப் பூமியில் எந்த இடத்தில் தவம் புரிந்தால் திருமால் தோன்றி வரம் தந்தருள்வார் என்று கேட்க, அகஸ்தியர் முதலிய தவமுனிவர்கள் சுவர்ணமுகி நதியின் கரையிலுள்ள சேஷாசலத்தையடைத்து ஐம்புலன்களையடக்கித் தவம் புரிந்து திருமாலின் அருள்பெற்று உயர்ந்தார்கள். அந்த மலையின் அடிவாரத்தில் சிவபெருமான் அமர்ந்திருக்க, அதன் முடிமீது திருமால் எழுந்தருளித் தேவர்களுக்கும் யாவருக்கும் சேவை தந்தருளுவதால் அந்தமலை நிகரற்றதாகத் திகழ்கிறது. இருபத்தெட்டாம் கலியுகத்தில் வாயுதேவன் தவம்புரிந்த பன்னக சாலையில் திருமால்

Koviloor Digital Library

கிழவடிவங்கொண்டு, அவனை அடைந்து, "உன் தவத்தை அகஸ்தியர் முதலியோர் வியந்தார்கள் என்று சொல்ல, வாயுதேவன், கிழ வேதியனாகிய திருமாலை நயந்து, "என் பன்னகசாலையில் நீங்கள் வீற்றிருந்து, அடியேன் செய்யும் சதுர் மாசியத்தை நிறைவேற்றிவிட்டு, நீங்கள் உங்கள் இருப்பிடத்திற்கு எழுந்தருளுக" என்று வேண்டிக் கொண்டனன். அதற்கு உடன்பட்ட அந்தக் கிழவேதியன் வாயுதேவனுக்கு உபகாரஞ் செய்தார் என்று கூறிய வசிஷ்டமுனிவர் மேலும் தொடர்ந்தார்.

"சங்கராஜனே! பரமதீர்த்தங்கள் அடைந்த சிறப்பினையும் தாபகிரியின் தெற்கு முடியில் உள்ள சக்ரதீர்த்தத்தில் அகஸ்தியர், பலர் சூழ, காற்பாந்தத்தில் அங்கு அடைவார் என்ற சுகமுனிவர் எனக்குச் சொன்னார். ஆகையால் அந்த அகத்தியனைப் போலத் திருமாலை வலம் வந்து ஞான யோகம் செய்வாயானால் திருமால் அருள் செய்வார்" என்று சொல்லச் சங்கன், சேஷாசலத்தையடைந்து, யோகம் புரிந்து வந்தான். அப்போது தோன்றிய திருமாலை வணங்கி, "இந்த மலையின்மீது சூரிய சந்திரர் உள்ளவரை திருமகளோடு வீற்றிருந்து உலகினுக்குக் காட்சி தந்தருளுக" என்று வேண்டவும், திருமாலே, "யான் தலங்களிலே பிரமன் முதலியவர்கள் வணங்கத்தக்க அர்ச்சினைக்கு உரிய உருவத்தை அடைவேன். ஆகையால் நீ, கல் செங்கல், மரம் என்பவற்றுள் எதையேனையும் கொண்டு, என் உருவை அமைத்து ஒரு விமானத்தைச் செய்வித்து, அதற்கும் சேர்த்து ஆராதனை செய்து வணங்கிவந்தால் உன் சிந்தனைப்படியே, நான் திருமகளோடு சேர்ந்து காட்சியளிப்பேன். உனக்குப் பரமபதத்தையும் தருவேன்" என்று அருளி மறைந்தார். சங்கனும் அவ்வாறே திருவுரு அமைத்து பூசித்துப் பரமபதம் பெற்றான்" என்று திலீபனுக்குத் துர்வாசமுனிவர் கூறினார்.

Koviloor Digital Library

18. தீர்த்தங்களின் மகிமை

திலீபசக்கரவர்த்தி, துர்வாசமுனிவரை நோக்கி, சேஷாசலத்தின் மீது அமைந்துள்ள புண்ணியதீர்த்த மகிமைகளை எனக்குச் சொல்ல வேண்டும்" என்று கேட்க, அவர் தொடர்ந்தார்.

"அந்த மலையில் 66கோடி தீர்த்தங்கள் உண்டு. அவற்றுள் 1008 சிறந்தவை. அவற்றிலும் சிறந்தவை 216. அந்தத்தீர்த்தங்களில் சகல புண்ணியத்தையும் தருபவை 108, பக்தி வைராக்கியம் தருபவை 68, விபவம் தருபவை 6, முக்திசேர்ப்பவை 26, என்று வேதப்பொருள் தெரிந்த பெரியோர்கள் சொல்லுவார்கள். அந்தத்தீர்த்தங்களில் மிகவும் முக்கியமானவை ஏழு. அவற்றின் பெருமை என்னவென்றால் 66 கோடியாகச் சொன்ன எல்லாத் தீர்த்தங்களுமே ஆண்டுக்கு ஒருமுறை இந்தத்தீர்த்தத்தில் வந்து சேரும். அக்காலம் யாது என்றால் மாசி மாதம் பௌர்ணமி கூடிய மகநாளில், சர்வதீர்த்தங்களும் குமாரதாரிகை என்ற தீர்த்தத்தில் சேரும். இதில் முழுகி நீராடுவோர் இராஜசூய யாகத்தின் பயனை அடைவார்கள். பங்குனி மாதம் பூரணை கூடிய உத்திரநாளில் தும்புரு தீர்த்தத்தில் உதயகாலத்தில் முன்சொன்ன எல்லாத்தீர்த்தங்களும் சேர்கின்றன.

ஆகையால் அதில் மூழ்குவோர், விரும்பிய யாவும் அடைந்து பரமபதத்தைப் பெறுவர். தைமாதத்தில் பூரணை பூசநாளில் கிருஷ்ணதீர்த்தத்தில் சகலதீர்த்தமும் சேரும். இதில் குளித்தவர் இகபர சுகமடைவர். சித்திரைமாத பூரணை சேரும் சித்திரை நாளில் சர்வதீர்த்தங்களும் ஆகாயகங்கையில் சேரும். இதில் நீராடுவோர், பரகதியடைவர். வைகாசிமாதம் சுக்லபக்ஷ துவாதசி திதி செவ்வாய்க் கிழமையிலும் கங்கை முதலிய புண்ணிய

Koviloor Digital Library

தீர்த்தங்கள் எல்லாம் பாண்டு தீர்த்தத்தில் வந்து சேர்வதனால் அதில் நீராடியவர்கள், இருபத்தொரு ஜன்மங்களிலும் உண்டாகிய துன்பம் நீங்கி பரமபதமடைவார்கள். ஐப்பசிமாதத்தில் பூர்வபக்ஷ சப்தமிதிதியில் ஞாயிற்றுக்கிழமை உத்திராட நாளிலும், உத்திரட்டாதி நாளோடு வரும் துவாதசி திதியிலும் பாபவிநாச தீர்த்தத்தில் சர்வதீர்த்தங்களும் வந்து சேரும். அதில் முழுகுவோர் நிலவுலகில் இஷ்டகாமியம் யாவையும் பெற்று, இறுதியில் ஸ்ரீ வைகுந்தம் பெறுவர். மார்கழி மாதம் சுக்கிலபக்ஷம் துவாதசியில் சூரியன் உதயம் ஆவதற்கு ஆறு நாழிகளுக்கு முன்பு உதயமாகி, ஆறு நாழிகைக்குள் எல்லாத்தீர்த்தங்களும் சாமி புஷ்கரணியில் வந்து சேரும். அந்தக் காலமே யாவற்றிலும் விசேஷமானது. அப்போது அதில் மூழ்குவோர் சாத்திரத்தில் சொன்னபடி தூயவருக்கு அன்போடு தானம் செய்வாராயின் இகத்தில் நலம் யாவும் பெற்றுப் பிறகு திருமாலின் பரமபதத்தில் ஆனந்தமுடன் வீற்றிருப்பார்கள்" என்று திலீபனுக்குத் துருவாசர் கூறினார்.

19. தீர்த்தங்களின் விவரங்கள்

துர்வாசமுனிவர் கூறியவற்றை யெல்லாம் கேட்ட திலீபசக்கரவர்த்தி, "மேலும் அந்த மலை மேலுள்ள மற்ற தீர்த்தங்களின் பெயரையும் இடத்தையும், அவை தரும் பலன்களையும் விரிவாகச் சொல்லவேண்டும் என்று வேண்டினான். முனிவர், அந்தத்தீர்த்தங்களின் பெயர்களைச் சொன்னாலும் கூட, கோடிஜன்ம பாவங்கள் போய் முக்தியுண்டாகும் என்றுசொல்லத் திருவேங்கடமுடையான் திருக்கோயிலுக்குத் தென் கிழக்குத்திசையில் சக்கரதீர்த்தமும் அதற்குமேற்கே வஜ்ரதீர்த்தமும் உள்ளன. அதற்கு அருகே, விசுவசேனதீர்த்தமும் மேற்கே பஞ்சாயுததீர்த்தம்,

Koviloor Digital Library

அலாயுததீர்த்தம், நரசிம்மதீர்த்தம், அதற்குமேற்கே காசிபதீர்த்தம் அக்னிதீர்த்தம், மன்மததீர்த்தம், பிரமதீர்த்தம், கௌதமதீர்த்தம், விசுவாமித்ரதீர்த்தம், பார்க்கவதீர்த்தம், சைபவதீர்த்தம், தேவதீர்த்தம் அஷ்டகோண மஹாரிஷிதீர்த்தம், அதற்குத் தென்கிழக்குத் திசையில் பலதீர்த்தங்களும் உள்ளன. அதற்கு வட கிழக்குத் திசையில் வைரவதீர்த்தம், சேஷதீர்த்தம், ஷேத்ரபாலகர்தீர்த்தம், அதற்குமேற்குத் திசையில் பாண்டவ தீர்த்தம், மாருததீர்த்தம், அஸ்தி தீர்த்தம், மார்க்கண்டதீர்த்தம், வாலகில்லியர்தீர்த்தம், சாவாலிதீர்த்தம், சுரதாதீர்த்தம், விஷகரதீர்த்தம், அதற்கு வடகிழக்குத் திசையில் லக்ஷ்மீதீர்த்தம் அதன் அருகில் பல தீர்த்தங்கள் உள்ளன.

அதன் வடதிசையில் இஷ்டதீர்த்தம், சுகிக்ஷணதீர்த்தம், சிருங்கதீர்த்தம், சபாதீர்த்தம், அதன் வடமேற்கில் சதுர்முகதீர்த்தம், இந்திரதீர்த்தம், பாரத்வாஜதீர்த்தம், ஆகாசகங்கை பராசரதீர்த்தம், குமாரதாரிகை விபாண்டவதீர்த்தம், தும்புருதீர்த்தம், ஜெகதீர்த்தம், இதனருகில் பல தீர்த்தங்கள், தசாவதாரதீர்த்தம், சப்தரிஷிதீர்த்தம், சேனாபதிதீர்த்தம் அதற்கு மேற்கே தசகோணதீர்த்தம், உத்தமசரசு மனுதீர்த்தம், நிர்மலதீர்த்தம், ருத்திரதீர்த்தம்,வசுதீர்த்தம்,பிரம்மதீர்த்தம், மருத்துவதீர்த்தம்,சானவிதீர்த்தம், வாருணதீர்த்தம், கவுணவதீர்த்தம், சுகதீர்த்தம், நாபேயதீர்த்தம், பாரிபத்ரதீர்த்தம், பௌமாசதீர்த்தம், சோமதீர்த்தம், நாரததீர்த்தம், எமதீர்த்தம், அக்னிதீர்த்தம், பசுதீர்த்தம், யக்ஷதீர்த்தம், கணேஸ்வரதீர்த்தம், ஜகஜாட்யஹா தீர்த்தம், விசுவகல்லோலதீர்த்தம், பிரஹஸ்ப திதீர்த்தம், ரோமருஷிதீர்த்தம்,சேனேஸ்வரதீர்த்தம், அஜரமிளதீர்த்தம், கருமதீர்த்தம், அசுவதீர்த்தம், மந்தரைதீர்த்தம்,

Koviloor Digital Library

சுப்ரமண்யதீர்த்தம், வாருணிதீர்த்தம், வடதீர்த்தம், வாசுகிதீர்த்தம், விஷ்ணுதீர்த்தம், வயினதேயதீர்த்தம், ரணவிமோசனதீர்த்தம், அகமருஷண தீர்த்தம், அனந்ததீர்த்தம், பர்ஜன்யதீர்த்தம், மேகதீர்த்தம், நாராயணதீர்த்தம், காலதீர்த்தம், கோமுகதீர்த்தம் அநிருத்ததீர்த்தம், வாசுதேவதீர்த்தம், ஆஞ்சநேயதீர்த்தம், சுங்கருஷணதீர்த்தம், சுதாகசரசு, பிதுர்தீர்த்தம், இதுகாசதீர்த்தம், புராணதீர்த்தம், பிரத்யும்னதீர்த்தம், சுத்ததீர்த்தம், கபிணதீர்த்தம், ஆகிய நூற்றியெட்டு தீர்த்தங்கள் என்று மேலோர்கள் சொல்வார்கள். தக்ஷனுடைய பிள்ளைகள் ஆயிரவர் இந்தத்திருமலையில் ஐம்புலன்களை அடக்கித்தவம் செய்யும் போது, நாரதர் சொல்லிய வித்தையால் நியமித்த நாரதகோணத்தில் நூற்றியெட்டு தீர்த்தங்கள் உண்டு.

இவை தவிர காசிபர் ஆசிரமம் தொடங்கி அரைக்காத அளவில் அழகு மலிந்து தோன்றும் குமாரதாரிகையின் மேற்குப்பாகத்தில் நூற்றியெட்டு தீர்த்தங்கள் உள்ளன. அவற்றுள் நீராடுபவர்களுக்கு, தேவர்களுக்கும் கிட்டாத சித்திகள் கிடைக்கும். இந்தமலைத் தீர்த்தங்களின் சிறப்பு அனந்தம் என்று திலீபனுக்குத் துர்வாசமுனிவர் கூறினார் என்று சூதமுனிவர் சௌனகாதியருக்குச் சொன்னார்.

20. தொண்டைமான் சக்கரவர்த்திக்கு திருவாழி, திருச்சங்கு அளித்த கதை!

திலீபசக்கரவர்த்தி, துர்வாசமுனிவரை நோக்கி, “வேங்கடநாதனுக்கு எப்பெயர் விளங்குகிறது, எத்தகைய இலக்ஷணங்களுடன் அவர் திருமலைமேல் வானவரும் மக்களும் தொழ மகிழ்ந்து அருள் செய்கிறார்?” என்று கேட்க, முனிவர் கூறுகிறார்.

Koviloor Digital Library

“சங்கு, சக்கரம், பீதாம்பரம், மகரகுண்டலம், கௌஸ்துபம் அணியும் அந்தப்பெருமான், அந்த மலைமீது ஸ்ரீநிவாசன் என்ற பெயரைப் பெற்று, இடது கரத்தை இடையில் சார்த்தி வலக்கரத்தில் அபயம் காட்டித் திருமகளைத் தனது திருமார்பில் கொண்டு, பக்தர்களுக்குத் திருவருள் செய்கின்ற, நின்ற திருக்கோலமாக இருக்கிறார்.” என்று சொல்ல, திலீபன், “முனிவரே, அந்த மன்னனின் வரலாற்றைக் கூறுக” என்று கேட்க, முனிவர் சொல்கிறார்.

“சோழ நாட்டில், கிருஷ்ணக்ஷேத்திரம் என்று ஒரு திவ்ய ஸ்தலம் உண்டு. அதில் கிருதவர்மா என்ற சோழ அரசன் அரியதவஞ் செய்துவரும் காலத்தில் வேத சாஸ்திரங்கள் மிகநன்றாகவுணர்ந்த வைகானச பிராமணன் ஒருவன் மற்றொரு பிராமணனிடத்தில் தேவகி சுதன் சரிதத்தைக் கேட்டு, அதனால் பக்தி கொண்டு, கண்ணனைப் பூஜித்து வரும்போது, கோபிநாதன் அவனுடைய கனவிலே தோன்றித் திருவேங்கட மலையில் அமர்ந்துள்ள ஸ்ரீநிவாசப் பெருமானுக்கு, அங்கு ஆராதனையில்லை. நீ அங்கு சென்று, நியமப்படி பூஜித்து வந்தால் அந்தப்பெருமான் உனக்கு அருள் செய்வான்” என்று கூற அந்தப் பிராமணன் அவனைத் திருமால் என்று மதித்து ‘அத்தலத்தின் அடையாளம் கூறுக’ என்று கேட்டான். மேலும் அந்தக் கனவில் ஆதியுகத்தில் குபேரனை போல வாழ்ந்து வந்த சங்கராஜன் முன்பு இயற்றிய அழகிய விமானம் பிரளய காலத்தில் முற்றும் சிதைந்தபோது, ஒரு புற்றின் நடுவே, நேராக, அந்த அரசன் பிரதிஷ்டைக்கு அருள் செய்த பெருமான், வளர்ந்து ஓங்கிய ஒரு புளிய மரத்தின் நிழலில் முழந்தாள் புற்று மறைக்க எழுந்தருளி இருக்கின்றார்.

Koviloor Digital Library



அவ்விடத்தில் பூதீர்த்தம் ஒன்றுண்டு, முகுந்தனுக்குத் திருமடைப் பள்ளிப் பணிக்கு, பூமகளை நியமித்திருக்கிறது. கௌதமி என்னும் தெய்வப் பசு நாள்தோறும் அந்தப் பெருமானைத் தனது பாலினால், திருமஞ்சனம் செய்து வருகிறது. அரங்கதாசன், என்ற பெயருடைய ஒருவன், அந்தத் திருமலைக்கு உன்னோடு வந்து சேர்வான். நீங்கள் இருவரும் ஸ்ரீநிவாசப் பெருமானை ஆராதனை செய்து வந்தால், நீங்கள் விரும்பியவையெல்லாம் அப்பெருமாள் தருவான்" என்று கூறினான். அப்போது அந்தப் பிராமணன் "உன்பெயர் என்ன?" என்று கேட்க அதற்கு அவன் "என்பெயர் கோபிநாதன்" என்ற அளவில் உறக்கம் நீங்கி எழுந்து அதிசயித்து "நின்மலன் நம்தவத்துக்கு சித்தம் இரங்கி, இந்தக் கைங்கரியத்தைச் செய் என்று ஆணையிட்டான்" என்று மகிழ்ந்து திருவேங்கடமலையை அடைந்தான்.

Koviloor Digital Library

அப்போது அரங்கதாசன், அங்கு வந்து சேர இருவரும் அன்புடன் நட்பு கொண்டு செல்லும் போது வேதியன் தன் கனவில் கோபிநாதன் அருளியவற்றை உரைக்க, இருவரும் திருமலை மேல் அவ்வாறே தேடி, அந்தப் புளிய மரத்தைக் கண்டுபிடித்தார்கள். அந்த மரத்தின் அடியில் ஸ்ரீநிவாசனைத் தரிசித்து, புற்றைப் பசுவின்பாலால் கரைத்து, புற்றின் மேற்புறத்தில் அப்பெருமானை எழுந்தருளச் செய்து, திருக்கோயில் திருப்பணி செய்யப் பொருள் இல்லாமையினால், காட்டிலுள்ள செடிகளைக்கொண்டு சிறிய மண்டபம் அமைத்து, பூஜிப்பதற்குத் துளசியும் மலர்களும் அரங்கதாசன் கொண்டுவரப் பிராமணன் நியமநிஷ்டையோடு நெடுநாட்கள் ஆராதனை செய்து வந்தான்.

ஒருநாள், குண்டலன் என்ற கந்தர்வன் ஒருவன் பல அரமகளிர் சூழ விமானத்தில் வந்து வேங்கடவனை, வணங்கி, வட பால்பூங்கா ஒன்றில் அம்மங்கையருடன் சிங்கார சாஸ்திரமுறையான ஆடல்களை மேற்கொண்டிருந்தான். அப்போது ஸ்ரீநிவாசப் பெருமானுக்கு, மலர்களைப் பறித்துக்கொண்டுவரும் அரங்கதாசன், அந்தக் காட்சியைக் கண்டு, தானும் காமமீதூர்ந்து நின்று, பிறகு அஞ்சி "எச்சில் பட்டோமே!" என்று அந்தமலர்களை ஒரு சுனையில் எறிந்துவிட்டு, சாமிபுஷ்கரணியில் நீராடித் தூய்மையாகிப் பிறகு, வேறு நறுமலர்களைக் கொய்து பக்தியுடன் வரும்பொழுது, வேங்கடப்பெருமான் அசரீரியாக, "அரங்கதாசா! நீ ஆராதனை காலத்தில் மோகங்கொண்டு இழிந்தாய் ஆகையால் நிலத்தில், இந்தப்பிறப்பு ஒழிந்து, மன்னனின் மகனாகப் பிறந்து போகங்கள் யாவற்றையும் நுகர்ந்து, எனக்கு கோபுரம், விமானம், மண்டபப்பிரகாரங்கள்

Koviloor Digital Library

இயற்றிப் பக்தி செய்யுங்காலத்தில் உன்னை எண்ணிலாத பகைவர்கள் எதிர்த்து வருவார்கள்! அப்போது நான் உனக்கு வெற்றியளிக்க ஆழியும் சங்கும் அருள்செய்வேன். அதற்குப் பிறகு உனக்கும் உன் சுற்றத்தாருக்கும் பரகதி அளிப்பேன்; ஆகையால் நீ சோழ மன்னன் மகனாக அடுத்த பிறவி எடுப்பாய்!'' என்றார். அவ்வாறே அவன் நார்ாயணபுரத்தில் அரசனுக்குப் புதல்வனாகத் தோன்றி வளர்ந்து கலைகள் பலவற்றைப் பயின்று உலகில் புகழ்பெற்று, போகங்களை நுகர்ந்து தொண்டைமான் சக்கரவர்த்தி என்று யாவரும் புகழ, செங்கோல் நடத்திக் கொண்டு, சேஷாசல தேவனையே தெய்வமாகக் கொண்டு, நாள்தோறும் சுரங்கம் வழியாக திருவேங்கட மலையை அடைந்து, பரமனைப்பணிந்து இருபத்தேழாவது கலியுகத்தில் இருதிருமதில், இரு கோபுரம், மடைப்பள்ளி, கொடியேற்று மண்டபம், தானியக்களஞ்சியம், முதலிய திருப்பணிகள் யாவையும் செய்து முடித்தான்.

பிறகு, பிராமணர்களால் துவஜாரோகனம் முதல் பல உத்சவங்கள், அவப்பிரதம் புஷ்பயாகம் முதலியவற்றைச் செய்வித்து, ஆராதனைகளை வழுவற நடத்தி வருங்காலத்தில் பகைவர்கள் திரண்டு அந்த நகர்ப்புறத்து, மதிலைவளைத்து நகரமக்களை வதைபுரிய, சக்கரவர்த்தி மனம் கலங்கும்படிச் செய்தார்கள். மனம் கலங்கிய மன்னன், அப்போது சுரங்கத்தின் வழியாக சேஷகிரி சென்றுத் திருமகள் கொழுநனைச் சரண் அடைந்து முறையிட்டான். இறைவனும் அபயம் தந்து, தனது சங்கு சக்கரங்களை அந்த மன்னனுக்கு உதவியருள, அவற்றைக் கொணர்ந்து பூசனை செய்ய வேண்டி நிற்க, அவை பகைவர்களை எல்லாம் அழித்து, அரசனிடத்தில் நொடிப்பொழுதில் மீண்டன. அரசன் உள்ளம் மகிழ்ந்து அவைகளை ஏந்திச் சென்று, திருமலைமேல் எய்தி,

Koviloor Digital Library

திருமகள் கொழுநனை வணங்கி நின்று, "பெருமாளே! உமது திருவருளாலே என் இடர் ஒழிந்தது. யான் வேண்டும் வரம் ஒன்றுள்ளது. ஆழி சங்குகளை அடியேனுக்கு அளித்தமை உலகினர் யாவர்க்கும் தெரியுமாறு, ஊனக்கண்களுக்குப் புலப்படாதவாறு செய்தருளி சேவை தருமாறு வேண்டுகிறேன்" என்று இறைஞ்சினான்.

இறைவனும் "அவ்வாறே ஆகுக" என்று அருளினான். இது திலீபனுக்குத் துருவாசமுனிவர் கூறியது என்று சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்குக் கூறினார்.

21. தீர்த்தயாத்திரை விவரம்

துர்வாசமுனிவர், சேஷகிரியின் சிறப்புகளை மேலும் கேட்பாயாக, என்று திலீபனுக்குக் கூறத்தொடங்கினார். "சாமி புஷ்கரணி தீர்த்தத்துக்கு வாயுமூலையில் வராகதீர்த்தம் ஒன்று உள்ளது. அதற்கு அந்தப் பெயர் வந்ததற்கு உரிய காரணத்தைக் கூறுகிறேன்.

இரண்யாக்ஷன், பூமியை எடுத்து கடலுக்குள்ளே ஒளித்த காலத்தில், திருமால், வராகமாகத் திருவுருக் கொண்டு, அரக்கனைத் தேடி, இரசாதலத்துள் சென்று தன் கொம்பினால் அவன் உடலைப் பிளந்து கொன்று, பூமி தேவியைக் கொம்பின் நுனியில் ஏந்தி வந்து, முன்பு போல ஆதிசேஷன் தலைமீது வைத்தான். தேவரும் முனிவரும் வராக மூர்த்தியின் ஜலவாசத்தினைப் பிரமதேவனால் அறிந்து, பூசிக்க வேண்டி, அந்தத் தீர்த்தத்திலிருந்து வராக மூர்த்தியை எழுந்தருளச் செய்தார்கள். அதுமுதல் அதற்கு அந்தப் பெயர் உண்டாயிற்று. அந்தத்தீர்த்தத்தில் முழுகி வராக மூர்த்தியைப் பூஜிக்காதவர்களுக்கு ஸ்ரீநிவாசன் திருவருள்

Koviloor Digital Library



சுரப்பதில்லை" என்று ஞானியர்கள் கூறுவார்கள்.

அன்றியும் ஸ்ரீநிவாசனே அந்த வராகமூர்த்தியை எக்கருமத்திலும் சங்கற்பித்துப் பூஜிக்கும்படி அருளியிருக்கிறார். வராக மூர்த்தி இவ்வாறு இருக்கும் காலத்தில் ஒரு பிரளயம் தோன்ற, அதில் முழுகிப் பின்பு, ஒருகாலத்தில் ஒரு வேடுவன் கோயில் திருப்பணி செய்ய அவனுக்கு அருள் செய்தனன் என்றான்.

இதைக்கேட்ட திலீபன் மகிழ்ச்சியடைந்து தீர்த்தம் ஆடுதற்கு எந்தக்காலம் உரியது என்று கேட்க அதற்கு அந்த முனிவர் கூறத்தொடங்கினார். தீர்த்தாடனம் செய்வதற்கு நித்தியம், நைமித்திகம், காமியம் என்ற மும்முறைகள் உண்டு. அவற்றுள் நித்தியமாவது, விடியற்காலையில் பகற்காலம் ஆகியவற்றில் நாள்தோறும் நீராடுவதாகும். நைமித்திகம் என்பது சூரியசந்திரர் கூடும் நாளாகிய அமாவாசை, மாதப்பிறப்பு, கிரஹணம் முதலிய காலங்களில் புண்ணிய நதிகளில் நீராடுவதாகும். காமியம் என்பது, இன்னை தீர்த்தத்தில் முழுகுவேன் என்று விரும்பி நீராடுவதாகும். பெரியோர் தீர்த்தயாத்திரையை நைமித்திரம் என்று சொல்வார்கள்.

Koviloor Digital Library

பலத்தினைக் கருதாது முழுகினால் பிறவிக் கடல்பட்டு அலையாமல் பகவானின் பரமபதத்தை அடைவார்கள் என்றும் காமியத்தை இச்சித்தவர்கள் பிறவிக் கடல்பட்டு உழல்வார்கள் என்றும் நீரில் முழுகும்போது திருமாலைத் துதித்து, முழுகாதவர்கள் தவளைகளைப் போன்றவர்கள் என்றும் கூறுவார்கள்'' என்று முனிவர் கூறினார். இது பிரமாண்ட புராண சாரம் ஆகும்.

22. தானவிசேஷம் கூறியது

திலீபன், துருவாசமுனிவரை நோக்கி, சேஷகிரியில் கொடுக்கும் தானவிசேஷங்களைக் கூறும்படி வேண்டினான். அதற்கு அம்முனிவர் கூறியதாவது: "அந்தணர் மகிழ அன்னதானம் செய்தல், பிதுர்க்களைத்திருப்தி செய்தல், பொன் கொடுத்தல் இவையெல்லாம் தமது பொருளைக் கொண்டு செய்தால் அவர்கள் எப்பொழுதும் பரமபதத்தில் வாழ்வார்கள். பசுவைத் தானம் செய்தவர்கள் அந்தப் பசுவின் ரோமங்கள் எத்தனையுண்டோ அத்தனைக் காலம் விஷ்ணுலோகத்தில் வாழ்வார்கள். ஆடைகளைத் தானம் கொடுத்தவர்கள் ஆயுள் வளரப்பெற்றுப் பூமியில் வாழ்ந்து முக்தியடைவார்கள். பூமிதானம் செய்பவர்கள் உலகத்தில் அரசராகி பின்னர், திருமாலின் திருப்பதத்தை அடைந்து இன்புற்று இருப்பார்கள். நாள்தோறும் களபம், புஷ்பம், தாம்பூலம், கனகாபானம் முதலியவைகளைத் திருமாலடியார்க்கு வழங்குவோருக்கு ஆசாரியர் அபசாரத்தீவினைகள் நீங்கும். திருமாலுக்கு அவற்றைத் தந்தவர்கள் உலகில் சிறந்த பிராமணர்க்குக் கோடி கன்னிகாதானம் செய்த பயனைப் பெறுவார்கள். குடை விசிறி, சாமரை, தீபத்தம்பம், ஜலபாத்திரம், துளசிமாலை முதலியவற்றைத் திருமாலின் திருக்கோயிலுக்குக்

Koviloor Digital Library

கொடுப்பவர்கள், உலகில் ராஜராஜராக வாழ்வார்கள். திருமாலின் திருக்கோயிலுக்கு மணி செய்து அளித்தவர்கள் சாஸ்திர போதமும் சத்ய ஞானமும் பெற்று, விண்ணுலகை அடைவார்கள். வேதியருக்குக் கன்னிகாதானம் செய்தவர்கள் தேவமாதர் இன்பம் பெற்று பின்னர் முக்தியடைவார்கள். வேதியர்களுக்குத் தாம் பெற்ற பொருளில் சிறிதையேனும் கொடுத்தால், ஆலம் விதை முளைத்துச் செழிப்பதைப் போல, பெருமரமாகி வளர்ந்து தழைப்பதைப் போலத் தழைப்பார்கள். திருமாலின் திருக்கோயிலை நாள்தோறும் அடைந்து திருநாமகானம் செய்பவர்களுக்கு பிரமஹத்தி, கோஹத்தி, குருநிந்தை முதலிய பாவங்கள் எல்லாம் சூரியன் முன்பு பனிபோல இல்லாமல் போகும் என்று முனிவர் கூறிப் பின்பு ஒரு வரலாற்றைக் கூறினார்.

விஷ்ணுவர்மன் என்ற ஒரு பிராமணன் சன்மார்க்கம் இல்லாத காமுகனாக, தன் ஆசாரியன் மனைவியை விரும்பிக் கூடித் தன் வாலிபப் பருவம் முழுவதையும் அந்தப்பாவத்தையே செய்து வந்தான். கிழப்பருவத்தில் உடல்முழுவதும் பிணிகள் தோன்றிப் பெருகி, துன்பமடைந்த காலத்தில் அவனுடைய வீடும் தீப்பற்றி அழிந்தது. குஷ்ட நோயால், புழுக்கள் மலிந்து, புண்களைத் துளைத்து இரத்தத்தை வழியவிட்டன. சுற்றத்தார்களும் மற்றைய மக்களும் இகழ்ந்து, விரட்ட, வனத்தை அடைந்தான். காட்டுக்குச் சென்ற அவன், அங்கு இடறிவிழுந்து விட்டான். அப்போது நாய்நரிகள் அவனைக் கடித்து இழுத்துச் செல்ல அவன் இறந்தான். யமதூதர்கள் அவனைப்பற்றி இழுத்து, நரகத்தில் தள்ளினர்.

அவனுடைய புதல்வன் வேதநாமன் என்பவன், நல்ல மேதாவியான காலத்தில், தன் தந்தைக்கு எய்திய

Koviloor Digital Library

தீவினையை எண்ணி, அவனுக்கு நல்லகதி கிடைப்பதற்காகத் திருவேங்கட மலையை அடைந்து ஸ்ரீநிவாச மூர்த்தியைப் பணிந்து, அவனது திருக்கோயிலில் பசுநெய்யால் விளக்கேற்றி வந்தபடியால், அவன் தந்தையின் பாபம் நசித்துப்போக, அவன் நரகத்தை நீங்கிப் பரமபதத்தை அடைந்தான். ஆகையால் திருமலைக்குச் செல்ல நினைத்து அடிஎடுத்து வைப்பவருக்கும் அசுவமேத பயன்கள் கிட்டும். திருவேங்கட வைபவம் கேட்பவர் செல்வ வளமை பெறுவர். வேங்கிட மான்மியத்தை எழுதியவரும், வாங்கியவரும், பூசித்தவரும் வித்தையும் ஞானமும் சம்பத்தும் பெற்று பிறகு பரமபதத்தை அடைவார்கள் என்று துருவாசர் முடித்தார். இது பிரம்மாண்டப் புராணப்பொருள்.

23. சத்சங்கத்தால் வந்த மகிமை

சௌனகாதி முனிவர்கள், சூதமுனிவரை நோக்கி, திருவேங்கட மகிமையை மேலும் சொல்ல வேண்டும் என்று விரும்பிக் கேட்டார்கள். முனிவர் தொடர்ந்தார்.

“பிரம்மலோகத்தில் பிரம்மனுடைய சபையில் வசிஷ்டமுனிவர் சென்று, பிரமனை நோக்கி, “பிரமதேவா! யாவரும் என்னை இராசப்புரோகிதர் என்று வழங்குவார்கள். ஆனால் அரசர்கள் தினந்தோறும் செய்யும் பாவங்கள் எல்லாம் அவனது புரோகிதனையே சேரும் என்று சாஸ்திரங்கள் கூறுவதால் நான் மிகவும் துயரத்தில் ஆழ்ந்து விட்டேன். மேலும் என்னிடமுள்ள இந்தப் பிராமணன் பொருளில்லாமையினாலே ஒழுக்கமிழந்து யாகசாலையில் வேதியர்களின் நடுவே சென்று, தக்ஷிணை கொடுக்கும் சமயத்தில், அற்பம்

Koviloor Digital Library



ஈந்தால் வாங்காமல் சினந்து நிந்திக்கும் ஈனன். ஆகையால் அவர்கள் இவனைப் பழித்து, "நீ வசிஷ்ட முனிவரிடம் இரு" என்று இவனை என்னிடம் அனுப்பி வைத்தார்கள். இவனும் என்னை அணுகி, தன்னைப் பரிசுத்தனாக்கும்படி வேண்டினான். தனது பாவங்களை நீக்க வேண்டும் என்றான். எனவே என்னுடைய பாவங்களையும் அவனுடைய பாவங்களையும் நீங்கள்தான் போக்கவேண்டும்!" என்று வேண்டினார்.

அதற்கு பிரம்மதேவர், வசிஷ்டரை நோக்கி, "நீங்கள் திருவேங்கட மலையிலுள்ள கோண தீர்த்தத்தை அடைந்து நீராடி, ஸ்ரீநிவாசனைத் தியானஞ் செய்தால், உம்முடைய பாவங்கள் நீங்கும்" என்று கூற, அவன் அடி பணிந்து நிலவுலகம் அடைந்து ஸ்வர்ணமுகி நதியின் பக்கத்தில் சுகமுனிவருக்கு அருள் செய்த திருமாலை வணங்கி, கபிலதீர்த்தத்தில் முழுகி வேங்கட மலைமேல் சாமி

Koviloor Digital Library

புஷ்கரணியில் நீராடி ஸ்ரீநிவாசனைத் தியானம் செய்து தமது பாவங்களைத் தீர்க்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டு, பிறகு வட திசையில் உள்ள பாபநாச தீர்த்தமாடிக் கோண தீர்த்தக்கரையினையடைந்து ஏகாதசி முதல் ஐந்து நாட்கள் வரை உபவாசமிருந்து பங்குனிமாதம் பௌர்ணமி திதியில் உச்சிப்பொழுதில் வசிஷ்டர் நீராடச் சென்ற பொழுது சித்தர்,கின்னரர் முதலிய வானவர்களும் திருமாலை வணங்குவதற்கு நீராட வந்திருந்தனர். வசிஷ்டர் அந்த வேதியனோடு சங்கற்பித்துக் கொண்டு, நீராடி, தேவதர்ப்பனாதிகளைச் செய்து முடித்துக் கரையில் பத்மாசனம் இட்டு இறைவனை இதயத்தானத்தில் இருத்தி ஏக சிந்தையனாகத் தியானம் யோகத்தில் இருந்து, நிஷ்டை செய்து வந்தார்.

அப்போது ஸ்ரீநிவாச பெருமாள் நீலமலை போல அவர் முன்பு தோன்றினார். அப்போது வசிஷ்டர், "பகவானே! அடியேனுக்கு ராஜப் புரோகிதத்தால் வந்த பாவங்களும் இவ்வேதியனுக்குப் பொருளில்லாமையால் ஏற்பட்ட பாவங்களும் நீங்கும்படி அருள் செய்யவேண்டும்" என்று வேண்டினார்.

அதற்கு ஸ்ரீநிவாசப் பெருமான், "வசிஷ்டனே! நீ பிரமதேவனின் வாய்மொழியைக் கேட்டு, கோணதீர்த்தம் ஆடி என்னைத் தியானம் செய்து பூசித்து நின்ற பயனால், உன்னையும் இந்த வேதியனையும் மகிழ்ந்து ஆட்கொண்டேன். என்பால் அன்பு கொண்டவர்களை நான் எவ்வாறு ஆட்கொள்வேனோ அவ்வாறு நீ இவன் மீது அருள்க என்றாய். உலகில் அடுத்தவரிடத்தில் அன்பு செய்பவன் மகாபுருஷன். பெரியோரிடம் பக்தி செய்பவன் புருஷோத்தமன். உம்மிடம் பக்தி வைத்தமையால் இங்கு

Koviloor Digital Library

வந்து என்னைப் பணிந்து கோணதீர்த்தம் ஆடும் பாக்கியம் இவனுக்குக் கிட்டியது. ஆகையால் இவன் செய்தபாவம் எல்லாம் சூரியன் முன்பு பனிபோல நீங்கின. உன் உபசாரத்தால் தர்மம், ஞானம், ஐஸ்வரியம் எல்லாம் பெற்றுச் சர்வசித்தாக்கியன் என்ற பெயரைப் பெற்று, பூமியில் இவன் சுகமாக வாழ்ந்திருப்பான். உனக்கு உள்ள இராஜப்புரோகிதப் பாவங்களும் நீங்கின" என்று அருளி, மேலும் கூறினார்.

"கோணதீர்த்தத்தில் மூழ்கி, என்னைத் தியானிப்பவர், பாவங்கள் நீங்க, நினைத்த பயனையெல்லாம் பெறுவார்கள். முன்பு தும்புரு முனிவர், இங்கு வந்து என்னை நினைத்து தவம் புரிந்து, 'இந்தத் தீர்த்தத்துக்கு என் பெயரைச் சூட்டவேண்டும்' என்று வேண்ட, நான் அவ்வாறே வரம் தந்தேன். அப்பெயர் அப்பொழுதிலிருந்து விளங்கி வருகிறது. இதில் முழுகுவோரை சாஸ்திரஞர் கொண்டாடுவார்கள்" என்று அருளி இறைவன் மறைந்தனன்.

வானவர் யாவரும் போயினர். சர்வ சித்தாக்கியனுடன் வசிஷ்டன் தன் ஆசிரமத்தில் சிலநாள் இருந்து பிறகு அவனை நோக்கி, "இனிமேல் நீ உன் நக்ரத்துக்குச் சென்று வேதவழியில் சாந்தனாக இருந்து அதிதிகளுக்கு உணவு ஆடைகளை வழங்கி, அறநெறியில் வாழ்வாயாக. பத்மநாபன் உனக்கு அருள் செய்வான். மக்களும் செல்வமும் பெற்று மகிழ்ச்சியடைந்து பின்னர் பரமபதத்தை அடைவாயாக" என்று அனுப்ப அவன், தன் நகரத்தை யடைந்து, அவ்வாறே சிறப்புற்றுத் திகழ்ந்தான். பெரியோர் மீது பற்று வைத்து அவர் உள்ளம் உவப்புறச் செய்தவர் பாவங்கள் நீங்கி இகபர சுகம் பெறுவர்" என்று சூதமுனிவர் கூறினார்.

Koviloor Digital Library

24. தும்புருவுக்கு அருள் செய்த கதை

சௌனகாதிமுனிவர், சூதமுனிவரை நோக்கித் தும்புரு தவம் புரிந்த காரணத்தைச் சொல்லுக என்று வேண்டவும், அவர் கூறுகிறார்.

"தும்புரு, அந்தர மார்க்கமாக இசைபாடிவரும் போது, நாரதமுனிவர் திருமாலின் புகழை வீணையில் இசைகூட்டிப் பாடிவந்தார். இருவரும் சந்தித்து, திருமாலை ஆனந்தமாகப் போற்றிப் புகழ்ந்தார்கள். அப்போது, நாரதர் தும்புருவின் வீணையைப்பார்த்து, "என் வீணையைவிட உமது வீணை மிக்க மணிகளிழைத்துப் பிரகாசிக்கிறதே! எதனால் அது அவ்வாறு பிரகாசிக்கிறது?" என்று கேட்க, தும்புரு "தேவஉலகத்தில் இந்திரனுடைய சபையில், அவன் முன்பு வீணை வாசித்துப் பாடினேன். அவன் மகிழ்ச்சி அடைந்தான். இந்திரன் என் வீணையை வாங்கி அதற்கு மணிகள் இழைத்துப் பதியவைத்துக் கொடுத்தான்" என்று விடைபகர்ந்தார். நாரதமுனிவர் கோபங்கொண்டு, திருமாலின் புகழைப்பாடாமல் இதர தேவர்களைப் பாராட்டி, வறியவர் போலப் பொருளை விரும்பிய நீ, தேவருலகிலிருந்து நீங்கி பூமியில் சேர்வாயாக!" என்று சாபமிட்டார்.

அப்போதே மேலுலகத்திலிருந்து வழுவி, திருவேங்கட மலைமீதுள்ள கோணதீர்த்தத்தில் மூழ்கிக் கிழக்குத் திசை நோக்கியிருந்து, திருமாலை இதயத்தானத்தில் இருத்தி, அவனது திருவடிகளைத் தியானித்து யோகம் புரிந்தபோது, பங்குனிமாதம் பூரணை நாளில் ஸ்ரீநிவாசப்பெருமான் கருடன் மேல் தும்புருவுக்குக் காட்சியளித்தார். இறைவனைத் தரிசித்த தும்புரு, திருவடிகளைப் பணிந்து, "இறைவனே அடியேன்

Koviloor Digital Library

ஒருபாவமும் அறியாதவன். நாரத முனிவர் சபித்த காரணத்தினால் நான் இந்தப்பூமியில் விழுந்தேன். என் சாபத் துயரத்தைப் போக்கியருள் செய்ய வேண்டும்." என்று வேண்டினான். இறைவனும், "புண்ணியதீர்த்தம் ஆகிய இதில் நீராடி என்னைத் தியானித்ததால், சூரியன் முன்பு பனிபோல, உமது பாவங்கள் நீங்கிப் பரிசுத்தரானாய்" என்று அருள் செய்யத் தும்புரு "இந்தத் தீர்த்தத்துக்கு என்பெயரை இட வேண்டும்!" என்று வேண்ட, ஸ்ரீநிவாசமூர்த்தியும், "அப்படியே ஆகுக, நீ நாரதருடன் சேர்ந்து வாழ்வாயாக" என்று அருள் செய்து மறைந்தார். பிறகு அகஸ்திய முனிவர் அங்கு வரத் தும்புரு, தமது வரலாறு முழுவதையும் அகஸ்தியரிடம் கூறினார்.

அவர், வேங்கடாசல மகிமையையும் ஸ்ரீநிவாசப் பெருமாளின் அருள் தகைமையையும் விரிவாகக் கூறி, இதர தேவர்களைப் போற்றாமல், இலக்ஷ்மிநாயகன் புகழ் ஒன்றினையே நாள்தோறும் இசைபாடிப் போற்றுக!" என்று கூறிச் சென்றார். தும்புருவும் நாரதமுனிவருடன் சேர்ந்து, இதயத்தூய்மையுடன் ஹரி நாமம் ஆயிரத்தையும் ஏழிசைப்படுத்தி பாடித் தம்மிருப்பிடம் சேர்ந்தார். இது பிரம்மோத்திர காண்டப் பொருளாகும்.

25. கிரீடாசலத்தைக் கொண்டு வந்த கதை

சௌனகாதி முனிவர்கள் சூதமுனிவரை நோக்கி, "இரண்யாட்சனைக் கொன்று, பூமியைக் கொம்பில் ஏற்றி வந்து, ஆதிசேஷன் தலையில் நிறுவிய வராகப் பெருமான் பூமியில் செய்து அருளியவற்றைக் கூறுக" என்று

Koviloor Digital Library

வேண்டினார்கள். முனிவர் அவர்களுக்குச் சொல்லத் துவங்கினார். "ஸ்ரீ வராகமூர்த்தி பிரமனை அழைத்துச் சராசரங்கள் யாவற்றையும் முன்பு போலவே படைத்திடுக!" என்று கட்டளையிட்டார். பிரமனும் அவ்வாறே படைக்கத் துவங்கினார். நடப்பன, ஊர்வன, பறப்பன, நிற்பன எல்லாமே நிலைபெற்றன. இவ்விதமாகப் படைக்கப் பெற்றவைகளைப் பாதுகாப்பதற்காகத் தான், நிலவுலகத்தில் தங்க வேண்டும் என்று கருதிய பகவான் கருடனை அழைத்து, "இந்த பூவுலகத்துமாந்தர், என்னைப் பக்தியோடு பணிந்து பூசித்து மேன்மையடைவதற்காக, நாம் பூவுலகத்தில் தங்குவதற்கு விரும்புகிறோம். ஆகையால் என் உள்ளத்திற்குப் பொருத்தமானதொரு குன்றம் வேண்டும். ஆகையால் நீ வைகுந்தம் சென்று, தூய்மையுடன் கூடிய விளையாடல் குன்றம் ஒன்றினை எடுத்துக் கொண்டுவா!" என்று கட்டளையிட்டார்.

அவனும் அவ்வாறே ஒரு குன்றை எடுத்துக்கொண்டு வர, "கௌதமி நதியின் தெற்கே, ஆறு யோசனைத்தூரத்தில், கீழ்த் திசைக்கடலுக்கு மேம்பால், ஐந்து யோசனையில் ஸ்வர்ணமுகி நதிக்கரையில் வைப்பாய்" என்று பகவான் கட்டளையிட்டார். அங்ஙனம் வைக்கப்பெற்ற மலையின்மீது, வராகமூர்த்தி எழுந்தருளிச் சங்கு சக்கரம் விளங்க சாமி புஷ்கரணிக்கு வடமேற்குத் திசையில் விமானத்துள் அமர்ந்தார்.

அரன், பிரமன், இந்திரன் முதலிய தேவர்கள், அவருடைய திருவடிகளைப் போற்றி, "இறைவனே! அச்சம்தரக்கூடியதான இந்த உருவத்தைவிடுத்து சாந்தரூபத்தைக் கொள்ளவேண்டும்" என்று வேண்ட இறைவன் சாந்தஸ்வரூபனாக பூமிதேவியை மடியில்

Koviloor Digital Library

இருத்திக் கொண்டு தேவர்களை நோக்கி, “பரமபதத்திலிருந்து கருடன் கொண்டுவந்த இந்தமலையில் எழுந்தருளி அடியவர்கள் நாடிய வரங்களை அளித்து இனி இங்கேயே உறைவோம்” என்று அருள்செய்து அவர்களுக்கு விடைகொடுத்து அனுப்பிவைத்தார். நீராடும் குளத்துடன் கருடன் கொண்டுவந்த அந்த ஆடல் குன்றத்தில் அமைந்த சாமிபுஷ்கரணியில் மூழ்கியவர்கள் இன்புற்று வாழ்ந்து பரமபதம் அடைவது திண்ணம். சாமிபுஷ்கரணியைப் பார்த்தாலும் அதன் பெயரைச் சொன்னாலும் நினைத்தாலும் பாவம் போகும். அதன் பெருமையைத் தேவர்களாலும் சொல்லமுடியாது!” என்று சூதமுனிவர் கூறினார். இது வராகபுராணப் பொருள்.

26. யாக மகிமையும் குமாரதாரிகையின் பெருமையும்

திருமலை இறைவனின் பெருமையை மேலும் சொல்லுகிறேன். அத்திருமலை மந்திரம், கன்மம், தவம், யாகம், தர்மம், விரதம் முதலிய சகல சித்திகளும் குறைவின்றி பூமியில் தருவதால், பெரியோர்கள் அதனைச் சிந்தாமணிகிரி என்பார்கள். ஞானகிரி, வேங்கடகிரி, ஸ்ரீநிவாசகிரி சுவர்ணகிரி, நீலகிரி, ஸ்ரீசைலகிரி, அனந்தகிரி, நாராயணகிரி, அஞ்சனாகிரி, வடமலை என்று வழங்கப்பெறும் பெயர்கள் பலவற்றோடு ஸ்ரீ மந்நாராயணன் திருப்பெயரோடு பொருந்த விளங்கும். சித்து, அசித்து, ஈஸ்வரம் என்ற மூன்று தத்துவங்களின் இயல்புகளையும் உணர்ந்த சிரேஷ்டர்கள் சிலர் அந்தத் திருமலையின் சிறப்பைக் கேட்டு அறிந்தவர்களாய் அதனை அடைந்து, யாகத்தைச் செம்மையாகச் செய்தால்

Koviloor Digital Library

சித்தி உண்டாகும் என்று எண்ணிப் பெருமானை எண்ணி யாகம் செய்யும்போது, பெருமான் ஒரு அரசகுமாரனைப் போலத் தோன்றினார். யாகம் புரிந்த பெரியோர் அவனை நோக்கி "உனக்கு எந்த ஊர்? உன் தந்தையின் பெயர் என்ன? இந்த ஸ்தலத்துக்கு ஏன் வந்தாய்?" என்று கேட்டார்கள்.

அதற்கு அந்த அரசகுமாரன், "என் பெயர்களுக்கோ ஓர் அளவில்லை. நான் எங்கும் வசிப்பவன். எனக்குத் தாய் தந்தை இல்லை. குலம் இல்லை. எல்லாவற்றையும் சமமாகச் சிந்தனைகொண்டு உருவிலியாகவும் உருவமுடனும் இருப்பேன். நீங்கள் செய்யும் யாகத்தைக் காண வந்தேன்" என்று கூறினான். அதைக் கேட்ட முனிவர்கள் மகிழ்ந்து "நமது யாகத்தில் அவிர்பாகத்தை உண்பதற்காக இறைவன் விருப்பத்தோடு வெளிப்பட்டனன்" என்று அடங்காத மகிழ்ச்சி கொண்டு விரைந்து விதிப்படி ஆகுதி நடத்த, இறைவன் லக்ஷ்மி திருமார்பில் இலங்க, நாந்தகம், கதை, சங்கு, சக்கரம், கோதண்டம் விளங்க, மகர குண்டலங்கள் துலங்க, துளசிமாலைகள் நான்கு தோள்களிலும் தொங்கும் வகையில் காட்சி கொடுத்து, யாக அவிர்ப்பாகத்தை ஏற்று உட்கொண்டு, கோடி சூரியப் பிரகாசனாக விளங்கினான்.

முனிவர்கள் அந்தக் காட்சியால் கண்ணொளி மழுங்கிச் சித்திரப்பாவை போல வியப்படைந்து நின்று இறைவனின் அனுக்கிரகத்தைப் பாராட்டிப் போற்றினார்கள்" என்று கூறிய முனிவர், மேலும் தொடர்ந்து, "முன்பு ஒரு வேதியன், உடல் மெலிந்து பசிதாகங்களால் களைப்படைந்து, தள்ளாடி தடியூன்றிக் கொண்டு, திருமலை மீது தடுமாறி நடந்து வந்தான். அவனைத் திருமகள் கேள்வன், ஒரு குமரனாக

Koviloor Digital Library

வடிவெடுத்து, "நீ யார்? எங்கு செல்கிறாய்?" என்று கேட்டான். அதற்கு வேதியன், "ஐயோ உடல் கூனி நோயால் துன்பம் அடைந்த என்னை, விதியானது இன்னும் உலகில் வைத்து விநோதம் செய்வது என்னவோ?" என்று கூற, இறைவன் உள்ளம் கனிந்து "உனக்கு உன் உடலை விடுவதற்கு விருப்பமாக இருக்கிறதா? அல்லது மீண்டும் இளமையைப் பெறுவதற்கு விருப்பமா?" என்று கேட்க, வேதியன், இவன் சிறு பிள்ளை என்று நினைத்து, "நீ சொல்லிய எல்லாம் எனக்கு விருப்பம் இல்லை. எந்தக் கருமத்தை செய்தாலும் பயனை விரும்பாமல் செய்து, பிறகுதான் இந்த உடலை விடவேண்டும் என்பது என் கருத்து இதுவே சத்தியம்" என்றான்.

அப்போது இறைவன் அந்த வேதியனை அந்த மலையில் ஓர் அருவியின் பக்கமாக அழைத்துச் சென்று "இந்தத் தீர்த்தத்தில் நீ மூழ்கி நீராடினால் பதினாறு வயதுடைய இளைஞனாவாய். உனக்கு நித்திய கருமம் இனிது நடைபெறுவதற்கு வேண்டிய நிதித்திரளை நாம் அளிப்போம். நீ அதைக் கொண்டு, உன் ஊருக்குச் சென்று நியாயமாக வாழ்வாய்.'' என்று அருளிச் செய்து மறைந்து விட்டார். அந்த வேதியன் அந்தக் குமரன் கூறியவாறே நீரில் மூழ்கி இளமையடைந்து நின்றதைக் கண்டு, தேவர்கள் மலர் சொரிந்து வாழ்த்தி மகிழ்ந்தார்கள். வேதியன் குமரனாகியதால் அந்தத் தீர்த்தத்துக்குக் குமாரதாரிகை என்று பெயரிட்டு, அந்தத் தீர்த்தத்தில் மூன்றுதிங்கள் வரை மூழ்கிக் குளித்தவர்கள் மூப்பு நீங்கி இளமையடைவார்கள் என்று சொல்லித் தேவர்கள் தமது இருப்பிடத்தை அடைந்தார்கள். இவ்வாறு சூதபுராணிகர் கூறிய வரலாறு வராக புராணத்திலுள்ளது.

Koviloor Digital Library

27. சங்கன் சாமித்துவம் பெற்றகதை!

வால்மீகி முனிவர் எனக்கு முன்பு உரைத்த வரலாற்றை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சூதமுனிவர் கூறத் தொடங்கினார்.

"முன்பு காசிதேசத்தில் சந்திர வமிசத்தில் பிறந்து புகழ்பெற்ற சங்கன் என்ற அரசன் ஒருவன், பகைவரை வென்று அரசு புரிந்து வரும் காலத்தில், அறநெறி அறியாமல் மறநெறியில் சென்றதனால், அவன் நாடு சிதைந்தது. அவன் தன் மந்திரிகளோடு தெற்குத் திசையிலுள்ள சேதுவுக்குச் செல்லும் வழியில் ஸ்வர்ணமுகி நதிக்கரையை அடைந்து, அதில் நீராடித் திருமாலைத் தியானித்து, அதன் வடக்குத்திசையில் ஒரு தடத்தில் தங்கியிருந்தான்.

அப்போது, ஆகாயவாணி, "அரசனே! துயரமடையவேண்டாம். சேஷாசலத்தின்மீது சாமி புஷ்கரணி என்று ஒரு தீர்த்தம் உள்ளது. அதற்கு மேற்கே, புற்று மொய்த்த குன்றம் ஒன்றுண்டு. அதற்கு முன்பு இருந்து, மூன்று காலமும் நீராடி, இறைவனைத் தியானித்து, ஆறுமாதகாலம் இருந்தாயானால் நீ இழந்த அரசையும் செல்வங்களையும் மீண்டும் அடைவாய்!" என்று கூறியது. அதன்படியே அவன் திருமலைமேல் சென்று சாமிபுஷ்கரணியில் நீராடி, அதன் கரையில் அமர்ந்து முப்பொழுதும் திருவேங்கடத்து இறைவனைப் பூஜித்துப் பழங்கள் அருந்தி, பக்தியோகம் புரிந்து வந்தான். திருமால், சாமிபுஷ்கரணியின் நடுவிலே சங்கு சக்கரம் ஏந்திய கையனாக எழுந்தருளினான். அப்போது அரன், அயன், இந்திரன் முதலிய தேவகணத்தவர்கள் யாவரும் வணங்கிப் போற்றிச் சங்கன் என்ற மன்னனும்

Koviloor Digital Library

இறைவனடிகளை வணங்கி, "அடியேன் இழந்த அரசையும் அருளிப் பாவங்கள் தொலையப் பரிவு செய்க!" என்று வேண்டினான். அப்போது இறைவன் அருள் சுரந்து "நீ சாமித்துவம் பெற்று இந்தப் பூமியில் வாழ்வாய் இந்தத்தீர்த்தத்தில் மூன்று காலமும் நீராடி என்னை வணங்கித் தியானம் செய்தாயாகையால் நீ குற்றமற்ற அரசியல் புரிவாய்" என்றருளி மறைந்தார். சங்கன் தன் மனைவியோடும் அமைச்சர்களுடனும் தன் நாட்டிற்குச் சென்றான். அவனது பகைவர்கள் தங்களுக்குள் போர் புரிந்து வலிவிழந்து காட்டுக்கு சென்றனர். சங்கனை மணிமண்டபத்தில் ஏற்றி மணிமுடி புனைந்து மக்கள் போற்றினர். அவனும் தர்ம நீதியாட்சி புரிந்து வந்தான். இது வராக புராணத்திலுள்ளது.

28. பிராமணன் சித்தி பெற்றகதை

சூதமுனிவர், வால்மீகி முனிவரிடம் கேட்ட கதைகளை நைமிசாரண்ய முனிவர்களுக்குக் கூறலானார்.

"உலகிற்கு அலங்காரமாகிய மத்திய பிரதேசத்தில், இராமன் என்ற பிராமணன், தன் பெற்றோர்கள் மகிழ்ந்து பாராட்டும்படி அவர்களுக்கு உபசாரம் செய்து வரும் காலத்தில், அவன் கையில் பொருள் இல்லாமையினால், உலகில் யாவரும் வெறுக்க, மனம் சலித்து அலையும் போது, ஒரு சமயம் திருவேங்கடமலைக்கு அருகிலிருந்த கபில தீர்த்தத்தில் மூழ்கிச் சித்த சுத்தி பெற்றவனாகி, அந்த மலையின் மீது செல்லும் போது, தென்திசையில் ஒருபுற்றின் நடுவே, பிரகாசம் பொருந்திய மேனியோடு, தியானசமாதி யோகத்திலிருந்த சனத்குமாரனை அடைந்தான். அவனைப் பெரியோன் என மனத்தில்

Koviloor Digital Library

நினைத்து அவன் அடிபணிந்து “அடியேனுக்கு அனர்த்தம் சம்பவிக்காமல் அருள் செய்க!” என்று வேண்டினான். அப்போது அந்த முனிவர் அருள்பாவித்து “நீ முன்பிறப்பில் செய்தபாவங்களை மாற்றுவதற்கு நான் ஓர் உபாயத்தைச் சொல்கிறேன். நித்தியனும் நிர்மலனும் கருணாகரனுமாகிய இறைவனின் திருமார்பை விட்டு அகலாத லக்ஷ்மியின் மந்திரம் ஒன்றுள்ளது. அது வேதத்தின் முதலிலும் இடையிலும் முடிவிலும் சொல்லுகின்ற நன்னய மந்திரம். அதை நிலவுலகத்தில் ஜெபிப்பவர்கள் எல்லாச் சித்திகளையும் பெறுவார்கள். உலகங்களுக்குத் தாயாராய், பெரும் செல்வத்தை விரும்பியவர்களுக்கு அளித்தருளும் இலக்ஷ்மியின் மந்திரம் இது. ஆகையால் இதை ஜெபித்து தீவினை ஒழித்துச் செல்வத்தினைப் பெற்று வாழ்வாய்” என்று கூற, அந்த வேதியனும் திருவேங்கடமலையை அடைந்து தீர்த்தத்தில் மூழ்கி, பிறகு சாமிபுஷ்கரணியை அடைந்து இறைவன் நாமத்தை மனத்தில் பதித்து போற்றி அதில் மூழ்கி, முனிவர் அருளிய மந்திரத்தை அனுசந்தித்து ஒழுகினான்.

அவன் முன்பு, திருமால், லக்ஷ்மி சமேதராகத் தோன்றினார். அப்போது அந்தணன் தன் இருகண்களாலும் பகவானை தரிசித்து மகிழ்ந்தான். இறைவன், அந்தணனை நோக்கி “நீ லக்ஷ்மியை அதிக பக்தியோடு தியானித்தாய். ஆகையால் உன் பாவங்கள் தொலைந்தன. உலகில், ஆயுள் ஞானம் முதலியவை வளரப்பெற்று சிறப்புகளையெல்லாம் அடைந்து, நீ மகிழ்ச்சியாக வாழ்வாயாக” என்றருளி மறைந்தார். பின்னர், அந்த மறையவன் இறைவனை மனத்தால் துதித்து வேங்கடமலையை நீங்கித் தன் இடம் அடைந்து தர்மார்த்த நாமங்களைப் பெற்றிருந்தான்” என்று சூதமுனிவர் கூறினார். இது வராக புராணத்திலுள்ளது.

Koviloor Digital Library

29. ஸ்ரீராமன் திருவேங்கடம் அடைந்த கதை!

"தேவர்கள் துயரங்களைத் தீர்த்து அருள் செய்யக் கருதிய திருமால், தசரத புத்திரன் ஆகிப் பூமி தேவி மகிழ, இலக்ஷ்மணனோடும் காட்டையடைந்து பம்பைக் கரையை அணுகிச் சுக்ரீவன், அனுமான், அங்கதன் முதலிய வானர வீரர்களோடு தெற்கே செல்லும் போது திருவேங்கட மலையை அடைந்தார்கள். அப்போது அனுமானின் தாயாகிய அஞ்சனாதேவி ஸ்ரீ ராமபிரானை அடிபணிந்து "அண்ணலே! உமது சேவையை விரும்பி இந்தத் திருமலையில் மாதவர்கள் பலர் தவம் புரிகிறார்கள். அவர்களுடைய பூஜைகளை ஏற்று, இங்கு தங்கிச் செல்ல வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தாள். ஆஞ்சநேயரும், "எம்பெருமானே! இன்று இந்தத் திருமலைமீது தங்கி நம்முடைய சேனைவீரர்கள் காய்கனிகளை உண்டு பசியாறி நாளைச் செல்லுதல் நலம்" என்றார்.

ஸ்ரீ ராமபிரான் அதற்குச் சம்மதித்தார். ஆஞ்சநேயர், வானர சேனையை நோக்கி, "நீங்கள் இந்தத் திருமலையில் எந்த இடத்திற்கும் உங்கள் இச்சைப்படிச் சென்று சோலைகளில் தங்கி, இளைப்பாறிக் காய்கனி கிழங்குகளை உண்டு வாருங்கள்" என்று கூறினார். இராமனும் இலக்ஷ்மணனும் சுக்ரீவனும் அங்கதனும் அஞ்சனையின் ஆசிரமத்தில் தங்கி, அவளுடைய பூஜைகளை ஏற்று, சோலைகளில் உலாவி வரும்போது, அந்தணர்களில் சிறந்த நிர்லோமன் என்பவன் பிரமலோகத்தையடைவதற்குப் பிரமனை நோக்கித் தவம் புரியப் பிரமன் எதிர்ப்பட்டு "தசரதராமன், இராவணனைக் கொல்லும் பொருட்டு வானர சேனைகளோடு தெற்கு

Koviloor Digital Library

நோக்கி வரும்போது வேங்கடமலையை அடைவார்கள். அவர்களால் நீ என் உலகத்தை அடைவாயாக" என்று அருளியவாறு அவர்களுடைய வருகையை எதிர்நோக்கி, அங்கு இருந்த அவன் முன்பு ஸ்ரீஇராம லக்ஷ்மணர்கள் தோன்றினார்கள். அப்போது வேதியன் அவர்களை மிகவும் பணிந்து, தனது பிரார்த்தனையைச் சொல்ல, ஸ்ரீராமனும் அன்பு கூர்ந்து, அவனைப் பிரமலோகம் அடைய அருள்செய்து, காடுகளின் காட்சிகளைக் கண்டு செல்லும்போது, அங்குள்ள யக்ஷர்களுக்கு உற்ற சாபங்களை நீக்கி அருள் செய்து பின்னர், சாமி புஷ்கரணியை அணுகி நீராடி நிருதி திசையை அடைந்து ஸ்ரீநிவாசன் எழுந்தருளிய இருக்கையை அடைந்து வணங்கி, வாழ்த்திப் பின்னர் லக்ஷ்மணன் அமைத்த பர்ணசாலையில் வானர சேனைவீரர்கள் தன்னைச் சூழத் தங்கி அனுமன் உபசரிக்க இனிது அமர்ந்திருந்தார்.

அப்போது வானரத்தலைவர்கள் ஆகிய மஹிந்தன், கேஸரி, முதலியவர்கள், சாமி புஷ்கரணியின் வடகிழக்குத் திசையில் உள்ள வனத்தினுள்ளே சென்று, ஒரு குகையினுள் செல்லும் போது என்றுமே கண்டிராத ஒரு பேரொளியைக் கண்டனர். அதைக் கண்டு வியப்புற்று, மேலும் செல்ல ஒரு திவ்ய நகரத்தைக் கண்டார்கள். அந்த நகரின் தெருவழியே செல்ல மண்டபம், மாடகூடக் கோபுரங்கள் பொன்னாலும் மணியாலும் முத்தாலும் அமைந்து பொலிதலையும் வஜ்ரக்கதவுகள் மின்னுதலையும் இரத்தினப் பந்தல்கள், கன்னல், கதலி, கமுகுத் தோரணைகளோடு அழகாக இருப்பதையும், சங்குசக்கரம் ஏந்தும் திவ்விய புருஷர் வசிக்கும் பூஞ்சோலை, வாவி விளங்குவதையும் கண்டு திகைத்தார்கள். பின்னர் அங்கு ஒரு மணிவிமானத்தில் நித்தரும் முத்தரும் கைகுவித்து வாழ்த்தச் சேஷாசனத்தில்

Koviloor Digital Library

மேல் பீதாம்பரம் இலங்கக் கனககேயூர கவுஸ்துப மணி, சங்கு, சக்கர சார்ங்கம் முதலிய பஞ்சாயுதங்கள் விளங்க மகாகுண்டலம் அசைய, சிகரமௌலி திகழ, மரகத காந்தித் தவழத் துளப மாலை மார்பில் துலங்க, ஸ்ரீதேவியை வலதுபாகத்திலும் பூமிநிலைகளை இடதுபாகத்தும் கொண்டு விளங்கும் நின்மலனாகிய இறைவனைக் கண்டனர்.

கண்டவர்கள், களிப்புடன் அடிபரவி நிற்க, சேனை முதலியார் அடுத்து வந்து வணங்கினர். அதன் பின்னர் அவர்கள் அந்த இடத்தை விட்டு அகன்று வந்த வழியினை மீண்டும் அடைந்தார்கள். பிறகு வானரசேனையை அடைந்ததும் தாங்கள் ஒரு குகையினுள்ளே போனதும், அங்கு புதுமைகள் பலவற்றைக் கண்டதையும் சொல்லித் திருமாலாகிய கடவுளோ மாயா ரூபியான அரக்கனோ என்று நாங்கள் அறியோம். இன்னமும் மேலே சென்று பார்ப்போம் என்று எண்ணி மற்ற வானரர்களோடு மரங்களும் கற்களும் கையிற்கொண்டு, குகையில் நெடுந்தூரம் செல்ல இருளைத்தவிர ஒளியைக் காணாமல், மனம் மயங்கிக் கனவு கண்டோமோ என்று திகைத்து நின்றார்கள். திரும்பி வந்து சேனைகளோடு கூடினார்கள்.

பின்பு, உதயகாலத்து இராமன் வானரசேனைகளோடு, தென்கடல் சென்று, சேது பந்தனம் செய்து, கும்பகர்ணன், இந்திரஜித், இராவணன் முதலியவர்களைக் கொன்று, சீதையை மீட்டு, அயோத்திக்குச் சென்று, திருமுடி புனைந்து, பூமியை தர்மநெறி தவறாமல் ஆண்டு வந்தார்" என்று சூதமுனிவர் சௌனகாதிமுனிவர்களுக்குக் கூறினார். இந்தக் குகைதான் வைகுந்தக் குகை என்று பெரியோர்களால் வழங்கப் பெறுகிறது. இதன் பெருமையை பிரமனாலும் கூறமுடியாது. தேவரும்

Koviloor Digital Library


இதனை அணுகுவதற்கு அஞ்சுவார்கள். நித்தர், முத்தர் உறையும் இடம் இதுவாகும். அதனுள் சென்றடைந்த வானரர்களுக்கு இறைவன் காட்சி தந்து மறைந்தான், என்று சூதமுனிவர் கூறினார். இது வராகப் புராணப் பொருள்.

30. தேவர்களுக்கும் தசரதருக்கும் வரமருளிய கதை!

சூதமுனிவர், நைமிசாரண்ய முனிவர்களை நோக்கி, "வேங்கடாசலத்தில் அமர்ந்த கடவுளின் செயல்களைப்பற்றி வியாசமுனிவர் எனக்கு அருளியவற்றை நான் உங்களுக்குச் சொல்கிறேன்; கேட்பீர்களாக!" என்றார். உடனே, அந்த முனிவர்கனெல்லாம் ஒன்று சேர்ந்து, அரக்கரால் மெலிவுற்று திருமாலையல்லாமல் நமது பகைவரை ஒழிப்பவர் யார் உள்ளனர்! என்று எண்ணித் திருப்பாற் கடலிடைத் துயிலும் திருமாலிடம் குறை சொல்லி வேண்டுவோம் என்று நினைத்தார்கள் அப்போது நாரதமுனிவர் அங்கு வந்து சேர்ந்தார். முனிவர்கள் யாவரும் மகிழ்ந்து, அவரது திருவடிகளை வணங்கி, "பெரியோரே! நீங்கள் எங்கு சென்று வருகிறீர்கள்!" என்று கேட்க, நாரதர் "நான் முழுமுதற்கடவுளை வணங்குவதற்காக ஸ்ரீவைகுந்தம் அடைந்தேன். அங்கு நித்திய சூரியரும் முக்தரும் என்னிடம் கூறியவற்றை நான் உங்களுக்குச் சொல்கிறேன், கேளுங்கள்.

"ஆதி நாயகன், திருமகள் முதலியவர்களோடு பூமியில் உள்ளவர்களுக்குத் திருவருள் செய்யத்திருவுள்ளம் கொண்டும் திருவேங்கடம் என்னும் திருமலையின் மீது எழுந்தருளியுள்ளார் என்றனர். நான்

Koviloor Digital Library



அதையறிந்து திரும்பினேன்.. இப்போது பிரமனிடம் போகிறேன். நீங்கள் யாவரும் வந்தால் பிரமதேவரிடம் இவற்றைக் கூறலாம்" என்றார். அதைக் கேட்டு முனிவர்கள் யாவரும் நாரதரோடு பிரமனை அடைந்து "உமது திருவருளால் குறைவின்றி இத்தனை நாட்கள் இனிது இருந்தோம். இப்போது இராவணன் முதலிய கொடிய அரக்கர்கள் எமக்குப் பெருந் துன்பங்கள் விளைவிக்கிறார்கள். அவர்களை அழித்து எங்களுக்கு நன்மை அளிப்பவர் திருமாலைத்தவிர வேறுயார் உளர்? ஆகையால் ஸ்ரீமந்நாராயணனை நாங்கள் காணுமாறு அருள்க" என்று வேண்டினார்கள்.

அப்போது பிரமன் தன் மனதால் இறைவனது நிலைமையை அறிந்து, "பூமியிலே வேங்கட மலையை அடைந்து திருமகளுடன் எல்லோரையும் காத்து அருள எழுந்து அருளி இருக்கிறான் இறைவன்; நீங்கள் அங்கு சென்று உங்கள் குறைகளைத் தெரிவியுங்கள். நானும் உங்களுடன் வருகிறேன்" என்று பிரமனும் அவர்களுடன் சென்றார். பிரமனும் முனிவர்களும் திருவேங்கட மலையை அடைந்து, தீர்த்தம் ஆடி, திருமாலின் திரு

Koviloor Digital Library

அடிகளை விரும்பிய உள்ளத்துடன், தனித் தனியாக அமர்ந்து தவம் புரியும் காலத்தில், அயோத்தியிலிருந்து ஆட்சிபுரிந்து வந்த தசரதசக்கரவர்த்தி, வசிஷ்ட முனிவரை வணங்கி, தனக்குப் புதல்வன் இல்லாத குறையைச் சொல்லி வருந்த, அவர், "வேங்கடமலையை அடைந்து, திருமகளுடன் மருவிய பெருமாளின் திருவடிகளை நினைந்து அருந்தவஞ் செய்து வந்தால், ஆதிநாராயணன் திருவருளால் புதல்வரை அடைவாய்" என்று கூறினார்.

அதனால் தசரதன், மற்ற அரசவையினருடன் சென்று, தீர்த்தம் ஆடிச் சோலையும் குகையும் ஆறும் பொய்கையும் நோக்கிப் பிறகு சாமிபுஷ்கரணியை அடைந்தார்கள். அங்கே, தேவர்கள் முனிவர்கள் நடுவே திருமாலை நினைத்து, நான்முகன் தவயோகம் செய்வதை வசிஷ்டமுனிவர் கண்டார். அப்போது அவர் தசரதனை நோக்கி, "இந்த நான்முகனுக்குப் பகவான் சில நாட்களில் தோன்றுவார். நீயும் இங்கு அமர்ந்து யோகத்தை நிறைவேற்றுவாய்" என்று கூறி அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசித்து அருளினார். சக்கரவர்த்தியும் வசிஷ்டர் உபதேசித்த மந்திரத்தை ஜெபித்து, ஓர் ஆசனத்தில் இருக்க, வசிஷ்டரும் அங்கு ஒருபக்கம் இருந்து தவம்புரிந்து வந்தார்.

அப்போது அவர்கள் எல்லோருடைய செவிகளுக்கும் இன்பம் உண்டாக வானத்தில் ஓர் ஒலி உண்டாக, பிரமன், சிவன், இந்திரன் முதலியோர், அஃது யாது என்று வியந்திருக்க அப்போது எண்ணிலாத சூரியர்கள் தோன்றினாற்போல எல்லாத் திசைகளிலும் ஒளிபரவத் தேவவிமானம் ஒன்று அங்கு தோன்றியது. அதில் திருமகள் கேள்வன், கனககேயூர மகரகுண்டல பீதாம்பர தாரியாக சங்குசக்கரங்கள் கரங்களில் விளங்கக்

Koviloor Digital Library

காட்சிதந்தருளினார். அனைவரும் ஆனந்தக் கடலில் மூழ்கி, ஆடிப்பாடி அடிமலர் சூடித் துதித்தார்கள். இறைவனும் அவர்களை நோக்கி, "நீங்கள் என்ன காரணத்தால் இந்த மலையை அடைந்தீர்கள்" என்று கேட்க, பிரமன், பகவானை நோக்கி, "புலஸ்தியரின் பேரனும் இருபது தோள்களும் பத்துத் தலைகளும் உடையவனாகிய இராவணன் என்ற அரக்கன் என்னைக் குறித்து-தவம் புரிந்து, உலகில் மாந்தர்களால் அல்லாமல் எவராலும் மரணம் இல்லாத வரத்தினைப் பெற்றுவிட்டான். அவன் செருக்கினால், தேவர்களுக்கு ஓய்வில்லாமல் இடர்களைச் செய்து வருகிறான். தர்மவிரோதியாகிய அவனுக்குப் பயந்து நாங்கள் அனைவரும் உங்களைச் சரணடைந்தோம். அந்த அரக்கனை அவனது இனத்துடன் அழித்தருள வேண்டுகிறோம். பாற்கடலையும் வைகுந்தத்தையும் விட்டு இந்தத் திருவேங்கட மலையினை விரைந்து அமர்ந்த உம்மை தரிசித்த எங்களுக்கு இனித் துயரம் இல்லை" என்று கூறினர்.

அதற்கு இறைவன், "இன்னுஞ் சில நாட்களில் அந்த அரக்கனை அவனது இனத்தோடும் அழித்து, உங்களுக்கு நல்வாழ்வினை அளிப்போம்!" என்று அருளினார். தேவர்களனைவரும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

அத்தருணத்தில், பகவான் அகஸ்திய முனிவரை நோக்கி, "நீர் இங்கு வந்தவிஷயம் என்ன?" என்று கேட்க தமிழ்முனிவர்! "நான்மறை முனிவர் பலர், அரக்கர் பயங் கொண்டு உமது திருப்பாதமே கதியென்று கருதி இங்கு வந்தடைந்தார்கள். துஷ்டநிக்கிரகமும் சிஷ்ட பரிபாலனமும் செய்கின்ற கடவுளாகிய நீங்கள்தான், அந்தத் தீயவர்களைக் கடிந்து, எம்மைப் புரந்திடுவீராக!" என்று

Koviloor Digital Library

வேண்டினார். இறைவனும் "அவ்வாறே செய்கிறேன்" என்று சொல்லி, இந்திரனை நோக்கி, "இனிமேல் நீ அஞ்ச வேண்டாம்" என்று அபயமளித்தார். பிறகு சனகாதியரை நோக்கி, "நீங்கள் இங்கு வந்தடைந்தது எதற்காக?" என்று கேட்க, அவர்கள், "ஆதிநாயகா! இந்த மலையில் தவம் செய்வோருக்கு, சிந்தை விருப்பங்கள் சித்தியடையும் என்பதனால் வந்த எங்களுக்குத் துஷ்டர்கள் துன்பம் இழைக்கிறார்கள். அவர்களை அழியச் செய்து, இந்தத் திருமலையை அடைவோருக்கு எந்தவித இடரும் இல்லாதிருக்கக் கருணை செய்வீராக" என்றனர்.

இறைவன் அவர்கள் விரும்பிய வரத்தை அளித்துவிட்டு சிவனை நோக்கி "நீங்கள் இங்கு வந்த காரணம் என்ன வென்று கேட்க, சிவன் "அண்ணலே, உலகிலுள்ளவர் அனைவரும் பணிய அருள் செய்யும் தேவரீர் திருக்கோலத்தை நான் அருகிலிருந்து தொழுவதற்கு வரம் தரவேண்டும்" என்று கேட்க இறைவனும் "நீ இந்தமலையை விட்டு அகலாமல் அருகிலேயே உறைக!" என்று அருள் செய்தார்.

பிறகு தசரத மன்னரை நோக்கி, "நீ இங்கு வந்த காரியம் யாது" என்று கேட்க மன்னன் ஆதிநாயக! அறத்தை நிலைநிறுத்த அறிவு சால் புதல்வரை அருளுக" என்று வேண்டினான். இறைவன் மகிழ்ந்து, "நீ அயோத்தியை அடைந்து, வேதவிதிப்படி புத்திரகாமேஷ்டி யாகத்தைச் செய்வாயாக உனக்கு நான்கு புதல்வரை அளிப்போம்" என்று திருவருள் செய்தார். அதைக்கேட்டு தசரதமன்னனும் வசிஷ்டமுனிவரும் அயோத்தியை அடைந்தார்கள்" என்று சூதமுனிவர் கூறினார்.

Koviloor Digital Library

31. பிரமன் உற்சவம் நடத்திய கதை

சூதமுனிவர் மேலும் தொடர்ந்தார். "இறைவன், தமது சக்கராயுதத்தை நோக்கி, "அகஸ்தியன் என்னை வேண்டிக் கொண்டது என்னவென்றால், உலகத்தில் நான்மறையாளருக்குத் தீமைகளைச் செய்கின்ற தீயவர்களை கிளையோடும் அழித்தல் வேண்டும் என்பது; ஆகையால் நீயே அவர்களை அழித்து நல்லவர்களுக்கு இன்பம் நல்கி, விரைவில் மீள்வாயாக" என்று ஆணையிட்டார். உடனே எண்ணில்லாத சூரியர்கள் எழுந்தாற்போல எல்லோர்க்கும் கண்ஒளி மழுங்கவும் வெய்யல் வெதும்பவும், உலகம் அஞ்சவும் வான்மீது எழுந்து உலகத்தில் தீயவர்கள் எல்லாம் சிதைந்து விழ அவர்களது ஆவிகளை எமன் உலகிற்குச் செலுத்திவிட்டு மிக்க வெற்றியுடன் இறைவனது தாமரைக் கையகத்துள் வந்து சேர்ந்தது. அப்போது, பிரமன் பகவானை வணங்கி "ஒப்பற்ற உமது திருவுருவத்தை அடியவர்கள் எல்லாம் எப்போதும் போற்றி வணங்கும் பொருட்டு, இந்தமலையின் மீது என்றும் இருந்தருள் செய்ய வேண்டும், நாங்கள் தேவரீருக்கு, துவஜாரோகணம் முதலாகத் திருவிழாவை மறைவிதிப்படி நடத்திக் காண விரும்புகிறோம்" என்று வேண்டிக்கொள்ள, இறைவனும் அவ்வண்ணமே ஆகுக" என்று அருளினான்.

உடனே, பிரமன் மகிழ்ந்து தமக்கு அருகில் இருந்த விஸ்வகர்மாவை அழைத்து, "முகுந்தனுக்கு உரிய முக்கியத் திருவிழாவைப் புரட்டாசித்திங்களில் நடத்துவதற்குத் துவஜ்ஸதம்பம் ஒன்றினை விரைந்து செய்வாயாக!" என்று சொல்ல, அவனும் அதனைப் பொன்மணி முதலியவற்றால் அமைத்து நகர வீதிகளில்

Koviloor Digital Library

எல்லாம் வாழை, கருமபு, கமுகு கொடிகள், தோரணங்கள், பொற்கும்பங்கள் மாலை வரிசைகள் முதலியவற்றால் மிகவும் நன்றாக அலங்கரித்துப் பிரமனிடம் சென்று, தங்கள் ஆணைப்படி யாவும் முடிந்தது என்று சொல்ல, அவன் திருவிழாவில் இறைவனுக்குத் திருவமுது படைக்க; எண்ணிலாத பண்டங்களைக் கொண்டு வந்து தரிசனத்துக்கு வருவோர்கள் மகிழ்ச்சியடைய அமுதுகள், தானங்கள் யாவையும் குறைபாடு இன்றி நடத்தி, விதிப்படி, துவச தம்பத்தின் மீது கொடிச் சீலையை ஏற்றி, திருமகள் கேள்வனுக்கு அதிரசம், சுகியம், மனோஹரம் முதலிய பண்டங்களும் முக்கனியும் திருவமுதும் விதவிதமாக நிவேதித்துச் சகல வாத்தியங்களும் முழங்க, குடைகள் நிழல் செய்ய, கொடிகள் நெருங்கி விளங்க, சாமரைகள் வீச, மாதர்கள் பரத நாட்டியஞ் செய்ய சங்கீத கோஷம் சமுத்திர கோஷம் போல முழங்க, வித்வான்கள் கவிகளைப் பாடித் துதிக்க, வேதியர்கள் வேதங்களை முழங்க, தேவர்கள் மலர்மாரி பொழிய, மண்ணவரும் விண்ணவரும் மாதரும் வாழ்த்த, அன்னம், சிங்கம், ஆஞ்சநேயன், கருடன், யானை முதலிய வாகனங்களில் பகவானை எழுந்தருளச் செய்து, நாள்தோறும் திருவிழாப் போந்தருளச் செய்து, தேர்மீது வருங்காட்சியியன்றி குதிரை வாகனத்தில் எழுந்தருளச் செய்து, பின்னாளில் விமானத்திலும் எழுந்தருளுவித்து, நான்மறையோர்கள் கும்பம் ஸ்தாபித்து, ஹோமம் புரிய பந்தனம், பலியளித்தல், பொன் வழங்கல் முதலிய சடங்குகளையெல்லாம் குறைவில்லாமல் செய்து, பின்னர், கொடிச் சீலையை இறக்கித் திருவிழாவை நிறைவேற்றினான். இறைவன் திருமகளுடன் விமானத்திலிருந்து அத்தாணி கொண்டு, பிரமனை நோக்கி, "நீ செய்வித்த இந்தத்திருவிழாவினால் நாம் மிக்க

Koviloor Digital Library

உவப்பு உற்றோம். ஆண்டுதோறும் இந்தப் புரட்டாசித் திங்களில், இந்தத்திருவிழாவினை இவ்வாறு இயற்றுவிப்பவர்கள் இருமைப் பயனையும் பெறுவார்கள். இந்தத்திருவிழாக் காட்சி பெற்றோர் தாம் நினைந்தவைகளைப் பெற்று வாழ்வார்கள் என்று அருள் செய்து சகல வாத்தியங்களும் முழங்க, இறைவன் சாமிபுஷ்கரணியில் அவபிருத நீராடல் புரிய, பிரம்மன் முதலிய அனைவரும் அந்தத்தீர்த்தத்தில் நீராடினர். அப்போது சனக முனிவர் தேவர்கள் இடையே தன் கையை ஆகாயத்தை நோக்கி உயர்த்திக் கொண்டு, "எல்லோரும் கேளுங்கள்! சத்தியம் ஒன்றைச் சொல்கிறேன். வேதசாரப் பொருளைப் பார்க்கும்போதும் தியானம் மூலமாகப் பார்க்கும் போதும் மூன்றுலகத்திலும் முதன்மை பெற்ற இந்தச் சாமிபுஷ்கரணியில் அவபிருதம் ஆடுவோர்கள் தம் சுமைபாவங்களைக் கணப்பொழுதில் விட்டு நீங்குவார்கள்" என்று சொல்லியதைக் கேட்டு யாவரும் வியப்படைந்தார்கள்.

பிறகு யாவரும் இறைவனை வணங்கி வாழ்த்த, பிரமனுக்கு சத்திய லோகம் செல்ல விடையளித்து, இந்திரனைப் பொன்னாடு ஏகஏவிச் சிவனை அவனுலகுக்குச் செல்ல கட்டளை செய்து, உலகில் உள்ளோர் யாவரும் என்றும் திருக்காட்சி பெறுமாறு ஆனந்த நிலைய விமானத்தில் எழுந்தருளியிருக்கிறான்" என்று சூதமுனிவர் கூறி முடித்தார். இது வராகபுராணத்திலுள்ளது.

32. வராககிரி முதல்வனின் பெருமைகள்

சௌனகாதி முனிவர்கள், "மேலும் வராககிரி முதல்வனின் பெருமைகளைக் கேட்க விரும்புகிறோம்" என்று சொல்ல, சூத முனிவர் சொல்கின்றார்."திருமாலின்

Koviloor Digital Library

திருவிழா முடிந்தபிறகு, தேவர்கள் அனைவரும் தத்தமது இடத்தையடைய, சிவன் சேஷகிரியை வலம் வந்து கொண்டிருந்த பொழுது வழியில் ஓர் இடத்தில் கபில தீர்த்தத்தைப் பார்த்து, இந்த இடத்திலே நாம் இருந்தால், அஞ்சனாசலப் பெருமானாகிய ஸ்ரீநிவாசனது சேவை நலமாய் நாள்தோறும் கிடைக்கும் என்று எண்ணி அந்த இடத்தையே கைலாயமாகக் கொண்டு மகிழ்ந்திருக்கின்றான். அந்த இடத்தை உலகத்தினர் காளஹஸ்தி என்று வழங்குவர்.

ஞானியர் ஆகிய சனகர், முதலிய யோகியர் கூட்டம் எல்லாம், பாபநாசதீர்த்தத்துக்கு அருகிலுள்ள வனங்களில் சஞ்சரிப்பது உண்டு. சூரியன் வெப்பம் அணுகாத எனது ஆசிரமத்தில் முன்பு ஒருசமயம் அருந்ததி என்ற கற்புக்கரசி இலக்ஷ்மியை மனதில் தியானித்துத் தவம் செய்யக் கருதித் தவமிருக்கத், திருமகள் அவள் முன்பு தோன்றி அவளுக்குப் பலவரங்களைக் கொடுத்து அந்த இடத்துக்கு அருகிலுள்ள பத்து நதிகளில் பங்குனிமாத உத்திரநாளில் மூழ்கி, என்னைத் துதிப்பவர்களுக்கு சிந்தித்தவைகளையெல்லாம் அளிப்பேன் என்று அருளிச் சென்றாள் என்று சூதமுனிவர் சொல்ல, முனிவர்கள், அவரை நோக்கி, "தீமைபுரியும் அரக்கர்களைச் சக்கரத்தாழ்வான் அழித்தான் என்று சொன்னீர்களே! அந்த வரலாற்றை விபரமாகக் கூறவேண்டும்" என்று கேட்க, சூதமுனிவர் சொல்கிறார்.

"இறைவனின் கட்டளையை மறுக்காமல் சக்கரத்தாழ்வான் வேந்தன் வடிவங் கொண்டு, ஆயிரம் கரங்களோடு, குதிரைகள் பூட்டிய பெருந்தேரைச் செலுத்தி சூரிய உதயம் ஆகும் கீழ்த்திசையில் கேசி என்ற மலைவனத்தை யடைந்து, அங்குள்ள துஷ்டர்கள்

Koviloor Digital Library

யாவரும் எமபாசத்தில் கட்டுண்டு இறக்கும்படித் தாக்கிப் பிறகு அக்கினி உறையும் தென்கிழக்குத்திசையில் தேரைச் செலுத்தி, அங்குள்ள தீயவர்களைச் சிரகர களேபர பங்கம் செய்து, பிறகு தெற்குத்திசையில், ஊழித்தீ என்னும்படிச் செல்ல, அங்கு உக்கிராங்கன், அங்கன், புளிந்தன், காலன், முத்தாயிகன், காலகன் என்ற பஞ்ச துஷ்டர்கள், பஞ்ச பாதக வடிவமாகத் தோன்றி நாகவிஷம் போலச்சீறி சக்கராயுத வேந்தனின் வருகையைக் கண்டு, இவன் தக்கதுணையில்லாமல் நம்மோடு போருக்கு வந்திருக்கிறான் என்று எண்ணிச் சதுரங்க சேனையோடும் ஆர்ப்பரித்துச் சூழ்ந்து வளைத்துக் கொள்ளச் சக்கரவேந்தன் ஊழிக்கனலும் அஞ்சும்படி வில்லிலிருந்து அம்பு மழையைச் சொரிந்தான். துஷ்டர்களும் வாள், சூலம், வேல், மழு, கதை முதலிய போர் ஆயுதங்களால் தாக்கிக் கொடிய போர் செய்தார்கள்.

போர்க்களத்தில் எழுந்த தூளி ஆகாசகங்கையையும் சேறாக்கி இமைக்காத தேவர்களையும் இமைக்கும்படி செய்தது. அப்போது சக்கரவேந்தன் அந்தத்துஷ்டர்களின் உயிரைப் போக்கினான். சேனையோடு, அவ்வைவரும் அழிந்தது கண்ட அவர்கள் தலைவனாகிய அய சிரசன் மிகவும் கோபங்கொண்டு, சக்கரவேந்தன் மீது அம்பெய்தான். அப்போது சக்கரவேந்தன் அவன்மீது ஆக்னேயாஸ்திரத்தை செலுத்தி அவனை யமலோகத்துக்கு அனுப்பிவிட்டு வெற்றியுடன் தென்மேற்குத் திசைக்குச் சென்று அங்குள்ள தீயோரை ஒழித்தான். பிறகு விரைவாக மேற்குத் திசைக்குச் சென்று அங்குள்ள தீயோரை அழித்தான். அங்கு மலைபோன்ற மேனியை உடையவனும் கொலை நிருதனுமாகிய வனகர்த்தன் என்பவன் பல நாட்களாகத் தேவர், தைத்தியர் மனிதர் முதல் யாவராலும் போரில்

Koviloor Digital Library

தோல்வியடைந்து உயிர் துறவாத வெற்றியுடைய புதல்வன் ஒருவனை வேண்டிச் சிவனைக் குறித்துத் தவம் புரிந்தான்.

சிவனைக் கண் எதிரே காணாமையினால் மனம் அழன்று, தன் தலையை அறுத்து ஆகுதியாக அக்னியில் இடுவேன் என்று ஆயுதத்தைக் கைக் கொண்ட பொழுதில் சிவன் மனமிரங்கி, அவன் முன்பு தோன்றி அவன் விரும்பிய வரத்தை வழங்கிச் செல்ல, அதை பெற்ற செருக்கோடு இருந்த அவன், சக்கரவேந்தனின் வருகையை அறிந்தான். உடனே, தனது படைவீரர்கள் புடைசூழத் தேவர்கள் அஞ்ச எதிர்த்தான். கொடியவர்கள், சூலம், வேல், தோமரம் முதலிய எறிந்து வஞ்சினம் கொண்டு போர் செய்தார்கள்.

சக்கர வேந்தன் அம்புகளை எய்து, அவர்களுடைய கை கால் அறக் கொன்று வீழ்த்தினான். சேனைகள் இறந்ததை அறிந்த நிருதன், சுவாலபாதன் என்பவனை ஏவ, அவன் மீது சக்கரவேந்தன் அம்புகளை எய்து அவனைக் கொன்று பின்னர் வனகர்த்தன் மீது போர் தொடுக்க, அவன் சீறியெழுந்து பாணமழை சொரிந்தான். அப்போது சக்கரவேந்தன் அவன் உடல் சிதைந்து விழக் கொன்று குவித்து நாய் நரிகளுக்கு இரையாக்கி, வெகுண்டு வடதிசைக்குச் சென்றான். அத்திசையில் மலைபோன்ற அரக்கன் ஒருவன் பிரமனிடம் பெற்ற வரத்தின் செருக்கினால் பூமியில் தீங்குகள் பலவற்றைப் புரிந்து வந்தான். பேரண்டவன் என்ற பெயரையுடைய அவன், யவனன், காம்போஜன், மிலேச்சன் என்ற அரக்கர்களின் தலைவன். அவன் சக்கர வேந்தன் வந்ததைக் கேட்டு, பெருஞ் சேனையைத் திரட்டி மண்ணோடும் விண்ணோடும் மயங்கும்படி எதிர்த்தான். அப்போது சக்கரவேந்தன், அவன் முன்பு விரைந்து

Koviloor Digital Library

சென்று அவனை எதிர்க்க, மலையைப்போல அவன் எண்ணிறந்த சேனைகளோடு அணிவகுத்து நிற்பதைக் கண்டு, தனக்கும் பெரும் படைத்திரண் உண்டாகும்படி திருவுளம் கொள்ள அவ்வாறே பெரும்படை வீரர்கள் தோன்றினர். இருதிறச் சேனைகளும் கடும் போர் செய்யுங் காலத்தில், தன் சேனை, தாழ்ச்சி அடைவதைக் கண்ட சக்கரவேந்தன் தானே சினமடங்கல் போலப் பாய்ந்து எதிர் ஏறிக் கொடும்போர் புரிய, அவன் கோபத்திலிருந்து பாவகன் என்னும் ஒருவன் தோற்றம் செய்து, இடியென முழக்கிட பலபடைக்கலங்களைக் கொண்டு நெற்றிக் கண்ணனைப் போல நின்றான்.

சக்கரவேந்தன் அவனை நோக்கி, "இந்த நிருதர்களைக் கொன்று விரைவில் வருக" என்று ஆணையிட்டவுடன் அவன் கனன்று, வில்லெடுத்து மோகனாஸ்திரத்தை விடுத்தான்.அந்த அஸ்திரத்தின் வேகத்தால் நிருதர்கள் தங்கள் படைக்கலன்களை கைநழுவ விட்டு நிலத்தில் விழ, முன்பு நிலத்தில் சோர்ந்து வீழ்ந்த சக்கரவேந்தன் படைகளையெல்லாம் பாவகன் தெளிவடையச் செய்தான். இதைக் கண்ட நிருதபதி தன் சேனையும் மயக்கம் நீங்கி அதிர்ந்து எழும்படிச் செய்தான்.

உடனே இருசேனைகளும் கொடும்போர் புரிந்தன. பாவகன் கிரௌஞ்ச வாளி எடுத்து வீசி, சேனையை அழிக்க, நிருதன் ஐந்து அம்புகளை விடுத்து நிற்க, அவை ஐந்து கோடியாகப் பெருகிப் பாவகன் விடுத்த கிரௌஞ்ச வாளியோடும் கூடிக் கொண்டு அரக்கர் சேனையையே அழிக்க அதைக் கண்ட பேரண்டவன் 'இது அற்புதம்' என்று எண்ணித் தான் பிரமனிடம் பெற்ற சூலத்தினைத் தாங்கி வீச, அது அண்டத்தை முட்டி கனலெனத் தன்னை நெருங்கக் கண்ட பாவகன், உடனே வாயுவாஸ்திரத்தை

Koviloor Digital Library

ஏவ, அஃது அந்தக் கணத்திலேயே சூலத்தோடு அவனையும் விரைவில் வாரிக் கொண்டு சென்று சேஷகிரியை வலமாக வந்து நூறு யோசனைக்கு அப்பால் தரைமீது எறிந்தது. பேரண்டவன் நிலத்தில் விழுந்து இறந்தான். சக்கரவேந்தனைத் தேவர்கள் வாழ்த்திப் போற்றி மலர்மாரி பொழிந்தார்கள்.

இவ்வாறு வேதியருக்கு இடுக்கண் விளைவித்த வெய்யோர்களை எல்லாம் சக்கரவேந்தன் அழித்து, ஸ்ரீநிவாசப் பெருமாளின் திருக்கையில் வந்தமர்ந்தான். இந்த வரலாறு வராக புராணத்திலுள்ளது.

33. ஸ்ரீநிவாசர் சங்கு சக்கரம் தரித்த கதை

சூதமுனிவர் மேலும் சொல்லத் துவங்கினார். "சோழ சக்கரவர்த்தியின் புதல்வனாகிய தொண்டைமான் சக்கரவர்த்தி, வெற்றியடையும் பொருட்டு, முன்பு தனது சங்கு சக்கரங்களை அவனது கையில் கொடுத்து அவனுக்கு வரம் கொடுத்தபடியாகவே, பலநாட்கள் ஸ்ரீநிவாசப் பெருமான் தமது சங்கு சக்கரங்களை உலகினர் கண்களுக்குப் புலப்படாதபடி ஒளித்து வைத்திருந்தனன். அந்தப் பெருமானின் திருவடிவைக் கண்டவர்கள் தத்தமது கருத்துக்கு இசைந்தபடி அரன் என்றும் குமரன் என்றும் மாயவன் என்றும் பலவாறு சொல்லிச் சமய வாதங்களால் வேறுபாடுற்று பகைமை கொள்வார்கள்.' ஆதியுகத்தில் ஆதிசேஷனாகவும் இரண்டாவது யுகத்தில் லக்ஷ்மணனாகவும் மூன்றாம் யுகத்தினில் பலராமனாயும் தோன்றி நான்காவது கலியுகத்தில் இராமானுஜ முனிவரனாய் ஸ்ரீபெரும்புதூரில் அவதாரம் செய்து வரும் அனந்தாழ்வான், ஸ்ரீபாதத்தால் உலகளந்த திருமகள்

Koviloor Digital Library

நாதனான பெருமானே, எக்கடவுளினும் மேலாகிய பரம் பொருள் என்று நிலைநாட்டி மயக்கம் மிக்க அத்வைதம், கொடிய பாஷாண்டமதில்கள் ஆகிய பேரிருள்கள் மறையும்படிச் சூரியனைப்போன்று ஒப்பற்று விளங்கிப் பண்டைய வேத நெறியோடு திருக்குருரரின் கண் வந்த மெய்ஞ் ஞானத்தமிழ் மறையாகிய திருவாய்மொழியை ஓங்கும்படிச் செய்து சரசுவதிதேவியே தலைமேல் கொண்டு பாராட்டும்படி ஸ்ரீபாஷ்யம் இயற்றிப் பொய் ஒழுக்கம் நிலை கெடவும், வைதிக தர்மம் தலையெடுக்கவும் செய்து உலகினரால் பாராட்டப் பெற்று திருவேங்கடமலையை அணுகி, அங்கிருந்த குதர்க்க வாதிகளை வாதத்தால் வென்று அடக்கி, வேங்கடத்து அண்ணலை வாழ்த்தி நின்று, "திருமாலே! இந்தக்கலியுகத்தில் சங்கு சக்கரங்களை மக்களுடைய ஊனக் கண்களுக்குப் புலப்படாதபடி ஒளித்து நின்றாய். அவர்கள் இருள் பற்றிய மனத்தினராக உண்மை உணராமல் தம்முள்ளே பகைபடுவார்கள். ஆகையால் உலகினர் யாவரும் அறியும்படிச் சங்கு சக்கரங்களைத் தாமரைக் கைகளில் தரித்து அருளித் தரிசனம் தந்தருள வேண்டும்" என்று வேண்டவும், அவ்வண்ணமே அப்பெருமான் தரிசனம் தருவான் என்று கூறி, இப்பரனின் திருவிளையாடலை எல்லாம் எவராலும் அறிந்துளாக்க முடியாது என்று உரைத்தார். இது வராகப் புராணப் பொருளாகும்.

34. ஸ்ரீவைணவச் சிறப்பு

சௌனகர் முதலிய முனிவர்கள், சூதபுராணிகரை நோக்கி, "ஸ்ரீவைஷ்ணவத்தின் சிறப்புகளைச் சொல்ல வேண்டும்!" என்று கேட்டார்கள். அதற்கு இசைந்த அவர்

Koviloor Digital Library

சொன்னதாவது: "விஷ்ணு சம்பந்தம் பெற்றவர்களாகிய ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவேங்கட முடையானுடைய திருக்கண்ணோக்கத்தைத் தம் கருவிலேயே பெற்றவர்களாக, வைதிக சாஸ்திரங்கள் யாவற்றிலும் தேர்ந்து, சாத்வீக குணத்தையுடையவர்களாக, பரமபதத்தைப் பெறுவதில் இச்சையடைந்து, ஆசாரியரிடத்தில் பக்தியுடையவர்களாய், தமது தோள்கள் இரண்டிலும் சங்கு சக்கர முத்திரைக் குறிகள் விளங்கப்பெற்றவர்களாய் இருத்தல் வேண்டும்.

மேலும் அழகுற பன்னிரு திருமண் காப்பு விளங்க இட்டவர்களாய், துளசிமாலை, தாமரைமணிமாலை பூண்டவர்களாய், அருள் ஆகரம் அனுஷ்டானம் உடையவர்களாய் அவ் இறைவன் திருவடிகளில் தங்கள் பரம் எல்லாம் சேர்த்து, தவங்கள் எவற்றிலும் சிறந்தது என்று பெருமை பெற்றுள்ள பிரபத்தி என்னும் சரணாகதியைச் செய்து திருவேங்கடமுடையான் திருவருளாலே புண்ணிய பாவங்கள் போய்ப் பரிசுத்தராய் மனம் வாக்கு காயம் என்னும் மூன்று கரணங்களாலும் வேறு தேவர்களையும் அத்தேவதைகளின் மந்திரங்களையும் சாதனங்களையும் அயல்சார்புப் பயன்களையும் முற்றும் விடுத்து ஆசாரியன் உபதேசித்த திருமந்திரத்தை நாள் தோறும் உச்சரித்து, அதன் அர்த்தச் சிறப்புகளை அனுசந்தானம் செய்து, பரமபதம் பெறுதலைக் குறித்து, உடல் சுற்றத்தார் மேற்செல்லும் பற்றினைக் கழித்து, வேறு பயன் விரும்பாது உள்ளத்து உவப்புப் பெற்றவராய், எவ்வாற்றானும் வாழ்நாள் முழுவதும் திருமால் திருவடிகளையே அநவரதமும் வாழ்த்தி. அவனது அளப்பரிய குணப் பெருங்கடலுள் திளைத்து, ஆடி ஓர்மை உள்ளம் பெற்று உலகினையும் அவ்வாற்றால் திருத்தி என்றும் அவ்விறைவனுக்கே

Koviloor Digital Library

பாதாந்திரப் பட்டவர்களாக, அவனுடைய அடியவர்கள் ஆகிய பாகவதர்பக்கலிலும் அப்பற்று உடையவராகி ஊழியம் புரிந்து, இன்பதுன்பங்களை ஒன்றாகக் கொண்டு பகவான், பாகவதர், ஆசாரியர் ஆகியவர்களிடத்தில் உறுதியான பக்தியுண்டாகி, ஆசாரியன் கட்டளைகளை மனத்தில் கொண்டு திருவேங்கட முடையான் திருவருள் தேகத்தை எதிர்பார்த்து, நன்னிலையில் நிற்கின்றவர்களே ஆவர்.

ஸ்ரீவைஷ்ணவர்களுக்கே பரம பதமது உரிமை உடையது. இவ்விதம் மனத்தெளிவு இல்லற கீழ்மக்களுக்கு கிடைப்பது மிக அரிது. வேதத்தாலும் வைதிக மாதவர்களாலும் நான் அறிந்து கொண்ட இதுவே ஸ்ரீ வைஷ்ணவ சிறப்பாகும். இது சுருக்கமேயாகும். இதன் விரிவு வராகபுராணம் க்ஷேத்ரகாண்டத்தில் கூறப்பட்டுள்ளது. இதனைக் கேட்டு உணர்வோர், இந்தவுலகில் சிறப்புற்று வாழ்ந்து பரமபதம் பெறுவார்கள்" என்றார்.

35. ஞான விளக்கம்

சூதமுனிவர், மேலும் சௌனகாதியருக்கு, தத்துவம், கன்மம், ஞானம், பக்தி, வைராக்கியம் பிரபத்திமார்க்கம் முதலியவைகளைப்பற்றிச் சொல்லத் துவங்கினார். பிரம்மகற்பத்தின் முடிவில், பிரமன், சிவன், இந்திரன், தேவர் முதல் ஏழுவகைப்பட்ட உயிர்த் தோற்றங்களோடு, நிலம் நீராலும், நீர் தீயிலும், தீ வாயுவிலும், வாயு ஆகாயத்திலும், ஆகாயம் இந்திரியத்திலும், இந்திரியம் தன்மாத்திரையிலும், தன்மாத்திரைகள் பூதத்திலும், பூதம் மகத்தத்துவத்திலும், மகத்தத்துவம் அவ்யக்தத்திலும், அவ்யக்தம் அக்ஷரத்திலும், அக்ஷரம் தமசிலும், தமசு பரனிடத்திலும் பொருந்தி ஒடுங்கும். இவ்வகையாகவே

Koviloor Digital Library

ஸ்தூல, சூட்சுமங்களெல்லாமும் அமைந்துள்ளன. இவற்றையெல்லாம் தன்னிடம் அடக்கியுள்ள தனிப்பரமன் ஒருவனே. என்றும் அவனே நிலையுற்று இருப்பவன். அவனிடம் ஒடுங்கியுள்ள தத்துவங்கள் எல்லாம் அவன் சரீர ரோமங்களைக் காட்டிலும் அதிகமாகத் தோன்றும்.

எண்ணிலாத கோடி, அண்டங்களில் பொருந்தியுள்ள சதுர்முகனும் அசரனும் இந்திரனும் முதலிய பல்வேறு உயிர்களிடத்தும் உள்ளுயிராகப் பொருந்தி விளங்கும் அந்தப் பரமனையே ஏகோநாராயணன் என்றும் ஆதிப் பொருள் என்றும் பிரமம் என்றும் பரஞ்சோதி என்றும் விஷ்ணு என்றும் பரந்தாமன் என்றும் பரமன் என்றும் நாயகன், நாதன், நாரணன், கமலை கொழுநன், ஆரணன், அந்தர்யாமி, பூரணன், பகவன், பராபரன் என்று எல்லாம் சொல்வார்கள்.

இத்தகைய பெருமை வாய்ந்த நாரணன் ஆதி அந்தம் இல்லாத வைகுந்தத்தில் திருமகள், பூமகள், நீளை என்ற தேவியரோடு, ஆதிசேஷ, கருட, விசுவசேனர் முதலிய நித்தர்கள் முக்தர்கள் திருவடி பரவ வீற்றிருந்து அருள்கிறான். நெடுந்தூர நாட்டுக்குச் சென்ற மைந்தர்கள் மீது, பெற்ற தந்தைக்கு மனக் கவலையுண்டாவது போல அண்டங்களிலுள்ள உயிர்களுக்கு அருள் செய்யத் திருவுள்ளங் கொண்டு அணுக்கர் துயரால் அரற்றும், திருச்செவிசார்த்தி திருமகள், நிலமகள், நீளை, ஆதிசேஷன் முதலியோர் தன்னைச் சூழத் திருப்பாற்கடலில் எழுந்தருளியதனினும் ஜீவகோடிகள் திருந்தாமை கண்டு, இருந்தும் கிடந்தும் பார்த்து, அதில் காரியம் தாழ்க்கும் என எண்ணி இனி நின்று புவன

Koviloor Digital Library



ஜீவராசிகளை திருந்தச் செய்வோம் என்று முன்னின்று யாவரும் அடைந்து தொழுது விரும்பியவற்றை விரைவில் அடையும்படியாக இந்த நிலவுலகில் அனந்தனை மலையாக்கி, அதன் உச்சியில் சாமிபுஷ்கரணியின் அருகில் இலக்ஷ்மியுடன், சேஷன், கருடன், சேனை

Koviloor Digital Library

முதலிய நித்தர் முக்தர்களோடு நின்ற திருக்கோலமாகச் சேவை கொடுக்க ஸ்ரீநிவாஸன், பெரியப்பன், மலையப்பன், வேங்கடத்துறைவார், செல்வர் என்னும் ஐந்து திருவடிகளுடன் ஆதிவராக மூர்த்தியுமாய் அர்ச்சாரூபனாய் நின்று, கற்பகாலம் வரை தேவர் மாந்தர்கள், நாள்தோறும் பூஜை செய்யும்படி அமர்ந்துள்ளான்.

நிலவுலகில் நன்மக்கள் செய்கின்ற கரும, ஞான, பக்தி யோகங்களுக்கும் இவற்றின் பிரிவு ஆகிய இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிராத்தியாகாரம், தியானம், தாரனம் சமாதி என்ற எண்வகை உறுப்புகளுக்கும் வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், ஓதல், ஓதுவித்தல் என்னும் அறு தொழிலுக்கும், பிரம, தேவ, பூதர், பிதுரர், மானுட, யக்ஞங்களாகிய ஐம்பெரும் வேள்விகளுக்கும், தக்கண, ஆகவனீய, காருஹபத்தியம் ஆகிய மூன்று அனலுக்கும் மற்றைய மதங்களுக்கும் நித்திய, நைமித்தியங்கள் எவற்றுக்கும் தானே தலைவனாகியும் பகைவரைப்போக்கி, உலகத்தை இயக்குபவனாகியும் விளங்குகிறான்.

இந்த வகைத் தர்மங்கள் எல்லாம் அவ்வீசனுக்கு உவப்பாகப் புரிந்து, அவனது திருவடி மலர்மீது எம்பரம் எல்லாம் வைத்த அறிஞருக்கு உயர்பதத்தைத் தருவான். வேங்கடவனைப் பரமன் என்று பூஜிப்பவர்களுக்கு விருப்பங்களை அளிப்பான். பிரணவத்துடன் அவன் பெயரைப் பிணைத்துக்கூறுவோர் உள்ளத்தில் என்றும் எழுந்தருளுபவன்.

திருமகள் கொழுநனுக்கு, அடிமை செய்ய விரும்பி, இந்திரியங்களை அடக்கி, யோகம் செய்வதற்கு,

Koviloor Digital Library

தேசிகனை அடைந்து, அவன்பால் உபதேச மந்திரம் பெற்று, இறப்பை வென்று நீண்டகாலம் வாழ்வர். கன்ம, ஞான பக்தி வைராக்கியங்களை யெல்லாம் தருவது ஆகிய வேங்கட மலையில் சித்தர், சாத்தியர், சேவிக்க நலங்கள் எல்லாம் தருகின்ற பாவநாசன தீர்த்தத்தின் உத்திரபரிசத்தில் உள்ள புண்ணியதீர்த்தத்தில் மூழ்கி, முக்கோடி தீர்த்தத்திலும் சனகதீர்த்தத்திலும் நீராடி வேங்கடத்து இறைவனை மிக்க விருப்பத்துடன் தியானித்துத் திருமந்திரத்தை பதினாயிரம் முறை உருவிட்டு யோகம் புரிவோன், உடல் வலிமையும் ஒளியும் பெற்றுச் சிறந்து விளங்குவார்கள்.

முனிவர்கள் பலர் தீர்த்தப் பரீட்சையின் நிமித்தம் முன்பு சனக தீர்த்தத்தில் ஒரு வெண்ணிற இலையினை போட்டிட அந்த இலை கருநிறம் பெற்றது. ஒரு கல்லை இட்ட அளவில் அஃது ஒரு அந்தணன் உருவம் அடைந்து நின்றது. இறந்து எலும்பாகிய ஒரு பிராமணன், மனைவியும் குழந்தையும் உயிருடம்பு பெற்றதும் ஒரு கிழவன் குமரன் ஆனதும் எல்லாம் திருவேங்கடத்தில் உறையும் இறைவன் திருவருளேயாகும்.

இருபத்து நான்கு தத்துவங்களோடும் கூடிய உடம்பினைக் கொண்டு, நாளும் அவனுக்கே அடிமை செய்வது நித்தியம் ஆகும். மக்கள், மனைவி, பொன், பொருள் முதலிய எல்லா உடைமைகளையும் இறைவனுக்கே உரியவை என்று தொண்டு செய்பவர் தூயவர் ஆவர். இவ்வாழ்க்கைப் படுகுழியில் வீழ்ந்து அவன் பணிசெய்யாதவர்களைச் சாமித்துரோகிகள் என்று உலகினர் கூறுவர். இறைபணி புரிவோர், இன்னல் இன்றி, வீட்டு இன்பம் நீள்வார்கள்'' என்று சூதமுனிவர் கூறினார்.

Koviloor Digital Library

36. சௌனகாதியரின் ஆராதனை

சௌனகாதி முனிவர்கள், சூத முனிவரை நோக்கி "திருவேங்கடத்து இறைவனை, நமது முன்னோர்கள் எவ்வாறு பூஜித்தார்கள். அதனை விளக்கமாகக் கூறவேண்டும் என்று கேட்க, அவர் கூறியதாவது: இதே கேள்வியை முன்பு ஒருமுறை, கபில முனிவர் ஆதிசேஷனைக் கேட்க, அவர் அருளியதை நான் உங்களுக்கு சொல்கிறேன், கேட்பீர்களாக.

இரணியகர்ப்பர், ஸ்வர்ணமுகி நதிக்கரையை சேர்ந்து, அன்றலர்ந்த தாமரை மலர்களைக் கொண்டு, சேஷ மலையப்பனை நூற்றெட்டு திருநாமங்களை ஓதிப் பக்தியோடு அர்ச்சனை செய்து, பலவரங்களைப் பெற்றார். இவ்வாறே, இத்தலத்தில் தவமுனிவர்கள் பலர் பூசித்து, எண்ணிய பேறு பெற்று இறுதியில் முக்தியையும் பெற்றார்கள். ஆகையால் நீங்களும் அவ்வாறு செய்தால் திருமாலின் திருவருளைப் பெறுவீர்கள். இறைவன் திருப்பெயரோடு பிரணவத்தையும் சேர்த்து ஓதினால் யாவற்றையும் பெறுவீர்கள். அந்தத் திருநாமங்களுக்கு அங்க, நியாச தேவதை பிரமன் ஆகும்.

சந்தசுக்கு சேஷகிரி தேவனே அதிதேவதை. அவனது திருமலரடிகளை மனத்தால் தியானித்து காராம்பசுவின் பாலினால் திருமஞ்சனம் செய்து தியானித்தால் எல்லாப் பயன்களையும் பெறலாம்" என்று கூறினார். இதைக் கேட்ட சௌனகாதி முனிவர்கள் மகிழ்ந்து, "நாங்கள் திருவேங்கடப் பெருமானை தரிசித்துப் பூசித்துத் திரும்ப விரும்புகிறோம்" என்று கூற, சூதமுனிவரும் அவர்களுடன் திருவேங்கடத்துக்குப் புறப்பட்டார். அவர்கள் புறப்பட்டுத்

Koviloor Digital Library

தமக்கு எதிர்ப்பட்ட நதிகளில் நீராடி, சேஷகிரியை அடைந்து, சுவர்ணமுகி நதியில் நீராடிச் சூதமுனிவர் கூறியபடியே கோனேரியில் மூழ்கி, வேங்கடவனை விருப்பத்தோடு தரிசித்து, முன்பு உரைத்த திருமந்திரத்தினால் அர்ச்சனை செய்து, "இறைவனே, எங்களுடைய பழைய வினைகளை அறுத்து அருள் செய்க!" என்று பணிந்தார்கள். இறைவன், அந்த முனிவர்களை நோக்கி, "இந்த மலையில் எண்ணிலாத காலம் இருந்து மாதவங்கள் செய்து பெரும் பயனையடைவீர்கள். உலகில் வேங்கடப் பெருமையைப் போற்றுவோர், கேட்போர், விருப்பத்தோடும் எழுதுபவர்கள் பூசிப்பவர்கள், தூரதேசங்களில் பரவச் செய்வோர் அவர்மீது அன்பு கொண்டு பொருள் வழங்குவோர் இவர்கள் எல்லாம் இம்மையில் பெருநலம் பெற்றுப் பரகதியில் சேர அருள் செய்தோம்." என்று திருவாய் மலர்ந்தருளினார்.

பிறகு சௌனகாதியர் அங்கு ஓராண்டு வசித்தார்கள்.அதன் பின்னர் நைமிசாரண்யத்துக்கு வந்தார்கள். அப்போது அவர்கள், சூதமுனிவரை நோக்கி, வேங்கடமலையில் தீர்த்தங்களாடி ஆதிவராகர் அடிமலர் இறைஞ்சி பேறுபெற்ற தன்மையை உரைத்தார்கள். அப்போது சூதமுனிவர், திருவேங்கடமுடையானின் திருவருளுக்கு எல்லையே இல்லை" என்று பாராட்டினார்.

37. சேஷாசலத்தின் நான்கு பெயர்கள்

சௌனகாதி முனிவர்கள் சூதபுராணிகரைப் பணிந்து, "இந்த உலகில் மலைகள் யாவற்றிலும் மிகவும் பெருமை பெற்றுள்ள மலை எது? அதைச் சொல்லுங்கள்" என்று

Koviloor Digital Library

வேண்டினார்கள். சூதமுனிவர் சொல்லத்துவங்கினார். "கங்கை நதிக்கரையில் வியாசமுனிவர் எனக்குச் சொன்னது என்னவென்றால், மலைகள் யாவற்றிலும் சிறந்து பொன்மயமாக விளங்கும் மேருமலையை நாரதமுனிவர் அடைந்து அங்கு சூரியனைப் போன்ற பிரகாசமான மணிகளால் அலங்காரஞ் செய்யப்பட்ட ஒரு விமானத்தையும் அதற்கு நேராக வடக்குத்திசையில் ஒப்புவமையின்றி விளங்கிய ஒரு மண்டபத்தையும் பார்த்தார். அதனுள்ளே அவர் புகுந்து சென்ற அளவில் அதனிடையே, பவளம், முத்துக்களால் அழகுசெய்யப் பெற்ற உள் மண்டபத்தினிடையே மின்னலைப் போலக் கதிர்களை வீசும் மாணிக்கப் பீடத்தின்மீது, நிறை திங்கள் போன்ற திருமேனியுடன் வராகமுகம் விளங்க, நான்கு தோள்கள் துலங்க, குண்டலங்களும் திருமுடியும் சங்கு சக்கரமும் இலங்க, கௌத்துபமும் பொன்னாடைகளும் மின்ன வானவர்கள் கூட்டமாக இருந்து நின்று வாழ்த்த, வீற்றிருந்த வராக பெருமானைப் பார்த்துப் போற்றி செய்து, மனத்தில் அடங்காத ஆனந்தமுடையவராக அவர் நின்றார்.

அப்போது நிலமகள் அவர் முன்பு தோன்றி வணங்க, வராகப்பெருமான் அவளை மகிழ்ச்சியுடன் தன் கைகளால் வாரியணைத்துத் தன் மடிமீதுவைத்துக் கொண்டு, "பூமகளே! உன்னை நான் பாதாளத்திலிருந்து ஏந்தி வந்து ஆயிரம் முடிகளையுடைய ஆதிசேஷனின் தலையில் நிறுவி, எண்ணிலாத மலைகளைச் சார்பாகச் சேர்த்து, ஆதிசேஷனுக்கு ஆதாரமாக நானே சுமந்து கொண்டிருக்கின்றேன். உனக்கு இனிமேல் ஒரு தீமையும் வராது" என்றார். அதைக்கேட்ட நிலமகள், "பெருமானே! உமது திருவருளைப் பெற்றவர்களைத் தீமைகள்

Koviloor Digital Library

அணுகாது என்பது உண்மையே! என்னை ஆள்வது உமது திருச்செயல். எனக்குச் சார்புடையதாக பலமலைகளைப் பொருந்த வைத்ததாக அருளினீர்கள். அவற்றிலே மிகவும் சிறப்பினையுடைய மலையின் இயல்பை எனக்கு கூறி அருள்செய்ய வேண்டும்'' என்றாள். உடனே அவர், "மேரு, இமயம், சாளக்கிராமம், சித்திரகூடம், அஞ்சனம், சுவணம், நீலம், பாரியாத்திரம், மாலியவான், சுவேதம், மலயம், சிங்காத்திரி, மேருபுத்திரன், கந்தமாதனம், கைலாயம், தீர்த்திபூதரம், சிருங்ககிரி, மந்தரகிரி, ஹேமகூடம், மஹேந்திரகிரி, ரிஷபகிரி, வராகம், நிடதம், அத்திகிரி, அருணம், விந்தியம், கடிகாசலம் என விளம்பப் பெறும் மலைகள் சிறப்புடையவையாகும். அஸ்திகிரிக்கு ஐந்து யோஜனை அளவில் வடக்குத்திசையில் பொன்முகலி என்ற நதி ஒன்று உள்ளது. அங்கே சுகமுனிவருக்கு அருள்செய்து பலராமருடன் ஸ்ரீகிருஷ்ணன், அடியார்கள் குறைநீக்க எழுந்தருளியுள்ளான்.

அங்கு திருவேங்கடமலையின்மீது சாமிபுஷ்கரணி என்று பெயர் பெற்று விளங்கும் திவ்ய தீர்த்தத்தின் மேற்கே, உன்னோடு நாம் களிப்புடனிருக்கிறோம். எமக்கு வலப்பக்கத்தில் எல்லாமும் தானாக விளங்கும் ஸ்ரீநிவாஸ மூர்த்தி சேர்ந்துள்ளார். அந்தத் திருமலை திரேதாயுகத்தில் அஞ்சனாத்திரி என்ற பெயரைப் பெற்றது. இரண்டாவது யுகத்தில் நாரணாத்திரி என்ற பெயரைப் பெற்றது. மூன்றாம் யுகத்தில் நரசிங்காத்திரி என்று பெயர் பெற்று விளங்கியது. நான்காவது யுகத்தில் திருவேங்கட மலை என்ற பெயர் விளங்குகிறது. அந்தத் திருமலையில் புண்ணியதீர்த்தங்கள் அளவின்றி உள்ளன. அவற்றில் முழுகித் தவம் செய்து தும்புரு, வாயு, சுப்பிரமணியன், அகத்தியன் முதலியவர்கள் பேறு பெற்றார்கள். மற்றும்

Koviloor Digital Library

பலரும் பயனடைந்தவர்களின் பெயர்களை எடுத்துரைக்க இயலாது" என்று கூறினார். இதனை வியாசமுனிவர் எனக்குக் கூறினார், என்று சூதமுனிவர் சொன்னார்.

38. வராகப்பெருமான் மந்திரசித்தி உரைத்தது

அஞ்சனாசலமாகிய திருமலையில் வராகமூர்த்தி பூமகளோடு தங்கி, அங்கு என்னென்ன திருவிளையாடல்களைச் செய்தார் என்று சௌனகமுனிவர் கேட்க, சூதமுனிவர் கூறலானார். "திரேதாயுகத்தில் நாரணாத்திரி மீதுள்ள வராகமூர்த்தியை நிலமகள் வணங்கி, "பெருமானே! உம்மை மந்திரத்தால் எவ்வாறு பூசித்தால் சித்திகள் பெறமுடியும் என்பதை அருள்வீராக!" என்றாள். இறைவன் அதற்குக் கூறிய பதிலில், "என்னைப் பிரணவத்தோடு கூடிய சுவேதவராகமூர்த்தி யென்றும் பூதேவியைத் தந்தத்தால் தாங்கிய சக்தன் என்றும் திருமடந்தையைத் தோய்ந்த தூயோன் என்றும் சொல்லப்படும் மந்திரத்தை ஒரு ஆசாரியனிடத்தில் வணங்கிக் கேட்டுப் பக்தியோடு உரு ஏற்றிப் பசுவின் பாலால் பாயாசம் செய்து அதனை ஓமத்தீயில் வேதமந்திரத்தால் உபசரித்து இடவேண்டும்.

காமத்தால் சிதைந்த மனமானது தூய்மையடைவதற்கு உரிய மந்திரத்தினைச் சொல்லுகிறேன். பொன்னாடை சுற்றிய வெள்ளி மலையைப் போன்ற திருமேனியும் சிவந்த அழகு வாய்ந்த கமலம் போன்ற வராகத் திருமுகமும் நான்கு திருத்தோள்களும் சங்கு சக்கரமும் கிரீடம் அபய ஹஸ்தமும் துளசிமாலையும் இரத்னாபரணங்களும் உடையவன். வலதுமார்பில் ஸ்ரீவத்ஸம் உடையவன். உன்னைத் தனது திருமடியில் வைத்து வலது கையால்

Koviloor Digital Library

அணைத்தவன் ஆதிகர்மமாகி அதன் முதுகின் மீது ஆதிசேஷன் ஆகி, அவன் திருமுடியாகிய கமலத்தில் உறைகின்றவன் என்று தியானித்து முன் கூறிய மந்திரத்தை நாலுலட்சத்து நூற்றியெட்டு முறை உருவேற்றினால் உலகத்தில் நினைத்தவற்றை அடைந்து, பிறகு பரகதியையும் அடைவார்கள் என்று கூற, பூமகள், அந்த மந்திரத்தாலே பயனையடைந்தோர் யார் எனக் கேட்டாள். அதற்கு இறைவன், "முன்பு தருமன் என்ற அரசன் ஒருவன் என்னைத் தியானித்து பிரமப்பட்டத்தைப் பெற்றான். இந்திரன் துர்வாசமுனிவர் இட்ட சாபத்தினால் தனக்குள்ள பெருமைகளை யெல்லாம் இழந்து, பூவுலகமடைந்து இந்த மந்திரத்தை ஜெபித்துச் சாபம் நீங்கி, தேவலோகம் சென்று முன்பு போல வாழ்ந்து வந்தான்.இந்த மந்திரத்தை காசியபமுனிவரிடம் ஆதிசேஷன் பெற்று, உருச் செய்து, பூமியில் இந்தத் திருமலையின் உருவத்தைப் பெற்றான். மேலும் எண்ணற்ற யோகியர்கள் பெற்ற பெருமைகளைக் கூற இயலாது" என்றருளினார்.

அதைக்கேட்ட பூதேவி, "இந்தத் திருமலைத்தலையில் ஸ்ரீநிவாசன் எழுந்தருளிய காலத்தினைச் சொல்லி அருளுக!" என்று வேண்டினாள். அதற்கு வராக மூர்த்தி, "ஆதியில் ஒரு திரேதா யுகத்தில் தருமநெறி நடந்த வைவஸ்த மனுவின் காலத்தில், வாயுதேவன் திருப்பாற்கடலின் அருகே சென்று திருமாலைத் தியானித்து தவம் செய்யத் திருவருள் கூர்ந்து சாமி புஷ்கரணியின் கரையில் ஸ்ரீநிவாசன் தோன்றி வரங்களை ஈந்தனன். அந்தக்காலம் முதல் எவர்க்கும் தோன்றாதபடி மறைந்து விளங்கினான்" என்றார். பூதேவி பின்னர், "இறைவன் எல்லோருக்கும் காட்சி கொடுத்தது எவ்வாறு என்று அருளுக!" என்றாள்.

Koviloor Digital Library

அதற்கு வராகமூர்த்தி, அகத்திய முனிவர், முன்பொரு காலத்தில் இந்தத் திருமலையை அடைந்து பன்னிரண்டு ஆண்டுகள் நின்று தவம் புரிந்தான். அவனுக்குக் காட்சியளிக்க, அவன் தொழுது வாழ்த்தி, இந்தத் திருமலை மீது வருவோர் யாவருக்கும் காட்சியளிக்க வேண்டும்'' என்று வரம்கேட்டார். அவ்வாறே, அகத்தியருக்கு அருள் செய்து, அங்கு சக்கரம் விளங்க நின்று, உலகினருக்குக் காட்சிதந்தார். இவ்வாறு பல ஊழிக் காலங்கள் செல்ல, கண்ணனுக்கு இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில் வந்த துவாபர யுகத்தின் இறுதியில் நான் வராகாவதாரம் செய்தேன்'' என்றார். இவ்வாறு நிலமகள் கேட்ட சரிதத்தை, சூதபுராணிகர், சௌனகாதியருக்குக் கூறினார்.

39. அலர்மேலுமங்கை அவதரித்த கதை!

மேலும், வராகமூர்த்தி, பூதேவிக்குக் கூறியவற்றை சூத முனிவர் தொடர்ந்து கூறினார்:

"பழையகாலத்தில் சந்திரவமிசத்தில் தோன்றிய மித்திரவர்மன் என்ற அரசன் தொண்டை மண்டலத்தில் நாராயணபுரத்திலிருந்து ஆட்சிபுரிந்து வந்தான். அவன் பாண்டிய மன்னனின் புதல்வியை மணந்து, வியன் என்ற புதல்வனைப்பெற்று, அவனுக்கு, பெண்மைக் குணங்களிற் சிறந்து விளங்கிய தரணி என்ற நங்கையைத் திருமணம் செய்து, தன் அரசையும் கொடுத்து விட்டுப் பின்னர் திருவேங்கட மலையில் எழுந்தருளி உள்ள முதல்வனைத் தியானஞ் செய்யவும் தவஞ்செய்யவும் சென்று விட்டான். பிறகு வியன் என்ற அந்த அரசன் தர்மநெறி தவறாமல் ஆட்சிபுரியும்போது, ஒருயாகம் செய்வதற்காகத்

Koviloor Digital Library



தலைவியரும் வேந்தரும் சூழச் சென்று ஆரணி நதிக்கரையில் பொன் கலப்பையினால் உழும் போது அந்தப் பூமியில் தாமரை மலரின்மீது, மின்னற்கொடி தோன்றியதைப்போல ஒளியுடைய ஓர் நங்கை தோன்றக்கண்டு, அவன் வியந்து பெருமகிழ்ச்சி அடைந்தான்.

அப்போது ஆகாயவாணி அந்த நங்கையை உன் மகளைப் போலப் பாவித்து வளர்ப்பாய் என்று கூற, அவன் அந்தப் பெண்குழந்தையை ஏற்றுத் தன் கையால் எடுத்துத் தன் மனைவியின் கையில் கொடுத்தான். அமைச்சர் அரசர், அந்தணரோடு சென்று, தன்

Koviloor Digital Library

அரண்மனையை அடைந்த பிறகு, முன்பு ஜனகர் சீதையை வளர்த்ததைப் போலவே, நங்கையை வளர்த்து வந்தான். பிறகு, அவன் மனைவியான தரணி என்பவள் கருக்கொண்டு, மன்மதனும் நாணும் படியான ஒரு புதல்வனைப் பெற்றாள். அப்போது வீரவியன் சிந்தை மகிழ்ந்து, தானங்கள் பலவற்றைச் செய்தான். ஜாதகன்மம் முதலிய கிரியைகளைத் தவறாமல் செய்து, தவமுனிவர்களைக் கொண்டு வசுதாசன் என்ற பெயர் சூட்டி, அந்த மைந்தனை அன்பாக வளர்த்து வந்தான். அவன்தன் தந்தையைவிடத் திறமையுடையவனாகி, வைகாசி மாதத்தில் உச்சிக்கால சூரியனைக் கண்ட மக்கள் அஞ்சுவதைப் போலப் பகைவர்கள் அஞ்ச வாழ்ந்து ஆட்சி செலுத்தி வந்தான்" என்று வராகமூர்த்தி பூதேவிக்குக் கூறி முடித்தார்.

40. ஸ்ரீநிவாசன் பத்மினியைக் கண்டகதை

"ஆகாயராஜன், தாமரைமலரில் தோன்றிய மங்கைக்குப் பத்மினி என்ற பெயரைச் சூட்டினான். அறிவிலும், அழகிலும் குணத்திலும் மகிழ்ச்சியிலும் தன் புதல்விக்குச் சமமான பெண்கள் இந்தவுலகத்திலேயே ஒருவரும் இல்லை என்று ஆகாய மன்னன் மகிழ்ந்திருக்கும் காலத்தில் ஒருநாள், மன்னன் மகளான பத்மினி, தன் தோழிமார்களோடு சேர்ந்து, மந்தாரை, தென்னை, கமுகு, முதலிய மரங்கள் நெருங்கியதும், குயில்கூடிக்கூவ, கிளிகள் சேர்ந்து கொஞ்ச, மயில்கள் நடனமாட வண்டுகள் ரீங்காரம் செய்ய, மலைகளின் மீது மேகங்கள் தவழ்ந்து விளையாடும் விண்களாவியுயர்ந்த மரங்கள் சூழ்ந்த ஒரு சோலைக்குச் சென்று மலர்களைக் கொய்து கொண்டு, உலாவிவரும்போது, அந்த வழியே நாரதமுனிவர் கீதமிசைத்துக் கொண்டு வந்தார்.

Koviloor Digital Library



நாரதர், ஆகாசராஜனின் மகளைப் பார்த்து "நங்கையே! நீ யார்? தோழியர்கள் சூழ இந்தச் சோலையில் நிற்கிறாயே, சொல்லுக" என்றார். அதற்கு அவள், "நான் ஆகாயராஜனின் புதல்வி!" என்றாள். உடனே அவர், "நீ பாற்கடலில் பிறந்த மஹாலக்ஷ்மி என்பதை நான் அறிந்தேன், நீயும் திருமகளைப் போலவே சகலலட்சணங்களும் பொருந்தியவளாக இருக்கிறாய்!" என்று அவளைப் பாராட்டிச் சென்றார்.

பிறகு அந்த நங்கை, தன் தோழியரோடு, மலர்ச் சோலையில் மலர்களைப் பறித்துக் கொண்டிருக்கும்போது, ஒரு பெரிய மதயானை, பிளிறிக் கொண்டு எழுந்து வருவதைக் கண்டு அவர்கள், அந்த யானைக்குப் பயந்து, அந்தக் காட்டின் ஒருபக்கமாக ஒதுங்கி, ஓடிச் சென்றுப் பதுங்கி நின்றார்கள்.

Koviloor Digital Library



அப்போது வெள்ளைப்பளிங்கு போன்ற வெண்ணிறமுடைய ஒரு குதிரையின்மீது, மின்கொடியைப் பற்றிய கருமேகத்தைப் போலக் கோடிமன்மதர்களின் உருவம் கூடியதைப் போன்ற வனப்பு வாய்ந்த மேனியனாய், பொன்னாடை மின்னித்துலங்க, வில்லும் அம்பும் இலங்கத் தோன்றிய ஓர் அண்ணலைக் கண்டு, அந்தப் பெண்கள் அனைவரும் உள்ளம் கனிந்து நின்றனர். அந்த மதங் கொண்ட யானை, குதிரைமீது வந்த அந்த அழகனைக் கண்டவுடனேயே, ஒருமுழக்கம் செய்து, தன் துதிக்கையை நீட்டித்தூக்கி வணங்கிவிட்டு, அந்த வனத்தைவிட்டு அகன்றது.

பிறகு அவன், அங்கு மலர்களைப்பறிக்க வந்த அந்த மங்கையர்களை நோக்கி, “பெண்களே! நீங்கள் யார்? உங்கள் ஊர் யாது?” என்று கேட்டான். அதற்கு அவர்கள், “வில்லுடன் வேட்டையாட வந்த நீங்கள் யார்? இந்தக் காட்டிலுள்ள மிருகங்களை யாருமே வேட்டையாடக் கூடாது. இது எங்கள் ஆகாசராஜன் உத்திரவு. இந்தக்காடு அவரது ஆணைக்கு உட்பட்ட இடம். ஆகையால் நீங்கள் விரைவில் வெளியேறி விடவேண்டும்” என்றார்கள்.

Koviloor Digital Library



அதற்கு அந்த வாலிபன், தனது குதிரையிலிருந்து கீழே இறங்கி அவர்களருகே சென்று, "பெண்களே! உங்களுடைய பெயர்களையும் ஊரையும் குலத்தையும் சொல்லுங்கள். நான் அதைக் கேட்டுவிட்டு, எனது இருப்பிடமாகிய திருமலைக்குச் செல்வேன்" என்றான். அப்போது அந்த மங்கையரில் ஒருத்தி, நங்கையைக் காண்பித்து, "இவள் ஆகாய மன்னனின் மகள் இவள் பெயர் பத்மினி. நாங்கள் இவளுடைய தோழியர். நீங்கள் யார்! இங்கு வந்தது எதற்காக?" என்று கேட்டாள்.

அதற்கு அந்த வாலிபன், "என்பெயர் கண்ணன். எனது இருப்பிடம் வேங்கடமலை. இங்கு மிருகங்களை வேட்டையாடுவதற்கு நான் வந்தேன்." என்றான்.

அதைக்கேட்ட அந்த மங்கையர்கள் அனலைப் போலச் சினந்து "எங்கள் அரசன் உங்களைக் கண்டால் உங்களைக் கைது செய்து, சிறைப்படுத்திவிடுவார். ஆகையால் நீங்கள் விரைந்து உங்கள் இருப்பிடத்திற்குச் செல்லுங்கள்" என்றார்கள்.

அதன்படியே, வேங்கடமலையை அடைந்து நின்றான்அந்த வாலிபன்" என்று வராகமூர்த்தி பூமிதேவிக்கு உரைத்தார் என்று சூதமுனிவர் கூறினார்.

Koviloor Digital Library

41. பத்மாவதியிடம் தூதுசென்ற கதை

சேஷகிரியை அடைந்த அந்தக் கண்ணன் , மணிகள் இழைத்த மண்டபத்தின் ம்த்தியில் அமைந்த பைம்பொன் மலர் மஞ்சத்தின் மீது, பத்மினி என்ற அந்தப் பெண்ணையே தன் கருத்தில் கொண்டு, மோகத்தால் திருமேனி வெதும்பப் பள்ளி கொண்டிருந்தான். அப்போது அவனது தோழியாகிய வகுளமாலிகை என்பவள், கண்ணனின் திருவடிகளை வணங்குவதற்குச் சென்றாள்.

தேவர்கள் அறியாத திருவடிகளைத் தன் இருகைகளாலும் வருடிய அளவில் இறைவன் உணர்ந்து எழ, அவள் இறைவனை நோக்கி, "கண்ணா! இன்னமும் ஏது காரணத்தால் நீங்கள் அமுது செய்யாது சயனித்து இருக்கிறீர்கள். தொண்டர்களின் துயரகற்றும் தூயவரே! உங்கள் நெஞ்சிலும் துயரம் அணுகுமோ? நீங்கள் வேட்டையாடச் சென்றபோது ஏதேனும் உங்கள் விழிக்கு இலக்கு ஆயிற்றோ மண்ணுலக மின்னோ, பொன்னுலகப் பெண்ணோ, உங்களைத் தன் விழிவலைக்குள் விழவைத்துவிட்டாள் என்று உங்களுடைய திருமுகமே எனக்குச் சொல்கிறது. அதனை எனக்குச் சொல்லுங்கள்!" என்றாள்.

அப்போது இறைவன் அவளை நோக்கி, "முன்பு ஒரு திரேதாயுகத்தில் புலஸ்திய முனிவரின் மகனாகிய விஸிரவஸு பெற்ற இராவணன், பிரமனை நோக்கித் தவம் புரிந்து, மானிடர் அல்லாதாரால் தனக்கு மரணம் இல்லா வரம் பெற்று, அதனால் மிகவும்கர்வம்அடைந்து,தேவர்கள், சந்திர சூரியர்கள், அஷ்டதிக்குப் பாலகர்கள் ஆகியவர்களை யெல்லாம் தோற்கடித்து எவ்வுலகத்திலும் தன்னைவிட வலிமையில் சிறந்தவர்கள் இல்லை என்று எழுந்து, இலங்கையிலிருந்து ஒரு புஷ்பக விமானத்தில்

Koviloor Digital Library

விரைந்து செல்லும் போது லக்ஷ்மிதேவியானவள் வேதவதி என்ற பெயருடன் தோன்றி, ஒரு முனிவரின் ஆசிரமத்தில் வாழ்ந்து வந்தாள். அவளுடைய அழகினைக் கண்ட இராவணன், அவள் மீது மையல் கொண்டு, அழகில் மயங்கிய அவன் அவளை அணுகினான். அவன் மனக்கருத்தை அறிந்த அவள், கோபங்கொண்டு, அழகில் என்னைப் போன்றவளான பெண் ஒருத்தியினாலே நீ உன் ஆவியை இழப்பாய்" என்று சாபமிட்டுத் தானும் நெருப்பில் வீழ்ந்து, தன்னுயிரை விட்டாள். அந்தச் சாபத்தை ஏற்ற இராவணன், இலங்கையை அடைந்தான். அப்போது அந்த வேதவதி, இலங்கையில் உள்ள ஒரு பொய்கையில் தாமரைமலர் ஒன்றில் பெண்மகவாய்ப் பிறந்தாள்.

இந்த அதிசயத்தைக் கண்ட அரக்கர்கள், அந்தச் செய்தியை இராவணனுக்குச் சொல்ல, அவன் அங்கு சென்று நோக்கி, முன்பு வேதவதியால் தனக்கு நேர்ந்த சாபத்தைத் தவறின்றி எண்ணி, அவளால் தனக்கு இறுதி வரும் என்று கருதி அந்தப் பெண்மகவை, அந்த மலருடனேயே சேர்த்து ஒரு பெட்டியில் வைத்து மூடிவிட்டு கடலில் விடுமாறு செய்வித்தான்.அந்தப் பெட்டியை வருணன் மிதிலைக்கு அருகில் கொண்டு வந்து சேர்த்தான்.

பிறகு ஒரு நாள் ஜனகன் அஸ்வமேதயாகம் ஒன்றைச் செய்வதற்காக அந்த இடத்தை அடைந்து பொன்கலப்பையினால் உழச் செய்யவும் மண்ணில் கிடந்த அந்தப் பெட்டி வெளிப்பட்டது. அந்தப் பெட்டியை, ஜனகன் திறந்து பார்த்தபோது அழகெல்லாம் திரண்ட ஒரு குழந்தையைக் கண்டு அதை எடுத்துச் சென்று, தன் அரண்மனையிலேயே தன் மகளைப்போல வளர்த்து வந்தான். நான் ராமாவதாரம் செய்த போது, மிதிலைக்குச்

Koviloor Digital Library

சென்று, அவளை மணந்து, தந்தையின் சொல்லால் தண்டகாரண்யத்தையடைந்து உறைந்த போது, இராவணன் ஒளிந்து வந்து சீதையை எடுத்துச் சென்று சிறையிலிட்டான்.

அவனைக் கிளையோடு மடிவித்து விபீஷணனுக்கு முடிசூட்டிச் சீதையை நெருப்பில் மூழ்கச் செய்து யாவரும் ஜானகியின் கற்பினைப் புகழ்ந்து கொண்டாட, அவளுடன் அயோத்தியை அடைந்து முடிதரித்து ஆட்சி புரிந்து வந்த காலத்தில், வண்ணான் ஒருவன் இழிவாகக் கூறிய குற்றத்தினால், சீதையைக் கர்ப்பத்துடனேயே இலக்ஷ்மணனோடு அனுப்ப, அவன் அவளை வால்மீகி முனிவரின் ஆசிரமத்தில் விடுத்தான். அங்கே அவளுக்குக் குசலவர்கள் பிறந்தார்கள்.

பிறகு ஒரு காலத்தில் அசுவமேத யாகஞ் செய்ய எண்ணிய நான், பொன்னால் சீதையின் உருவத்தை செய்து, அங்கே வைத்து யாகத்தை முடிக்குங் காலத்தில் வால்மீக முனிவர், குழந்தைகள் இருவருடன் சீதையை அழைத்துக் கொண்டு அங்கு வந்து, என்முன்பு வெறுப்புற்ற வார்த்தைகளால் சமாதானம் சொல்லி, விட, நான் சீதையைப் பார்த்து, நெருப்பில் படிந்து வரச் சொல்ல, அவள் அப்படியே செய்து வந்து மனவருத்தத்தால் பூமிக்குள்ளே நுழைந்து சென்றனள், என்ற பூர்வவரலாற்றைச் சொல்லிவிட்டு, இறைவன் வகுளமாலிகையை நோக்கி, இருபத்தெட்டாவது கலியுகத்தில் பிரமன் முதலிய தேவர்களும் முனிவர்களும் பிராட்டியைத் துதித்து, இந்த நிலவுலகத்தில் அவதரிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொள்ள சீதை, நாராயணபுரத்தில் பூமியில் தோன்றி ஆகாயமன்னனின் வளர்ப்பு மகளாக, பத்மினி என்ற பெயரில் வளர்ந்து

Koviloor Digital Library

வருகிறாள். அவள் ஒரு நாள் சோலையில் மலர்களைப் பறிப்பதற்காகத் தன் தோழியருடன் சென்றிருந்தாள்.

அப்போது நான் குதிரைமீதேறி அந்த வனத்தின் வழியாக கானகத்தில் வேட்டையாடுவதற்குச் சென்றேன். அங்கு அவளைக் கண்டேன், அவள் அழகை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. ஆகையால் நீ சென்று அந்தப் பத்மினியை இங்கு அழைத்து வந்து சேர்ப்பித்தால் என் துயரம் நீங்கும்" என்றான். அப்போது கண்ணனின் மனநிலைய்ய அறிந்து கொண்ட வகுளமாலிகை, மனம் இரங்கி, "அந்தப் பெண்ணை நானே அழைத்து வருகிறேன். அவளுடைய ஊருக்குச் செல்லும் வழியை எனக்குச் சொல்வீராக!" என்றாள்.

கண்ணன் மகிழ்ந்து "உன் எதிரிலே தோன்றும் இந்த நரசிங்கக் குகையை அடைந்து இந்தத்திருமலையிலிருந்து இறங்கி, அகஸ்திய முனிவரின் ஆசிரமத்தை அடைந்து, ஸ்வர்ணமுகி நதிக்கரையிலுள்ள பிரம முனிவர் வனத்தை அடைந்து, அங்குள்ள தாமரைக் குளத்தில் நீராடி, அங்கு தங்கியுள்ள சாயாசு சங்கர் என்ற பெரியாரைத் தரிசித்து, அங்கிருந்து சுகமுனிவர் பூஜித்த ஸ்ரீ கிருஷ்ணனைப் பூஜித்து, அந்த நதிக்கு அப்பால் உள்ள வனங்களைக் கடந்து அரணி என்ற வனத்தையடைந்து அதற்கு அப்பால் ஆகாசராஜனின் நகரத்தை அடைந்து அப்பெண்ணிடம் பேசி, உறவுசெய்து அழைத்துக் கொண்டு வருவாயாக" என்றான். அதைக் கேட்ட வகுளமாலிகை ஒரு குதிரை மீது ஏறி, அகஸ்திய முனிவரின் ஆசிரமத்தை அடைந்து ஸ்வர்ணமுகி நதியைக் கடந்து அரணி என்ற வனத்தை அடைந்தாள். பிறகு ஆகாய மன்னனின் நகரத்துக்குச் செல்லும் வழியில், பத்மினியின் தோழியர்களைக் கண்டு அவர்களை

Koviloor Digital Library

யாரென்று கேட்க, அவர்கள் "நாங்கள் ஆகாச அரசன் அரண்மனைத் தோழியர்கள். எங்கள் வேந்தரின் மகளான பத்மினியை ஒருநாள் நாங்கள் அழைத்துக் கொண்டு, பூஞ்சோலையில் மலர் கொய்து, அவற்றை மாலையாகத் தொடுத்துச் சூடிக் கொண்டு, மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடிக் கொண்டிருந்த சமயத்தில், அந்த வனத்தில் மதயானை ஒன்று ஓடி வருவதைக் கண்டு, நாங்கள் ஒரு மறைவிடத்தில் பதுங்கிக் கொண்டோம்.

அப்போது ஒரு வாலிபன், கோடி மன்மதர்கள் ஒரே உருவம் கொண்டாற்போன்ற அழகுடன், ஒருவெண்குதிரையின் மீதேறி அங்குவந்தான். அவனைக் கண்டதும் அந்த மதயானை அவனை வணங்கி ஓடிவிட்டது. நாங்கள் பதுங்கியிருந்த இடத்தை விட்டு வெளியே வந்த போது, ஒரு ஆலமரத்தின் கீழே நின்று கொண்டிருந்த அந்த அழகிய வாலிபனைக் கண்டு, பத்மினி உள்ளத்தில் வியப்பும் விருப்பமும் கொண்டாள்.

பிறகு அந்நம்பி, மறைந்து போனான். அந்த நாளிலிருந்து அந்த அழகனையே தன் மனதில் நினைத்துக் கொண்டு அவன் நினைவாகவே இருக்கிறாள். அரசன் ஆகாசராஜன் அவளுக்குக் கிரகதோஷங்கள் இருக்கக் கூடுமோ என்று கருதி, ஜோதிடத்துறையில் வல்லவர்களை அழைத்து, தன் புதல்வியின் கிரகசாரங்களை ஆராய்ந்துரைக்கும் படிக் கட்டளையிட்டான். அவர்கள், அவளது ஜாதகத்தை ஆராய்ந்து, அரசனை நோக்கி, "அரசே! உன் மகளுக்கு நல்லபலன்கள் கூடிவருகின்ற காலம் வந்துவிட்டது. குருவின் பார்வை பட்டு விட்டதால், சுக்கிரன் உச்சமாக இருப்பதாலும் அவள் ஒரு ஆண்மையாளனைக் கண்டு காதல் கொண்டிருக்கிறாள்" என்றார்கள்.

Koviloor Digital Library

அதைக்கேட்ட அந்தவேந்தன், அதற்குச் செய்யவேண்டியது என்ன என்று கேட்க, அதற்கு அவர்கள், இந்த நகரத்தின் பக்கத்திலுள்ள அகத்தியலிங்கத்துக்குப் பக்தி விசுவாசத்துடன் திருமஞ்சனம் செய்வித்து வருவீர்களானால் இந்த இடர் நீங்கும்'' என்றார்கள்.

ஆகாச ராஜனும் கன்னியர் பலரை அழைத்து, பூஜைக்கு வேண்டியவைகளையெல்லாம் எடுத்து, அர்ச்சகரைக் கொண்டு, குற்றமில்லாமல் திருமஞ்சனம் செய்வித்து வருவீர்களாக என்று கட்டளையிட்டான். அவ்வாறே நாங்கள் அகத்தியலிங்கத்திற்கு அபிஷேக அர்ச்சனைகளைச் செய்துவிட்டு வரும் வழியிலேயே நாங்கள் உன்னைக் கண்டோம். நீ யார், இங்கு நீ எதற்காக வந்தாய்? என்பதைச் சொல்லுக'' என்று கேட்டார்கள்.

அப்போது வகுளமாலிகை தனது குதிரையைவிட்டுக் கீழே இறங்கி, அவர்களை நோக்கி அன்புடன் பேசத்துவங்கினாள். "உங்கள் தலைவியின் உள்ளத்தினைக் கவர்ந்த அந்த அழகிய வாலிபன் இருக்கும் திருமலையில் வாழ்கின்ற நான், அவனது கருத்தை நிறைவேற்றி வைக்கத்தான் இங்கு வந்திருக்கிறேன். ஆகாசராஜன் வளர்க்கும் அந்தப் பெண்ணரசியை நான் பார்க்கவேண்டும்'' என்றாள்.

உடனே தோழியர்கள் அவளை அன்புடன் வரவேற்று, அரசனின் மாளிகைக்கு அழைத்துச் சென்றார்கள். அப்போது பூமிதேவி ஒரு குறத்தியின் வடிவங்கொண்டு திரிகாலப் பலன்களையும் சொல்லுவதில் வல்லமை மிக்கவள் என்று சொல்லிக் கொண்டு வருவதைக் கண்டு, அந்தத் தோழிமார்கள் அவளை அழைத்து முறத்திலே முக்கால் நாழி முத்துக்களை கொட்டி, பலன்

Koviloor Digital Library
26437
LIBRARY KOVILOOR

சொல்லும்படிக் கேட்க, அவளும் "நீங்கள் ஒருமங்கையைப்பற்றிக் கேட்கிறீர்கள். நான் அந்தப் பெண்ணின் நிலைமையைச் சொல்லுகிறேன்.

அவள் ஒரு அழகிய வாலிபனைக் கண்டது முதல் அவன் மீது காதல்கொண்டு, உடல் மெலிவடைந்து, அவன் நினைவாகவே இருக்கிறாள். அவன் யாரென்றால் என்னால் அதையும் சொல்ல முடியும், நான் சொல்லும் சொற்களையெல்லாம் கடந்த அவன் உலகங்களுக்கு எல்லாம் நாயகன்! பரமபதநாதன், இலக்ஷ்மீகாந்தன், திருமலை இறைவன். அரசிளங்குமரன் உருக்கொண்டு மலர் வனம் அடைந்து உங்கள் அரசிளங்குமரியைக் கண்டு காதல் கொண்டு ஒரு மங்கையைத் தூதாக அனுப்பியிருக்கிறான். அந்தத் தூது சொல்ல வந்த மங்கையும் இப்போது உங்களுடன் இருக்கிறாள். அவ்விறைவனை உங்கள் நங்கை மருவிப்பரமானந்தம் கொண்டு விளங்குவாள் என்று முகமலர்ச்சியுடன் சொல்லிவிட்டுத் தன் பிள்ளையின் தலைக்கு எண்ணையும், பழந்துணியும் அன்னத்தையும் பெற்றுக் கொண்டு அவள் சென்றாள்.

பிறகு இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் தோழியர்கள், அரசியிடம் சொல்ல, அரசியும் தன் புதல்வியைத் தன் அருகில் அழைத்து வைத்துக்கொண்டு, அவளுடைய மனவிருப்பத்தைக் கேட்க, அவளும் நான் மலர் கொய்யச் சென்ற மலர் வனத்தில் ஓர் ஆண்தகையைக் கண்டேன். அது முதல் அவன் நெஞ்சில் நிலவுகிறான்" என்றாள். இந்தச் செய்தியைத் தோழியர்கள் கூறக் கேட்ட வகுளமாலிகை தான் வந்த காரியம் பலித்தது என்று எண்ணி மகிழ்ச்சியடைந்தாள்" என்று வராகமூர்த்தி பூமிதேவிக்குக் கூறியதாக! சூதமுனிவர், சௌனகாதி முனிவர்களுக்குக் கூறினார்.

Koviloor Digital Library

42. பத்மினி கல்யாணத்தின் நகர அலங்கார வர்ணனை

சூதமுனிவர், மேலும் தொடர்ந்தார். தரணியாகிய அரசி தன் அருகேயிருந்த மங்கையர்களைத் தம்முடன் வந்த நங்கையின் வரவினைப்பற்றிக் கேட்க, அவர்கள் நாங்கள் சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்து திரும்பும்போது இடையே ஒரு மங்கையைச் சந்தித்தோம். உங்களோடு சில முக்கியமான விஷயங்களைப் பேசுவதற்கு என்று வந்துள்ள அந்த அம்மையை விசாரித்தால் எல்லா விவரங்களையும் அறிவிப்பாள் என்றனர். தரணியும் அவ்வாறே வகுளமாலிகையை வரவழைத்து விசாரிக்க, அவள் "அரசியே! என் பெயர் வகுளமாலிகை; திருவேங்கடத்து இறைவன், அழகு வாய்ந்த அரசிளங்குமரன் வடிவங்கொண்டு, கானகத்தில்



Koviloor Digital Library

துஷ்ட மிருகங்களை வேட்டை யாடுவதற்காக வெள்ளைக் குதிரை மீது ஏறி வந்தபோது, பல ஆறுகளைக் கடந்து, ஒரு மலர்வனத்தை அடைய, அந்த வனத்தில் வனப்பு மிக்க நினது செல்வத் திருமகளைக் கண்டு பெரிதும் மாலாகினார். பிறகு திருமலையை அடைந்து என்னை அழைத்து உமது அரசன்பால் சென்று, உமது மகளைத் திருமணம் பேசி முடிவு செய்து வரும்படி என்னைப் பணித்தபடியால், நான் இங்கு வந்தேன். ஆகையால் நீங்கள் உங்கள் அரசரிடம் சென்று என் வரவைத் தெரிவித்து உங்கள் கருத்தைக் கூறுக!" என்றாள்.

அவ்வாறே தரணியரசியும், வகுளமாலிகை வந்துள்ள செய்தியை ஆகாசராஜனுக்கு அறிவிக்க, அவன் தனது அமைச்சர்களை அழைத்துத் தன் புதல்வியான பத்மினியையும் தன் அருகில் அமர்த்திக் கொண்டு, வகுளமாலிகையை வரவழைத்து அவள் வந்த செய்திகளையும் தெரிந்து கொண்டு, வேதவித்தகர்களான புரோகிதர்களை நோக்கி, "என் மகள் பத்மாவதியின் திருமணத்துக்கு நல்லதொரு நாளையும் முகூர்த்தத்தையும் ஆராய்ந்து சொல்லுங்கள்" என்றான். உடனே அந்தப் புரோகிதர், தேவகுருவாகிய பிருஹஸ்பதியை அழைத்து, இருவரும் சேர்ந்து, பத்மாவதியின் திருநட்சத்திரமாகிய மிருக சீரிஷத்துக்கும் திருமாலின் திருநட்சத்திரமான திருவோணத்துக்கும் மிகநெருங்கிய இனிய பொருத்தம் உண்டு என்று சொல்லி, "வைகாசிமாதத்தில் உத்திர பங்குனி நட்சத்திரத்தில் திருமணம் செய்விப்பது நல்லது" என்றார். பிறகு அரசன் மகிழ்ந்து, தேவகுருவை மரியாதையுடன் வணங்கி அனுப்பிவிட்டு, வகுளமாலிகையை நோக்கி, "அம்மா! நீ வந்த காரியம் முடிந்தது. நீ சேஷாசலம் சென்று, திருமணத்துக்கு உரிய பொருள்களைக் கொண்டு வருமாறு ஸ்ரீநிவாஸனுக்கு

Koviloor Digital Library

அறிவிப்பாயாக!'' என்றான். அவள், சென்றதும், அரசன் சுகப் பிரம்மரிஷியை நோக்கி, சேஷாத்ரி ஸ்ரீநிவாஸனுக்கு ஒரு திருமண ஓலை எழுதி அனுப்பும் படிக் கூறினார். சுகமுனிவர் மண ஓலையைப் பின்வருமாறு எழுதினார்.

ஸ்ரீவேங்கடாசல வாசியான ஸ்ரீநிவாசனுக்கு ஆகாசராஜன் செய்யும் ஆசீர்வாதங்கள். உங்கள் பந்து மித்திரர்களுடைய ஷேமங்களைக் கோரி, எழுதுவது. உங்களுடைய அனுக்கிரகத்தால் ஷேமமாக இருக்கிறோம். உம்முடைய சுகஷேமங்களை எழுதக் கோருகிறோம். இந்தச் சுபச் செய்தி சைத்ர சுத்த திரயோதசி தினத்தன்று எழுதியது. என் புத்திரி பத்மாவதியை உமக்குக் கொடுத்து, கன்யாதானம் செய்யவேண்டும் என்பது என் விருப்பம். இதற்கு நீர் சம்மதித்து வைகாசி மாதம் சுக்லபக்ஷ தசமி சுபதினத்தில் இந்தச் சுபச் செய்தியைப் பெற்று சுகமுனிவர் சொற்படி செய்ய வேண்டுகிறோம்.

இப்படிக்கு,

ஆகாசராஜன்.

இவ்வாறு ஓலை எழுதி சுக முனிவரிடம் கொடுத்து, சிறிதுதூரம் அவருடன் சென்று, ஸ்ரீநிவாஸனை எப்படியாகிலும் ஒப்புக் கொள்ளச் செய்து இந்தக் காரியத்தை நிறைவேற்றச் செய்வது உங்களைச் சேர்ந்தது என்று சொல்லி சுகமுனிவரை சேஷாசலத்துக்கு அனுப்பிவைத்தான். பிறகு ஆகாசராஜன், தன் புதல்வனை நோக்கி, "பத்மாவதிக்கும் ஸ்ரீநிவாஸனுக்கும் திருமணம் என்ற நற்செய்தியை இந்திரன் முதலிய தேவர்களுக்குத் தெரிவித்து விட்டுவா!'' என்று அனுப்பினான். இந்திரனிடம் ஸ்ரீநிவாஸனின் திருமணச் செய்தி கிடைத்ததும், அவன்,

Koviloor Digital Library

விசுவகர்மாவை நோக்கி, நாராயணபுரத்தை மிகவும் சிறப்பாக அலங்காரம் செய்யும் படிக் கட்டளையிட்டான்.

அவன், பொன்னாலும் மணிகளாலும், மண்டபம், மணப்பந்தல், மேடை முதலியவற்றை அமைத்து முத்து, பொன்னாடைகளைப் பொதிந்து, திருமணமாளிகைகளை எல்லாம் புதுப்பித்து கொடிகளை வரிசையாக அலங்கரித்து, தெருக்களில் நீர் தெளிப்பித்து, நவமணிகளால் கோலங்கள் இடச் செய்து, கம்பங்கள் தோறும் கனிக்குவளை நிறைத்து மலர் மாலைகளையும் தோரணங்களையும் தொங்கவிட்டு, கரும்பு கமுகு வாழை முதலியவற்றை நாட்டித் திண்ணைகள் தோறும் நிறை குடங்கள் அமைத்து, தேவரும் மனிதர்களும் அதிசயமாகக் கருதும்படி நகரத்தின் ஒவ்வொரு பகுதியையும் நன்றாக அழகாக அல்ங்கரித்தான்.

இந்திரன் வெள்ளை யானை மீது ஏறி வந்து, அரம்பையர்கள் சூழ அந்த அலங்கார நகரைக் கண்டு அந்த நகரம் முழுதும் கற்பகமலர்களைப் பெய்தான். குபேரன் தனது தானியங்களைக் குவியல்குவியலாக நிரப்பினான். வருணன் நவமணிக் குவியல்களை மனைகள்தோறும் நிரப்பினான். யமன் எவருக்கும் நோயணுகாமற் செய்தான். நிருதி, ஈசானன், வாயு, அக்னி முதலியவர்க்ள் தத்தமக்கு உரியவற்றைக் கொண்டு வந்து சேர்த்தார்கள். இவ்வாறு நகரம் மிகவும் அழகாக அலங்கரிக்கப்பெற்றுக் காட்சியளித்தது. வகுளமாலிகையும் சுகப்பிரம்மரிஷியும் திருவேங்கடத்தை அடைந்தார்கள். சுகப்பிரம்மரிஷி, ஸ்ரீநிவாசனிடத்தில் ஆகாசராஜனின் திருமண ஓலையைக் கொடுத்தார். மணஓலையைப் பார்த்து மகிழ்ந்த ஸ்ரீநிவாசன், அவரைத் தனது ஸ்ரீவாசத்துக்கு அனுப்பிவைத்துவிட்டு, வகுளமாலிகையை

Koviloor Digital Library

நோக்கி "நீ போன காரியம் என்னவாயிற்று" என்று கேட்டார். "குமாரா! அதிகப்பிரயாசையுடன் நான் போனகாரியம் பலித்தது" என்று அவள் சொன்னாள். பகவான், வகுளமாலிகையை நோக்கி, "அம்மா! இனிமேல் விவாகத்துக்கு வேண்டிய வேலைகளைச் செய்ய உனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். நான் பிரம்மாதி தேவர்களை அழைத்து, இந்த விவாக காரியங்களை முடிக்க எண்ணியிருக்கிறேன்" என்று சொல்லி, சேஷ, கருடர்களை அனுப்பி, பிரம்மாதி தேவர்களை அழைப்பித்து, "நான் ஆகாசராஜன் மகளைத் திருமணம் செய்து கொள்ள நிச்சயித்திருக்கிறேன்.

நம் பந்து மித்ரபரிவாரங்களுடன் ஆகாசராஜன் பட்டணத்திற்குப் போக வேண்டும். இங்கு செய்ய வேண்டிய காரியங்களை நிறைவேற்றிக் கொண்டு இந்த சைத்ரசுத்த திரயோதசிக்கு முன்பு நாம் அவ்விடம் சேர வேண்டும்" என்று சொல்லி, பிரம்மதேவனைப் பார்த்து "இந்த விவாகத்திற்கு என்னிடம் தனமில்லை. நீ இந்தக் காரியத்தைப் பூர்த்தி செய்ய திரவியம் கடனாகக் கொண்டுவர வேண்டும்" என்றார்! அப்போது தேவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்.

பிரம்மதேவன், குபேரனைப்பார்த்து, "இந்த விவாகத்துக்கு வேண்டிய செல்வத்தை ஸ்ரீநிவாசனுக்குக் கடனாகக் கொடுக்க வேண்டும்" என்று கேட்க, குபேரன் பிரம்மனைநோக்கி, "வெறும் வாய்ச் சொல்லில் செல்வத்தைக் கொடு என்று சொல்வது யாருக்கும் எளிது. ஆனால் கொடுப்பவர்களுக்குக் கஷ்டமாக இருக்கும், கடனுக்குப் பதில் ஏதாவது, அல்லது இருவரங்கள், பூமி முதலியவற்றை ஈடாக வைக்கவேண்டும். இல்லாவிட்டால் கடன் கொடுக்க முடியாது" என்று சொன்னார். அப்போது

Koviloor Digital Library

பிரமதேவன் ஸ்ரீநிவாசனிடம் தனகனக வஸ்து வாகனங்கள் நிதிகள் எதுவும் கிடையாது. கடன் பத்திரத்தின் மேல் ஒருகோடி பதினான்குலட்சம் வராகன் கடன் கொடுக்கவேண்டும், மொத்தத்திற்கும் வருஷா வருஷம் வட்டிமட்டும் ஒருலக்ஷம் வராகன்கள் செலுத்திக் கொண்டு கலியுக அந்தியத்தில் அசலை உனக்குக் கொடுத்து விடுவதாகச் சொல்லி, கடன் பத்திரம் எழுதி, அதில் பிரம்மதேவன் ஒரு சாட்சியாகவும் புஷ்கரணியின் கரையிலுள்ள இரண்டு அஸ்வத்த மரங்கள் இரண்டாவது சாட்சியாகவும் நியமித்து ஒருகோடி பதினான்கு லட்சம் வராகன்களைக் கடனாகப்பெற்று, விவாகத்துக்கு வேண்டிய யாவற்றையும் தயார் செய்தார்கள்.

ஆயினும், ஸ்ரீநிவாசனுக்கு லக்ஷ்மிதேவி அச்சமயத்தில் இல்லையே என்ற சிந்தனை வேதனைப்படுத்தி வந்தது. இதனைத் தெரிந்து கொண்ட பிரம்மதேவர், ஒவ்வொருவரையும் ஒவ்வொரு காரியத்துக்கு நியமித்து, ஸ்ரீநிவாசனை மங்கள ஸ்நானம் செய்'' என்று கேட்டுக் கொண்டார்.

அப்போது ஸ்ரீநிவாசன் லக்ஷ்மி தேவியைக் குறித்து சிந்தனை செய்தார். பிரம்மதேவன் ஸ்ரீநிவாசனைப் பார்த்து, "நீங்கள் ஏன் எதற்காக இப்படிச் சிந்திக்கிறீர்கள். நான் உங்களுக்கு மங்கள ஸ்நானம் செய்விக்கிறேன்'' என்று கூறிய பிரம்மதேவனை, அவன் தன்னைப் பரிகசிக்கிறான் என்று நினைத்து, சூரியனை அழைத்து, "நீ கரவீரபுரம் சென்று, அங்கு வசித்துவரும் லக்ஷ்மியிடம் ஸ்ரீநிவாசன் தேக அசௌக்கியத்தினால் பரிதவிக்கிறார்'' என்று சொல்லித் தன்னிடம் லக்ஷ்மியை அழைத்து வரும்படிக் கூறினார். சூரியன் ஸ்ரீநிவாசனைப் பார்த்து, "லக்ஷ்மி, லோகமாதா அவளிடம் நான் எப்படிப் பொய்

Koviloor Digital Library

சொல்லுவேன். சௌக்கியமாக உள்ள நீங்கள் அசௌக்கியமாக இருக்கிறீர்கள் என்று நான் எப்படிப் பொய் சொல்லமுடியும்?'' என்று கேட்க, ''உனக்கேன் அந்தச் சந்தேகம். அவள் இங்கு வருவதற்குள்ளாக நான் சௌக்கியமில்லாதவனைப் போல மாறிவிடுகிறேன். நீ அங்குபோய் அவளை அழைத்துக் கொண்டு வா'' என்று சொல்லிச் சூரியனை கரவீரபுரத்துக்கு அனுப்பிவைத்தார்.

43. சூரியனின் தூது

சூரியன் கொல்லாபுரம் என்கிற கரவீரபுரத்தை அடைந்து, லக்ஷ்மியை வணங்கி, ''ஶ்ரீநிவாசன் அசௌகர்யமாக இருப்பதால் உங்களை அழைத்து வரும்படி என்னை அனுப்பினார்'' என்று சொல்லி, லக்ஷ்மியைத் தனது ரதத்தின்மீது ஏற்றிக் கொண்டு வரும்போது, ஶ்ரீநிவாசன், பிரம்மா, ஈஸ்வரன் ஆகிய



Koviloor Digital Library

இருவரையும் அழைத்துக் கொண்டு, எதிரே சென்றார். லக்ஷ்மி, தன் கணவர் தன் எதிரே வருவதைக் கண்டு ரதத்திலிருந்து இறங்கி, அவரை வணங்கி அவரது பாதங்களைக் கழுவி, தீர்த்தம் பெற்றுக் கொண்டு, மல்லிகை மலர்களால் பூஜித்து, கபடநாடக சூத்திரதாரியான ஸ்ரீநிவாசனைப் பார்த்து, "என்னை அழைத்த காரணம் என்ன?" என்று கேட்க, ஸ்ரீநிவாசன் லக்ஷ்மியைப்பார்த்து, "ராமாவதாரத்தில் நான் உனக்குக் கொடுத்தவரத்தை நிறைவேற்ற சமயம் வந்ததால், உன் இஷ்டப்படியே வேதவதியை விவாகம் செய்து கொள்ள நிச்சயித்து, உன்னை இங்கு அழைப்பித்தேன்" என்று சொன்னார். அதைக் கேட்ட லக்ஷ்மி மகிழ்ச்சியடைந்தாள். ஸ்ரீநிவாசன் பிரம்மனைப் பார்த்து, காலதாமத மாகிறபடியால் விவாக காரியங்களைக் கவனிக்கும்படிக் கூறினார்.

பிரமதேவன், லக்ஷ்மியைப் பார்த்து, ஸ்ரீநிவாசனுக்கு மங்கள ஸ்நானம் செய்விக்கும்படிக் கூறினார். ஸ்ரீநிவாசனை நவரத்னபீடத்தில் அமர்த்தி தேவர்களைக் கொண்டு, சுகந்த தீர்த்தங்களைத் தருவித்து, பார்வதி, சரஸ்வதி, சாவித்திரி முதலியவர்கள் கீதங்கள் பாட, மங்கள ஸ்நானத்துக்குப் பிரயத்தினித்தார். ஆயினும் பகவானுக்கு யார் மங்களஸ்நானம் செய்விப்பதென்று யாவருமே சந்தேகத்துடனிருக்க, ஸ்ரீநிவாசன் சதுர்முகனைப் பார்த்து "எனக்குத் தாய் தந்தை, சகோதரர்கள் யாரும் இல்லையே" என்று துக்க மடைந்தார். அப்போது பிரம்மதேவன் ஸ்ரீநிவாசனை நோக்கி, பந்துக்கள் இல்லையே என்று துக்கிப்பது உங்களுக்குத் தகாது. நீங்கள் இப்படிக் காலதாமதம் செய்கிறீர்கள்?... நீங்களோ பரமாத்மா! உங்கள் மனைவியே உலகமாதா! இத்தகைய உங்களுக்கு இந்த

Koviloor Digital Library

உலகமே உங்களுடைய குடும்பம் என்று சொல்லி லக்ஷ்மியைப் பார்த்தார். அப்போது லக்ஷ்மி பகவானின் மனோபாவத்தைத் தெரிந்து கொண்டு, "நீங்கள் ஏன் விசனப்படுகிறீர்கள்? உங்களுக்கு நான் மங்கள ஸ்நானம் செய்விக்கிறேன்" என்று சொல்ல, பகவான் மகிழ்ந்து வசிஷ்டர் முதலிய முனிவர்களை நோக்கி, ஸ்நானத்திற்கு அனுமதியளிக்க வேண்டினார். அவர்கள் ஸ்ரீநிவாசனுக்கு ஆசீர்வாதங்கள் செய்ய அநேகபரிமள திரவியங்களுடனும் புண்ணிய தீர்த்தங்களுடனும் ஸ்ரீநிவாசனுக்கு ரமாதேவி மங்கள ஸ்நானம் செய்விக்க, முப்பத்து முக்கோடி தேவர்களும் ஸ்ரீநிவாசனைக் கொண்டாடினர். அப்போது குபேரன் வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் பகவானுக்குச் சமர்ப்பித்தான். ஸ்ரீநிவாசன், அந்த வஸ்திரங்களை அணிந்து அலங்கரித்துக் கொண்டு, முத்துக்களால் அலங்கரித்த பீடத்தில் அமர்ந்து, விதிப்படி சங்கல்பம் ஆஸ்ரயித்தார்.

44. ஸ்ரீநிவாசன் தனது குலதெய்வத்தைப் பூஜித்த கதை

வசிஷ்டர் ஸ்ரீநிவாசனைப் பார்த்து "நீங்கள் உங்கள் குலதெய்வத்தைப் பூஜிக்க வேண்டும். உங்கள் குலதெய்வம் யார்?" என்று கேட்க, ஸ்ரீநிவாசன் "என் குலதெய்வம் சமீ" என்று சொன்னார். அதற்கு அவர், "குமாரதாரை தீர்த்தத்தில் இருக்கிறது. நீங்கள் அங்குசென்று ஒரு கிளையைக் கொண்டு வாருங்கள்" என்று சொல்ல, ஸ்ரீநிவாசன் குமாரதாரைக்குச் சென்று அங்குள்ள சமீவிருட்சத்திலிருந்து ஒரு சிறிய கிளையைக் கொண்டு வந்து, வராக மூர்த்தியின் அனுமதியைப் பெற்று, சமீ விருட்சத்தை அவருக்குச் சமீபத்தில் பிரதிஷ்டை செய்து, பிரம்மதேவனை நோக்கி, என்

Koviloor Digital Library

குலதெய்வப் பிரார்த்தனை முடிந்தது. இனிமேல் போஜனம் செய்து ஆகாசராஜனின் பட்டணத்துக்குப் போக வேண்டும் என்று சொல்லி, அக்னி தேவனைப்பார்த்து, வெகு சீக்கிரமாக சகல பதார்த்தங்களையும் தயாரிக்கும்படிக் கூறினார்.

அக்னிதேவன், பகவானைப் பார்த்து "போஜனம் தயார் செய்யப் பாத்திரம் ஒன்று கூட இல்லையே. நான் எப்படிச் சகலமும் தயார் செய்வேன்" என்று சொல்ல அப்போது பகவான் அக்னிதேவனைப் பார்த்து, "நான் மிகவும் ஏழை என்னிடம் பாத்திரங்களோ, தனமோ மற்ற எதுவுமேயில்லை, என்ற செய்தி, உங்கள் அனைவருக்கும் தெரிந்த விஷயமல்லவா? நான் என்ன செய்வேன்? நீ இப்படிச் செய்வாயாக ஸ்வாமி புஷ்கரணி அன்னபாத்திரம், பாபநாசனதீர்த்தம் சாம்பார் பாத்திரம், ஆகாசதீர்த்தம், சித்ரான்னப்பாத்திரம், தேவிதீர்த்தம் காய்கறிப்பாத்திரம், தும்புருதீர்த்தம் பாயசப் பாத்திரம், குமாரதாரை பருப்புப்பாத்திரம் இவ்வாறு இங்குள்ள 364 தீர்த்தங்களும் பாத்திரங்களாக முடிக்கும்படிக் கூறினார். அப்போது அக்னிஹோத்திரன், வெகுவிரைவாக அறுசுவையுடன் போஜனம் சித்தம் செய்து, தேவர்களனைவரும் பாண்டவதீர்த்தம் முதல் ஸ்ரீசைலம் வரை பந்தியாக அமர்ந்தார்கள். அப்போது ஸ்ரீநிவாசன் பிரம்மாவைப் பார்த்து நிவேதனம் செய்யாத பதார்த்தங்களைப் புசிக்கக் கூடாது. ஆகையால் சமஸ்த பதார்த்தங்களையும் அஹோபில நரசிம்மமூர்த்திக்கு நிவேதனம் செய்து, தேவர்கள் அனைவரையும் புசிக்கச் செய்து, தேவர்கள் அனைவரையும் பார்த்து , "நான் மிகவும் ஏழை எனக்குள்ள பதார்த்தங்கள் மிகக் குறைவானதால், கிருபையுடன் நீங்கள் புசித்ததற்கு நான் தன்யனானேன்" என்று கூறினார். தேவர்கள்

Koviloor Digital Library

ஸ்ரீநிவாசனைப்பார்த்து, "நீ அளித்த போஜனம், அமிர்தத்திற்குச் சமானம். நீர் ஏன் இவ்விதம் கபடநாடகமாடுகிறீர்" என்றார்கள். அப்போது ஸ்ரீநிவாசன் அவர்களுக்குச் சந்தன தாம்பூலம் சமர்ப்பித்தார். தேவர்கள் அவற்றை ஸ்வீகரித்து இந்தத்தாம்பூலமே நாங்கள் முக்தியைப் பெறுவதற்குரிய வழியென்று மொழிந்தார்கள். ஸ்ரீநிவாசனும் போஜனம் செய்தார்.

மறுநாள் காலையில் ஸ்ரீநிவாசன், பிரம்ம தேவனைப் பார்த்து, "நாம் இனி ஆகாசராஜனின் பட்டணத்துக்குப் போக வேண்டும். ஆகையால் சகலமும் தயாராக இருக்க



Koviloor Digital Library

ஏற்பாடு செய்யும்படிக் கட்டளையிட்டார். பிரம்மதேவர், சர்வமும் சித்தப்படுத்த, ஸ்ரீநிவாசன் கருடன் மேலும், பிரம்மா அன்னத்தின் மீதும் ஈஸ்வரன் நந்திமீதும் இதர தேவர்கள் தத்தமது வாகனத்தின்மீதும் ஏறி அமர்ந்து புறப்பட்டு, சதுர்முகன் முன்னும் தென்பாகம் ருத்திரனும் வலது பாகம் வாயு தேவனும் இப்படியாகத் தேவர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு, பேரிகை, மிருதங்கம் முதலிய மங்கள வாத்தியங்களுடன் சேஷாசலத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும் வழியில் முனிவர்கள், கந்தர்வர்கள், முதலியவர்கள் ஸ்ரீநிவாசனுடைய தரிசனத்தைக் காணக் காத்திருந்து பகவான்மீது புஷ்பமாரியைப் பொழிந்து, ஜெய கோஷங்களைச் செய்ய, ஸ்ரீநிவாசன், ஆனந்தமாக அவர்களுக்குத் தரிசனம் தந்து, செல்லும் போது பிரம்மதேவன், அவர்களையும் விவாகத்திற்கு அழைத்துக் கொண்டு, பகவானுக்கு முன்பு போய்க் கொண்டிருக்கும் வழியில் பத்மதீர்த்தத்தில் வசித்து வந்த சுகமுனிவர் அவர்களை விருந்துக்கு அழைத்தார்.

பகவான், சுகமுனிவரைப் பார்த்து "நீங்கள் பிரம்மச்சாரி எங்களுக்கெல்லாம் போஜனம் செய்விப்பது உங்களுக்குக் கஷ்டம். நாங்கள் எல்லோரும் ஆகாசராஜனின் அரண்மனைக்குச் சென்று போஜனம் செய்ய எண்ணியிருக்கிறோம்" என்றார்.

அதற்கு சுகமுனிவர், "நீங்கள் சொன்னது போல நான் ஒரு பிரம்மசாரிதான். உங்களுக்கெல்லாம் போஜனமளிப்பது எனக்குக் கஷ்டம்தான். ஆயினும் உங்களுடைய அனுக்கிரகத்தினால் எனக்கு நஷ்டம் ஒன்றும் தோன்றாது நீங்கள் அருந்தினால் பதினான்கு லோகங்களும் திருப்தியடையும். ஆகையால்

Koviloor Digital Library

கருணைகூர்ந்து, கந்த மூலபலாதிகளையாவது சாப்பிட்டுச் செல்லவேண்டும்'' என்று பிரார்த்தனை செய்தார். அந்தவார்த்தைகளைக் கேட்டு, வகுளமாலிகை, பகவானைப்பார்த்து, "நீங்கள் சுகமுனிவரின் வார்த்தைகளை அவசியமாக ஏற்கவேண்டும்.

உங்கள் விவாக காரியங்களுக்கு, முதன்முதலாக சுகமுனிவர் மூலம்தான் ஆகாசராஜன் சுபச்செய்தியை அனுப்பினார். அந்தச் சுபச்செய்தியை முன்னிட்டு, இப்போது நாம் ஆகாசராஜனின் பட்டினத்திற்குப் போகிறோம். ஆகையால் முதலில் அவர் இஷ்டப்படி நடப்பது தர்மம்'' என்று சொன்னாள். அந்த வார்த்தைகளைக் கேட்டு, ஸ்ரீநிவாசன் சுகமுனிவரின் பர்ணசாலைக்குள் சென்று, பக்தியுடன் அவர் சமர்ப்பித்த, கந்த மூலபலாதிகளை உட்கொண்டார்.

இதனைக்கண்ட தேவர்கள் சுகமுனிவர் மீது கோபங் கொண்டார்கள். அப்போது ஸ்ரீநிவாசன் தேவர்களை திருப்தியடையச் செய்வதற்காக ஏப்பம் விட, அதனால் உண்டான காற்றே, தேவர்கள் அனைவரையும் திருப்தி செய்தது. தேவர்கள் யாவரும் திருப்தியடைந்து மகிழ்ச்சியுடன் அங்கிருந்து புறப்பட்டு, ஆகாசராஜனின் பட்டணத்துக்கு போய்க் கொண்டிருந்தார்கள்.

45. ஸ்ரீநிவாச கல்யாணம்

ஸ்ரீநிவாசப் பெருமாள், ஆகாசராஜனின் திருநகரத்தை அடைந்து, பத்மாவதியைத் திருமணம் செய்து கொண்ட வரலாற்றைக் கூறுகிறேன், என்று சூத முனிவர் சொல்லத் துவங்கினார்.

Koviloor Digital Library

"நாராயணபுரத்தை நவமணிகளால் அலங்கரித்த பிறகு, இந்திரன் முதலிய தேவர்கள், திருவேங்கடமலையை அடைந்து, ஸ்ரீநிவாசனின் திருவடிகளைப் பணிந்து, திருமணத்திற்கு எழுந்தருளும்படி வேண்டினார். ஸ்ரீநிவாசன் மங்களஸ்நானம் செய்து, நறுமணத்தூபம் எங்கும் மணம் வீச, பீதாம்பரங்களை அணிந்து, செம்பொன் இருக்கையில் எழுந்தருளி, அஷ்டமி சந்திரனும் அமுததாரை விழுந்ததுபோல, திருநெற்றியில் திருமண்காப்பு அணிந்துகொண்டு திருமேனியில் களபக்கலவை பூசி, கேயூரம், மணிக் குண்டலம், மகுடம், கௌஸ்துபம், ஹாரம், மணிகண்டிகை, கடகம் முதலிய ஆபரணங்கள் அனைத்தையும் அணிந்து அவற்றின் மீது துளசிமணிமாலையையும் அணிந்து கொண்டார். இரதகஜ துரகபதாதிகள் என்ற நால்வகைச் சேனைகளையும் ஏவி, சேனைமுதலியவைகளை நோக்கி, "யாவரும் அவரவருக்கு உரிய வாகனங்களில் ஏறி வரும் படிச் செய்து, வகுளமாலிகை முதலிய மங்கையரை இரதங்களில் வரச் செய்து, கருடன்மீது எழுந்தருள நாராயணபுரம் நோக்கிச் சென்றார்.

அப்போது எண்திசை மலைகளும் குலுங்க, கடலும் மேகமும் கலங்க, பல்லிய இசை முழங்க, தேவமங்கையர்கள் நடனம்புரிய, கந்தர்வர் கானம் செய்ய, மலைமகள், கலைமகள் இருபுறமும் நின்று சாமரம் வீச, இந்திராணி குடைபிடிக்க இயக்க, மாதர் ஆலவட்டங்கள் அலைக்க, தேவமாதர்கள் விருதுகள் கூற, சிலர் சோபனம் பாட, கின்னர கிம்புருட, மங்கையர்கள் மங்கள ஆரத்தி எடுக்க, வேதமுனிவர்கள் வேதங்களை ஓதிவர, தேவர்கள் மலர்மாரி பொழிய இவ்வித அலங்காரத்துடன் லக்ஷிமிகாந்தன் நாராயணபுரத்தின் அருகே வருவதை

Koviloor Digital Library

ஆகாசராஜன் கண்குளிரக் கண்டு பணிப்பெண்களை நோக்கி, விரைவில் தனது புதல்விக்கு மங்கள நீராட்டுச் செய்வித்து மணக்கோலம் செய்யக் கட்டளை யிட்டான். அவ்வாறே பணிமகளிர் நறுமணத்தைலம் தேய்த்து, நன்னீராட்டிக் கூந்தலுக்கு அகிற்புகை ஊட்டி, கஸ்தூரி பூசி, பின்னலிட்டு நறுமலர் மாலை சூட்டித் தேவமாதர்கள் கொண்டு வந்த கலவையை அணிவித்து பொன்னாடை, நவமணியாபரணங்களை அணியச் செய்து, திருநுதலில் திலகமிட்டு, கருவிழிகளுக்கு அஞ்சனம் தீட்டிக் குங்குமக் குழம்பினால் பத்திரம் எழுதுவித்து, பாதங்களுக்கு செம்பஞ்சூட்டி, உறுப்புகளுக்கெல்லாம் பலவகை அணிகளை அணிவித்து, மணமிகுந்த, வர்ணம் கலந்த, பொற்சரிகை திகழ மாலைகள் மார்பின் மீது திகழ, திருக்கையில் செங்கெழுநீர் மலர் இலங்க அலங்காரஞ் செய்தார்கள்.


ஆகாசமன்னன், தன் மகளின் திருமணக் கோலத்தை கண்டு மகிழ, யாவரும் தொழுது வணங்க யானைமீது ஏற்றி, “நகர்வலம் செய்க” எனக் கட்டளையிட்டான். பத்மாவதியின் தோழியர்கள் சோபனகீதங்கள் பாட, குடைகள் வெய்யல் காப்ப, நங்கையர்கள் ஆலவட்டம் வீச, அரச மங்கையர் சாமரம் வீச அந்தணமங்கையர்கள் வாழ்த்துக்கள் கூற, தேவநங்கையர் நடனம் செய்ய, கந்தர்வ மங்கையர் கீதம் இசைக்க, எண்டிசை யானைகளும் செவிடுபடப்பல்லியம் முழங்க, இசைக்கருவிகள் இன்னிசைமுழங்க மகளிர் கூட்டம் தெருவை அலங்கரித்தது. அப்போது திருமாலின் மண ஊர்வலம் அங்கே சந்திக்க, ஆகாசராஜனும் அங்கு வந்தான். அரசர்கள், தவமுனிவர்கள், யோகிய வேதியர் வைசிய, பல்வேறு பணியாளர்கள் உடன் திரண்டு வர, ஸ்ரீநிவாசனை மணந்து கொள்ள வரும் அலர்மேலுமங்கை

Koviloor Digital Library

திருநகர் வலம் வருகின்ற தெருக்கள் எங்கும் மங்கையர் அனைவரும் மங்கள விளக்கங்கள் எடுக்க, மண விழாக்கோலங் கொண்ட மணமகளைக் கண்டு ஆகாசமன்னன் மகிழ்ந்தான். பின்னர் அனைவரும், அரண்மனை வாயிலுக்கு எதிராக வந்து சேர்ந்தனர். அப்போது ஸ்ரீநிவாசப் பெருமானும் பத்மாவதியும் மகிழ்ச்சியோடு மலர்மாலை மாற்றிக் கொண்டு தத்தமது வாகனங்களிலிருந்து இறங்கினார்கள். அப்போது மகளிர் சிலர் அவர்களுக்குக் கண்படாமல் இருக்கத் திருஷ்டி கழித்தனர். ஆகாசமன்னன் அவர்களை அரண்மனைக்கு அழைத்துச் சென்று மணிமண்டபத்தின் மத்தியில் அமைத்த ரத்னசிம்மாசனத்தின் மீது ஸ்ரீநிவாசப் பெருமாளையும் பத்மாவதியையும் அமரச் செய்து, வசிஷ்டர் முதலிய தவமுனிவர்களையும் நான்கு மறை அந்தணர்களையும் உடன் இருக்கச் செய்து தானும் அமர்ந்தான்.

நல்ல முகூர்த்த நேரத்தில் வசிஷ்டர் நாந்தி முதலிய கிரியைகளை நடத்தி, ஸ்ரீநிவாசனுக்கும் அலர்மேலுமங்கைக்கும் மங்கலக் காப்பு நாண் சாத்திப் பொற்கும்பம் வைத்து, அருகே பாலிகை நிறுவி, விஸ்வாமித்ர தர்ப்பத்தை நான்கு புறமும் சேர்ப்பித்து, நடுவே அக்னியை வளர்த்து, ஆகுதி செய்து, ஆகாசராஜனை அருகில் அழைத்து, மருமகனை பூசித்துத் தன் திருமகளின் மலர்க்கையைப் பிடித்து உதவுக என்றார். அவ்வாறே, ஆகாசராஜன் தன் மகளைத் தன் மடிமீது இருத்தி, அந்தணர், மகிழ எண்ணற்ற தானதருமங்களைச் செய்து பிறகு தன் செல்வியின் திருக்கையைப்பற்றி திருமாலின் திருக்கையில் கொடுக்க, ஸ்ரீநிவாசப் பெருமான் முத்தீயை வலம்வந்து, திருமாங்கல்யதானம் செய்து சாஸ்திர முறைப்படி மணந்து, பிரம்மனும் இந்திரன்

Koviloor Digital Library



முதலான தேவர்களும் வணங்க வீற்றிருந்தான். பிறகு ஆகாசராஜன், முனிவர்கள், அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் முதலியவர்களுக்கு வரிசைகளை வழங்கினான். யாவரும் அறுசுவை உண்டி அருந்தினர். இந்தத் திருமணத் திருவிழா இருபது நாட்கள் நிகழ்ந்தது.

ஆகாசராஜன் ஸ்ரீநிவாசப்பெருமானுக்குச்சீர் வரிசைகளைக் காணிக்கையாகச் செலுத்தி அவரது

Koviloor Digital Library

திருமுன்பு அவற்றைச் சமர்ப்பித்தான். சீர்வரிசைகளின் சிறப்பையும் மதிப்பையும் வர்ணிக்க இயலாது. பற்பலவிதமான சீர்வரிசைகளைச் செய்து ஸ்ரீநிவாசனைக் கௌரவித்தான். சீர்வரிசைகளை வழங்கி முடிந்ததும் இந்திரன் அமைத்த திருவறையிலிருந்து அண்ணலும் அலர்மேலுமங்கையும் பொன்னை வாரி அந்தணர்க்கு ஈந்து, மலரணை மேவினர். காலையில் எழுந்து, ஸ்ரீநிவாசன் திருவேங்கட மலைக்கு பத்மாவதியுடன் செல்லவேண்டும் என்று விடைபெற்று, சீர்வரிசைகளையெல்லாம் அனுப்ப ஏற்பாடுசெய்து, சிவிகையில் தன் மகளை ஏற்றுவித்து, தோழியர்களுடன் அவளைச் செல்ல விடுத்தனன். திருமணவைபவம் முடிந்ததும், சிறிது காலத்துக்கு அகஸ்தியர் ஆசிரமத்தில், ஸ்ரீநிவாசன் பத்மாவதியுடன் தங்குவதற்குத் திருவுள்ளங்கொண்டார். திருமகள் பரந்தாமனிடம் விடைபெற்று முன்பு போலத் தவம் புரிய கரவீரபுரம் சென்றாள்.

பின்னர், ஸ்ரீநிவாச பெருமான் பத்மாவதியோடு பிரமனும் சிவனும் ரிஷிகளும் அந்தணர்களும் புடைசூழ்ந்து வர, மணமுரசுகளும் துந்துபிகளும் முழங்க, அரம்பையர் நடனமாட, முத்துக் கலிகைகள் நிழல் செய்ய, ஆசிரமத்தை நெருங்கச் செல்லும்போது ஆகாசராஜனை நோக்கி "நீங்கள் வேண்டுவதைக் கூறுக" என்று கேட்க, அரசன், "உமது மலரடியில் என் உள்ளம் என்றும் தங்கும்படி அருள் செய்ய வேண்டும்!" என்று கூறினான். பெருமானும் அவ்வாறே அருள் செய்து வேங்கடமலை சேர்ந்து ஆனந்த நிலைய விமானத்தில் எழுந்தருளி, வகுளமாலிகையின் மீதும் திருமகள் மீதும் அலர்மேலுமங்கையின் மீதும் பேரருள் காட்டினான்" என்று ஆதிவராக மூர்த்தி, பூமிதேவிக்குக் கூறியதாக, சூதமுனிவர் சொன்னார்.

Koviloor Digital Library

46. லக்ஷ்மிதேவி கணவனைப் பிரிதல்

ஸ்ரீநிவாசன் ஆகாசராஜனுடைய நகரத்திலிருந்து புறப்பட்டு, தான்யங்கள், நெய், எண்ணெய், சர்க்கரை வெல்லம், புளி, பரிமளதிரவியங்கள் முதலியவைகளைத் தாதிமார்கள் எடுத்துக் கொண்டு பின் தொடர்ந்தனர்.

அப்போது ஸ்ரீநிவாசன் பிரம்மனை நோக்கி, "விவாகதீட்சை தீரும் வரையில் பர்வதாரோகனம் செய்யக் கூடாது என்றும் அந்த ஆறுமாதங்கள் வரை, அகஸ்தியர் ஆஸ்ரமத்தில் இருப்பதாகச் சொல்லி, அகஸ்தியர் ஆஸ்ரமத்தை அடைந்து தேவர்களுக்கு வஸ்திர ஆபரணங்களை அளித்து அவரவர் இருப்பிடத்துக்கு அனுப்பிவைத்தார்.

அப்போது ஸ்ரீநிவாசன் லக்ஷ்மிதேவியைப் பார்த்து, "உனக்குக் கொடுத்த வரத்தினால் எனக்கு ஒரு நன்மை உண்டாயிற்று. சில காலம், பத்மாவதியுடன் சுகதுக்கங்களை அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது" என்று சொல்லிய ஸ்ரீநிவாசனைப் பார்த்து லக்ஷ்மிதேவி, "இந்தப் பத்மாவதி எனக்காக இராவணனிடம் அநேக கஷ்டங்களைத் தனது முந்திய பிறவியில் அனுபவித்தாள் அல்லவா! எனக்காக நீங்கள் அவளை விவாகஞ் செய்து கொண்டு என் கோரிக்கையை நிறைவேற்றியதற்கு எனக்கு மிகவும் மகிழ்ச்சி" என்று, கணவனை வணங்கி அவருடைய அனுமதியைப் பெற்றுக் கொல்லாபுரம் போய்ச் சேர்ந்தாள்.

Koviloor Digital Library

47. ஸ்ரீநிவாசனும் பத்மாவதியும்

அகஸ்தியராஸ்ரமத்தில் வசித்தல்

ஸ்ரீநிவாசனும் பத்மாவதியும் அகஸ்தியரது ஆஸ்ரமத்தில் சுகமாகக் காலங்கழித்து வந்தார்கள். இப்படியிருக்க நாராயண புரத்திலிருந்து சேவகன் ஒருவன், அகஸ்தியர் ஆசிரமத்துக்கு வந்து ஸ்ரீநிவாசனை நமஸ்கரித்து, "உம்முடைய மாமனாரான ஆகாசராஜன் மரணாவஸ்தையில் இருக்கிறார்" என்றான்.

ஸ்ரீநிவாசபெருமான் பத்மாவதியை அழைத்துக் கொண்டு நாராயணபுரம் சேர்ந்து ஆகாசராஜனுடன் பேசத்தொடங்கினார். இராஜன், தன் சரீரத்தின் மீது உணர்ச்சியற்றிருப்பதைக் கண்டு அனைவரும் துக்கித்தனர். ஆகாசராஜன் கண்களைத் திறந்து ஸ்ரீநிவாசனைப் பார்த்து, "என் மகனும், எனது சகோதரனும் உமக்கு மித்திரர்கள். அவர்களைக் காப்பாற்றுவது உமது கடமை" என்று சொல்லி, அவர்களை ஸ்ரீநிவாசப் பெருமானிடம் ஒப்படைத்து, தன் மனைவிக்கு உடன்கட்டை ஏற அனுமதி கொடுத்து, மரணமடைந்தான். பிறகு ராணி தேவி புருஷனுடன் உடன்கட்டை ஏற, சுவர்க்கலோகத்தில் இருந்து, புஷ்பகவிமானம் வர, அவர்கள் அந்த விமானத்தில் ஏறிச் சுவர்க்கலோகம் போய்ச் சேர்ந்தார்கள். அவர்களுக்குரிய உத்திரகிரியைகளை விதிப்படி நடத்தினர்.

ஆகாசராஜன் இறந்தபிறகு, அவனுடைய தம்பியான தொண்டைமான் பரிபாலிக்க வேண்டுமா அல்லது அரசனுடைய மகனான வசுதானன் பரிபாலிப்பதா என்று தொண்டைமான் இருவருக்குள் கலகம் ஏற்பட்டுக்

Koviloor Digital Library

கடைசியில் யுத்தஞ் செய்ய ஆயத்தமாய் ஸ்ரீநிவாசனிடம் இருவரும் சென்று, தமக்குச் சகாயம் செய்ய வேண்டும் என்று வேண்டினார்கள். ஸ்ரீநிவாசன் ஒன்றுஞ் சொல்லத் தோன்றாதவராய், தொண்டைமானுக்குத் தனது சங்கு சக்கரங்களைச் சகாயமாகக் கொடுத்து, வசுதானனுக்குத் தான் மட்டுமே உதவிசெய்வதாகக் கூறினார். அவர்கள் இருவரும் யுத்தஞ் செய்த போது தொண்டைமான் விட்ட அஸ்திரத்தினால் ஸ்ரீநிவாசன் பூமியின் மேல் விழுந்து மூர்ச்சையடைந்தார். இந்த விஷயம் தெரிந்த பத்மாவதி அகஸ்தியரை அழைத்துக் கொண்டு போர்க்களத்தில் மூர்ச்சையடைந்திருந்த ஸ்ரீநிவாசனைப் பார்த்து துக்கித்தாள்.

ஸ்ரீநிவாசன் மூர்ச்சைதெளிந்து எழுந்து பத்மாவதியைப் பார்த்து, ஸ்திரீகள் யுத்தகளத்துக்கு வரக்கூடாது. "நீ யுத்தகளத்துக்கு என்னைப் பார்க்க வந்தது தகாது" என்று கோபித்தார். இதற்குள் அகஸ்தியர் ஸ்ரீநிவாசனைப்பார்த்து, "உமக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. தொண்டைமானையும் வசுதானனையும் சமாதானம் செய்ய நிச்சயித்து, நான்தான் பத்மாவதியை இங்கு அழைத்து வந்தேன். சமாதானம் செய்விப்பது நம்முடைய கடமை. அவர்கள் இருவரையும் அழைப்பித்து, அவர்களுடைய எண்ணத்தை அறிய பத்மாவதி இவ்விடம் வந்திருக்கிறாள்" என்றார்.

அதைக் கேட்ட ஸ்ரீநிவாசன் தொண்டைமானையும் வசுதானனையும் அழைத்து, அவர்களுடைய கருத்தைக் கேட்க, அவர்கள் ஸ்ரீநிவாசனைப்பார்த்து, "நாங்கள் இருவரும் உங்கள் இஷ்டப்படியே நடப்போம். எங்கள் கருத்தை நாங்கள் தெரிவிப்பது; உசிதமில்லை" ஆகாசராஜன் இறந்த பிறகு, எங்களுக்கு நீங்கள்தான்

Koviloor Digital Library

தந்தையைப் போன்றவர்கள். உங்கள் இஷ்டப்படியே நாங்கள் நடக்கச் சித்தமாக இருக்கிறோம்'' என்று சொல்லி, இருவரும் வணங்கி நின்றார்கள். அப்போது ஸ்ரீநிவாசன் அவர்களை ஆலிங்கனம் செய்து கொண்டு, "ஆகாசராஜனுக்குரிய அத்தனையும் நீங்கள் இருவரும் சமமாக அனுபவிப்பது தர்மம்'' என்று சொல்ல, அவர்கள் அதற்குச் சம்மதித்தனர். ஸ்ரீநிவாசன் இஷ்டப்படி, தொண்டைமானுக்குத் தொண்டைராஜ்யத்தையும் வசுதானனுக்குச் சோழராஜ்யத்தையும் கொடுத்து அவர்களை ஆசீர்வதித்து அகஸ்தியர் ஆஸ்ரமம் போய்ச் சேர்ந்தார்.

48. தொண்டனின் பெருமையும் தொண்டைமானின் பக்தியும்

தொண்டைமான் சக்கரவர்த்தி, திருவேங்கடத்தை அடைந்து இறைவனைப் பணிந்து வரும் நாளில் ஒரு சமயம் சுகபிரம்ம முனிவரைக் கண்டு, பத்மதீர்த்தத்தின் சிறப்பை அருள வேண்டும் என்று கேட்க, அவர் பின்வருமாறு கூறினார்.

"முன்பு, இந்தத்தீர்த்தத்தில் பொன்மயமான தாமரைமலர் ஒன்றில் இலக்ஷ்மிதேவி தோன்றினாள். அப்போது தேவேந்திரன் இலக்ஷ்மியை நோக்கி, "பாற்கடலில் தோன்றிய தேவியே! உலகினை ஈன்று, ரட்சிக்கும் மஹாலக்ஷ்மி தேவியே, அமுதத்தின் சாரமே! வில்வ வனத்தில் உறையும் அம்மையே சேதனர் செய்யும் தவத்துக்கு ஏற்றபடி பிரமன், சிவன், சந்திரன், சூரியன் என்று புகழ் பெறச் செய்து, அவரவர் சிந்தையில் விரும்பிய வரங்களைத் தருகின்ற அன்னையே!'' என்று

Koviloor Digital Library

பலவாறு போற்றித்துதிக்க, லக்ஷ்மிதேவி அவனுக்கு வரம் கொடுத்து "நீ என்னை அர்ச்சித்ததைப் போல வில்வத்தழை கொண்டு, என்னை அர்ச்சனை செய்பவர்கள் தாம் விரும்பியவற்றை யெல்லாம் பெறுவார்கள். பிறகு முக்தியையும் அடைவார்கள். இந்தத்தீர்த்தத்தில் குளிப்பவர்கள் யாராயினும் தூய்மையடைவார்கள்" என்று கூறினாள்.

அதைக் கேட்ட அளவில் தொண்டைமான், வணங்கி அந்தத் தீர்த்தத்தில் நீராடி, ஸ்ரீநிவாசனின் மலரடிகளை வணங்கி வாழ்த்தினான். இறைவன், அந்த அரசனைநோக்கித் "திருமகள் தங்குமிடமாக இது விளங்கும். இங்கு இருக்கும் சண்பகமரங்களும் மற்றும் பல அபூர்வமரங்களும், புல் பூண்டும் யாவுமே எமது சொரூபம்; ஆகையால் அவற்றை வெட்டுவதும் பிளப்பதும் கூடாது. உன்னுடைய வமிச பரம்பரையில் ஒருவன், நாராயணன் என்ற பெயர் பெற்று, புகழும் அடைந்து எனக்குப் பொன்னாலான விமானம் அமைப்பான்" என்று அருளினார்.

தொண்டைமான், ஸ்ரீநிவாசப் பெருமானின் திருவடிகளைத் தினந்தோறும் வணங்கி வழிபட்டு, நித்தியபூசனை செய்வித்து, யாவரும் வாழ்த்தும்படித் தினந்தோறும் பொன்மலர்களைக் கொண்டு தவறாமல் அர்ச்சனை செய்யும்படிக் கட்டளையிட்டான். வேதியர்கள் அவ்வாறே அரசனுக்கு மந்திரங்களைச் சொல்ல, அரசனும் அவர்களுமாக மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்யும் அதே சமயத்தில், திருமாலின் திருவடிகளின் மீது மண்ணாலான களிமண் மலர்கள் கிடப்பதைக் கண்டு, அவர்கள் அரசனுக்குச் சொல்ல, அரசனும் அவற்றைத் தன் கண்ணாரக் கண்டு,

Koviloor Digital Library

ஆச்சரியமும் திகைப்பும் அடைந்தான். சிலரைக் காவலில் வைத்து அர்ச்சனை செய்ய மீண்டும் அவ்வாறே பெருமாளின் திருவடிகளில் மண்மலர்கள் இருப்பதைக் கண்டு வியப்படைந்து, தினந்தோறும் பகவானை வணங்கிவரும் தன் மீது பகவானே கோபம் கொண்டிருப்பதாக நினைத்து, அன்று முதல் அன்னபானங்களுடன் தான் செய்து வந்த பூஜையையும் விட்டு, ஸ்ரீநிவாசனின் பாதாரவிந்தங்களைத் தனது இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு விடாமல் சதா தியானித்து வந்தான்.

இப்படியாகச் சில நாட்கள் நடந்தபிறகு, ஒருநாள் ஸ்ரீனிவாசன் அசிரிரீயாக, "தொண்டைமானே! நீ செய்த உபகாரத்திற்குப் பிரதியுபகாரஞ் செய்தேன். நீ ஏன் இப்படிமன்றாடுகிறாய்? உன் ராஜ்யத்துக்குப் போய்ச் சுகமாக வாழ்வாயாக!" என்று சொல்ல, தொண்டைமான் "ஸ்வாமீ! தங்களுடைய சொற்படியே எனக்கு ஒன்றும் குறைவில்லை. நான் அனுபவிக்கும் ராஜ்யபாரம், மனைவி, தனகனக வஸ்துவாகனங்கள் யாவுமே சாஸ்வதமற்றவை என்று உமது தரிசனத்தால் நான் தெரிந்து கொண்டேன். இப்படிப்பட்ட போக பாக்கியங்களில் எனக்கு ஆசையில்லை, என்மனம் உம்மிடமே லயித்து விட்டது. என்னை ஆட்கொண்டு அருள் செய்ய வேண்டும். நான் செய்யும் பூஜைகளை ஏற்றுக் கொள்ளாமல், நீங்கள் மண்புஷ்பங்களை ஏற்றுக்கொள்கிறீர்கள்.)நான் உங்களையே நம்பிய பக்தன். என்னைவிடச் சிறந்த பக்தர்கள் யார் இருக்கிறார்கள்! நான் பல ஜன்மங்களில் உங்களை ஆராதித்து, உங்களுக்கென்று ஆலயம் கட்டி, உமது அனுக்கிரகத்தைப் பெற்றவன் என்னை விட உமக்கு வேறு பக்தர்களில்லை யென்றல்லவா நான் நினைத்தேன்" என்றான்.

Koviloor Digital Library

அதற்கு பகவான் ஸ்ரீநிவாசன், "ஆம் உன்னைவிடப் பக்தர்கள் இல்லை. நம்பி வந்த அகதிகளை அனாதைகளாக்கிக் கடைசியில் அவர்களுக்கு எமனைப் போன்ற பக்தர்களில் முதலாமவன் நீ. அநேககாலமாக நான் எனது பக்தர்களுடன் ஸரசசல்லாபங்கள் செய்து, அவர்களைத் திருப்தி செய்துவந்தேன். அத்தகைய பக்தர்களுக்கு என் சொற்களையே கேட்காமல் செய்த பக்தர்களில் முதலானவன் நீ!" என்று சொல்ல, தொண்டைமான் அதைக் கேட்டு துக்கத்துடன் அழுது கொண்டு இருந்தான். அப்போது ஸ்ரீநிவாசன், "நீ இப்படி அழுது துக்கிப்பதால் பயன் ஒன்றுமில்லை. இங்கிருந்து ஒரு யோசனை தூரத்தில் குருவை என்ற கிராமத்தில் வசிக்கும் குயவன் ஒருவன், என்னைத் தினந்தோறும் ஏகாந்தமாக ஞானவைராக்கியத்துடன் மானசீகமாக களிமண் மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்துவருகிறான். அந்தப் பூஜையை நான் பரிவோடு, ஏற்றுக் கொள்கிறேன்" என்று அருளினான்.

அரசன், அத்தகைய பக்தனைக் காணவேண்டும் என்ற ஆவலுடன் பகவானிடம் விடைபெற்றுக் கொண்டு, குருவை என்ற கிராமத்தையடைந்து பீமன் என்ற அந்தக் குயவனின் வீட்டைத் தேடிச் சென்றான். அந்தக் குயவனைக் கண்டவுடன் குயவன் அரசனை வணங்கி நின்றான்.

அப்போது அரசன் அவனை நோக்கி, "நீ வேங்கடநாதனை எப்படி ஆராதனை செய்து வருகிறாய். அதனை நீ எனக்குச் சொல்ல வேண்டும்?" என்று கேட்டான். அதற்கு அந்தக்குயவன், "வேந்தே! நான் மண்பாண்டங்களைச் செய்யும் ஒரு குயவன். வேங்கடநாதனை வேதமுறைப்படி வழிபடுவதற்கு நான்

Koviloor Digital Library

அறியேன். நான் ஸ்ரீநிவாசனை அர்ச்சனை செய்து பூஜிப்பதாக யார் உமக்குச் சொன்னது?" என்று கேட்டான். அதற்கு அந்த அரசன், "ஸ்ரீநிவாசனே உன்னுடைய பூஜையை மிகவும் சிறந்ததாக உகந்து அருளியதாகச் சொல்லி, நீ இந்நகரில் வாழ்வதாக என்னிடம் கூறியதால் நான் உன்னைத் தரிசிக்க வந்தேன்!" என்றான்.

அதற்கு அந்தக் குயவன், "அரசே! நாங்கள் ஏழைகள். ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவுக்கு, விருந்தளித்த விதுரனைப்போல விருந்தளிக்க இயலாதவன்; இராமாயணத்தில், இராமபிரானுக்கு பழங்களைச் சேகரித்து வைத்திருந்து அந்தப் பழங்களைப் பகவானுக்கு சமர்ப்பணம் செய்த சபரியைப் போலப் பழங்களைக் கூட அளிக்க முடியாதவன். குசேலனைப்போல அவலைக் கொடுப்பதற்குக் கூட வசதியற்றவன். அதுவும் தவிர பகவானை வழிபடுவதற்குரிய மந்திரங்களும் பூஜைமுறைகளும் எனக்குத் தெரியாது. வேள்விகள் செய்யவும் அறியாதவன், ஆகையால், நான் ஸ்ரீநிவாசன் திருவடியை வணங்கிப் பூஜித்து வருவதை உலகில் ஒருவருக்கும் அறிவிக்காமல் இருக்க வேண்டும் என்று தினமும் பகவானை பிரார்த்தனை செய்து வருகிறேன். அப்படியிருக்க இறைவன் இதை உம்மிடம் தெரிவித்ததற்கு வேறு ஒருகாரணம் உள்ளது. நான் பகவானைப்பணிந்து வரும்போது, பகவான் என்னிடத்தில் "நீ பூஜிப்பதை உலகத்தில் நான் யாரிடத்திலாவது என்றாவது ஒரு நாள் சொல்லி அனுப்புகிறேனோ அந்த நாளில் நீ அழிவில்லாத நித்தியப் பேற்றினை அடைவாய்!" என்று அருளியுள்ளார். அதன்படியே இப்போது விமானம் வந்துள்ளது" என்று சொல்லிவிட்டு, தன் மனைவியோடு, அந்த விமானத்திலேறி, வைகுந்தபதவியை அடைந்தான். அதைக்கண்ட அரசன் ஆச்சரியமடைந்து, இறைவனைப்

Koviloor Digital Library

பூஜிக்காமல் இருப்பவர்களுக்கு முக்திப்பேறு கிடைக்காது என்று எண்ணித் தன் நகரத்தை அடைந்து, தன் புதல்வனுக்கு முடிசூட்டிவிட்டு, திருமலைத் திருப்பதிக்கு வந்து கடவுளை நினைத்துத் தவம் புரிந்து வந்தான்.

அப்போது இறைவன், கருடன் மேல் எழுந்தருளிக் காட்சி கொடுத்தான். அரசன் பகவானிடம் தனக்கு முக்தியளிக்க வேண்டும் என்று வேண்டினான். பகவானின் அருளால், தொண்டைமான் மோட்சத்தையடைந்தான்.

49. லக்ஷ்மியைப் பிரிந்திருப்பதை பத்மாவதியிடம் கூறியது

இது இப்படியிருக்க ஸ்ரீநிவாசன் மனதில் லக்ஷ்மியை விட்டுப் பிரிந்ததைக் குறித்து அடிக்கடி வருந்தலானார். ஆயினும் ஸ்ரீநிவாசன் அந்த மனக்கவலையைத் தம் மனத்தினுள்ளேயே மறைத்து வைத்திருந்தார். இப்படியே சில காலம் கடந்து சென்றது. குபேரனிடத்தில் அவர் வாங்கியிருந்த கடனுக்கு வட்டியேறிக் கொண்டிருந்தது. அந்தக் கடனைச் செலுத்த வேண்டிய காரணத்தால், தன்னிடம் லக்ஷ்மியில்லாததால் தனக்குத் திரவியம் எப்படிக் கிடைக்கும் என்று யோசித்து, எப்படியாகிலும் லக்ஷ்மியைப் பிரார்த்தித்து, அவளைத் தனது வக்ஷஸ்தலத்தில் வைத்துக் கொள்ளவேண்டும் என்றும் குபேரனின் கடனை எப்படியாவது தீர்க்கவேண்டும் என்றும் யோசித்துக் கொண்டிருந்தார். இப்படியிருக்கும் ஸ்ரீநிவாசனின் மனதை அறிந்து கொண்ட பத்மாவதி, ஒருநாள் அவருடன் ஏகாந்தமாக இருக்கும்போது, ஸ்ரீநிவாசனின் பாதங்களில் விழுந்து வணங்கி, அநேக விதங்களில் அவரைப் பிரார்த்தித்து, அவர் பாதங்களை

Koviloor Digital Library

விடாமல் பிடித்துக் கொண்டு, அவர்மேல் தனக்குள்ள அன்பைப் பற்றிப் பெருமையாகப் பேசிக் கொண்டிருந்தாள். "நான் உங்களையே தியானித்துக் கொண்டு, தங்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து கொண்டு, ஆனந்தமடைந்து வருகிறேன். நீங்கள் ஏன் இப்படி எப்போதும் மௌனமாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டு, அவரது பாதங்களை விடாமல் இருந்தாள்.

அப்போது ஸ்ரீநிவாசன் பத்மாவதியைத் தன் இருகைகளாலும் எழுப்பி, ஆலிங்கனம் செய்து கொண்டு, பத்மாவதியைப் பார்த்து, "பிரளய காலத்தில் நான் தனிமையாக ஆகாரமில்லாமல் நிற்குண பிரமமாக இருந்தேன். அப்போது லக்ஷ்மி என்னைவிடாமல் மாயாவிதானமாக, சித்ருபத்திலுள்ள லக்ஷ்மி சத்ருபமுற்று என்னை அடைந்தாள். நான் அப்போது ஆனந்தமடைந்து மஹாதத்வாதி தத்துவங்களைப் பெற்று அவற்றின் அனுக்ரகத்தால் சிருஷ்டிவரிசையாய் சர்வபிரபஞ்சமாக்கிக் கொண்டிருக்கும் போது, நான் அந்தப் பிரபஞ்சத்திற்குக் கர்த்தாவாகி எனக்கு இஷ்டமாகும் போது பிரம்மாதி தேவர்களைச் சிருஷ்டிப்பேன்.

ஒருபேறு முந்திய பிரபஞ்சங்கள் என்னுள்ளேயே அடங்கியிருக்கும். அந்தக் காரியங்கள் எல்லாமே, எனக்கு அந்த மஹாலக்ஷ்மியினால் உண்டாகும். அத்தகைய, சிருஷ்டி, ஸ்திதி சமயத்தில் என்னை ஒரு சுந்தராங்கனாக்கி, தானும் ஒரு உலக சுந்தரியாகி, குருதரமான கல்யாணகுணங்களை எனக்கு உண்டாக்கும் சந்திரனில் வசிக்கும் சகோரங்களைப் போல, சர்வகாலங்களிலும் என் வக்ஷஸ்தலத்தில் வசித்து வரும் காலத்தில், ஒருநாள் பிருகுமுனிவர் தன் பாதத்தால், லக்ஷ்மி வாசஞ்செய்யும் எனது வக்ஷஸ்தலத்தில்

Koviloor Digital Library

உதைத்தார். அப்போது நான் அவரது காலைப் பிடித்து அழுத்தி, அவரைச் சமாதானப்படுத்தினேன். அதனால் லக்ஷ்மிக்கு என்மீது ஒரே கோபம். கேவலம் ஒரு மனிதன்; அதுவும் ஒரு பற்றற்ற முனிவன், கொஞ்சங்கூட மரியாதை தெரியாமல், உங்கள் மார்பின்மீது எட்டி யுதைக்க, நீங்கள் அவன் காலைப் பிடித்து சமாதானம் செய்கிறீர்களே. உங்கள் மார்பில் வசிக்கும் என்னையே எட்டியுதைத்த பிறகும் நீங்கள் மௌனமாக அவனுக்கு அருள் செய்திருக்கிறீர்களே! இத்தகைய பெருந்தன்மையில்லாத ஒரு முனிவனுக்காக நீங்கள் உங்கள் பெருமையைக் காட்டிக் கொண்டீர்களே தவிர, என்னையும் உங்களையும் அவன் அவமானப் படுத்தினானே என்று நினைக்கவில்லையே. எனவே நான் உங்களுடன் இருக்க மாட்டேன்" என்று கோபித்துக் கொண்டு, என்னைத் தூற்றி விட்டுக் கரவீர புரம் போய்ச் சேர்ந்தாள். லக்ஷ்மி என்னைவிட்டுச் சென்ற நாள் முதல், என்னுள்ள ஸர்வஸ்வமும் அந்த லக்ஷ்மியின் பின் சென்றன.

பிறகு நான் வைகுண்டத்தைவிட்டு, இந்தபர்வதத்தில் துந்திரிணி விருட்சத்தின் கீழே ஒரு புற்றின் உள்ளே வசித்து வந்தேன். எனக்கு ஸர்வக்ஞத்வம் இல்லாததால் நிஷ்காரணமாக நான் கோடாலியால் அடிபட்டேன். எனக்கு மனைவியில்லாததால் உன்னைப் பார்த்து என்னை விவாகஞ் செய்து கொள்ளும்படிக் கூறியதால், நீயும் உன் தோழிகளால் கற்களினால் அடிக்க வைத்தனை. லக்ஷ்மி இல்லாததால், குபேரனிடம் கடன் வாங்கி உன்னைக் கல்யாணஞ் செய்து கொண்டேன். உன் தந்தை, சகோதரர்கள் உன் விவாகத்தில் எனக்குக் கொடுத்த ஸ்ரீதனத்தால் குபேரனின் கடன்தீராது. லக்ஷ்மி என்னைப் பிரிந்ததால் மனைவி துரோகியென்றும் குபேரனின் ருணத்தினால் ருணபாதை அடைந்தவனாயும் உலகத்தார்

Koviloor Digital Library

என்னை நினைப்பார்களே என்ற ஆலோசனை எனக்குத் தோன்றியதால், இவ்வாறு மௌனமாக இருக்கிறேன். இதற்குத் தகுந்த யோசனையை மனைவியாகிய நீயே சொல்லவேண்டும்" என்று கூறினார். அந்த வார்த்தைகளைக் கேட்ட பத்மாவதி திருமாலை நமஸ்கரித்து, "ஸ்வாமி! இந்தப் பிரணவத்திற்கு யோசனை சொல்ல நான் தகுந்தவளா? நீங்கள் சர்வக்ஞர் உம்வார்த்தைக்குப் பதில் சொல்பவர் பதினான்கு உலகங்களிலும் எவருமில்லை. ஆயினும் என் பிரார்த்தனையை ஆதரிக்கவேண்டும். சிருஷ்டிக்காலத்தில் உங்களை அடைந்து உங்களைப் பெருமைப்படுத்திய லக்ஷ்மிதேவியை நீங்கள் எப்படியாகிலும் பிராத்தனை செய்து, இங்கு அழைத்து வந்து விடவேண்டும். நாங்கள் இருவரும் இங்கு வசித்து வருவோம். உங்கள் இருவருக்கும் வேண்டிய பணிவிடைகளை நான், நாள் தவறாமல் செய்து, உங்களை ஆனந்திக்கச் செய்வேன். நீங்கள் இத்தருணமே சென்று லக்ஷ்மியை இவ்விடத்திற்கு அழைத்து வந்துவிடுங்கள். இது என் பிரார்த்தனை" என்று சொன்னாள்.

இப்படிச் சொன்ன பத்மாவதியினைப் பார்த்து "நான் உன்னை விவாகம் செய்து கொண்டது முதல் நாமிருவரும் தனிமையாக வசித்துக் காலம் கழித்து வந்தோம். நீ என்மேல் மிக்க பிரேமையுடன் பிரகாசித்து வந்தாய். நான் இப்போது அந்த லக்ஷ்மியை ஸர்வகாலமும் வசிக்கச் செய்தால் உன் மனம் எப்படி ஒப்புக் கொள்ளும். ஆகையால் அதைச்செய்யவும் எனக்கு இஷ்டமில்லை" என்றார் பெருமாள். அப்போது பத்மாவதி ஸ்ரீநிவாசப்பெருமானைப் பார்த்து, "நாதா! அவளால்தான் நான் உங்களைத் திருமணம் செய்து கொண்டேன். அவளருள் இல்லாமல் நான் எப்படி உங்களைத்

Koviloor Digital Library

திருமணம் செய்து கொள்ளமுடியும்? அவள் எனக்குச் செய்த உபகாரத்துக்கு நான் எத்தனை ஜென்மங்கள் எடுத்து, அவளுக்குச் சேவை செய்தாலும் அவள் செய்த உபகாரத்துக்கு ஈடாகாது. நான் அவளுடைய பணிப்பெண்ணாக இருப்பேன். நீங்கள் என்மீது சம்பூர்ண கடாஷம் வைத்து அவள் வசித்துவரும் இடத்தை எனக்குத் தெரிவித்தால், நான் அவளை வணங்கி அவளுடைய பாதங்களில் விழுந்து அவளை வேண்டிக் கொண்டு இந்த இடத்துக்கு அழைத்து வருவேன்" என்று சொன்னாள்.

அந்த வார்த்தைகளைக் கேட்டு, ஸ்ரீநிவாசன் பத்மாவதியைப் பார்த்து, "நான் உன்னுடைய தூய்மையான மனதை அறிவேன், விசனப்படாதே! நீ இந்த வகுளாதேவியுடன் இங்கேயே வசித்து வரவும். நான் கரவீரபுரம் சென்று கட்டாயமாக அந்த லக்ஷ்மியை இந்த இடத்திற்கு அழைத்து வந்துவிடுகிறேன்" என்று பத்மாவதியைச் சமாதானப்படுத்தி கரவீரபுரம் போவதற்கு நிச்சயித்துக் கொண்டார்.

இவ்வாறு ஸ்ரீநிவாசன் கரவீரபுரம் வரப் போவதை அறிந்த லக்ஷ்மிதேவி, எப்படியாகிலும் ஸ்ரீநிவாசன் தன்னை சேஷாசலத்திற்கு அழைத்துச் சென்று விடுவார் என்று எண்ணினாள். இப்போது அவர் கரவீரபுரத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார். என்னை அவர் சேஷாசலத்துக்கு வரும்படி அழைத்தால், நான் அவருடைய விருப்பத்தை மறுக்கமுடியாது. சம்மதிக்கவும் முடியாது. நான் அவ்விடம் சென்றால் பத்மாவதியின் மனம் துன்பமடையும். நானே சம்மதித்து அந்தப் பத்மாவதியை என் நாதனுக்குத் திருமணம் செய்து வைத்துவிட்ட பிறகு, நான் தற்சமயம் அவ்விடம் செல்வது

Koviloor Digital Library

தர்மமில்லை' என்று நினைத்து, கரவீரபுரத்திலிருந்து வழிதவறாமல் பாதாளலோகத்திற்குச் சென்று ஹரிவம்சத்தவரும் விசேஷயோக மகிமையினால் புகழ்பெற்றவருமான கபில முனிவரிடம் சேர்ந்தாள். கபில முனிவர், லக்ஷ்மியை வரவேற்று குசலம் விசாரித்து, அவளுக்குத் தகுந்த ஆசனம் தந்து அவளை வீற்றிருக்கச் செய்து, அவளை ஆதரித்தார். லக்ஷ்மிதேவி, தன் கணவனையே தனது தெய்வமாக தியானித்துக்கொண்டு தவம் செய்து வந்தாள்.

50. லக்ஷ்மி தவஞ் செய்ய, ஸ்ரீநிவாசன் அவளைத் தேடிய கதை

ஸ்ரீநிவாசன் பத்மாவதியை வகுளமாலிகையிடம் ஒப்படைத்துவிட்டு, வராஹமூர்த்திக்கு இந்தச் செய்தியைத் தெரியப்படுத்திவிட்டு, மறுநாள் காலையில் நீராடி தூய வஸ்திரம் அணிந்து, கங்கண ஆபரண அலங்கிருதராய்க் கருடன் மேலேறி, "லக்ஷ்மியை இங்கு அழைத்து வருகிறேன்" என்று பத்மாவதியிடம் சந்தோஷமாகச் சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுக் கரவீரபுரம் போய்ச் சேர்ந்தார். ஸ்ரீநிவாசன் லக்ஷ்மி வசித்து வந்த ஆலயத்திற்குள் சென்று, அங்கு பார்க்க, அங்கு லக்ஷ்மியைக் காணவில்லை. லக்ஷ்மியில்லாததால், மனவியாகூலமடைந்து அவர் பின்வருமாறு யோசிக்கலானார்.

"நான் அந்த பத்மாவதியை விவாகம் செய்து கொண்டு, சில காலம் அந்த லக்ஷ்மியையே மறந்து விட்டேன் என்று என்மேல் கோபங்கொண்டு, இங்கிருந்து வேறிடத்திற்கு அவள் போயிருக்கிறாள்" என்று யோசித்து,

Koviloor Digital Library

வேறு ஒன்றும் தோன்றாதவராய்,பலவிதமாகத் துக்கித்து, கரவீரபுரக் காடுகளில் சுற்றியலைந்து, லக்ஷ்மியைக் காணாமல் அந்தப் பர்வதத்திற்குப் போய்ச் சேர்ந்து அங்கு வசித்துவரும் முனிவர்களைப் பார்த்து, "முனிவர்களே, கருடகந்தர்வர்களே, என் ரமாதேவி என்னை ஏமாற்றிவிட்டு, இந்த வனத்தில் எங்கேயோ தவஞ் செய்து கொண்டிருக்கிறாள். நான் இந்த வனத்தைச்சுற்றி அலைந்து திரிந்து களைப்படைந்து விட்டேன். அந்த ரமாதேவி தவஞ் செய்யுமிடம் தங்களுக்குத் தெரிந்திருந்தால் அந்தச் செய்தியை எனக்குத் தெரிவியுங்கள்" என்று சொல்லி பரிதவித்துக் கொண்டிருந்தார். அவரைப்பார்த்து, அந்தப் பர்வதத்தில் வசித்து வந்த பக்தர்களும் முனிவர்களும் கந்தர்வர்களும், நமஸ்கரித்து "ஸ்வாமி! ரமாதேவியை நாங்கள் பார்க்கவில்லை. அந்தத்தேவி, இந்தக் காடுகள் எங்கேயும் இல்லை" என்று கூறினர். அவர்களுடைய சொற்களைக் கேட்டு ஸ்ரீநிவாசன் சிந்தனையுற்று, கரவீரபுரம் சேர்ந்து, அகஸ்தியர் முன்பு பூஜித்து வந்த லக்ஷ்மியின் விக்கிரகத்துக்கு அபிஷேகம் செய்து, அந்தவிக்கிரகத்தின் எதிரில் அமர்ந்து பத்து வருஷங்கள் தியானத்தில் இருந்தார்.

51. வானொலி, ஸ்ரீநிவாசனைத் தவஞ் செய்யக் கூறிய கதை

இவ்வாறு, லக்ஷ்மியைப் பற்றிய விசனத்துடன் தியானித்து வந்த ஸ்ரீநிவாசனைப் பார்த்து ஆகாயவாணி தனது அற்புதவாக்கினால், "தேவா! இங்கு தவஞ் செய்து வந்தால், லக்ஷ்மிதேவி உமக்குப் பிரத்யக்ஷமாக மாட்டாள். இங்கிருந்து நாற்பது யோசனை தூரத்தில் ஸ்வர்ணமுகி

Koviloor Digital Library

நதியிருக்கிறது. அந்த நதியின் வடதிசையில் பத்மஸரோவம் உள்ளது. அங்கு தேவலோகத்திலுள்ள ஸஹஸ்ரதள பத்மகமலத்தை எடுத்து வந்து, அந்த பத்ம சரோவத்தில் பிரதிஷ்டை செய்து, நீ தவ வேடம்பூண்டு அந்தத் தாமரையின் மீது ஒரே திருஷ்டி வைத்து, லக்ஷ்மியைக் குறித்துத் தவம் செய்வீர்களானால் அந்த ரமாதேவி, அந்த பத்மத்தில் பிறந்து உங்கள் வக்ஷஸ்தலத்தை வந்து அடைவாள். இப்போது செய்யும் தியானத்தினால் அந்த லக்ஷ்மி உமக்குப் பிரசன்னமாக மாட்டாள்'' என்று கூறியது.

அந்த வார்த்தைகளைக் கேட்ட ஸ்ரீநிவாசன், கண்களைத் திறந்து நான்கு திசைகளிலும் பார்க்க யாருமில்லாததால் அந்த வார்த்தைகள் ஆகாய வாணியினுடையது என்று தெரிந்துகொண்டு, அங்கிருந்து கருடரூபராய்ப் புறப்பட்டு சேஷாசலம் வந்தடைந்து, சாமானியமான ராஜகுமாரனைப்போல வேஷம் தரித்து இருக்க, புஷ்கரணியில் ஸ்நானம் செய்யும் வைகானஸ வம்சத்தார்கள், ராஜகுமாரன் வேஷத்திலிருக்கும், ஸ்ரீநிவாசனுக்கு சங்கல்பம் செய்வித்து, போஜனவசதிகள் செய்து அவரை ஆசீர்வதித்து அனுப்பினார்கள். பிறகு ஸ்ரீநிவாசன் சேஷாசலத்திலிருந்து புறப்பட்டு, பத்மஸரோவம் வந்து அடைந்து வாயுதேவனை நினைத்தார். அப்போது வாயுதேவன் அவர் முன்பு தோன்றி மிகவும் வணக்கத்துடன் அவரை நமஸ்கரித்து, "தேவா நீங்கள் உங்கள் ஆக்ஞையைத் தெரிவியுங்கள்'' என்று வேண்டினார்.

அதைக் கேட்டதும் ஸ்ரீநிவாசன், வாயுதேவனை நோக்கி, "நீ ஸ்வர்க்கலோகத்துக்குச் சென்று அங்கு மந்தாக்கினியில் பிரகாசிக்கின்ற ஸஹஸ்ரதள

Koviloor Digital Library

பத்மகமலத்தில் ஒன்றை, இந்திரனைக்கேட்டு எடுத்துக் கொண்டு வா!'' என்றுகூறினார். அதற்கு வாயுதேவன் "ஸ்வாமி அதே ஆயிரம் இதழ்த்தாமரைகள் ஸ்வர்ணமுகியில் உள்ளன. அங்கிருந்தே ஒன்றை எடுத்து வருகிறேன்'' என்று சொன்னார். அந்த வார்த்தைகளைக் கேட்ட ஸ்ரீநிவாசன், ஆகாயவாணி தனக்குச் சொல்லிய சத்ய லோகத்திலுள்ள ஆயிரம் இதழ்த் தாமரையையே எடுத்து வரும்படிக் கூறினார். உடனே வாயுதேவன், சுவர்க்கலோகம் சென்று தேவேந்திரனின் அனுமதியைப் பெற்று, மந்தாக்கினியிலுள்ள ஆயிரம் இதழ்த்தாமரை மலர் ஒன்றை எடுத்து வந்து ஸ்ரீநிவாசனிடம் கொடுத்தார். ஸ்ரீநிவாசன் அந்தக் கமலத்தைப் பெற்று, நான் இங்கு தவம் செய்ய எண்ணியிருக்கிறேன். இந்தச் சுபச் செய்தியை யாரிடமும் தெரிவிக்காமல் இருக்கும்படி சொல்லி வாயுதேவனை, அனுப்பிவைத்து அந்த சஹஸ்ரதள பத்மத்தை, பத்மஸரோவத்தில் பிரதிஷ்டைசெய்து, அந்தக் கமலத்தின் கிழக்கில் சூரியனைப் பிரதிஷ்டை செய்து, நிர்மலமான மனத்துடன் அந்தக் கமலத்தின்மீது மனதை நிலைநிறுத்தி, லக்ஷ்மியின் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு தவம் செய்து வந்தார்.

52. ஸ்ரீநிவாசனின் தவத்தை தேவமங்கையர் கலைத்த கதை

இந்திரன், பூலோகத்தில் யாரோ ஒரு ராஜகுமாரன் தனது இந்திர பதவியைக் கோரி தவம் செய்வதாய் நினைத்து ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை முதலிய தேவதாசிகளை அழைத்து, "பூவுலகத்தில் யாரோ ஒரு ராஜகுமாரன் எனது பதவியை அடைவதற்காக


Koviloor Digital Library

வேண்டி, அகோர தவஞ் செய்து வருகிறான். நீங்கள் அங்கு சென்று, அவனுடைய தவத்தைப் பங்கப்படுத்தி வரவேண்டும்'' என்று அவர்களை அனுப்பிவைத்தான்.

அதைக்கேட்ட ரம்பை முதலிய தேவதாசிகள் பூவுலகத்தில் பத்மசரோவத்தில் தவஞ் செய்து கொண்டு, மாறுவேடத்திலுள்ள ஸ்ரீநிவாசனின் எதிரே, வந்து, அவரை அநேக விதங்களில் மோகிக்கச் செய்தார்கள். ஆனால் அந்த பரமாத்மா, அவர்களுடைய மோஹவலையில் விழவில்லை. அதைக் கண்ட அந்த நடன மாதர்கள், அந்த வனத்திலுள்ள மலர்களால் அவரை விதவிதமாக அலங்கரித்தனர். அப்போது ஸ்ரீநிவாசன் அவர்களைப் பார்த்து, ''நீங்கள் செய்துவரும் சேவை எனக்கு மகிழ்ச்சி ஊட்டியது. அதனால் நீங்கள் சிறிது நேரம் நாட்டிய கானம் செய்யுங்கள்'' என்று கூறினார். அந்த வார்த்தைகளைக் கேட்டு அவர்கள் அந்தவனத்திலுள்ள புஷ்பங்களைப் பறித்து வந்து ஸ்ரீநிவாசன் பக்கத்திலிருந்த ஒரு சிலையை அலங்கரித்து வனலக்ஷ்மிக்கும் விஷ்ணுவுக்கும் விவாகம் செய்ததைப் போன்ற பாடல்களைப்பாடி லக்ஷ்மியின்மீது விஷ்ணு காதல் கொண்டதை போலப்பாடல்களைப்பாடி, நாட்டியங்களை ஆடிக் கொண்டு, எப்படியாகிலும் அந்த ராஜகுமாரனின் மனதை மாற்றி, அவனது தவத்தை பங்கப் படுத்த வேண்டும் என்று எண்ணி, மிகவும் கவர்ச்சிகரமான பாடல்களைப் பாடிக் கொண்டு நடனமாடினர். அவரை மோகிக்கச் செய்யப் பல வகையாலும் முயன்றார்கள்.

ஆனால், பகவான், அவர்களுடைய ஆடல்பாடல்களைப் பார்த்தும் கேட்டும் பரவசமடைந்தாரே தவிர, அவருடைய மனம் எள்ளளவும் மாறவில்லை. லக்ஷ்மியின் கவனத்திலிருந்து அவர் கவனம் திரும்பவில்லை. அந்த நடனமங்கையர், ஸ்ரீநிவாசன் மீது

Koviloor Digital Library



மோகங் கொண்டவர்களைப் போல நடித்தார்கள். அதற்கும் பகவான் உட்படாததைப் பார்த்து அவர்கள் ஒருவருடன் மற்றொருவர் பின்வருமாறு பேசலாயினர். "இந்த நிரபராதி விஸ்வாமித்திரரை விடவும், கிருஷ்ணவைதுபாயனரை விடவும் மனோதிடங் கொண்டவர். இவர் சமானிய மனிதரல்ல, இவரை நாம் பங்கப்படுத்த முடியாது. இந்த தவத்தில் சிறந்தவரை நாம் பலாத்காரம் செய்தால் நாம் இவரது சாபத்திற்கு ஆளாகவேண்டும்" என்று யோசித்தார்கள். ஸ்ரீநிவாசன் அவர்களுடைய மனப்போக்கைப் புரிந்து கொண்டு, அவர்களை ஏமாற்ற நினைத்து, மிகவும் சௌந்தர்யமுள்ள ஒரு விஸ்வ மோகினியைச் சிருஷ்டி செய்தார். அவர்கள்

Koviloor Digital Library

அந்த மோகினியைப் பார்த்து, "ஆஹா! இந்த புருஷன்தான், இந்த மோகினியைச் சிருஷ்டித்திருக்கவேண்டும். இவளுடைய சௌந்தர்யத்துக்கு நாம் சமானமானவர்களல்ல. நாம்தான் இவரிடம் தோற்றுப் போய்விட்டோம். நாம் இந்த மகானின் மகிமைகளைத் தெரிந்து கொள்ளாமல் இவரைப் பங்கப்படுத்த நினைத்தது நமது மதியீனம் என்று நினைத்து, அவர்கள் அனைவரும் ஸ்ரீநிவாசனை நமஸ்கரித்து, அங்கிருந்து சென்று, இந்திரலோகம் சென்று இந்திரனை நோக்கி, "ஸ்வாமீ, நாங்கள் அந்த நிரபராதியின் தவத்தைப் பங்கப்படுத்த முடியாமல் திரும்ப இங்கேயே வந்து விட்டோம். அவர் சாக்ஷாத் விஷ்ணு சொரூபமாக இருக்கிறார்." என்று கூற, அவ்வார்த்தைகளைக் கேட்ட தேவேந்திரன் மிகவும் பயந்தவனாக, "விஷ்ணுவே தவஞ் செய்து வருவதாகத் தெரிந்து கொண்டு, உடனே ஸ்ரீநிவாசனிடம் சென்று, அவரை நமஸ்கரித்து, தான் தெரியாமல் செய்த அபராதங்களை மன்னிக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்தான்.

அப்போது ரமாநாதன், இந்திரனை மன்னித்து, அவர் சிருஷ்டித்த விஸ்வமோகினியைப் பார்த்து "நீ பிரஜைகளால் பூஜை செய்யப்பெற்று, இவ்வுலகிலேயே இருக்க வேண்டும்" என்று அவளிடம் சொல்லி அனுப்பிவிட்டு, எப்போதும் போலத் தமது தவத்தை மேற்கொண்டார்.

சேஷாசலத்தில் பத்மாவதியை விட்டுப் பிரிந்தது முதல், பத்மாவதி, உணவும் உறக்கமும் இல்லாமல், கலவரமடைந்து என் கணவன் என்னைப் பிரிந்து சென்று இருபத்திரண்டு வருஷங்கள் ஆகின்றன. இவ்வளவு காலமும் அவர் எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை.

Koviloor Digital Library

அந்த ரமாதேவியுடன் கூடி சரசசல்லாபங்கள் ஆடிக் கொண்டு, என்னையே மறந்துவிட்டாரோ? அல்லது அந்த லக்ஷ்மிதேவியையே காணமுடியாமல் கானகங்களில் பரிதவிக்கிறாரோ! லக்ஷ்மிதேவி அவ்விடம் இல்லாமற் போய்விட்டதற்குக் காரணம் என்ன?'' என்று சிந்தித்துக் கொண்டே .மெய்மறந்தாள். அப்போது ஸ்ரீநிவாசன், தவவேடத்தில் அவளுக்குத் தரிசனம் கொடுத்தான். பத்மாவதி திடீரென்று கண்விழித்து எழுந்து தன் கணவன், தவமுனிவரைப் போலிருக்க காரணம் என்னவென்று யோசித்து, துக்கமடைந்து, வகுளமாலிகையைப் பார்த்து, "அம்மா! என்கணவர், என்கனவில் தவக் கோலத்தில் தோன்றினார். அதுமுதல் எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது'' என்றாள். அதைக்கேட்ட வகுளமாலிகை, "உன் கணவன் வெகு விரைவில் லக்ஷ்மிசமேதனாக வந்து விடுவார்'' என்று பத்மாவதிக்கு தைரியம் சொல்லித் தேற்றினாள்.

53. லக்ஷ்மி, பகவானின் மார்பில் (வக்ஷஸ்தலத்தை) அடைந்த கதை

இப்படியிருக்க, கபிலாஸ்ரமத்திலிருந்த மகாலக்ஷ்மி பின்வருமாறு யோசிக்கலானாள். "எனக்காக என் நாதன் பத்மசரோவத்தில் தவஞ் செய்து வருகிறார். ஸ்ரீநிவாசனுக்காகப் பத்மாவதி சேஷகிரியில் துக்கித்துக் கொண்டு இருக்கிறாள். நானே இவர்களுக்கு கஷ்டங்களை உண்டாக்கிவிட்டேன். இதற்கு என்ன செய்வது'' என்று யோசித்து கபிலமுனிவரை நோக்கி, "முனிவரே! ஸ்ரீநிவாசன் பத்மாவதியை விவாகம் செய்து கொண்டு, அவளை சேஷாத்ரியில் விட்டு, அவர் மட்டும் தனியாக பத்ம ஸரோவத்தில் என்னைக் குறித்துத் தவஞ் செய்து வருகிறார். நான் என்ன செய்வேன்?'' என்று கேட்டாள்.

Koviloor Digital Library

அதற்கு அந்த முனிவர், "தாயே! பிரதியுகத்திலும் அந்தப் பரந்தாமனின் வக்ஷஸ்தலத்தில் வசித்து அவரை எப்போதும் விட்டுப் பிரியாமல் இருந்து வந்த நீ, அவரைவிட்டுப் பிரிந்ததற்குக் காரணம் என்ன" என்று கேட்டார். உடனே லக்ஷ்மிதேவி துக்கமடைந்து, "நீங்கள் சொன்னது போல எப்போதுமே நான் அவரைவிட்டுப் பிரியாமல், அவருடைய வக்ஷஸ்தலத்திலேயே சுகமாக வசித்து வந்தேன். ஒருசமயம், மூடாத்மாவாகிய பிருகுமுனிவர், நான் வசித்து வந்த ஸ்ரீநிவாசனின் மார்பில் உதைத்தான். பரபுருஷனின் பாதம் பட்டதனால் என் தர்மத்துக்குப் பங்கம் ஏற்பட்டு விடும் என்றும் நினைத்து, நான் விஷ்ணுவை விட்டுக் கொல்லா புரத்தில் வசித்து வந்தேன். எனக்கு, விஷ்ணுவாகிய என்கணவர், அந்த முனிவன், தனது மார்பின் மீது உதைத்து விட்ட பிறகுங்கூட, அவனது காலைப் பிடித்து அழுத்திவிட்டு, அவனுக்குத் திருவருள் செய்தார், எங்களுடைய மகிழ்ச்சிக்கு இடைஞ்சலாக வந்ததுமட்டுமின்றி, எனது கணவனின் மார்பில் உதைத்த அந்த முனிவனைக் கண்டித்துத் தண்டிக்காமல், அவனைக் காலைப்பிடித்து அழுத்தி, அவனுக்குச் சமாதானம் செய்து அனுப்பிய என் கணவர் மீது எனக்குக் கோபம் உண்டாயிற்று. அதனால்தான் நான் அவரை விட்டுப் பிரிந்தேன்." என்றாள்.

அதற்கு, அந்தக் கபிலமுனிவர், லக்ஷ்மியை நோக்கி, "லக்ஷ்மிதேவியே! நீ சகலமும் அறிந்தவள். பிருகு முனிவன் உன்னுடைய குமாரனே தவிர வேறெவனுமில்லை. இந்த வரலாற்றை உன் கணவன் உனக்குத் தெரிவித்தாலும் தெரிவிக்காவிட்டாலும், அந்த மஹாவிஷ்ணு, துஷ்ட நிக்ரகமும் சிஷ்ட பரிபாலனமும் செய்பவர். ஆகையால், பிருகு முனிவன் உத்தமனாக

Koviloor Digital Library

இல்லையென்றால் அவனை உன் கணவர் மன்னித்து இருக்கமாட்டார். அவரே மன்னிக்கும் போது, நீயும் மன்னிக்கத்தான் வேண்டும். அதுவே மனைவியின் கடமை. அதைவிட்டு, அந்தமுனிவனையும் உன் கணவரையும் நிராகரிப்பது தர்மமில்லை. எத்தனையோ, தவங்கள் செய்து, அந்த மகாத்மாவின் மார்பிலேயே வசித்து வந்தாய்! அந்த இடத்தில் வேறு எவருமே வசிக்க இயலாது. பிருகுமுனிவன் உதைத்தான் என்பதற்காக உன் நாதனை விட்டுப் பிரிந்து வாழ்வது தர்மமாகாது. பிருகு, பிரம்மதேவனைப் பரீட்சித்து, மும்மூர்த்திகளிலும் விஷ்ணு தேவனே, ஸத்வகுணஅம்சன் என்று நிருபிப்பதற்காக இப்படி நடித்தார். அதைத் தெரிந்து கொள்ளாமல் நீ, கர்வம் கொண்டதால்தான் பிருகு முனிவர் உன் நாதனை உதைத்தார் என்று நினைத்து, அவர் மீது கோபம் கொண்டாய். நீ அந்தப் பரந்தாமனை விட்டுப் பிரிந்தவுடனேயே, அவர், வைகுண்டத்தைவிட்டு, வேங்கடாசலம் சேர்ந்து அங்கு சிலநாட்கள் கஷ்டங்களை அனுபவித்தார். பிறகு பத்மாவதியை விவாகம் செய்து கொண்டார்.

அவருக்கு எங்கிருந்தாலும் ஒரு குறைவும் வராது. அவர் கருணாமூர்த்தியாகையால் அவர் உன்னை அழைக்க வந்திருப்பதாக நினைத்து, நீ இங்கு தவம் செய்து, தனித்திருப்பது தகாது. நீ உலகமாதா, கணவனைக் கஷ்டத்துக்குள்ளாக்கி விட்டு, சிறு பிள்ளைகளைப் போல விளையாட்டுத்தனமாக இப்படி நடந்து கொள்வது தர்மமல்ல. இப்படியே இருபத்திரண்டு வருஷங்கள் கழித்துவிட்டன. இனிமேல் நீ ஸ்ரீஹரிக்குப் பிரத்யட்சமாகி, அவருடைய வக்ஷஸ்தலத்தில் சேர்வது, உனக்கும் அவருக்கும், பத்மாவதிதேவிக்கும் மற்ற எல்லோருக்குமே மங்களகரமானதாகும். எனக்குத்

Koviloor Digital Library

தெரிந்தவரை நான் உனக்குப் பொதுவான நியாயத்தை எடுத்துரைத்தேன்! பகவான் சாதாரண மனிதனைப்போல, உனது திருநாமத்தை ஜெபித்துக் கொண்டு தவஞ் செய்து வருகிறார். இனிமேல் நீ மந்திராதீனமாகின்றாய். மந்திரத்தால் உன்னை ஜெபிப்பவர்களுக்குத்தான் உனது பிரத்யக்ஷம் உண்டாகும். இனி எவ்விடமும் மறையமுடியாது. உன் மனோபாவத்தை மாற்றிக் கொண்டு, அந்தக் கமலத்தில் தோன்றிய ஸ்ரீஹரியின் மார்பில் சேர்வாயாக!'' என்று சொன்னார்.

கபில முனிவரின் சொற்களைக் கேட்ட லக்ஷ்மிதேவி, ''முனிவரே! நீங்கள் சொன்னவை யாவுமே உண்மை. என்னால் என்புருஷனுக்கு எத்தனைக் கஷ்டங்கள் உண்டாயிற்று? அவருக்குக் கஷ்டங்கள் உண்டாக்கிய இந்தசரீரத்தை இங்கேயே தவம் செய்யும்படி விட்டு, நான் மட்டுமே சாயா லக்ஷ்மியாக! ஸ்ரீநிவாசனின் வக்ஷஸ்தலத்தைச் சேருவேன்'' என்று சொன்னாள்.

அதற்கு அந்தக் கபில முனிவர், ''மஹாலக்ஷ்மீ! நீ உன் நாதனுடன் அநேக அவதாரங்களை எடுத்துக் கீர்த்தி பெற்ற உலகமாதா! மஹாவிஷ்ணுவோ, கபடநாடக சூத்ரதாரி. உங்கள் அவதார மகிமைகளைக் கொண்டாட ஆதிசேஷனாலும் முடியாது. நீங்கள் ஆதிதம்பதிகளாய், ஜகத்ரியங்களையும் சிருஷ்டித்துக் கொண்டும் சம்ஹரித்துக் கொண்டும் ஏதோவொரு காரணார்த்தமாக நீங்கள் இந்த நாடகமாடி வருகிறீர்கள். உனக்கும் அவருக்கும் பேதமில்லை. நீ உலகமாதா. உன் கணவன் உலகரக்ஷகன்'' என்றார்.

அப்போது லக்ஷ்மிதேவி, கபிலமுனிவரை நோக்கி, ''முனீந்திரா? உம்முடைய வார்த்தைகள் யாவும்

Koviloor Digital Library



உண்மையே. நான் கரவீரபுரத்திலிருந்து இங்கு வந்தபோதே இவ்வாறு நினைத்தேன். ஸ்ரீநிவாசன் பத்மாவதியை மணந்து கொண்டு அவர்களிருவரும் மகிழ்ச்சியாகக் காலங்கழித்து வரும்போது ஏகாந்த சமயங்களில் நான் எப்படி ஸ்ரீநிவாசனின் மார்பில் வசிப்பேன் என்று நினைத்து, இவ்விடம் வந்து சேர்ந்தேன்!'' என்று சொல்ல, அதைக் கேட்டு கபில முனிவர், ''அம்மா! மஹாவிஷ்ணு எடுத்த அவதாரங்களில் இது ஒரு அவதாரம். எந்த அவதாரத்தில் நீ அவரை விட்டுப் பிரிந்தாய்? எல்லா அவதாரங்களையும் விட

Koviloor Digital Library

ஸ்ரீகிருஷ்ணவதாரத்தில் பதினாயிரம் கோபிகைகளுடன் அவர்கள் இஷ்டம் போல இருக்கவில்லையா? அப்போது நீ எங்கே இருந்தாய்? இன்று பூர்வபுண்யத்தினால் நீ எனது ஆசிரமத்தைப் பவித்ரமாக்க இங்கு வந்தாயே தவிர வேறொன்றுமில்லை. இனிமேல் நீ உன் கணவனை விட்டுப் பிரிவது தர்மமல்ல. அவர் பிரதிஷ்டை செய்துள்ள ஸஹஸ்ரதளபத்மத்தில் தோன்றி நீஹரியின் மார்பில் அமர்ந்து, சேஷாசலத்தில் பக்தர்களைக் காப்பாற்ற வேண்டும்'' என்று கேட்டருளினார்.

லக்ஷ்மி, முனிவரின் அறிவுரையைக் கேட்டு அவரை வணங்கி, அவரிடம் விடைபெற்று, தனது பூர்வ சரீரத்தை அங்கேயே தவஞ் செய்யச் செய்து, அதிலிருந்து திவ்விய தேஜோரூபமடைந்து, ஸ்வர்ணமுகி பத்மத்தின் துவாரத்தில் பிரவேசித்து, மேலே பிரகாசிக்கின்ற ஆயிரம் இதழ்த் தாமரையின்மீது உட்கார்ந்து, கோடி சூர்ய பிரகாசத்துடன் விளங்கினாள். இப்படிப் பிரகாசிக்கும் லக்ஷ்மியை ஸ்ரீநிவாசன் பார்த்தார். பகவானைப் பார்த்த லக்ஷ்மி வெட்கமடைந்தவளாய் தலைகுனிந்தாள்.

அப்போது பகவான், தனது தவக்கோலத்தைக் கண்டு லக்ஷ்மி பரிகசிக்கிறாள் என்று நினைத்துத் தலைகுனிந்தார். அவர்களிருவரும் இப்படி அபிநயஞ் செய்வதைப் பார்த்த மன்மதன் அவர்கள் இப்படி இருப்பது தகாது என்று நினைத்து, ஸ்ரீநிவாசனுடைய இதயத்தில் பிரவேசித்து, தன் கடமையைச் செய்ய ஆரம்பித்தான். அப்போது பிரம்மாதிதேவர்கள் அவரவருடைய வாகனங்களில் ஏறி, பத்மஸரோவத்திற்கு வந்து சேர்ந்து ஸ்ரீலக்ஷ்மி ஸ்ரீநிவாசன் மீது புஷ்பமாரி பொழிந்து இவ்வாறு பிரார்த்தித்தார்கள்.

Koviloor Digital Library

ஸ்தோத்திரம்

ஸ்ரீமத் பரந்தாம ஸ்ரீவானிஸ்தோம
ஸ்ரீமானினிலோப சிருங்காரஸல்லில
கந்தர்பலாவண்ட கஞ்ஜோத் பவாகண்ய
ஸத்குண்ய ஸம்பன்ன ஸம்ரக்ஷிதாபன்ன
ஸத்யவிரதாசார சாதுப்ரஜோத்தார
சாராம்புதஸ்யாம ஸ்ம்பூர்ண ஸத்காம
வேதாந்த சஞ்சார விஸ்வம்பராதார
ஸ்ரீவேங்கடாதீச ஸச்சித்ப் பிரகாசா
பராகேச லோகேச வாகீசசௌகூச
நாகேச வந்தியாங்கிரி பத்மத்வயா
நித்ய ஸத்யாத்வயா ஸத்திய சாரித்ர
யோகீந்திரஹ்ருத் பத்ம பிருங்கா சுபாங்கா
சுசாரித்ர மித்ராப்ஜநேத்ரா தரிக்கூ
மனோல்லாஸ தானப்ரியா ஸ்ரீநிவாசா எம்மை
கிருபை கூர்ந்து பார்ப்பாய் எம்தந்தையே
சேஷாசலவாஸா நரஸிம்மாவதாரா நமஸ்தே,
நமஸ்தே

என்று பிரார்த்திக் கொண்டு, ஸ்ஹஸ்ரதள பத்மத்தில் பிரகாசிக்கும் லக்ஷ்மிதேவியைப் பார்த்து,

லக்ஷ்மீம் க்ஷீரஸமுத்ர ராஜ தனயாம்
ஸ்ரீரங்க தாமேஸ்வகூம்
தாசீபூத ஸமஸ்த தேவலினுதாம்
லோகைக தீபாங்குரும்

Koviloor Digital Library

ஸ்ரீமந்மந்த கடாக்ஷலப்த விபவே
பிரம்மேந்திர கங்காதரம்!
துவத் திரைலோக்ய குடும்பினீம்
ஸ்ரஸினாதம் வந்தே முகுந்தப்பிரியம்!!

லக்ஷ்மி, பகவானின் வக்ஷஸ்தலத்தில் சேர்ந்து, சேஷாத்ரி பூலோகப்பிரசித்தி பெற்று பிரகாசிக்க எம்மீது கிருபை செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தனர்.

கார்த்திகை சுத்த பஞ்சமி, உத்திராடம் கூடிய சுபதினத்தில், ஸ்ரீநிவாசனின் வக்ஷஸ்தலத்தில் சேரவேண்டும் என்று பிரம்மாருத்திரர்கள் ஸ்ரீலக்ஷ்மி தேவியைப் பிரார்த்திக்க விஜயலக்ஷ்மி பதில் பேசாது மௌனமாக இருந்தாள். அதைக்கண்ட பிரம்மதேவன் பிருகுமஹாமுனிவரைப் பார்த்து கண்ஜாடை செய்தார். அப்போது பிருகுமுனிவர், வீரலக்ஷ்மியை சமீபித்து சாஷ்டாங்க தண்டப் பிரணாமங்கள் செய்து, "தாயே! இனியாகிலும் என்னுடைய பிழையை மன்னித்து நான் உன் தனயன் என்று தெரிந்து என்னை ஆதரித்து என் தந்தையின் மார்பில் சேர்ந்து, உலகமெங்கும் மங்கள முண்டாக்க வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தார்.

பிருகு முனிவரின் பிரார்த்தனையைக் கேட்ட மஹாலக்ஷ்மி, பிருகுவை ஆசீர்வதித்து, உமது தைரியத்தையும் திட பக்தியையும் அறியாமல், ஸத்வகுண சம்பன்னரான என் நாதனைச் சந்தேகித்து, என் பிராணநாதனை விட்டுப் பரதேசியாய் சிலகாலம் கழித்து, என் நாதனைக் குறித்துக் கடுந்தவஞ் செய்து அவரையும் கடுந்தவஞ் செய்யவைத்தேன். விதி யாரையும் விடாது. இது எனது தவறும் இல்லை. உனது தவ்றுமில்லை.

Koviloor Digital Library

நம்மை இந்த நாடகத்துக்கு உள்ளாக்கியது, நாராயணன் விளையாட்டே அல்லாது வேறல்லவென்று சொல்லித் தன் நாதன் தன்னை அணைத்து அவருடைய மார்பில் வைத்துக் கொள்வாரென்று உத்தேசத்தினால் ஸ்ரீநிவாசனின் பாதங்களின் மீது தனது பார்வையைச் செலுத்தி, ஒரே மனதுடன் தங்கச்சிலையைப் போல நின்றிருந்தாள். நான்முகனாகிய பிரம்மதேவன் லக்ஷ்மியின் மனக்கருத்தை அறிந்து, ஸ்ரீநிவாசனைப் பார்த்தார். ஸ்ரீநிவாசன், பிரம்மா ருத்திரர்களைப் பார்த்து "நீங்கள் ஏன் யோசிக்கிறீர்கள்? சதா என் மார்பில் வசித்து வரவேண்டும் என்று நீங்கள் ஸ்ரீலக்ஷ்மிக்குச் சொல்லும் வரையில், அவள் என் மார்பில் வசித்துவரவேண்டும் என்று நினைக்கவில்லை. நினைத்து விட்டால், அவளே என் மார்பில் நீங்காத நினைவாக வீற்றிருப்பாள். நீங்கள் விரும்பினால் உங்கள் கருத்தை அவளிடம் சொல்லிப்பாருங்கள்!" என்றார்.

பிரம்மாவும் சிவனும் லக்ஷ்மியை நோக்கி, "மஹா லக்ஷ்மித்தாயே நீ இந்தச் சுபயோக சுபநேரத்தில், பரந்தாமனின் வக்ஷஸ்தலத்தில் சேர்ந்து, எப்போதும் போல வசித்து வரவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். அதைக் கேட்ட லக்ஷ்மிதேவி, அவர்களுடைய சொல்லுக்கு மதிப்புத்தரவேண்டும் என்ற எண்ணத்தோடு புன்னகையுடன் அன்னத்தைப்போல நடை நடந்தாள்.

அவள் கால்களிலணிந்த தண்டை கொலுசுகளின் சலங்கைகள் ஜலீர்ஜலீர் என்று ஜ்வலிக்க, கலீர் கலீர் என்ற ஒலியுடன், இடுப்பில் அணிந்த ஒட்டியாணத் தங்க மணிகள் ஓசையிட, நாசிகாபரணங்களிலும், சிருங்காரமயமான மைதீட்டிய கண்களுடனும் நெற்றியில் பிரகாசிக்கும் திலகத்துடனும் சந்தன பரிமளங்கள்

Koviloor Digital Library

திசைகள் எங்கிலும் நறுமணம் வீச, புன்னகை தவழும் வதனங்களுடனும், பத்ம கமலத்திலிருந்து, மெதுவாகத் தன் நாதனிடம், முன்பு பாற்கடலிலிருந்து தோன்றி மகாவிஷ்ணுவை அடைந்ததை போலவே இப்போதும் ஸ்ரீநிவாச மூர்த்தியின் வக்ஷஸ்தலத்தில் சந்தன கஸ்தூரி முதலிய பரிமளங்களிட்டு ஒரு மலர் மாலையை ஸ்ரீநிவாசனின் கழுத்தில் அணிவித்தாள்.

அப்போது ஸ்ரீநிவாசன், லக்ஷ்மியை வரவேற்று, கருணைகாட்டித் தன் இருகைகளாலும் அணைத்து ஆலிங்கனம் செய்து, சகல சௌபாக்கியங்களையும் அருள்செய்யும் ஸ்ரீதேவியைத் தமது மார்பில் வைத்துக் கொண்டார். அந்தச் சமயத்தில் ரம்பை, ஊர்வசி, முதலிய நடனமங்கையர்கள் ஆகாய வீதியில் நடனமாடினர். கந்தர்வர்களும் சதிபதிகளான கந்தர்வர்களும் கானமிசைத்தனர்.

தேவர்கள் லக்ஷ்மி ஸ்ரீநிவாசனின் மீது மங்கல மலர்மாரி பொழிந்தார்கள். வரலக்ஷ்மி பிறந்த அந்த பத்மஸரோவத்தில் பிரம்மன் முதலிய தேவர்கள் அனைவரும் நீராடி ஸ்ரீலக்ஷ்மி ஸ்ரீநிவாசனைக் கொண்டாடினார்கள்.

அந்தப் புண்ணிய தீர்த்தத்தில், மார்க்கசிர சுத்த பஞ்சமி திதியில் ஸ்நானம் செய்பவர்களுக்கு அந்த வீரலக்ஷ்மி தனகனக வஸ்து வாகனங்களை அளித்துக் கடைசிகாலத்தில் மோட்சத்தையும் தருவதாக ஸ்ரீலக்ஷ்மி ஸ்ரீநிவாசத் தம்பதிகள் அன்று தேவர்களுக்கும் மற்றவர்களுக்கும் மொழிந்தார்கள். பிறகு தேவர்கள் அவரவர்களுடைய வாகனங்களில் ஏறி ஸ்ரீநிவாசனுடன் சேஷாசலத்துக்குச் சென்று கொண்டிருந்த போது

Koviloor Digital Library

சேஷாசலத்திலுள்ள பத்மாவதி ஸ்ரீநிவாசன் லக்ஷ்மி சமேதராக வருகின்ற விவரத்தைத் தெரிந்து கொண்டு மங்கள ஸ்நானம் செய்து ஆடையாபரணங்கள் அணிந்து கொண்டு ஸ்ரீநிவாசனையும் ஸ்ரீலக்ஷ்மிதேவியையும் எதிர்கொண்டு அழைத்து வரவேற்று அவர்களுக்கு மங்களஹாரத்தி எடுத்து சாஷ்டாங்க தண்ட பிரணமங்களைச் செய்தாள்.

அப்போது லக்ஷ்மி ஸ்ரீநிவாசன் பத்மாவதியை ஆதரித்து, ஆனந்த நிலையத்தில் பிரவேசித்து இச்சாமாத்திரத்தில் சகல பதார்த்தங்களையும் ஆகர்ஷனம் செய்து, பிரம்மாதி தேவர்களுக்கு விருந்தளித்து, சந்தன தாம்பூலங்களுடன் வஸ்தீர ஆபரணங்களையும் கொடுத்து, அவர்களைத்திருப்தி செய்தார். அவர்கள் மகிழ்ச்சியுடன் அவரவர்களுடைய வாகனங்களில் ஏறித் தமது நிவாசங்களுக்குச் சென்றார்கள். அன்று முதல் லக்ஷ்மி, பத்மாவதி ஸ்ரீநிவாசன் ஆகியோர் சுகமாக இருந்தார்கள்.

ஒருநாள் ஸ்ரீநிவாசன் லக்ஷ்மியைப் பார்த்து, "நீ இவ்விடத்துக்கு வந்ததால் எனக்கு மிகவும் சந்தோஷம். என்னுடைய விவாகத்திற்காக நான் குபேரனிடம் கடன் வாங்கியிருந்தேன். அந்தக் கடனைத் தீர்க்க இன்றுவரையும் முடியவில்லை. அதற்கு எந்தவொரு வழியும் தென்படவில்லை" என்று விநோதமாகக் கூறினார். அந்த வார்த்தைகளைக் கேட்ட லக்ஷ்மி, "நான் உம்முடைய விவாகத்திற்கு வந்திருந்தபோது எனக்குத் தெரியப்படுத்தி இருந்தால், நானே உங்களுக்கு வேண்டிய தனத்தைக் கொடுத்திருப்பேன். என்னைக் கேட்காமல் நீங்கள் வாங்கிய கடனை நீங்கள்தான் தீர்க்க வேண்டுமே தவிர, இப்போது என்னிடம் தெரிவித்தால், நான் என்ன செய்வேன்!" என்றாள்.

Koviloor Digital Library

அதைக் கேட்ட ஸ்ரீநிவாசன், ஸ்ரீலக்ஷ்மிதேவியைப் பார்த்து, "நீ என்மேல் கோபமடைந்து கொல்லாபுரத்துக்குப் போய் விட்டாய். என் விவாகத்திற்கு உன்னை அழைக்க சூரியனை உன்னிடம் தூதாக அனுப்பியிருந்தேன். நீ என்மேல் கருணைகாட்டி, சூரியனுடன் வந்து சேர்ந்ததைப் பரமானந்தமாகக் கருதினேன். உன்னை விவாகத்துக்கு அழைத்து தனம் வேண்டும் என்று எப்படி நான் உன்னைக் கேட்பேன்? கடன்வாங்கியிருக்கும் குபேரனுக்கு வருஷாவருஷம் வட்டி செலுத்துவதாகப் பத்திரம் எழுதிக் கொடுத்துப் பணம் பெற்றுக்கொண்டேன். இதுவரையில் நான் ஒரு வருஷ வட்டியைக் கூடச் செலுத்தாமல், செலுத்தவும் முடியாமல் போனதால் நான் ஒரு யோசனை செய்திருக்கிறேன். நீ அதற்குச் சம்மதிக்க வேண்டும்.

நான் வாங்கிய அந்தக் குபேரனுடைய கடனைத் தீர்க்க நீ எதையும் செய்ய வேண்டியதில்லை. கலியுகத்தில் என்னையே தங்களுடைய நம்பிக்கைக்குரிய தெய்வமாக நினைத்துத் தொழுது வழிபடுகின்ற ஏராளமான பக்தர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கேட்கும் எந்த வரத்தையும் நான் கொடுத்து விடமுடியும். ஆனால், அவர்களில் பெரும்பாலோருக்குப் பணம் பிரச்சினைதான் ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அந்தப் பிரச்சினையை உன்னைத் தவிர வேறு எந்தத் தேவதையாலும் தீர்க்கமுடியாது. சகலவிதமான செல்வங்களுக்கும் சௌபாக்கியங்களுக்கும் உன்னைத்தான், நானுங்கூட நம்பவேண்டியிருக்கிறது.

நீ இல்லாத இடத்தில் எல்லாமே இருந்தாலும் மகிழ்ச்சியிருப்பதில்லை, அமைதி இருப்பதில்லை, ஆனந்தம் இருப்பதில்லை. அதனால்தான் உலகத்திலுள்ள மனிதர்களில் பலர் பணத்தைப் பெறுவதற்கும் பல

Koviloor Digital Library

பாபகாரியங்களைச் செய்கிறார்கள், அப்படியே அவர்களுக்குத் தனப்பிராப்தி கிடைக்கும்படிச் செய்துவிட்டாலும் அந்தத்தனத்தை அடைந்த அவர்கள் அந்தத்தனத்தைக் கொண்டு, "பணம் பத்து விதம் செய்யும்" என்ற கர்வத்தினால் மேலும் பலப்பலப் பாவகாரியங்களைச் செய்து வருகிறார்கள்.

அவர்கள் செய்யும் பாவங்களால்தான் அவர்களுக்கு வியாதிகளும் சங்கடங்களும் தோன்றி, அவர்களைத் துக்கமடையச் செய்கின்றனவே தவிர, பகவானை ஒரு வினாடி பக்தியுடன் நினைப்பதற்கோ, தியானிப்பதற்கோ வழி விடுவதில்லை. அந்தச் சமயத்தில்தான் பூர்வபுண்ணிய பலத்துக்கு சந்திரன் அதிபதியாகையால், சந்திரக்கிரகத்திற்கு அதிதேவதை யாகிய நான்தான் அவர்களுக்குக் கஷ்டகாலத்திலாவது பகவானைத் தியானிக்கவேண்டும் என்ற புத்தியைத் தருகிறேன். அப்போது அவர்கள் என்னைத் தியானிப்பார்கள். நான் அவர்களுடைய கனவில் தோன்றி, எனக்குப் பிரார்த்தனைகள் செலுத்தப் பணம் முடிப்புகளைக் கட்டச் சொல்லுவேன்.

அவர்களும் எனக்குப் பிரார்த்தனை செலுத்துவதற்காகக் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தையோ, அல்லது கையிருப்புப் பணத்தையோ, மஞ்சள் துணியில் எனக்குக் காணிக்கை செலுத்துவதற்கென முடிந்து வைப்பார்கள். அல்லது ஒரு செம்பில் போட்டு, அதற்கு மஞ்சள் துணியைக் கட்டி, நாமங்களையும் போட்டு வைப்பார்கள். அப்படிப்பட்ட சமயங்களில் அவர்கள் அந்தப் பணத்தை எடுக்கவே கூடாது, எடுத்து எந்தக் காரியத்துக்கும் செலவே செய்யக் கூடாது என்று பிரார்த்தனை செய்து கொள்வார்கள்.

Koviloor Digital Library

அவர்கள் மனவுறுதியைச் சோதிக்க, மேலும் பல சிரமங்களைக் கொடுப்பதுண்டு. அவர்கள் முடிந்து வைத்த பணத்தைச் செலவு செய்து விட்டு, எடுத்த பணத்துக்கு அசலையும் வட்டியும் சேர்த்து விடுவதாகப் பிரார்த்தனை செய்து கொள்வார்கள். "வேங்கடாசலபதியே! ஸ்ரீநிவாசா உன்னை வேண்டிக் கொண்டு, உனக்குக் காணிக்கையாக செலுத்துவதாக நாங்கள் சேர்த்து வைத்த பணத்தைச் செலவு செய்ய எடுத்துக் கொண்டோம். வட்டியைச் செலுத்துகிறோம்! திருப்பதிக்கே நேரில் வந்து உண்டியலில் காணிக்கையைச் செலுத்திவிடுகிறோம்" என்று அசலும் வட்டியும், வட்டிக்கு வட்டியுமாகப் பணத்தைச் சேர்த்து வந்து அவர்களாகவே செலுத்துகிறார்கள்.

இப்படிச் செய்யவில்லையென்றால், நான் என்னவோ, அவர்களுக்கு கஷ்டங்களைக் கொடுப்பதையே என்னுடைய வேலையாக வைத்திருக்கிறேன்" என்று தங்கள் அறியாமையினால், என்னை வட்டிக்காசுகளைப் பெறுபவனாக நினைக்கிறார்கள். "திருப்பதி வேங்கடாசலபதிக்குக் காணிக்கை செலுத்துவதாக பிரார்த்தனை செய்து கொண்டு அதைச் செலுத்தவில்லையென்றால், வட்டிபோட்டு வாங்கி கொள்வான் வேங்கடவன்!" என்று என்னுடைய பெயர் பிரசித்தமாகியிருக்கிறது.

அவர்களிடமிருந்து நான்பெறும் காணிக்கைப் பணத்திற்கு அவர்களிடமிருந்தே வட்டிக்கு வட்டிக்கு வாங்கிவரும் முதலில்லாத வட்டிக்கடை வியாபாரத்தை நான் நடத்திவருகிறேன். நீ தான் அவர்களுக்குத் திரவியத்தைத் தருகின்ற திருமகள். அந்தத்தனத்திலிருந்து,

Koviloor Digital Library

தனத்தைப் பெற்று, குபேரனுக்கு நானும் வட்டியை மட்டும் வருஷாவருஷம் செலுத்திக் கொண்டு வருகிறேன். இவ்வாறு எனது அரசாட்யை நடத்திக் கலியுகமுடிவில் குபேரனுடைய கடனைத் தீர்த்து நாம் வைகுண்டத்துக்குச் செல்வோம்'' என்று கூறினார்.

அதற்கு லக்ஷ்மி, தன் நாதனைப் பார்த்து, "நியம நிஷ்டையோடு, பஞ்சபூதங்களையும் ரட்சிக்கும் உங்களிடத்தில், ஐம்புலன்களையும் அடக்கித் தியானித்து, பக்தி செலுத்துவோருக்கும் பிரமபக்தர்களுக்கும் அவர்களுடைய பூர்வஜன்ம, புண்ணிய பாக்கியங்களுக்கும் பிராப்தங்களுக்கும் ஏற்ப நான் திரவியத்தைக் கொடுப்பேன். அவர்கள் அந்தத் திரவியத்தை நியாயமான வழிகளில் விருத்தி செய்தும் செலவிட்டும் வருவார்களானால் கஷ்டங்கள் எதுவும் அவர்களுக்கு, நமது கிருபையினால் நேராது. அவர்கள் அந்தத் தனத்தையே அநியாயமான வழிகளில் செலவிட்டால் அத்தனத்தினால் மானிடர்க்குக் கஷ்டங்கள் உண்டாகும். அப்போது நாம் அவர்களைக் காப்பாற்றுவது கஷ்டமல்லவா?'' என்று பகவானைக் கேட்க, அதற்கு ஸ்ரீநிவாச மூர்த்தி கூறியதாவது.

"மானுடர்க்குத் திரவியத்தைக் கொடுப்பது உனது கடமை அவர்களுக்கு வியாதி முதலிய உபாதைகளை உண்டாக்கி, அந்தத் தனத்தை அவர்களிடமிருந்து எப்படி வரவழைத்துக் கொள்ள வேண்டும் என்பதும் அவர்களை எப்படிக் காப்பாற்றுவது என்பதும் எனது கடமை. நீ கொடுத்த திரவியத்திலிருந்து ஒரு பகுதியைத் தானதருமம் செய்வதற்கும் அதிலிருந்து கொஞ்சமாவது காணிக்கையும் செலுத்துவார்களானால் அவர்களுக்குத் தனபாக்கியம் உன்னருளால் உண்டாகும்.

Koviloor Digital Library

அப்படிச் செலுத்தாதவர்கள் அந்தத் தனத்தையுமிழந்து தரித்திரர்களாக எனது க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்து, என் க்ஷேத்திரத்திற்கு வருகின்ற பக்தர்களுக்குச் சேவை செய்து அவர்களுடைய அனுக்கிரகத்தைப் பெற்று, என்னையே தியானித்துக் கொண்டு மறுபிறவியில் என்பக்தர்களாக அவதரித்து நற்கதியை அடைவார்கள். இப்படி யெல்லாம் செய்யாமல், என் பக்தர்களை மோசம் செய்து, எனக்குப் பக்தர்கள் சமர்ப்பிக்கும் திரவியங்களைப் பராதீனம் செய்து, என்னை லக்ஷியம் செய்யாமல் இருந்தால், இந்த க்ஷேத்திரத்தில் பாவிகளாகவும் அங்க ஹீனர்களாகவும் குருடர்களாகவும் ரோகிகளாகவும் ஜன்மித்து, இந்த க்ஷேத்திரத்திலேயே பிச்சையெடுத்துக் கொண்டு, அநேகக் கஷ்டங்களை அனுபவித்துக் கடைசியில் என் பக்தர்களின் ஆசீர்வாதங்களைப் பெற்று, என்னுடைய பாதாரவிந்தங்களை அடைவார்கள். இதில் நீ சந்தேகமடைய வேண்டாம்!" என்று சொன்னார்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட லக்ஷ்மிதேவி மகிழ்ச்சியடைந்து பகவானைப் பார்த்து, "ஸ்வாமீ! நான் உங்களிடம் பொய் சொல்ல மாட்டேன். உண்மையைத்தான் சொல்கிறேன். கலியுகத்தில் மனிதர்கள் தான தர்ம பரோபகாரங்களைச் செய்து, அதை உங்களுக்கு அர்ப்பணம் செய்பவர்களுக்கு நான் எனது எளிய சம்பத்துகளை அளிப்பேன். அப்படி உங்களுக்கு அர்ப்பணம் செய்யாத லோபிகளுக்குத் தனம் நசிக்கச் செய்வேன், என்று சொல்லித் தன் நாதனின் அனுமதிய்யைப் பெற்று கபிலாஸ்ரமம் சேர்ந்து, தன் இதயத்தில் ஸ்ரீநிவாசனின் ரூபத்தை நிறுத்தித் தவஞ் செய்து வந்தாள்.

Koviloor Digital Library

54. சுகமுனிவர், சூரியனுக்குச் சிருஷ்டி, ஸ்திதி, லயங்களை அறிவிப்பது

இது, இப்படியிருக்க, சுகாஸ்ரமத்தில், தவம் புரிந்து வந்த, சுகப்பிரம்ம ரிஷியானவர், இந்த உலகத்தைவிட்டுப் பரமபதமடைய விரும்பிப் புறப்பட்டு, வானுலகம் நோக்கி, தமது யோகசக்தியால் பறந்து சென்று கொண்டிருந்தார். வானத்தில் மிகவும் உயரமாகப் பல்லாயிரம் மைல்கள் கடந்து சென்று சூரிய மண்டலத்தை நெருங்கினார்.

அந்த மண்டலத்தையும் கடந்து செல்ல அவர் முயன்றபோது, சூரியன் சுகப்பிரம்மரிஷியை நோக்கி, "சுகப்பிரம்மமுனிவரே! நீங்கள் தவத்திலும் யோகசக்தியிலும் சிறந்த சாதனை புரிந்தவர்கள். யாருமே அணுகமுடியாத ஒளியும் அனலின் வெப்பமும் நிறைந்த என்னுடைய மண்டலத்தையே கடந்து செல்ல நீங்கள் முயற்சிக்கிறீர்கள். ஆனால் உங்களுடைய மூதாதையர்கள் எல்லாம் இங்கு என் உலகத்தில் பிதுருக்களாக வசித்து வரும்போது நீங்கள் மட்டுமே சுவர்க்கலோகத்திற்குச் செல்லமுடியுமா? அதுவும் மனித சரீரத்தோடு அங்கு செல்வது என்பது முடியாத காரியம். நீங்கள் ஒரு பிரம்மசாரி நீங்கள் விவாகம் செய்து கொண்டு, புத்திர சந்ததிகளைப் பெற்று, உங்களுக்குப் பதிலாக உங்களுடைய புத்திரனை இந்த உலகத்தில் வசிக்கச் செய்யாமல், எத்தகைய தவயோக சக்திகளாலும் நீங்கள் கர்மபூமியில் உங்கள் கடமையைச் செய்யாமல் சுவர்க்கத்திற்குப்போக முடியாது. நீங்கள் பிரமச்சரியம், கிரகஸ்தம் வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்ற நான்கு வகை ஆசிரம தர்மங்களில், பிரம்மசரிய ஆஸ்ரமத்திலிருந்து கொண்டே, மற்ற ஆசிரம தர்மங்களை விட்டு விரக்தி யடைவது சரியல்ல.

Koviloor Digital Library

பூர்வத்தில் வேதங்களை ஒழுங்காகப் படித்துத் தேவரிஷிகளின் கடன்களைத் தீர்த்தீர்கள். இனி நீங்களும் ஒருத்தியை மனைவியாக அடைந்து, நல்ல புத்திரர்களைப் பெற்று, நீத்தார் கடன்களாகிய பித்ரு ருணங்களைத் தீர்த்து, பிரம்ம தேஜஸையடைந்தீர்களானால்தான், நீங்கள் எனது மண்டலத்தைத்தாண்டி பரமபதம் சேரமுடியும். இல்லையென்றால் எனது மிகவெப்பமான கதிர்களினால் நீங்கள் எரிந்து சாம்பலாகிவிடுவீர்கள். நீங்கள் தினந்தோறும் சூரிய நமஸ்காரம் செய்து என்னையே அதிகாலையிலும் நடுப்பகலிலும் மாலை நேரத்திலும் ஆகிய மூன்று வேளைகளிலும் 1008 காயத்ரி மந்திரங்களைச் செபித்து வந்ததால்தான், உங்களால் இப்போது எனது மண்டலத்திற்கு வரமுடிந்தது. ஆகையால்தான், நான் உங்களுக்கு எனது அறிவுரையைக் கூறுகிறேன்'' என்று புன்னகையுடன் சொன்னார். அந்த வார்த்தைகளைக் கேட்ட சுகமுனிவர் சூரியனைப் பார்த்து, ''மார்த்தாண்டா! நீயே மும்மூர்த்திகளின் ஆன்மாவாக விளங்குபவன். கர்மாவுக்கு சாட்சியாக இந்த ஜெகத்திற்கே ஒரு பிரத்யக்ஷ தெய்வமாகப் பிரகாசித்து வரும் உனக்குத் தெரியாத தர்மங்களே இல்லை. ஆயினும் எனக்குத் தெரிந்த வரை சிலவற்றைச் சொல்லுகிறேன்.

அது எப்படியென்றால், பூர்வபுண்ணிய வசத்தால், பிதாவின் மூலம் மாதாவின் கர்ப்பத்தில் தேகத்தையடைந்து இந்தப் பூமியில் பிறந்தது முதல் உதய அஸ்தமனங்களுண்டாவதாலேயே, புருஷனின் ஆயுள் க்ஷீணித்துப் போகிறது. அதுபோலவே பெண்ணின் ஆயுளும் நசித்துப் போகிறது. எனவே இந்தச் சரீரங்களை அநித்யம் என்று நினைத்து நான்குவகை ஆஸ்ரமங்களையும் நடத்தி, தேவ, ரிஷி, பித்ரு

Koviloor Digital Library

தர்ப்பணங்களைச் செய்வதான, பித்ருக்கள், ரிஷிகள், தேவர்களுக்குரிய குணங்களைத் தீர்த்து, ஞான வைராக்கியங்களைக் கற்றுக் கொள்வது வேதோக்தமான கர்மமாகும். நான்கு வகை ஆஸ்ரம தர்மங்களில் நடப்பது பொதுவான நியாயமாகும். ஆனால் இந்த உடல், நீரில் எழும்பும் நீர்க்குமிழியைப் போன்று அநித்யமானது. ஆகையால், ஞானியானவன், கர்மாவான இந்த சம்சார சாகராரண்யத்தில் பிரவேசிக்க மாட்டான். ஞானியர்கள் சூனியத்திலும் வசித்திருப்பர், சூரியமண்டலத்தின் வெப்பமோ, சந்திர மண்டலத்தின் குளிரோ அவர்களை ஒன்றுஞ் செய்துவிடாது. சூரியத்தில் எந்த உயிருமே வாழமுடியாது அங்கும் ஞானியர்கள் வாழ்வார்கள். எனவே கர்மபந்தமான தாய், தந்தை, மூதாதையர் என்பதும் பிதுர்க்கள் என்பதும் ஞானியர்க்கில்லை. ஜீவாத்மா பரமாத்மாவோடு ஐக்கியமாக வேண்டித் திட வைராக்கியமாகச் செல்லும் போது எத்தகைய வெப்பமும் குளிரும் தீமைகளும் அந்த ஜீவாத்மாவை அழித்து விட முடியாது. இதுவே எனது முடிவான நம்பிக்கை" என்றார் சுகமுனிவர்.

55. சாயாசுகரின் கதை

அவ்வார்த்தைகளைக் கேட்ட சூரிய பகவான் சுகமுனிவரை நோக்கி, "முனிவரே! பிரம்மாவானவர், மனிதர்களைப் படைத்தபோதே சதுராஸ்ரம தர்மங்களையும் ஏற்படுத்தி, இந்த உலகவாசிகள் அவற்றை அனுசரித்து வரவேண்டும் என்று நியமித்திருக்கும்போது நீங்கள் அந்த விதியை மீறி, எனது மண்டலத்தைத் தாண்டி செல்ல முயற்சி செய்கிறீர்களே!" என்றான். அப்போது சுகமுனிவர், சூரியனைப் பார்த்து, "பாஸ்கரா, நான் சொல்வதைக் கேட்பாயாக, நான்கு வகை தர்மங்களை

Koviloor Digital Library

மோக்ஷப் பிரதமமானது என்று, என் தந்தையே எனக்குச் சொல்ல, நான் அதைக் கேட்டு விட்டு, அவரிடத்தில், "தந்தையே தர்மத்தைப்பற்றிய விவேகஞானமடைந்தவன் மற்ற ஆஸ்ரமதர்மங்களை அனுசரிக்கவேண்டுமா. வேறு எந்த விதிமுறைகளை அனுசரிக்கவேண்டுமா?" என்று கேட்டேன். அதற்கு என் தந்தை, என்னுடைய சந்தேகத்தைப் பற்றி ஜனக மகாராஜனிடம் போய்க் கேட்டால், அவர் அதற்குத் தக்க பதிலைச் சொல்வார் என்று கூறினார்.

பிறகு, நான் மிதிலைக்குச் சென்று ஜனகமஹாராஜனைச் சந்தித்து, எனது சந்தேகத்தைத் தெரிவித்தேன். ஜனகர், என்னைப் பார்த்து, "முனிபுங்கவா! மனோதிடம் ஏற்படுவதற்குத்தான் ஆசிரமதர்மங்களை அனுசரிக்க வேண்டும். ஒரே ஆஸ்ரமத்திலேயே அந்த மனோதிடத்தையும் மனப்பக்குவத்தையும் அடைந்தவர்கள், மற்ற ஆஸ்ரமதர்மங்களை விட்டு மிக்கவிரத்தி பெறவேண்டும்" என்று எனக்குப் போதித்தார். அதிலிருந்து நான் மிகவும் வைராக்கியமடைந்தேன். பிரம்மச்சாரியான என்னையும் ஒரு குடும்பஸ்தன் ஆகவேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்களே!" என்றார்.

அதற்கு சூரியன், "ஞானகர்மங்களை நடத்திக் கொண்டு, சர்வ சமத்துவமுற்று பூமியைப் பரிபாலித்துக் கொண்டு புத்திரசந்ததிகளையும் பெற்றவரான ஜனகமகாராஜரா உங்களை விரக்தியடையும்படிக் கூறினார்? விஷ்ணு தேவனில் பிரம்மனும், பிரம்மனில் வசிஷ்டரும், வசிஷ்டரிடத்திலிருந்து சக்தியும், சக்தியிலிருந்து பராசரரும் பராசரரிலிருந்து வியாசரும், வியாசரிலிருந்து நீங்களும் ஜன்மித்து, நீங்கள் மட்டும் சந்ததியில்லாமல் என் மண்டலத்தைத் தாண்டிச்

Koviloor Digital Library

செல்லமுடியுமா? புண்யாத்மனான நற்புத்திரன் ஒருவனைப் பெற்று, பூவுலகில் அவனை வசிக்கச் செய்து போக வேண்டும். உனது பித்ருக்களே இங்கு இருக்கிறார்கள். அவர்களுக்குப் பணிவிடை செய்ய ஒரு புத்திரனையாவது நீ பெறும் வரையிலும் உன்னால் எனது மண்டலத்தைத் தாண்டிச் செல்ல முடியாது" என்று சூரியபகவான் சொன்னார். அப்போது சுகமுனிவர், தனது தவ மகிமையாலும் யோக வலிமையினாலும் தம்மைப் போன்றதொரு சாயாசுகனைச் சிருஷ்டித்தார். அப்போது அந்த சாயாசுகன், தன் தந்தையான சுகபிரம்மரிஷியை நோக்கி, "தந்தையே வணக்கம்!" என்றான். சூரியதேவனையும் அவன் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து நின்றான்.

பிரம்மச்சாரியாகிய சுகமுனிவரை, சம்சாரியாகி, மனைவியுடன் சல்லாபித்து மகன் ஒருவனைப் பெற்றுக் கொள்ளச் சொன்ன, தன் எதிரிலேயே, மனைவியே இல்லாமல், எந்தவித பந்தபாசங்களுமில்லாமல் அழகியதொரு ஆண்மகனை சிருஷ்டித்த சுகபிரும்ம முனிவருடைய யோக வலிமையைக் கண்டு மகிழ்ச்சியடைந்த சூரியன், அந்தச் சாயாசுகனை நோக்கி, "நீ இந்தச் சுகமுனிவரால் பிறந்ததால், இந்த உலகத்தில் சாயாசுகன் என்ற பெயரைப் பெற்று விளங்குவாயாக!" என்று அவனை வாழ்த்தினார். சாயாசுகன் சூரியதேவனைக் கைகூப்பி வணங்கியவாறே, தன் தந்தையை நோக்கி, "தந்தையே நீங்கள் என்னைச் சிருஷ்டித்த காரணம் என்ன? அந்தக் காரணத்தை நீங்கள் தெரிவித்தால் உங்கள் விருப்பத்தை நான் நிறைவேற்றுகிறேன். இதுவே மகன் தந்தைக்கு செய்யும் கடமை" என்றான் சாயாசுகன். அப்போது சுகமுனிவர்,

Koviloor Digital Library

சாயாசுகனைநோக்கி, "மகனே நீ பூவுலகம் சென்று, காசி க்ஷேத்திரத்தையடைந்து அங்கு என்னுடைய தந்தையும் உனது பாட்டனுமாகிய வியாச முனிவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து, அவருடைய ஆசிகளைப் பெறுவாயாக" என்று சொல்லி அவனை அனுப்பி வைத்துவிட்டுச் சூரியனைப் பார்த்து, "பிரபாகரா! உனது கிருபையால்தான் நான் ஒரு புத்திரனைப் பெற்றேன். இனியாகிலும் உனது மண்டலத்தைத் தாண்டிச் செல்ல எனக்கு அனுமதி அளிக்கவேண்டும்" என்று வேண்டினார். அதற்கு, சூரியன் பதில் சொல்லாமல் சில வினாடிகள் சிரித்துவிட்டு, "முனிவனே! என் சொரூபமான ஜீவதத்துவத்தைச் சொல், கேட்போம்!" என்றார்.

அதைக்கேட்ட பிரமமுனிவர், சூரியனை நோக்கி, "ஜோதி சொரூபமான உம்முடைய பிரபாவத்தைச் சொல்வதற்கு நான் தகுந்தவனா? ஆயினும் எனக்குத் தெரிந்த வரையில் சொல்லுகிறேன்" என்று சொல்லி, சூரியனை வணங்கிவிட்டு, "பாஸ்கரா! பரப்பிரமம் என்கின்ற சாஸ்வதமான ஸ்வரூபத்திலிருந்து பிரணவ ஸ்வரூபமான ஒரு சப்தம் உண்டாயிற்று. அந்தச் சப்தம், வெளிப்பட்டதுடன் ஆகாயத்துடன் மோதியதால், உஷ்ணரூபமான பிரகாசம் உண்டாயிற்று. அந்த அக்னி, விஸ்தாரமாகப் பிரகாசித்து பிந்துவினுள்ளே வியாபித்ததால், அந்த பிந்துவே, திரவரூபமான சாரமே மஹாஜலமாக நிற்க, தேஜோரூபமான அந்தப் பரமாத்மா அந்த மஹாஜலத்தில் நின்றார்.

அப்போது தங்கமயமான பிரகாசமாய்ச் சில காலத்திற்குப் பல விருட்சங்கள் பலன்களைக் கொடுப்பது போல, அநேககோடி, பிரம்மாண்டங்களைச் சிருஷ்டித்து, அந்த பிரம்மாண்டத்தில் ஒவ்வொரு விதைக்கும்

Koviloor Digital Library

ஒவ்வொரு விருட்சமாய் அநேக விதைகளை அடைவதைப் போல, ஸ்வர்ணமயமான பிரகாசம் சூரிய ரூபமாக ஸ்தாவரஜங்கமங்களான பிரபஞ்சத்தை, தனது பிரபாவத்தினால் ஜீவனாகப் போக்ஷித்து, தன் பிரகாசத்தினால் நசிக்கச் செய்து, ஆலமரத்தின் விதை, பூமி, ஜலம் ஆகியவற்றின் சம்பந்தத்தினால் விருஷாகிருதியாகி, அந்தவிருட்சத்தில் ஜீவனாக நிலைத்ததைப் போல, தங்கமயமான பிரகாசம், சப்த பர்வதம், ஸப்த சமுத்திரம், ஸப்தலோகங்கள் பிரம்மாண்டமாய் நிலைத்து சூரிய ரூபமாகப் பிரகாசிக்கின்றது. அந்த ஸ்வரூபமே சகல பூதங்களிலும் ஜீவனாக எண்ணெயுடன் சேர்ந்து எரியும் விளக்கின் வர்த்தியைப் போல ஞானம் பெற்று, அந்த ஞானத்தினால் உறையும்.

செவிகளால் கேட்கவும் வாயாரப் பேசவும் தேகத்தினால் தொடவும், கண்களால் பார்க்கவும் மூக்கினால் முகரவும் கைகளால் கொடுக்கவும், கவனஞ் செலுத்தவும், விசர்ஜனம் செய்யவும், மனோ புத்திசித்த அகங்காரம், சம்சயம், நிச்சயம், விசாரங்கள் தெரிந்ததுமே, சூக்ஷ்மமான ஸ்வரூபமாகும். இனி பரஸ்வபாவம் எப்படிப்பட்டதென்றால் ஆதிமுதல் ஸமஸ்த பூதங்களில் மேக மண்டலத்திலிருந்து, மழை உண்டானால் பூமியிலுள்ள நதி கிணறுகள், தாடகங்களில் தண்ணீர் நின்றுள்ளது போல, ஈஸ்வரனுடைய கிருபையினால் சரீரத்தின் ஜலமானது அநேக கோடி ஜீவராசிகளிலும் சதுர் வித பூதங்களிலும் நிலைத்திருக்கும்" என்றார். அதைக்கேட்ட சூரிய பகவான், சுகமுனிவரைப் பார்த்து, தங்கமயமான பிரகாசம் இந்த சமஸ்த பூதங்களிலும் நிலைத்திருக்கும் என்றால் அது எவ்விதமாகப் பிரவேசித்துப் பிறகு தனது இருப்பிடத்திற்குத் திரும்பவும்

Koviloor Digital Library

எப்படிப் போய்ச் சேருகிறது என்பதைத் தெரியப்படுத்தவும்" என்று கேட்டார்.

அதற்குச் சுகமுனிவர், "பிரம்மாண்டத்தைப் பிரகாசிக்கச் செய்து, அந்தரமாய்த் தெரிந்தது. அதிலுள்ள சாரமே காலவசத்தால் திரவமாயும் மேகங்களாகவும் குளிர்ச்சியாய் இந்தப்பூமியில் மழையினால் நிறைந்து, பயிர்கள் வளர்ச்சி யடைந்து, அந்தப் பயிர்களின் சாரமான ஜீவசத்தாக நின்று, மனிதர்களுக்கு அநேகவிதமான ஆகார பதார்த்தங்களாக, பசுக்களுக்கு புல்லாகவும் சர்ப்பத்திற்கு வாயுரூபத்தில் அநேக ஜீவ கோடிகளுக்கும் அநேக விதங்களில் ஆகாரமாய் சகூரத்திலுள்ள ஜடாக்னியில் ஜீரணமடைந்து, பாலிலிருந்து நெய்யானது பிரிவதைப்போல, பிந்து ரூபமாக, முதலில் புருஷர்களில் நின்று, பிறகு ஸ்திரிகர்ப்பத்தில் ஸ்வரூபமடைந்து விருத்தி பெற்ற பிறகு ஜென்ம காலத்தையடைந்து, ஒரு ரூபமடைந்து, அந்தக் கருவில் ஆறு மாதங்களுக்குமேல் தேஜஸ் அடைந்து, விருத்தி பெற்றுப் பிறகு பூமியில் பிறந்து, அவரவர்களுடைய கர்மானு சாரங்களை அனுபவித்துப் பிறகு நாசமடைவார்கள்.

அது எப்படியென்றால், வாதம், பித்தம், கபம் முதலியவியாதிகளால் பூதங்கள் உள்ளுலாவுதலால் ஏரிகள், தடாகங்கள் முதலிய நீர்நிலைகளிலுள்ள ஜலத்தைச் சூரிய கிரணங்கள் ஆகர்ஷிப்பதைப் போல,சர்வபூதங்களிலுமுள்ள ஜீவனையும் ஆகர்ஷித்து விடுகிறான். அப்போது ஸ்வரூபம் சூரிய கிரணங்களில் சேர்ந்து, வாயு மண்டலத்தில் பிரவேசித்து, ஆகாயமார்க்கத்தில் சந்திரமண்டலத்தையடைந்து சந்திரன், சூரியனில் ஐக்யமாகும் போது, சூரியனில் சேர்ந்து கர்மானுசாரமாய் மறுபடியும் ஜன்மத்துக்கு வரும்" என்று

Koviloor Digital Library

கூறினார். சூரியன், சுகமுனிவரைப்பார்த்து, "இனி தேவர்களின் சுகஸ்திதி லயங்களைச் சொல்லுங்கள்" என்றார். அப்போது சுகமுனிவர், "தேவா! ஆலமரத்தின் விதைக்கு ஆயிரம் வருஷமும் நெல்லின்விதைக்கு ஆறு மாதங்களும் பூமியின் சம்பந்தமுண்டு. பிரம்மாதி தேவ சரீரங்களுக்கும் கால பேதங்கள் உண்டு. தேவலோகத்தில் தேவர்கள் தங்கமயமான பிரகாசத்தை அதிகமாகப் பெற்று தீர்க்காயுளை அடைகிறார்கள். சாதாரண தேவர்களுக்குச் சூரியனுள்ளவரையும் இந்திராதி லோக பாலகர்களுக்கு பிரம்மாண்ட பிரளய வரையும் கால அளவாகும். இவை எல்லாவற்றுக்கும் ஆதார பூதமாய் நித்யபரிபூரணராய வாக்மானஸ்தீதராய் விளங்கும் ஸ்ரீமந்நாராயணன் பிரகாசிப்பதற்குப் பிரதியாய்ப் பிரகாசிக்கின்றது நீங்கள் தான் என்று நான் நிச்சயித்துக் கொண்டேன்" என்றார்.

அதைக்கேட்ட சூரியன், மகிழ்ச்சியடைந்து சுகமுனிவரைப் பார்த்து, "ஓ முனீந்திரா! உங்களுடைய மனோதிடமும் யோக சக்தியும் எத்தன்மையாகவுள்ளன என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் நான் இந்தக் கேள்விகளைக் கேட்டேன். நீங்கள் எனது கேள்விகளுக்கெல்லாமே சரியான பதிலைச் சொன்னதால் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். இனிமேல் நீங்கள் எனது மண்டலத்தைத் தாண்டி மேலுலகம் சென்று பரமபத மடையலாம்" என்றார்.

உடனே சுகமுனிவர், சூரியபகவானை நமஸ்கரித்து, சூரியமண்டலத்தைத் தாண்டி பரமபதம் போய்ச் சேர்ந்தார். அப்போது சாயாசுகன், தன் தந்தையின் கட்டளைப்படி காசியை அடைந்து, அங்கு வேதவியாசருக்குப் பணிவிடைகள் செய்து கொண்டு,

Koviloor Digital Library

சிலயுகங்கள் கடந்த பிறகு, கிருஷ்ணாவைதுபாயனரின் அனுமதியைப் பெற்று சுகாஸ்ரமம் சேர்ந்து, அங்கு ஒரு கன்னிகையை மணந்து அங்கேயே வசித்து வந்தார்.

56. லக்ஷ்மி, சுகாஸ்ரமத்தை அடைதல்

லக்ஷ்மிதேவி, கபிலாஸ்ரமத்தில், தன் நாதனைக் குறித்து தவஞ் செய்து கொண்டிருந்தாள். சிலயுகங்கள் கடந்து சென்றன. சேஷாசலத்திலுள்ள ஸ்ரீநிவாசன் தன் மனதில், "நான் முதலில் லக்ஷ்மியைக் குறித்து தவஞ் செய்தேன் என்பதற்காக இப்போது என்னைக் குறித்து என்தேவி லக்ஷ்மி தவஞ் செய்கிறாள். இந்த வீரலக்ஷ்மியை "பூலோகத்தில் நீ வாசம் செய்ய வேண்டும்" என்று ஸ்ரீநிவாசன் நிஷ்டையை முடித்துக்கொண்டு, லக்ஷ்மியின் இதயத்தில் பிரகாசித்து வந்த தனது ரூபத்தை, தவஞ் செய்யும் லக்ஷ்மியின் எதிரில் பிரத்யக்ஷமாகும்படிச் செய்தார்.

அப்போது லக்ஷ்மி, தன் நாதன் பிரத்யக்ஷமாகி விட்டார் என்பதை அறிந்து, தன் தவத்தையும் தியானத்தையும் முடித்துக் கொண்டு, கண்களைத் திறந்து பார்த்தாள். ஆனால், தன் எதிரில் ஸ்ரீநிவாசன் இல்லாததால் தன் தவம் விபலமாயிற்று என்று நினைத்து சிந்தனையற்றுக் கபில மஹரிஷியிடம் சென்றாள். அந்த முனிவர் லக்ஷ்மியை நோக்கி, "தேவீ தாயே, உனது சபலத்தினால்தான் உனது தவம் விபலமாயிற்று. இனி நீ தவம் செய்வதைவிட்டுச் சுகாஸ்ரமம் என்கிற பத்மஸரோவரத்தில் சென்று சேர்ந்துவிடுவாயாக. அங்கு சாயாசுகன் உன்னைப் பூஜிப்பார். நீ அங்கு சென்று உனது நாதன் கோரியபடி பக்தர்களுக்குத் தரிசனம் கொடுத்து,

Koviloor Digital Library

அவர்களுக்கு சர்வசம்பத்துகளையும் அளித்து வருவாயாக!'' என்று சொன்னார். அந்த வார்த்தைகளைக் கேட்டு, தன் நாதனின் விருப்பத்தைப் பரிபாலிக்க எண்ணிய லக்ஷ்மிதேவி, பாதாளத்திலுள்ள ஆதிசேஷனைத் தன் மனதில் நினைத்தாள்.

உடனே ஆதிசேஷன் பிரத்யக்ஷமாகித் தண்டப் பிரணமங்கள் செய்து, லக்ஷ்மிதேவியின் மனோ பாவத்தை அறிந்து வேண்டிய வஸ்திராபரணங்களும் நவரத்தி னங்களாலான கிரீடமும், சந்தனம் முதலிய பரிமள திரவியங்களை சமர்ப்பிக்கவும், தங்கமயமான இரதத்தில் ஏறிக் கொண்டு, இரதத்திற்கு இருபக்கங்களிலும் பலம் வாய்ந்த யானைகளையும் குதிரைகளையும் பேரிகை, முதலிய வாத்யங்களுடன் தேவர்கள் தொழ, நடுப்பகலில் பாதாளத்திலிருந்து புறப்பட்டு பூமியைப் பிளந்து கொண்டு சேஷாசலத்துக்குத் தெற்குப் பாகத்தில் பிரகாசிக்கின்ற பத்மஸரோவரம் என்னும் இடத்தில் தோன்றினாள்.

அங்கு, சாயாசுகர், லக்ஷ்மிக்கு சாஷ்டாங்க தண்டப் பிரணமங்கள் செய்து அநேகவிதங்களில் பிரார்த்தனை செய்தார். ஆகாய மார்க்கத்தில் தேவர்களும் கருட, கந்தர்வ கின்னரகிம்புருடர்களும் வீரலக்ஷ்மியின் மேல் புஷ்பமாரி பொழிந்து, ஜெயஜெய வென்று கோஷங்களிட்டனர். இப்படித் தேவர்கள் செய்யும் சந்தோஷ கோஷங்களை, சேஷாசலத்திலிருந்த ஸ்ரீநிவாசப் பெருமாள் கேட்டு மகிழ்ச்சியுடன் தமது கருடன்மீது ஏறிப்புறப்பட்டு, பத்மஸரோவரம் சேரும்போது பிரம்மா ஈஸ்வரர் ஸ்ரீநிவாசனைச் சந்தித்து, திருமூர்த்திகளும் ஆனந்தமாக பத்மஸரோவரத்தில் ஆதிலக்ஷ்மியைக் கண்டு வணங்கிக் கொண்டாடினார்கள்.

Koviloor Digital Library

பிரம்மதேவன் ஸ்ரீநிவாசனைப்பார்த்து, பூர்வத்தில் வீரலக்ஷ்மியாய் இருந்து இந்த பத்மஸரோவரத்தில் ஆதிலக்ஷ்மியாகத் தோன்றினாள். இவ்விடத்தில் ஓர் அழகான ஆலயத்தைக்கட்டி அந்த ஆலயத்தில் லக்ஷ்மியை நீ வசிக்கச் செய்தால், கார்த்திகைமாதம் உத்தராஷாட வெள்ளிக்கிழமையன்று, இந்தப்புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தவர்களுடைய சர்வ பாவங்களும் நீங்கும். அவர்கள் சகல சௌபாக்கியங்களையும் ஐஸ்வரியத்தையும் அடைவார்கள்'' என்று சொன்னார். அந்த வார்த்தைகளைக் கேட்டு ஸ்ரீநிவாசன், லக்ஷ்மி தேவியைப் பார்த்து, பிரம்மாவின் விருப்பம் இவ்வாறு உள்ளது. என்னுடைய விருப்பம் என்னவென்றால் சேஷாசலத்தில் விஜயலக்ஷ்மியுடன் நீயும் நானும் வசித்தால் நன்றாக இருக்கும்'' என்று சொன்னார்.

லக்ஷ்மி தன் நாதனைப் பார்த்து, "நாம் பிரம்மதேவரின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியிருப்பதால் எனக்கு இவ்விடத்திலேயே ஒரு ஆலயத்தை நிர்மானித்து முன்பு நீங்கள் எனக்காகத்தவம் செய்த இந்தச் சுகக்ஷேத்திரத்தைப் பவித்திரமாக்கி என்னை இவ்விடம் வசிக்கச் செய்யவேண்டும்'' என்று பிரார்த்தனை செய்தாள்.

ஸ்ரீநிவாசன், லக்ஷ்மியின் பிரார்த்தனையை அங்கீகரித்து, பத்மஸரோவரத்தில் கிழக்குப்பாகத்தில் அழகானதொரு ஆலயத்தை நிர்மாணித்தார். பிரம்மதேவன் முதலிய தேவ முனிவர்கள், கந்தர்வர்கள் கொண்டாட அந்த அழகான ஆலயத்தில், லக்ஷ்மிதேவியைப் பிரவேசிக்கச் செய்து, சாயாசுகரால் பஞ்சராத்திர சாஸ்திர விதிப்படி சகல உபசாரங்களையும்

Koviloor Digital Library

செய்வித்து, மகாவைபவங்களுடன் ஸ்ரீதேவி சமேதராய், பத்மஸரோவரத்தில், தம்மை பிரதக்ஷினம் செய்து வரும் பக்தர்களுக்குத் தரிசனம் கொடுத்து பிரம்மா முதலிய தேவர்களுக்கு விருந்தளித்து, சந்தன தாம்பூல வஸ்திரங்களுடன் அவர்களைத் திருப்தி செய்வித்து ஸ்ரீநிவாசன் தன் கழுத்தில் அணிந்திருந்த மலர்மாலையை லக்ஷ்மியின் கழுத்தில் போட்டு, "உன் பூர்வாங்கத்தைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைந்தேன். இந்த சுகாஸ்ரமத்தில் நீ வசித்து, சாயாசுகர் செய்யும் பூஜைகளைப் பெற்று, உன்னை வழிபடும் பக்தர்களுக்கு தனகனக வஸ்து வாகனங்களை அளித்து, அவர்களைக்கொண்டு, எனக்குக் காணிக்கைகளைச் செலுத்தும்படி அவர்களைத் தூண்டும்படிச் செய்வாயாக" என்றார்.

அந்தவார்த்தைகளைக் கேட்ட, ஸ்ரீலக்ஷ்மிதேவி, ஸ்ரீநிவாசனை நமஸ்கரித்து, "ஒவ்வொரு வருஷமும் மார்க்கசிர சுத்த பஞ்சமியன்று, நீங்கள் ஒரு வஸ்திரமும் ஒரு புஷ்பமாலையையும் எனக்கு அனுப்பித் தரவேண்டும்" என்று கூறினாள். ஸ்ரீநிவாசப்பெருமானும் "அப்படியே ஆகட்டும்" என்று வரம் கொடுத்து, சாயாசுகரைப் பார்த்து, "இந்த க்ஷேத்திரத்தில் நீங்கள் ஒரு அக்ரஹாரத்தை அமைத்து, நீங்கள் இந்த லக்ஷ்மியைப் பூஜித்து வருவீர்களாக!" என்று சொல்லி, லக்ஷ்மியைப் பத்மஸரோவரத்தில் வசிக்கச் செய்து, ஸ்ரீநிவாசப்பெருமான், சேஷாசலத்தில் பிரசித்தி பெற்றவராக விளங்கி வந்தார்.

அவர் தம்மை வணங்க வரும் பக்தர்களால் கோவிந்த நாமஸங்கீர்த்தனங்களைச் செய்வித்துக் கொண்டு, அவர்களுடைய மஹாபவங்களைப் பரிகசிக்க செய்து, அந்தப்பக்தர்களுக்கு இகலோகத்தில்

Koviloor Digital Library

ஐஸ்வரியத்தையும் பரலோகத்தில் மோக்ஷத்தையும் கொடுத்துக் காப்பாற்றிக் கொண்டு, மங்களகரமாகப் பிரகாசிக்கின்ற ஸ்ரீநிவாசனுக்கு பெயரும் புகழும் பெருமையும் லக்ஷ்மியின் கடாட்சத்தால், பிரேமையினாலும் வளர்ந்தது.

57. வேங்கடாசலம் என்ற பெயருக்கு மற்றும் ஒரு கதை

காளஹஸ்தி என்ற ஒரு சிவஷேத்திரத்தில் புரந்தரன் என்ற உத்தம பிராமணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு மாதவன் என்ற குமாரன் ஒருவன் பிறந்தான். புரந்தரன் தனது மகனுக்குச் சகல சாஸ்திர புராணங்களையும் இதிகாசங்களையும் கற்பித்து, தக்கவயதில் அவனுக்கு விவாகம் செய்வித்து, குல ஜீவனமுறைப்படி ஜீவித்து வாழ்ந்து வந்தான். சில நாட்களுக்குப் பிறகு, புரந்தான் மரணமடைந்தான். மாதவன், தன் தந்தைக்குச் செய்ய வேண்டிய ஈமக்கிரியைகளை முறைப்படிச் செய்துவிட்டு, தன் மனைவியுடன் அன்யோன்யமாக இருந்து, இருவருமாகச் சேர்ந்து சதா தெய்வகாரியங்களையே செய்து கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் அந்தத் தம்பதிகள் இருவரும், விநோதமான வனத்திற்கு மகிழ்ச்சியாகப் பொழுது போக்கச் சென்றனர். அந்த வனத்தில் நல்ல யௌவனமும் சௌந்தர்யமும் கொண்ட ஒரு சண்டாள ஸ்திரீ, மாதவனின் பார்வையில் பட்டுவிட்டாள். மாதவன், அந்தப் பெண்ணின் மீது அடங்காத மோகம் கொண்டு, தன் மனைவியைப் பார்த்து, "நீ வீட்டுக்குச் செல்! நான்

Koviloor Digital Library

புஷ்பவனம் சென்று, பகவானுக்குப் புஷ்பங்களைச் சேகரித்துக் கொண்டு வருகிறேன். நீ வீட்டுக்குச் சென்று, பூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வைப்பாயாக" என்று சொல்லி விட்டு மனைவியைத் தன் வீட்டிற்கு அனுப்பிவிட்டான். பிறகு அந்தச் சண்டாள ஸ்திரீயின் வீட்டுக்கு மாதவன் மட்டும் தனியாகச் சென்றான். மாதவனைப் பார்த்ததுமே, அந்தச் சண்டாள ஸ்திரீ அவனை நமஸ்கரித்து, "இது சண்டாளர் வீடு, தாங்கள் இந்த அபவித்ரமான இடத்திற்கு ஏன் வந்தீர்கள்! திரும்பிப் போய்விடுங்கள்" என்று சொன்னாள். அந்தவார்த்தைகளைக் கேட்ட மாதவன், "என் மனமே சம்மதித்து விட்டதால் உன்னுடைய சண்டாளத்வம் போய்விட்டது. நீ என்னை விவாகம் செய்து கொண்டு சுகமாக இருக்கலாம்" என்று கூறி, அவள் அருகிலே சென்றான். அவள் அவனை எவ்வளவோ கெஞ்சியும் வேண்டாமென்று தடுத்தும், அவன் அவளிடம் மோகித்து, தன்வேகத்தைத் தணித்துக் கொண்டு, சண்டாளத்வமடைந்தான்.

இவ்வாறு அந்த நீசமங்கையுடன் சுகம் அனுபவித்துக் கொண்டு வருங்காலத்தில், ஒரு நாள் அவள் மரணமடைந்தாள். அவளுடைய மரணத்தைக் குறித்து மாதவன் மிகவும் மனம் வருந்தினான். மிகவும் மனவேதனையுடன் அந்தக் கிராமத்தைவிட்டு வெளியேறி, ஊர் ஊராகப் பிச்சையெடுத்துக் கொண்டு காலம் கழித்து வந்தான். வடதேசத்திலிருந்து சிலர், திருப்பதி தெய்வத்தைத் தரிசிக்க வந்து கொண்டிருந்தார்கள். மாதவன் அவர்களுடனேயே திருப்பதிக்குச் செல்ல முடிவுசெய்தான். அவர்கள் சாப்பிட்டு மீதமிருந்த சாப்பாட்டைப் புசித்துக் கொண்டு, அவர்களுடன் சேர்ந்து கபிலதீர்த்தத்தில் ஸ்நானம் செய்தான். உடனே,

Koviloor Digital Library

அவனுடைய தேகத்திலிருந்த பாவங்கள் எல்லாம் அவன் உடலை, அக்னி ஜ்வாலைகளைப்போல எரிக்கத் துவங்கின. மாதவன் ஸ்நானம் செய்து முடிந்ததும் சேஷாசல பர்வதத்தின் மீது ஏறிச் சென்று கொண்டிருக்கும் போது, அவனுக்குத் தான் செய்த பாவங்கள் எல்லாம் நினைவுக்கு வரத் தொடங்கியது. அவன் தனது பூர்வசரிதத்தை நினைத்துக் கொண்டு தான் சண்டாளத்வத்தை அடைந்ததற்காக மிகவும் வருந்தித் தனக்கு நேர்ந்த பாவங்களை நிவர்த்திக்க வேண்டும் என்று பகவானைப் பலவிதங்களிலும் பிரார்த்தனை செய்து கொண்டு, சேஷாத்ரியை அடைந்து, பக்தியுடன் ஸ்வாமி புஷ்கரணியில் ஸ்நானம் செய்து வெளியேவரும் போது, ஸ்ரீநிவாசப் பெருமான், மாதவனுக்கு எதிரே பிரத்யக்ஷமாகத் தோன்றி, "பிராமண உத்தமனே! நீ செய்த பாவங்கள் விலகிவிட்டன. உன் சண்டாளத்வம் போய்விட்டது. நீ பாண்டவ வமிசத்தில் சுதர்மரின் குமாரனாகப் பிறந்து, சோழராஜ்ய்த்தை ஆள்வாயாக!" என்று அவனுக்கு வரமளித்தார்.

அந்த வரத்தைப் பெற்ற மாதவன், ஸ்ரீநிவாசனை நமஸ்கரித்து, தன் தேகத்தைவிட்டு, பாண்டவவமிசத்தில் சுதர்மனின் குமாரனாக அவதரித்தான்.

58. தீர்த்த மஹாத்மியங்கள்

திருப்பதி சேக்ஷத்திரத்தில் 364 தீர்த்தங்கள் இருப்பதாகப் புராணங்களில் சொல்லப்படுகிறது. அந்தத் தீர்த்தங்கள் எல்லாமே மானிடர்க்குக் கோசரமாகாததால் அங்கு அமைந்துள்ள சில தீர்த்தங்கள் மகிமையுடன் திகழ்கின்றன. வைகுண்டதீர்த்தம், திருவதீர்த்தம்,

Koviloor Digital Library

ஜாபாலிதீர்த்தம் கோசர்ப்பதீர்த்தம், ஆகர்ஷணதீர்த்தம், சேஷதீர்த்தம், யுத்தகளதீர்த்தம், சக்ரதீர்த்தம், ஆகாச கங்கைதீர்த்தம், பாபவினாசனதீர்த்தம், குமாரதாரைத் தீர்த்தம், தும்புரு தீர்த்தம், ஸநக ஸநந்த தீர்த்தம், தேம்ம தீர்த்தம் ஆகிய இந்தத் தீர்த்தங்கள் பிரசித்தி பெற்றுள்ளன. ஆனால் இந்த ஷேத்திரத்திலுள்ள 364 தீர்த்தங்களுமே வைகுண்ட ஏகாதசிக்கு மறுநாள் துவாதசியன்று புஷ்கரணியில் சேருகின்றது. அதனால் அன்று சக்ரஸ்நானம் ஸ்வாமி புஷ்கரணியில் நடக்கும். ஆகையால் பக்தர்கள் ஆயிரக்கணக்கில் சக்ரஸ்நானத்துடன் ஸ்நானம் செய்வார்கள்.

59. ஸ்வாமி புஷ்கரணி மகிமை

ஸ்வாமிபுஷ்கரணி ஸ்நானம் ஸத்குரோர் பாத ஸேவனம், ஏகாதசீ விரதம்சாபி! தத்ரமத்யந்த துர்லபம் துர்லபம் மானுவும் ஜன்ம! துர்லபம் தத்ரஜீவனம், ஸ்வாமி புஷ்கரணி ஸ்நானம், தத்ரமத்யந்த துர்லபம்.

இந்தப் புஷ்கரணி கிருத யுகத்தில், வைகுண்டத்திலிருந்து கருடனால் பூமிக்கு கொண்டு வரப்பெற்று, கிரீடாத்திரியில் இருப்பதால் பிரம்மன், இந்திரன் முதலிய தேவர்கள், தசரதன், பஞ்சபாண்டவர்கள், அஞ்சனாதேவி முதலியவர்கள் இந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, அவரவர் கோரிக்கைகள் ஈடேறியதாலும், கலியுகத்தில் பக்தர்கள் பாகவதர்கள். இந்தப் புஷ்கரணியில் ஸ்நானம் செய்து சந்ததியில்லாதவர்கள் சந்ததியைப்பெற்றும், தரித்திரர்கள் ஐஸ்வரியத்தைப் பெற்றும், பக்தர்கள் மோட்சத்தைப் பெற்றும், நற்கதி அடைவதால் இந்தத்தீர்த்த பிரபாவம்,

Koviloor Digital Library

ஆதிசேஷனாலும் வர்ணிக்க முடியாது என்று புராணங்களில் கூறப்பட்டுள்ளது. திருமலையாத்திரைக்கு வருபவர்கள் இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதை முக்கியமாகக் கருதுகிறார்கள்.

60. ஸப்த பர்வத நாமங்கள்

வேம்!!என்றால் கொடிய பாவங்கள் என்றும், இடம் என்பது மனித உடல் என்றும், அத்ரி என்றால் தஹனம் என்றும் அர்த்தம். மனித உடலில் வாழும் காலத்தில் செய்யகூடிய சர்வ பாவங்களையும் தஹிக்கக்கூடிய புண்ய க்ஷேத்திரமாகையால் கலியுகத்தில் வேங்கடாத்திரி என்று பெயர் உண்டாயிற்று.

கிருதயுகத்தில், ஆதிசேஷ ரூபத்தில் 'சேஷாசலம்' என்று வேதங்களால் துதிக்கப்படுவதால் 'வேதாசலம்' என்றும், கருடனால் பூவுலகத்துக்கு கொண்டு வந்தபடியால் "கருடாசலம்" என்றும் விருஷபாசூரனை சம்ஹரித்து மோக்ஷத்தைக் கொடுத்ததால் "விருஷபாத்ரி" என்றும். திரேதாயுகத்தில், அஞ்சனாதேவி தவஞ் செய்து, ஆஞ்சநேயனைக் குமாரனாய்ப் பெற்றதால், அஞ்சனாத்ரி என்றும், துவாபரயுகத்தில் ஆதிசேஷனையும் வாயு தேவனையும் தூண்டி, ஆனந்த பர்வதத்தை இவ்விடம் கொண்டு வந்தபடியால் 'ஆனந்தாத்ரி' என்றும் 'கலியுகத்தில்' மகாசண்டாளத்துவமடைந்த மாதவனுக்குப் பகவான் பிரத்யக்ஷமாய்த் தோன்றி, அவனுடைய பாவங்களைப் போக்கியதால் வேங்கடாசலம் என்றும் பெயர்கள் வழங்கலாயிற்று. பக்தர்கள் அவரவர்கள் கோரிக்கைகளை இந்த ஷேத்திரத்தில் நிறைவேற்றிக் கொள்வதால், பக்தர்கள், இந்த ஷேத்திரத்தைப் பல்வேறு

Koviloor Digital Library

பெயர்களால் கொண்டாடுகிறார்கள். ஒரு சமயம் ஆதிவராகப்பெருமான், பூமிதேவிக்குச் சில கதைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஜனகமகாராஜன் சதானந்தமுனிவரை நோக்கி, "சீதையினால் நான் மிக்வும் கஷ்டப்பட்டு நொந்தேன். இராவணன் பிரம்மனைக் குறித்துக் கடுந்தவம் செய்து, வரம் பெற்றான். அதனால் கர்வமிகுந்தவனாக செருக்குக் கொண்டு, உலகத்தில் பலகொடுமைகளைச் செய்து வருகிறான். சீதை பருவமடைந்திருக்கும் செய்தியை அவன் கேட்டானாகில், என்மீது அவன் போர் தொடுக்க வருவான். ஊர்மிளை, சுருதகீர்த்தி, மாண்டவி முதலிய பெண்களுக்கு யாவரை வரர் என்று பிரமன் விதித்து உள்ளாரோ!

எனது முன்னோர்களில் தேவராதன் என்பவர் ஒரு மன்னர். அவர் தேவர்கள் முன்னிலையில் சீதையின் பொருட்டாக, ஒரு வில்லை என்னிடம் கொடுத்து வைத்திருக்கிறார். அரசர்கள் பலர் என்னிடத்திற்கு வந்து, சீதையை மணம் பேச வரும் போது, நான் பூசித்து வரும் அந்த வில்லை வளைத்தவனுக்கே மணம் செய்து கொடுப்பேன் என்று சொல்ல, அந்த வில்லைக்கண்ணால் கண்டவர்கள் நடுநடுங்கி, அதை வைத்துள்ள பெட்டியிலிருந்தே அதனை எடுக்க மாட்டாதவர்களாக இருந்தும், என்னோடு போருக்கு வருவார்கள். நான் அவர்களை யெல்லாம் இது வரையில் தனியனாகவே வென்றேன். இனிமேல் இராவணன் போருக்கு வந்தால் நான் எவ்விதம் அவனோடு தனியனாகப் போர் செய்வேன்! புதல்வியருக்கு மணம் முடிக்கவும் வேண்டும். ஆகையால் அவைகளை நினைத்தே நான் மனம்

Koviloor Digital Library

மயங்கியுள்ளேன். அவர்களுடைய திருமணம் நிறைவேற வேண்டும். அதற்குப்பிறகுதான் எனது மதிமயக்கம் தீரும் அதற்கு பிறகு மோட்சத்தை அடைய வேண்டும். என் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு நான் எந்தத் தெய்வத்தை வழிபாடு செய்ய வேண்டும்? என்பதை என்னிடம் சொல்லுங்கள்!" என்று வேண்டினார்.

அதைக் கேட்ட சதானந்தமுனிவர், "வேந்தரே! நீங்கள் யோக சக்தி வாய்ந்த ஜீவன்முக்தர். ஆகையால் நீங்கள் ஒரு காரியம் செய்யவேண்டும். ஒருகணமும் திருமாலை மறவாத வால்மீகி முனிவரிடம் நீங்கள் சென்று அவரை வணங்கி, அவர் அன்பாகக் கூறும் கதைகளைக் கேட்டுக் கொண்டிருந்தால், உங்களுக்கு அந்தபாக்கியம் உண்டாகும்" என்றார். ஜனகரும் வால்மீகி முனிவரிடம் சென்றார்.

அவரிடம் கதைகளைக் கேட்டுவரும்போது, ஒருநாள் நாரதமுனிவர் அங்குவந்தார். நாரதரை வணங்கி உபசரித்த வால்மீகி முனிவர் நாரதரை நோக்கி, "மாதவரே! திருமால் லக்ஷ்மியோடு நிலவுலகில் அடியவர்களின் துயர்களைவதற்கு எழுந்தருளியுள்ள ஒரு திருத்தலத்தையும் தூய்மையான கருமங்களைச் செய்வதற்கும் சிறப்பானதொரு இடத்தையும் கூறவேண்டும். நீங்கள் மூன்று உலகங்களிலும் சஞ்சரித்துக் கொண்டிருப்பவர்" என்று நாரதரை வேண்ட, அவர் கூறுகிறார்.

"ஆதிகாலத்தில் கைலாயமலையில் சுப்பிரமணியர் எனக்குச் சொன்னது என்னவென்றால், "நான் தாருகாசூரனைப் போரில் வென்று, அவன் தலையைக்

Koviloor Digital Library

கொய்து விட்ட பாவத்தினால் என்னை பிரம்மஹத்தி தோஷம் பற்றிக் கொண்டது. அதனால் நான் என்தந்தையிடம் சென்று "தந்தையே, சூரபத்மனைக் கொன்றதால் என்னை பிரம்ம ஹத்தி தோஷம் பற்றியுள்ளது. அதனால் என் வயிற்றில் அடங்காத பசியும் தணியாத நீர்வேட்கையும் மிகுந்துள்ளது. ஆகையால், அந்த வேதனைக்கு அஞ்சித் தங்களை அணுகினேன். இந்தப் பாவம் தீர்வதற்குத் தாங்கள்தான் திருவருள் செய்யவேண்டும்" என்று வேண்டிக் கொள்ள அதற்கு உருத்திரன் கூறிய மறுமொழி பின்வருமாறு

"தக்ஷபிரஜாபதி யாகம் செய்யும் போது மருமகனாகிய என்னை மதிக்காமலும் அழைக்காமலும், முறைப்படி நடக்காமலும் அக்கிரமமாகப் பேசினான். அதனால் நான் அந்த வேதியனின் தலையைக் கொய்துவிட்டேன். அந்தத்தலை என்கையில் ஒட்டிக் கொண்டது. பிரம்மஹத்திதோஷம் என்னைப்பற்றிக் கொண்டது. அதனால் நான் என் உள்ளம் வெதும்பிச் சோர்வுற்று, நாவறட்சியுடன் அதிகதாகம் கொண்டு, பசியால்மெலிந்தேன். என்கையில் ஒட்டிக் கொண்டிருந்த கபாலத்தோடு நான் பிச்சையேற்க எங்கு ஓடிஅலைந்தும் அந்தப்பாவம் என்னைவிட்டு நீங்கவில்லை. எங்கு சென்றால் அந்தப்பாவம் தீரும் என்றுநான் ஆலோசித்து மேருமலையை அடைந்து, அதன் சிகரத்தில் இருந்த பிரம்மதீர்த்தத்தில் மூழ்கிப் பிரமனைத் தியானித்தேன். பிரமன் என்முன் தோன்றினான். நான் நடந்தவற்றை அவரிடம் சொல்லி, அந்தப் பிரம்மஹத்தி தோஷம் நீங்குவதற்கு வழி சொல்லும்படிக் கேட்டேன். அதற்கு அவர் என்னைநோக்கி "திருமாலுக்கு மகிழ்ச்சியளிக்கும் கங்கையும் யமுனையும் சங்கமமாகும் திவ்விய தேசத்தில்,

Koviloor Digital Library

முனிவர்கள் பலரோடு சேர்ந்து, நானும் ஒரு முறை அமலமான யாகம் ஒன்றைச் செய்தேன். அப்போது மாதவப்பெருமான் என் முன்தோன்றி, உமது யாகம் நல்லமுறையில் நிறைவேறியது. யான் இந்த யாகத்துக்கு தேரில் வந்ததால், இந்த இடத்துக்குப் பிரயாகை என்ற பெயர் வழங்கும். இங்கும் கயாசிரார்த்த காரியங்களைப் புரியலாம். அப்படி கர்மங்களை செய்பவருக்கு, நான் அவர்களுடைய முன்னோர்களின் நரகவேதனையை மாற்றி நற்கதி கொடுப்பேன் என்று அருள் செய்து, அவ்வாறே பிரயாகையில் எழுந்தருளினார்.

நீரும் அங்கு சென்று, யாக கர்மங்களைச் செய்தால், உம்மைப்பற்றியுள்ள பிரம்மஹத்தி தோஷமும் நீங்கிவிடும்'' என்று கூறிவிட்டுத் தமது வாகனமாகிய அன்னப்பறவையின் மீது ஏறிப் பிரம்மலோகத்தை அடைந்தார். நான் திருமால் எழுந்தருளியுள்ள பிரயாகைக்குப் போனேன். அப்போதே என்னைப்பற்றியிருந்த •பிரமஹத்தி தோஷமும் பிரம்மகபாலமும் என்னைவிட்டு நீங்கின.

நானும் மகிழ்ச்சியடைந்து, பிரயாகையில், திரிவேணி சங்கமத்தில் நீராடி, திருமாலின் திருவை வணங்கி "இறைவா! இந்தத் தலத்தில் நான் என்றும் வாழும்படி அருள் செய்க" என்று வேண்டினேன். அவரும் அதற்கு மகிழ்ந்து, "இங்கு பிரயாகையில் நீரும் திருக்கோலம் கொண்டு, உறைவாயாக" என்றார். நான் அன்று முதல் இன்று வரை இந்தப் பிரயாகையில் வாழ்ந்து வருகிறேன்," என்று சிவபெருமான், முருகனுக்குச் சொல்லிவிட்டு, திருவேங்கட மலையின் பெருமையை உரைத்தார். என்று நாரதர், வால்மீகி

Koviloor Digital Library

முனிவரிடம் சொல்ல, அதைச் சதானந்தமுனிவருக்குக் கூறினார். சனகமுனிவர் அவர்மூலம் இந்த நல்லவிஷயத்தை அறிந்தார் என்று ஆதிவராக மூர்த்தி, பூமிதேவிக்குக் கூறினார். இவ்வாறு சௌனகாதி முனிவர்களுக்குச் சூதபுராணிகர் கூறினார்.

61. முருகப்பெருமான் தவம்



நாரதமுனிவர், ஒருசமயம் சதானந்த முனிவரிடம் கூறியதாவது "முனிவரே! சிவ சுப்பிரமணியன், தனது தந்தையாகிய சிவபெருமான் கூறிய பிரயாகையின் சரிதத்தைக்கேட்டு மகிழ்ந்து, "தந்தையே! நான் எனது பிரமஹத்தி தோஷம் நீங்க, தவஞ் செய்வதற்கு உரிய புண்ணியத் திருத்தலம் யாது? அது எங்கேயுள்ளது?" என்று கேட்க, அதற்குச் சிவபெருமான், "மகனே, அஞ்சனாகிரி எனவழங்கும் திருவேங்கடம் என்ற ஓர் மலையுண்டு.அது ஆதிசேஷனின் வடிவமாக அமைந்துள்ளது.

Koviloor Digital Library

அந்தத்திருமலையில் திருமால் சுவேதவராக மூர்த்தியாகத் தோன்றி, இரண்யாக்ஷனைக் கொன்று பூமிப்பிராட்டியாரைத் தனது கொம்பில் ஏந்திக் கொண்டு வந்து, தன் மடிமீது செம்மையாக அமர்த்திக் கொண்டு வீற்றிருக்கிறார். அந்தத்திருமூர்த்தியின் முன்பு, ஸ்வாமி புஷ்கரணி என்று வழங்கும் தீர்த்தத்தில் நீராடியவர்கள் தாம் நினைத்தவற்றை யெல்லாம் பெறுகிறார்கள். அந்தப் புண்ணிய தீர்த்தக் கரையிலே, உலகத்திற்கு உயர்ந்த நீதியையும் தர்மத்தையும் வழங்கிய மனு, முன்பு, ஒருமுறை, அருந்தவம் செய்தான்.

ஆதிவராகமூர்த்தி அவனுக்குக் காட்சியளித்து "உலகபாலகர்களில் ஒருவனாக, தென்திசையில் யமதர்ம ராஜனாக விளங்கி, நீ எல்லா உயிர்களின் பாவ புண்யங்களையெல்லாம் ஆராய்ச்சி செய்து அதில் பாவ பலன் மிஞ்சியவர்களுக்கு ஏற்ற தண்டனைகளை அளித்து வருவாயாக" என்று வரமளித்தார். வாயுதேவனும் அந்தத்திருமலையில் தவஞ்செய்கிறார்.

நீயும் அங்கு சென்று அந்தப் பரந்தாமனை நோக்கித் தவஞ் செய்தால் உன்னைப் பற்றியுள்ள பிரம்மஹத்தி தோஷமும் நீங்கி விடும்" என்று அருளினான். ஆறுமுகன், தன் தந்தையை நோக்கித் தனக்கு ஒரு மந்திரத்தைக் கற்பிக்க வேண்டும் என்றுகேட்க, சிவபெருமான் தாரகப் பிரமமந்திரத்தை, முருகனுக்கு உபதேசித்தார். சுப்பிரமணியர், திருமலைக்குச் சென்று ஸ்வாமி புஷ்கரணியில் நீராடி, பக்கத்தில் பக்தியோடு தவம்புரிந்த வாயுபகவானைக்கண்டு, தாமும் திருமாலை தியானித்து, தவத்தில் அமர்ந்தார்.

✿ ✿ ✿

Koviloor Digital Library

62. இந்திரனின் சாபவிமோசனம்

நாரதர் மேலும் தொடர்ந்தார். "முருகன், திருமலைமேல், திருமாலை நோக்கி, தவஞ் செய்து வருங்காலத்தில், உமையாள் தனது கணவனை நோக்கி, "மறைகளுக்கெல்லாம் எட்டாத திருமால், நமது முருகனுக்குக் காட்சியளிக்கக் காலதாமதமாகுமே!" என்று கேட்க, அதற்குச் சிவபெருமான், "உமையே! இதற்காக நீ ஏன் வருந்தவேண்டும்! வருந்தாதே! திருமலையில் எண்ணற்ற முனிவர்களும் தேவர்களும் திருமாலைக் காண்பதற்குக் காத்திருக்கிறார்கள். சில நாட்களில் நாமும் அங்கே செல்வோம். திருமலைப் பெருமான் காட்சியளிப்பான். யாவருமே அவரது காட்சியைக்கண்டு இன்பமடைவோம்!" என்று கூறிவிட்டு, புராண வரலாறு ஒன்றைக் கூறினார்.

இந்திரன் அகலிகையின்மேல் ஆசை கொண்டு விட்டதை, கௌதமன் என்ற அவளுடைய கணவர் அறிந்து, இந்திரன் உடல் எங்கும் பெண்குறிகளாகத் தோன்றிடட்டும் என்று கொடுமையாகச் சபித்துவிட்டார். உடல் எங்கும் பெண்குறிகள் தோன்றிட பெரிய அவமானம் கொண்ட இந்திரன், பெருந்துயரமும் துக்கமுங் கொண்டு, பிரம்ம லோகத்திற்குச் சென்று, அங்குள்ள மானச தீர்த்தத்தில் மறைந்திருந்தான். இந்திரனில்லாத தேவசபை வெறிச்சோவென்றிருந்தது.

எனவே, தேவர்கள் அனைவரும் இந்திராணியிடம் சென்று, அவள் கணவன் எங்கு சென்றான் என்று விசாரித்தார்கள். அவளுக்கும், இந்திரன் கௌதமரால் சபிக்கப்பட்ட விவரத்தை யறியாமல், அவர்களுடன் அவளும் சேர்ந்து, தேவகுருவான பிருகஸ்பதியிடம்

Koviloor Digital Library

சென்று முறையிட்டனர். தேவகுருவான, பிரகஸ்பதி, தனது ஞான திருஷ்டியினால் இந்திரனுக்குக் கௌதமரின் சாபத்தினால் உடம்பு முழுவதும் பெண்குறிகள் தோன்றியதால் அவன் வெட்கமடைந்து, அந்த அவமானத்தைத் தாங்கமாட்டாமல் பிரம்மலோகத்திலுள்ள மானச தீர்த்தத்தில் மறைந்திருக்கிறான் என்று கூறி, மற்ற தேவர்களுடன் அவரும் மானச தீர்த்தத்துக்குச் சென்று, அவனைப் பார்த்தனர். அப்போது இந்திரன் தேவர்களையும் தேவர்குருவையும் நோக்கி, "எனக்கு ஏற்பட்ட இந்த இழிவான நிலையிலிருக்கும் எனது உடலிலுள்ள பெண்குறிகள் ஒழிய நீங்கள் ஒரு யாகத்தைச் செய்ய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

அதற்குத் தேவர்கள் "அரசே! நீங்களில்லாமல் நாங்கள் எப்படி யாகத்தைச் சிறப்பாகச் செய்யமுடியும்? தைத்யர்களின் தீமைகளால் நாங்கள் அஞ்சுகிறோம். நீங்கள் எங்களுடன் வந்து, அவர்களை வென்று, அதன் பிறகு உமது சாபம் தொலைவதற்கான யாகத்தைச் செய்வோம். அதற்காக நீங்கள் இந்த மானச மடுவில் மறைந்திருப்பது நல்லதல்ல" என்றார்கள்.

அதற்கு இந்திரன், "நான் இந்த நிலையில், எவ்வாறு தேவலோகத்திற்கு வருவேன். என் உடல் எங்கும் ஆடவரும் பெண்களும் இழிவாகப்பழித்துப் பேசும் பெண்குறிகள் அமைந்துள்ளனவே. முனிவரின் மனைவியை இச்சித்த பாவத்திற்கான தண்டனை எனக்குக் கிடைத்து விட்டது. பெண் உறுப்பை நான் விரும்பியதற்கு, என் உடல் முழுவதுமே பெண்குறிகளாக அமைந்து விட்டனவே!" என்று வருந்தி, அழுது, தேவகுருவின் திருவடிகளில் விழுந்து, "ஐயனே! திரிகாலமும் உணர்ந்த தேவகுருவான நீங்கள் என் மனக்

Koviloor Digital Library

கஷ்டத்தை அறிவீர்கள். முன்பு ஒரு சமயம் நான் ஒரு தேவகாரியமாகப் பிருகு முனிவரிடம் போனேன். அங்கு ஒருசாபம் என்னைச் சார்ந்தது. அதாவது தேவர்களின் ஆண்களின் குறிகள் என்னைச் சாரும்படி, அந்தமுனிவன் வேறு என்னைச் சபித்திருக்கிறான்'' என்றான்.

அதைக்கேட்ட பிரகஸ்பதி, தேவர்களை அழைத்து "உங்கள் ஆண்குறிகளைத் தேவேந்திரன் விரும்புகிறான். நீங்கள் தருவீர்களா?'' என்று கேட்க, அவர்களும் தருவதற்கு இசைந்து விட்டனர். உடனே இந்திரனின் உடலைச்சார்ந்த பெண்குறிகள் எல்லாமே மறைந்துவிட்டன. பிறகு அவன் அங்கிருந்து சென்று தனது உலகம் சென்று, அவுணர்களின் மீது படை எடுத்து வென்று தேவருலகத்தை ஆண்டுவந்தான். மீண்டும் அரம்பையர் இன்பத்தை அவன் அதிகமாக அனுபவிக்கத் துவங்கி, பிரகஸ்பதியை நோக்கி, "என் உடம்பைச் சார்ந்த தேவர்களின் குறிகள் எல்லாம் என்னைவிட்டு நீங்கும்படி அருள்செய்க!'' என்று வேண்டினான். அதற்கு தேவகுரு இந்திரனை நோக்கி, "நீ, திருவேங்கடமலையைச் சார்ந்துள்ள விச்வக்சேனை தீர்த்தக்க்ரையில் அரிய தவம் செய்வாயானால் உன் துன்பம் நீங்கும்'' என்றார்.

இந்திரன் அவ்வாறே, திருமலையிலுள்ள அந்தத் தீர்த்தத்தில் நீராடி, அதன் கரையில் நின்று, தன் உள்ளத்தில் பகவானை நினைத்து, வேதத்தில் உயர்ந்த காயத்திரி மந்திரத்தை உச்சரித்து, நிலத்தில் ஒரு காலை ஊன்றித் தவஞ் செய்தான். இறைவன் அவன் முன்பு தோன்ற, இந்திரன் "எம்பெருமானே! என்மேனியில் ஆண்குறி ஒன்றைத்தவிர மற்ற குறிகள் அனைத்துமே நீங்குவதற்கு அருள்செய்ய வேண்டும்'' என்று வேண்டினான். உடனே இந்திரன் உடலில் தோன்றிய

Koviloor Digital Library

குறிகள் அனைத்தும் மறை முனிவர்களாக மாறினர். தங்களது தவறான செய்கையால் கௌதமமுனிவர் சினந்து உன்னுடைய மேனியில் பெண் குறிகளாக அமையச் சாபமிட்டார். அதனால்தான் நாங்கள் உன் உடலை அடைந்தோம் என்று சொல்ல, அதற்கு இந்திரன், "நீங்கள் ஆயிரவரும் ஆயிரம் கண்களாக அமையுங்கள்" என்றான். அவர்கள் பாதளம் சென்று ஆயிரம் கண்களாக வந்து நிற்க, இந்திரன் அவர்களை ஏற்றுக் கொண்டு, தேவர் உலகம் சென்றான்" என்று உமையாளிடம் மஹேஸ்வரன் கூறினார்" என்று நாரதர் சதானந்த முனிவருக்குச் சொன்னார்.

63. விஷ்வசேனர் தவம்

சிவபெருமான் கூறிய இந்திரன் கதையைக் கேட்ட பார்வதி, விசுவசேன தீர்த்தத்தின் சிறப்பை முழுமையாக கூறவேண்டும் என்று கேட்க, சிவபெருமான் தொடர்ந்தார்.

முன்பு ஒருகாலத்தில் இந்திரன் தேவமங்கையரில் ஒருத்தியாகிய குந்தளை என்பவளை அழைத்து, துருவாசமுனிவரின் தவத்தை அழித்துவிட்டு வருமாறு அனுப்பிவைத்தான். அவள், அந்த முனிவரின் தவச் சாலைக்குச் சென்று, தன்மேனி மினுக்குடன் நின்றனள். அவள் நின்ற நிலையைக் கண்ட துர்வாச முனிவர் அவள், தன்னுடைய தவத்தைக் கெடுக்கத்தான் வந்திருக்கிறாள் என்பதை உணர்ந்து, கோபத்துடன் அவளை நோக்கி, "நீ ஒரு வேட்டுவப்பெண் ஆகி வனங்களில் திரிவாயாக!" என்று சபித்தார். அந்தச் சாபத்தைக் கேட்டுப்பயந்த அந்தத் தேவமங்கை "நான் இந்திரன் கட்டளையை ஏற்று இங்கு வந்தவள், நானாக வரவில்லை. என் குற்றத்தைப்

Koviloor Digital Library

பொறுத்து என்னை மன்னித்து அருள்வீராக" என்று மன்றாடினாள்.

அதைக் கேட்ட முனிவர், "நீ ஒரு மானிட மங்கையாகப் பிறந்து, குற்றமற்ற ஒரு குழந்தையைப் பெற்ற பிறகு இந்தச் சாபம் நீங்கும்" என்றார். அவள் மேலும் அந்த முனிவரை நோக்கி, "முனிவரே, உம்முடைய அருள் வலிமையால் நான் பெறுகின்ற அந்தக் குழந்தைக்கு நீண்டதீர்க்காயுளும் தத்துவ ஞானங்களும் பக்தியும் தூய்மையும் அமைந்திருக்க அருள் செய்யுங்கள்" என்றாள். முனிவரும் அவள் மீது கருணை கொண்டு, அவ்வாறே அருள் செய்தார். பிறகு அந்தத் தேவமங்கையான குந்தளை, வீரவாகு என்ற வேடனுக்கும் அவனது பத்தினிக்கும் 'சுவற்சலை' என்ற பெயருடைய பெண்ணாக பிறந்தாள். சுவற்சலை பருவம் அடைந்து ஒரு புண்ணிய நாளில் நர்மதை நதியில் நீராடி ஒரு மரச் சோலையில் நின்று கொண்டிருந்தாள்.

அப்போது அந்தமரச் சோலை வழியாக வந்த வருணதேவன் அவளை யடைந்து, தன் வேட்கை மிகுதியினால் அவளைத் தழுவிப் புணர்ந்து "பெண்ணே, நீ விரும்புவது என்ன?" என்று கேட்டான். அதற்கு அவள், வருணதேவா! ஞானம், வலிமை, கீர்த்தி, மிக்க சிறந்ததொரு புதல்வனை எனக்கு அருள் செய்யவேண்டும்" என்றாள். வருணன் அந்த வரத்தை அவளுக்கு வழங்கிவிட்டுப் போய் விட்டான். பின்னர், அந்த சுவர்சலை கர்ப்பவதியாகிப் பத்து மாதங்கள் சென்ற பிறகு பூசநட்சத்திரமும் கர்க்கடகராசியும் கூடிய புண்ணியதினத்தில் பொன்மேனியுடைய புத்திரன் ஒருவனைப் பெற்றாள். பத்து ஆண்டுகள் அவனை விருப்பத்துடன் பாதுகாத்து வந்தாள். பின்னர் முனிவர்

Koviloor Digital Library

இட்ட சாபம் நீங்கியதும், தன் மகனிடமிருந்து பிரிந்து சென்று விட்டாள். அந்த மகனும் காசிப முனிவரிடம் சென்று வேதசாஸ்திர புராணங்களில் தேர்ச்சியடைந்து, அதற்குப் பிறகு அஞ்சனமலை என்ற திருமலையை அடைந்து, திருமாலின் திருவடிகளைத் தியானித்துத் தவம் புரிந்து போற்றத்தக்க சேனை நாயகப் பதவியை அடைந்தான். ஆகையால் அந்தத்தீர்த்தத்துக்கு விசுவசேனதீர்த்தம் என்ற பெயர் உண்டாயிற்று.

சகலபாவத்தையும் நீக்கவல்ல அந்தத்தீர்த்தத்தைப் போல அக்னிதீர்த்தம், பிரமதீர்த்தம், சப்தரிஷிதீர்த்தம், சித்தர்தீர்த்தம் என்ற பலதீர்த்தங்கள் உள்ளன.

பாதாளத்திலிருந்து ஒரு சமயம் ஒரு லிங்கம் பூமியைப் பிளந்து கொண்டு வெளிப்பட்டது. அதைக் கண்ட காமதேனு கோபத்துடன் அதன்மீது பாய்ந்து, பூமியிலிருந்து அதனைப் பெயர்க்கச் சென்றது. அந்த லிங்கம் தெய்வப்பசுவினை நோக்கி, "எனக்கு இடையூறு செய்ய வேண்டாம். இனி, பூமிக்கு மேல் வெளிப்பட மாட்டாது உனது குளம்பே எனது முகக்குறியாக விளங்கும்!" என்று கூறியது. அந்த லிங்கம் தோன்றிய இடத்தின் பெயர் கபிலதீர்த்தம் என்பதாகும். அந்தத்தீர்த்தத்தில் கார்த்திகை மாசத்துப் பௌர்ணமி நாளில் பத்து நாழிகைப் பொழுதில் எல்லாத் தீர்த்தங்களுமே வந்து சேரும். வருஷந்தோறும் அப்போது, அதில் நீராடுவோருக்கு அயன் உலகமும் மற்ற பெரும் பேறுகளும் உண்டாகும்" என்று நாரதமுனிவர் அந்தச் சதானந்த முனிவருக்குக் கூறினார். அந்த சதானந்தர், சனகருக்கு இந்தக் கதையைச் சொன்னார். என்று சூதபுராணிகர், சௌனகாதி முனிவர்களிடம் கூறினார்.

❖ ❖ ❖

Koviloor Digital Library

64. வாயுவும் பெரியதிருவடியும்

"முன்பு ஒரு சமயம் காற்றுத்தேவன், திருவேங்கடமலையை அடைந்து பகவானைத் தியானித்துப் பலநாட்கள் அருந்தவம் புரிந்து வந்தான். அப்போது பகவான், காட்சியளித்து உனக்கு என்னவரம் வேண்டும்?" என்று காற்றுத் தேவனைக் கேட்க, அவன், "ஐயனே! நான் இந்தத் திருவேங்கடத்திருமலையில் உமது திவ்வியதரிசனத்தைப் பெற்று மகிழ்ந்து என்றுமே தூயவனாக இருக்கும்படி அருள்செய்ய வேண்டும்" என்று வேண்டினான். பகவானும் அவ்வாறே அருள் செய்தார். அன்றிலிருந்து வாயு தேவன், மண்ணுலகர் காணாதவாறு வழிபாடு செய்து வருகிறான்" என்று உமாதேவியிடத்தில் பரமேஸ்வரன் கூறினார்.

அதுபோலவே, வலிமையுடைய கருடன் இம்மலையை எடுத்துக் கொண்டு வைகுண்டத்திற்குச் செல்ல நினைத்தான். அப்போது பகவான், அந்தப்பறவையரசனை அழைத்து, " நாம் இந்த மலையில் வையகத்தாருக்கு வாழ்வு அருளத் திருமகளோடு உறைவோம். ஆகையால் இம்மலையின் தெற்குத்திசையில் இருப்பாயாக!" என்றார். அவ்வாறே சுவாமி புஷ்கரணியின் ஒருபகுதியில் எழுந்தருளியுள்ளார்" என்று சொல்லிவிட்டுத் திருமலையின் மற்றச் சிறப்புக்களை யெல்லாம் சொல்லி, நந்திமீது ஆரோகணித்துத் தமது கணங்கள் சூழ திருவேங்கடமலையை அடைந்து, வலம் வந்து சாமிபுஷ்கரிணியை அடைந்து, தான் அணிந்துள்ள எலும்புமாலைகளைக் களைந்து, உமையாளுடன் புஷ்கரணியில் நீராடி, பகவானை வழிபாடு செய்து,

Koviloor Digital Library

சுப்பிரமணியன் அங்கு தவம்புரிவதையும் பார்த்து, கபிலதீர்த்தத்தைக் கண்டு, அங்கு தங்குவது நன்மை என்று கருதி உருமறைந்து உறைகின்றார்'' என்று நாரதர் சதானந்தருக்குச் சொல்ல, அந்தச் சதானந்தர் சனகருக்குச் சொன்னார். மேலும் அவர் திருப்பதியின் மற்ற சிறப்புகளையும் கூறினார்.

''முன்பு ஒரு சமயம் சனகர், கங்கை நதிக்கரையில் தேவர்கள் வியக்கும்படியாக அசுவமேதயாகம் ஒன்றைச் செய்தார். அந்த யாகத்துக்கு முனிவர்கள் பலரும் வந்தார்கள். அரசனின் வேண்டுகோளின்படி அவர்கள் அங்கு ஓர் நாள் தங்கியிருந்தார்கள். அப்பொழுது அவர்கள் சகலமும் கடந்த வாமதேவரை நோக்கி, ''ஞாயிறு போல விளங்கும் பகவான் வரலாற்றை நாங்கள் கேட்க விரும்புகிறோம்'' என்றனர்.

அதற்கு அவர், இங்கிருந்து இருநூற்று யோசனைதூரம் தென்திசையில், ஞானம் தரும் திருமலையைக் காணலாம். அங்கு நாரதர் போன்றவர்கள் தவம் புரிவர். முன்பு ஒரு சமயம் நான் அங்கு அகஸ்திய முனிவரின் தவச்சாலைக்குச் சென்றேன். அப்போது அகஸ்தியர் கூறியதாவது; ''நான் ஒருசமயம் கோதாவரி நதிக்கரையோரம், ஸ்ரீராமபிரானை உள்ளத்தில் தியானித்து தளர்வின்றி யோகம் புரிந்தேன். அப்போது நாரதர் அங்கு வந்து சேர்ந்தார். நான் அவரை உபசரித்து, ''பகவானைக் காணும்படி அருள் செய்க'' என்றேன். அதற்கு நாரதர், ''நான் பிரமனிடம் சென்று, ''மாயவன் உறைவது எங்கே?'' என்று கேட்க, அவன், திருவேங்கட மலையில் அமர்ந்து திருவருள் செய்வதாகக் கூறினார். ''அவனது திருக்கோலத்தைக் காணவிரும்பினால் என்னுடன் வருக!'' என்றார். பிறகு பலநாட்கள் நாங்கள் பகவானைச் சேவிக்க

Koviloor Digital Library

முடியவில்லை. எனவே பகவான் தரிசனம் அளிக்கும்வரை இந்தமலையையே வலம் செய்வீராக!'' என்று பிரமன் அகஸ்தியரிடம், அகஸ்தியர் தம்மிடம் கூறியதாக வாமதேவர் உரைத்ததை ஜனகராஜர் கேட்டு மகிழ்ந்தார்.

65. அகஸ்தியர் திருமலையை வலம் வந்த கதை

“வாமதேவமுனிவர், ஜனகராஜனை நோக்கி, “காமக்குரோதலோபம் மதம்மாற்சரியம் என்ற புலப்பகைமைகளை வென்ற முனிவர்கள், பிரமனுடைய கட்டளையின்படி ஆதிமுதல்வனைத் தியானித்து திருமலையை வலம் வரும்போது வாயு மூலையில், வெண்மையானதொரு பாறையின்மீது ஒருபுருஷன் நிற்பதைப் பார்த்த அளவில் அகஸ்தியர் ஆச்சரியத்துடன் “நீயார்? உன் பெயர் என்ன? சொல்லுக!” என்று கேட்க, அவன் ஒன்றும் சொல்லாமல் மறைந்தான். முனிவர் அதைக் கண்டு வியந்துவிட்டு, வடதிசையினை அடைந்து அங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கிக் குளித்தார். பின்னர் கடல் போன்றிருந்த பங்கஜ தீர்த்தத்தை அடைந்தார். அங்கிருந்த வித்யாதரர்கள் நீராடிக் கைகுவித்து, பகவானைத் தியானிப்பதைக் கண்டு அருகிலிருந்த ஒரு பூங்காவை அடைந்தார்கள்.

அங்கு தேவர்கள் தவம் புரிவதைக் கண்டு, “நீங்கள் யார்? எதற்காகத் தவஞ் செய்கிறீர்கள்? சொல்லுங்கள்!'' என்று வேண்ட அவர்கள் நாங்கள் ஆதிமுதல்வனைக் குறித்துத் தவம் செய்கிறோம்'' என்று சொல்ல அகஸ்தியர் மற்ற முனிவர்களுடன் நடந்து சென்றார். போகும் வழியில் ஒருமரத்தினடியில் முனிவர்கள் பலர் தவம்புரிவதைக்

Koviloor Digital Library

கண்டார். அவர்களையும் "நீங்கள் யாரைக் குறித்துத்தவம் செய்கிறீர்கள்?" என்று அகஸ்தியர் கேட்க, "நாங்கள் திருமாலைத் தியானிக்கிறோம்" என்றார்கள். இப்படியே பலரையும் பார்த்துக் கொண்டே, அகஸ்தியரும் மற்றமுனிவர்களும் திருவேங்கடமலையை வலம் வந்தனர்.

பின்னர் அங்கு இந்திரன், சூரியன், குபேரன், இயமன், அஷ்டவசுக்கள் அக்கினி முதலிய தேவர்களும் தவஞ் செய்வதையுங் கண்ட, அகஸ்தியர் அவர்களைக் கேட்க, இந்திரன் சொன்னதாவது "அரக்கர்கள் எங்களுக்குக் கொடுமைகள் பலவற்றைச் செய்தார்கள். அதனால் நாங்கள் பிரமனைப் புகலடைந்தோம். அவர், "திருமகள் கொழுநனைத் திருமலைக்குச் சென்று போற்றிப் பூஜை செய்து வந்தால், உமது பகைவர்களை நீங்கள் வெல்ல முடியும்!" என்றார். ஆகையால் நாங்கள் இங்கு வந்து பகவானைக் குறித்துத் தவஞ் செய்கிறோம்" என்றார்கள். பின்னர் அகஸ்தியரும் மற்றவர்களும் தென்கிழக்குத் திசைக்குச் சென்றார்கள். அங்கு சங்கு சக்கரம், வாள், கதை, வில் ஆகியவற்றின் தோற்றத்தைக் கண்டு, பின்னர் தென்திசையை அடைந்து, அங்கு செழுமையாக இருந்த சோலைகளையெல்லாம் பார்த்துக் கொண்டே சென்றார்கள்.

இறுதியில் மிகவும் நறுமணம் வீசிய ஒரு மலர்ச் சோலையில் வில்வமரம் ஒன்றின் அடியில் அருகி, கொன்றை, மதி, நதி முதலியவற்றைத் திருமுடியில் அணிந்த சிவபெருமான் தவம் புரிவதைக்கண்டு அவரருகே சென்று, "நீங்கள் யாரைக் குறித்துத் தவஞ் செய்கிறீர்?" என்று கேட்க அவர், "நாராயணனே வழிபாடு செய்வதற்கு உரியவன். வேள்விகளுக்கும் தியானிப்பதற்கும் அவனே உரியவன். ஆகையால்

Koviloor Digital Library

அவனையே சிந்தையில் கொண்டு தியானயோகத்தில் இருக்கின்றோம்'' என்றார். அதைக்கேட்டபிறகு, அகஸ்தியரும் மற்றவர்களும் மேற்குத் திசை நோக்கிச் சென்றார்கள். அப்படிச் செல்லும்போது, தென் மேற்குத் திசையில் ஆலமரம் ஒன்றின் கீழே ஐம்படைகளுடன், நான்கு தோள்கள் விளங்கப் பொன் மேனி ஒளிசெய்ய, ஊர்த்துவ புண்ட்ரம் விளங்க, விசுவசேனர், ஸ்ரீமந் நாராயணனைத் தியானித்து அமர்ந்திருப்பதைக் கண்டார்.

அங்கு, அவரை அணுகிப் பணிந்து போற்றவும், அவர், அகஸ்தியரை நோக்கி "திருமகள் கேள்வனை விரைவில் தரிசிக்க வேண்டுமாயின் இந்தத் திருமலையை விட்டு நீங்காமல் தவம் புரியவேண்டும்!" என்று கூறி மறைந்தார். அவர் சென்ற பிறகு, மேற்குத் திசையை அடைந்து அங்கு பல புதுமைகளைச் செய்து, அங்கு இருந்த குமாரதாரகையில் நீராடி, ஆறுமுகனைப் போற்றிப் புகழ்ந்து, திருமாலைத் தியானித்துக் கொண்டு, அகஸ்தியரும் வாமதேவ முனிவரும் அந்தத் திருமலையில் வசித்து வந்தார்கள்" என்று சதானந்த முனிவர், ஜனக மகாராஜருக்குக் கூறினார்.

66. சங்கராசன் தவமும் உபரிசரவசுவின் கதையும்

அவர் மேலும் கூறியதாவது "கேகயநாட்டில், கல்வி, ஞானம், தருமம், நீதி முதலியவற்றுடன் சிறந்து விளங்கிய சங்கன் என்ற அரசன், திருமகள் நாயகனைத் தன் உள்ளத்தில் அன்புடன் தியானித்துக் கொண்டும், எண்ணற்ற யாகங்களைச் செய்து கொண்டும், தீர்த்தங்களில் நீராடியும், சாஸ்திரவிதிப்படி விரதங்களைச்

Koviloor Digital Library

செய்தும் மலைகள், சோலைகள் முதலிய நிறைந்துள்ள திவ்ய க்ஷேத்ரங்களுக்குச் சென்றும், இறைவனுடைய திருக்காட்சி தமக்குக் கிட்டாமையினால், மிகவும் துயரமடைந்து வாடியவனாய் வருந்தி நின்றான். அப்போது திருமால் வானத்திலே தோன்றி "அரசே! திருவேங்கடத்தை அடைந்து என்னைத் தியானித்து ஐம்புலன்களை அடக்கியோகஞ் செய்வதினால், நீ விரும்பியதை அடைந்து மகிழலாம்" என்று அருள் செய்து மறைந்தார். பிறகு அரசன் தன் மகனுக்குப் பட்டம் சூட்டிவிட்டு திருமலையிலுள்ள கோனேரிக் கரையில் அமர்ந்து எண்ணற்றகாலம் தவம் புரிந்து வந்தான். அப்போது, அகஸ்தியர் முதலிய முனிவர்கள் யாவரும், திருமாலைக் காண இயலாதவர்களாகி, அம்மலையிலிருந்த ஒருகுகையில் தங்கியிருந்தார்கள்.

அங்கு தேவகுருவாகிய பிரகஸ்பதியும் அசுரகுருவாகிய சுக்கிராசாரியும், சூரிய குலத்தில் பிறந்த உபரிசரவசு என்ற அரசனும் அங்கு வந்தார்கள். அந்த அரசன் முன்பு, அந்தணன் இட்ட சாபத்தால் பாதாளத்தையடைந்து, தங்கியிருந்து, அதற்குப் பிறகு திருமாலின் திருவருளால் அங்கு அடைந்தான் என்று சதானந்தர் கூற, சனகராஜன் அவரை நோக்கி, "அந்தச் சூரிய குல அரசன், அந்தணரிடம் சாபம் பெற்ற வரலாறு என்ன என்று சொல்லுங்கள்" என்று கேட்க சதானந்தர் சொல்லத் துவங்கினார்.

"முன்பு ஒரு சமயம், நிலவுலகத்தில் உபரிசரவசு என்ற அரசன் நீதிதவறாமல் ஆட்சி செலுத்தி வந்தான். அப்போது முனிவர்களும் இந்திரன் முதலிய தேவர்களும் ஒன்று கூடி, அவ்வரசனைக் காணச் சென்றார்கள். அரசன் அவர்களை வரவேற்று நன்றாக உபசரித்து, அவர்கள்

Koviloor Digital Library

தன்னைத் தேடி வந்த காரணத்தைப்பற்றி விசாரித்தான். அதற்கு அவர்கள், "நீதி, தர்மம் தவறாத அரசனே! உம்மிடத்தில் தர்மசமயம் பற்றிக் கேட்க வந்தோம்" என்று கேட்க அந்த அரசன், "தர்மத்தையும் நீதியையும் பற்றித் தெரிந்து கொள்வதற்குத்தானா தேவர்களாகிய நீங்கள் இங்கு வந்தீர்கள்?" என்று கேட்க, தேவேந்திரன் முதலிய தேவர்களும் அந்தணர்களும் கோபங்கொண்டு அந்த அரசனை நோக்கி, "நீ புவியாட்சியை இழந்து பாதாள லோகத்தை அடைவாய்!" என்று சபித்தார்கள்.

அவர்களின் சாபத்தை ஏற்ற அந்த அரசனைக் கண்டு அரனும், அயனும் பரிதாபப்பட்டார்கள். இறைவனை இடைவிடாமல் வணங்குபவன்! இவனை தேவர்களும் அந்தணர்களும் சாபம் இட்டதால், இவன் அநியாயமாகப் பாதாளத்தை அடைகிறான்!" என்று இரங்கி, "தூவாதச யாக்ஷர திருமந்திரமே சிறந்தது. அதனை மறந்திட வேண்டாம் என்று வானத்திலிருந்து அவ்வரசனுக்குக் கூறினார்கள்.

அந்த மந்திரத்தை, அரனும் அயனும் கூறியபடியே அந்த அரசன் மறக்கவில்லை. இடைவிடாமல் அந்த மந்திரத்தையே உச்சரித்த வண்ணம் அவன் பகவானைத் தியானித்துக் கொண்டு, பாதாளத்தில் இருக்கும் போது, அந்த மந்திரத்துக்கு உரிய அதிதேவதையாகிய ஸ்ரீமந்நாராயணன், தமது எதிரில் இருந்த கருடனை நோக்கி, "உபரிசரவசு என்ற அரசன், அந்தணர்களின் சாபத்தால், அரசாட்சியை இழந்து, பாதாளத்தில் வீழ்ந்து, என்னைத் தியானித்து பக்தி செய்து வருகிறான். அவனை மீண்டும் இந்தப் பூமிக்கே கொண்டுவந்து அவனுக்கு முடிசூட்டி வைக்க வேண்டியது உனது கடமை!' என்று கட்டளையிட்டார். அப்பொழுதே கருடன் பாதாளலோகம்

Koviloor Digital Library

சென்று அந்த வசுவரசனைப் பூமிக்குக் கொண்டு வந்து, அவனுடைய தேசத்தில் அவனைவிட்டு, அவனுக்கு முடிசூட்டி வாழ்த்திவிட்டுச் சென்றான். அரசன் முன்பு போல, யாவரும் போற்றத் தருமத்தைப் பரிபாலித்து வந்தான்'' என்று சனகருக்குச் சதானந்தர் கூறினார், என்று சூதபுராணிகர், நைமிசாரணிய முனிவர்களுக்குக் கூறினார்.

67. அகஸ்தியர், குரு, சுக்கிரன், வசு முதலிய தேவர்களுக்குத் திருமாலின் தரிசனம்!

சதானந்தர் மேலும் தொடர்ந்தார்; ''உபரிசரவசு என்ற அந்த மன்னனுடன் தேவகுருவும் அசுரகுருவும் சேர்ந்து திருமலையில் மூன்று யாக அக்னிகளை வளர்த்தியதைப் போலக் கூடியிருந்தனர். அப்போது அகஸ்தியர் முதலிய முனிவர்கள் அங்கு வந்தார்கள். அரசன் அவர்களை உபசரித்து நிலவுலகத்தினை நாடி அவர்கள் ஏன் வரவேண்டும் என்று விசாரித்தான். அதற்கு அகஸ்தியர், ''நாங்கள் ஆதிமுதல்வனைக் காண்பதற்கு விரும்பினோம். அதனால் இந்த மலையை வலமாக வந்து, எண்ணிலாத அருவிகளிலும் ஆறுகளிலும் நீராடி தியானித்து வருகிறோம். ஆயினும் இன்று வரையில் நாங்கள் பகவானைத் தரிசிக்க வில்லை!'' என்றார்கள். அதைக்கேட்ட உபரிசரவசு என்ற அந்த மன்னன் ''சங்கன் என்ற அரசன், ஸ்ரீமந்நாராயணனையே அல்லும் பகலும் நினைத்துக் கொண்டு, ஸ்வாமி புஷ்கரணியின் அருகே தவம்புரிந்து வருகிறான். அவனுக்குக் காட்சி அளிப்பதற்கு ஆதிமுதல்வன் திருவுளம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

Koviloor Digital Library

ஆகையால், நீங்களும் அங்கு சென்றால் அவனது திருவுருவத்தைக் கண்டு தரிசிக்கலாம்'' என்றான்.

அவ்வாறே அகஸ்தியர் முதலிய முனிவர்களும் ஒன்று கூடி,ஸ்வாமி புஷ்கரிணியை அடைந்து தவத் திருக்கோலத்தில் இருந்த அரசனைக் கண்டனர். அவனும் அகஸ்தியரைக் கண்டு வணங்கி, "முனிவர்களும் தேவர்களுமாகிய உங்களுடைய தரிசனத்தால் எனது பழைய வினைகள் அனைத்தும் விலகின என்றான். உடனே! வானம் எங்கும் ஒளிதோன்ற கோடி சூரியன்கள் உதித்தது போல, பகவான் தோன்றி அருள்செய்தான். திருமுடியும், தோள் வளையங்களும், கௌஸ்துப மாலையும், பொன்னாடைகளும், திருக்கைக் கடகங்களும், சங்கு சக்கரம், சாரங்கம், கதை, வாள் முதலிய ஐம்படைகளும் அளவில்லாத ஒளிபரப்ப, திருமகள் திருமார்பில் வக்ஷஸ்தலத்தில் விளங்க, வைஜயந்தி வனமாலையும் பிரமசூத்திரமும் துலங்க, அடியவர்கள் அனைவருக்கும் திருவருள் செய்யும் அவர் வழிகளும் பவழம் போன்ற திருவாயும் நீலவண்ணத் திருமேனியும் இலங்க, உபரிசரவசு, பிரகஸ்பதி, சுக்கிரன், அகஸ்தியர், தேவர்கள் முனிவர் ஆகிய அனைவருக்கும் காட்சிகொடுத்தார்.

அந்தத்திருக்காட்சியை, யாவரும் கண்டு வணங்கி, திருவடியைக் கண்டு இன்பமடைந்து, இன்பக்கண்ணீர் பெருக நின்றனர். பின்னர், பகவானைத் தரிசித்த ஆனந்தத்தில் கூத்தாடிப் பாடி மகிழ்ந்தனர். அந்த விசேஷத்திருக்காட்சியின் போது, தேவதுந்துபிகள் முழங்கின. அவற்றின் ஒலியைக் கேட்ட பிரமதேவன், முன்பு தான் சொல்லியனுப்பிய முனிவர்களுக்குப் பகவான் திருவருள் செய்து விட்டார் என்று தெரிந்து

Koviloor Digital Library

கொண்டு, தமது அன்னவாகனத்தின் மீது சரஸ்வதியுடன் அமர்ந்து ஆகாயமார்க்கமாகச் சென்று திருமலையை அடைந்தார். உருத்திரனும் உமாதேவியுடன் ரிஷபவாகனத்திலமர்ந்து திருவேங்கடத்தையடைந்தார். விஷ்வக்சேனருடன் முனிவர்கள் வந்தனர். இப்படியாக அனைவரும் அங்குவந்து சேர்ந்து திருமகள் நாயகனாகிய திருமாலை வணங்கி, அவரது திருவுருவின் பேரொளியைக் கண்டு, தியானத்தில் முகுந்தா! கேசவா! கோவிந்தா! ஸ்ரீதரா! நாராயணா! என்று பலவிதமாகப்பாராட்டி, "அருட் பெருங்கடலே! நின் விஸ்வரூபத்தை நாங்கள் காண்பதற்கு எங்களுக்கு எண்ணிலாத விழிகள் வேண்டும் ஆகையால் தாங்கள் சாந்த திருஉருவத்தோடு காட்சியளித்து அருள்செய்ய வேண்டும். மேலும், உலகிற்குக் கெடுதல்கள் செய்து வரும் நிசாசரர்களை ஒழித்து நீதி நிலைத்திட அருள் செய்ய வேண்டும்!" என்று முனிவர்கள் வேண்டினர்.

அனைவரும் பகவானை வணங்கி, "தேவரீர், இந்தத்திருமலையில், உமது திருவடிகளைப் போற்றிப் பணிபவர்களுக்கு உம்முடைய பெரும்பதத்தை அருள்செய்யவேண்டும்" என்று கேட்க, பகவான் அவர்களை நோக்கி "எல்லோரும் எல்லாம் பெறுவீர்கள். சிலநாட்கள் கழித்து வைகுண்டபதவியை அடைவீர்கள்" என்று அருள்செய்தார். அயன், அரன், தேவர்கள், இந்திரன், அகஸ்தியர், பிரகஸ்பதி, சுக்கிரன் முதலியவர்களின் மீது திருக் கண் சாத்தி வரமளித்து மறைந்தார். அவர்கள் அனைவரும் ஆனந்த நிலையில், விமானத்தில் இருந்த மாயவனை வணங்கி, பின் தத்தமது இருப்பிடத்தை அடைந்தார்கள்" என்று சதானந்த முனிவர் ஜனகராஜருக்குக் கூறினார்.

Koviloor Digital Library

68. கங்கையைவிடச் சிறந்த சாமி புஷ்கரிணி

சதானந்த முனிவர் மேலும் ஜனகமகாராஜருக்குக் கூறியதாவது "வாமதேவ முனிவர், திருமலையிலிருந்து பிரம்மாவைக் குறித்துத் தவம் புரிந்து வந்தார். பிரம்மதேவன் வாமதேவர் முன்பு தோன்றியதும், முனிவர், பிரம்மாவை நோக்கி, "உலகத்தையும் உயிர்களையும் படைக்கும் பிரம்மனே! சகலஉயிர்களுக்கும் தந்தையாகிய நீங்கள், இந்தச் சாமி புஷ்கரிணியின் பெருமையினைத் தெரிவிக்க வேண்டும்" என்று வேண்ட, பிரமதேவன் கூறியதாவது;

"ஸ்வாமி புஷ்கரிணியின் அருகில், அந்தணர்களுக்கு எல்லாம், சந்திரன், மனமகிழ்ச்சியுடன் நவமணிகளையும் தானம் செய்தான். அப்படித் தானம் செய்தமையால் குளுமையான ஒளியைப் பெற்று, யாவரும் போற்றிப் புகழும் படியாக வாழ்கின்றான். மன்மதன், முன்பு மறையவர் மகிழ, அந்தணர்களுக்குக் கன்னிகாதானம் செய்ததால் உலகோர் பாராட்டுகின்ற அழகோடு சுகபோகமும் சிறப்பும் பெற்றுக் களிப்புடன் வாழ்கிறான். குபேரன், வேதியர்களுக்குக் கனகதானம் செய்தான். ஆகையால் அளகாபுரியில் நவநிதியும் பெற்று நலத்துடன் விளங்குகிறான். திருமலையில் பிரகஸ்பதி, மறையோனுக்கு வேண்டியதைச் செய்ததால், தேவகுரு என்ற பதவியையும் பெற்றான். இவ்வாறு அவரவர் தங்கள் தங்களுக்கு வேண்டியவற்றை அடைந்து தான தர்மங்களைச் செய்தவர்கள் ஏராளம், என்று பிரமன் விரித்துரைத்து தனது உலகத்துக்குச் சென்றான். இதனை நான் வாமதேவர் மூலம் அறிந்தேன். முன்பு ஒரு சமயம் தவத்தில் சிறந்த மார்க்கண்டேய முனிவர்

Koviloor Digital Library

ஆகாயகங்கையின் கரையில் பிரமனை நோக்கித் தவம்புரிந்து வந்தார். பிரமன், அன்னவாகனத்தில் ஏறியமர்ந்து மார்க்கண்டேயன் முன்பு தோன்றி, தன்னைக் குறித்துத் தவஞ் செய்யக் காரணம் என்ன வென்று கேட்டான். அதற்கு அந்த முனிவன், “உலகிலுள்ள சிறந்த நதிகளின் பெருமைகளைப் பற்றிக் கூறவேண்டும்” என்று வேண்டினான்.

பிரமன், மார்க்கண்டேயனைநோக்கி, “முனிவனே! மூன்று உலகங்களிலும் ஆகாய கங்கையே சிறந்தது. ஆயினும் தென்னகத்தில் புலவர்கள் போற்றும் திருவேங்கடமலை என்ற தெய்வத்திருமலையில், சாமிபுஷ்கரிணி என்ற தீர்த்தம் ஒன்றுண்டு. மூவுலகிலும் உள்ள நதிகள் எல்லாம், தத்தமக்குள்ள பாவசம்பந்தத்தைப் போக்கிக் கொள்வதற்காக, ஒவ்வொரு வருஷமும், மார்கழிமாதம் துவாதசி திதியில் அங்கு வந்து சேர்கின்றன. ஆகையால் அக்காலத்தில் அதில் நீராடிக் குளிப்பவர்கள், மூவுலகப்புண்ணிய நதிகளிலும் நீராடிய பெரும் பயனையடைவார்கள்” என்று கூறிச் சென்றார். அதைக்கேட்ட மார்க்கண்டேயர் ஆகாச கங்கையை நீங்கி, சாமி புஷ்கரிணியில் நீராடி, ஆனந்தித்து, திருமகள் நாதனை தொழுது வணங்கி ஆராதனை செய்து சில காலம் அங்கு தங்கியிருந்தார்.

இறைவன் அவனது பக்திக்கு மகிழ்ந்து, அவனுக்கு நீண்டவாழ்நாளை அளித்தார் என்று சதானந்த முனிவர் ஜனகமகாராஜனுக்கு கூறினார். பின்னர், ஜனகமகாராஜன் தன் அமைச்சர்களுடன் திருமலையை அடைந்து சாமி புஷ்கரிணியில் குளித்து ஸ்ரீனிவாசப் பெருமாளைத் தரிசித்து ஆண்டவனின் திருவருளைப் பெற்று மிதிலைக்குச் சென்று, சிறப்புடன் ஆண்டு வந்தார்.

Koviloor Digital Library

69. சுகப்பிரம முனிவருக்குப் பகவானின் தரிசனம்!

தேவகுருவான பிரகஸ்பதியை நோக்கி தேவேந்திரன் "மூவரிலும் மேலான பரம்பொருளின் சிறப்பினைச் சொல்லுக!" என்று கேட்க, தேவகுரு கூறியதாவது, "முன்பு ஒருமுறை, மேரு மலையின் மணிமுடியிலுள்ள மணிமண்டபத்தில், இரத்தின சிம்மாசனத்தில் அமர்ந்த பிரமனை, மற்ற தேவர்களும் முனிவர்களும் இதே கேள்வியைத்தான் கேட்டார்கள்.

அப்போது, பிரமதேவன் திருமலையின் பெருமையினைக் கூறினார். அதைக் கேட்ட சுகப்பிரம்ம முனிவர், திருமலையை அடைந்து, அங்குள்ள ஒரு மலர்ச் சோலையில் பகவானைக்குறித்து, பனியிலும், வெப்பத்திலும் காற்றிலும் கடுந் தவம் புரிந்து வந்தார். அதையறிந்த இந்திரன் தேவமங்கையரை அழைத்து, "நீங்கள் நிலவுலகம் சென்று ஸ்வர்ணமுகி நதிக்கரையில் தவஞ் செய்யும் சுகபிரம்ம முனிவரின் தவத்தைக் கலைத்திடுங்கள்" என்று கட்டளையிட்டான். அந்த மங்கையர், முனிவரின் தவத்திருக்கூடத்தையடைந்து, ஆடல்பாடல்களால் சுகமுனிவரின் தவத்தைக் கலைத்து வந்தனர். அவர்கள் சிலம்புகள் ஒலித்தன. அவர்கள் மேனியிலிருந்து கலவைச் சந்தனம் மணம் வீசியது.

அவர்கள் முனிவரின் உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் ஆடினர். சுகமுனிவர், அவர்களைக் கவனிக்காமல், பகவானையே இடைவிடாமல் தியானித்து, பக்தியுடன், கனகமணி ஆரங்கள், குண்டலங்கள், திருத்துழாய் மாலை நவரத்தின மணியாரம்

Koviloor Digital Library

முதலியவைகளைப் பகவானுக்கு சாத்தி வேத முறைப்படி அர்ச்சனை செய்து மனங்கலங்காமல் பக்தி செலுத்தி வந்தார். அதனால் தேவமங்கையரால் அவரது மனதை மயக்க முடியவில்லை. அவர்கள் தோல்வியுற்று மேலுலகம் சென்றார்கள். அப்போது ஸ்ரீமந்நாராயணன் சுகமுனிவரின் முன்னே தோன்றி முனிவரின் தவத்தை புகழ்ந்து "உன் விருப்பப்படியே தேவியுடன் சேர்ந்து எம்மை வழிபடுவதற்கு ஏற்ற ஸ்தலம் அமைப்பாய்" என்று திருவருள் செய்து மறைந்தார்.

பகவான், அங்கிருந்து மறைந்த பிறகு முனிவன் தியானம் செய்து கொண்டே அந்தப் பொய்கையின் கரையில் பகவத் சந்நிதி ஒன்றையமைத்து, அதில் ருக்மிணி தேவியுடன் கண்ணன் திருவுருவத்தை மந்திரப் பிரதிஷ்டை செய்து, நூற்றியெட்டு இல்லங்களை அந்தணர்களுக்கு அமைத்துக் கொடுத்து ஞானமலையில் வழிபாடு செய்து வழிபட்டு பிறகு, மேரு மலையை அடைந்தார்" என்று சதானந்த முனிவர், ஜனக மகாராஜனுக்குக் கூறினார்.

70. சிவனின் நரசிங்க உபாசனை

தேவதரிசனமுனிவர், தேவகுருவிடத்தில், சிவபெருமான் நரசிங்கப் பெருமானை அர்ச்சனைசெய்து விரும்பிய பேறு பெற்றதைக் கூறத் துவங்கினார்."அந்தத் தீர்த்தத்தின் பெயரே சாமி புஷ்கரிணி. அதற்கு வடக்குத்திசையில் முப்பது காத தூரத்தில் கொடிய விலங்குகள் வாசம் செய்யும் காடு ஒன்று உள்ளது. அங்கு தாமரைமலர்ப்பொய்கை ஒன்றுண்டு. அதன் கரையில் அகிர்புத்னி என்ற ஒரு முனிவர் இறைவனைக் குறித்துத் தவம் செய்கிறார்.

Koviloor Digital Library

அதற்கு நேர் வடக்கில் ஒருமலைக் குகையில் அருகே ஆலமரம் ஒன்றின்கீழே பெரியதொரு பாறை யொன்று இருக்கிறது. அதன்மீது, திரிசூலபாணியாகிய சிவபெருமான், நரசிங்க மூர்த்தியைத் தரிசிக்க விரும்பிப் பாஞ்சராத்திர விதிப்படி, புனிதராக அமர்ந்து, தன் இதய மலரில் பெருமானை இருத்தி பூஜித்தும் பலகாலம் தியானித்தும் வந்தார்.

அப்பொழுது கண்கள் கூசும் பிரகாசத்துடன் பெரும் மணியோசை ஒலிக்க ஸ்ரீநரசிங்கமூர்த்தி எழுந்தருளினார். லிங்கப் பெருமான் வடவைத்தீயும் வாட்டமுற அதிர்ந்து எழுந்து, நரசிம்மரை வணங்கி, "அஷ்டாக்ஷரப்பொருளே! சகல ஆராணனே சக்கரகரனே!" என்று பலவாறாகப் புகழ்ந்து, "நான் விதிப்படி பூஜித்து அர்ச்சித்த இந்த மலையின் மீது உன் திருவுருவத்தை யாவரும் கண்டு பணிந்து பேறு பெறுமாறு என்றும் காட்சி யருளவேண்டும்" என்று வேண்டிப் புகழ்ந்தார். நரசிம்ம பெருமான் அங்கு உறைகிறார். ஆகையால் அந்தமலைக்கு 'நீலகண்ட மலை' என்று பெயர். அதில் சந்தனமரங்கள் நிறைந்த வனத்திற்கு அகிர்புத்னி வனம் என்று பெயர். அங்குள்ள பொய்கையில் நீராடுவோரின் பாவங்கள் எல்லாம் நீங்கிவிடும். சிவன் மாயவனைப் பணிந்த அந்த பிலத்தின் பெயர் 'அகோபிலம்' என்பதாகும். அதன் பெருமை அளவிடுதற்கரியது. என்று கூறி, கோனேரியின் புகழ்ச்சிறப்புகளைக் கூறலானார். அத்திரி, வசிஷ்டர், ஆரிதன், வியாசன், அகத்தியன் பிருகு, மார்க்கண்டன், ஜாபாலி, கௌதமன், சாண்டில்யன், போதாயனன், துர்வாசன், விசுவாமித்ரன், பிரகஸ்பதி, ஜயமுனி, சனந்தன், காசியபன், பரத்வாசன், மாண்டவியன், கண்ணுவன், நாரதன், புலகன், சாத்தியாயனன், மனிசிகன், சௌனகன், சனாதனன்,

Koviloor Digital Library

ஆங்கிரசன், சநத்குமாரன், புலத்தியன் முதலிய பல முனிவர்களும் சாமிபுஷ்கரிணியின் சிறப்பினை எடுத்துக் கூறியுள்ளார்கள்.

ஆங்கு, எழுந்தருளியுள்ள ஸ்ரீநிவாசப் பெருமானைப் பக்தியுடன் போற்றி, அந்தத்தீர்த்தத்தில் மூழ்கிப் பல பிறவிகளில் புரிந்த பாவங்கள் நீங்கப் பெறலாம். அருகிலேயே ஸ்ரீலக்ஷ்மியைப் பிரதிஷ்டை செய்ய ஒரு தீர்த்தமும் உள்ளது. அதற்குப் பத்மசரஸ் என்று பெயர். "இந்தப் பத்ம சரசில் நீராடுவோரின் பாவங்கள் யாவுமே நீங்கும்" என்று அருள் செய்து கருடனின் மீது அமர்ந்து சேஷகிரியின் கோனேரிக் கரையை அடைந்து, அடியார்க்கு அருள் புரிந்து வந்தார். அங்கு சுகபிரம்ம முனிவரால் தோன்றிய சாயாசுகர், ஸ்ரீநிவாசப் பெருமானைப் பணிந்து, கண்ணனையும் பலராமனையும் பத்ம சரசின் கரையில் பிரதிஷ்டை செய்துள்ளார்" என்று தேவதரிசன முனிவர் கூறினார்.

71. ஸ்வர்ணமுகியின் கதை

ஒருசமயம், பரத்துவாச முனிவர், இந்திரனது புதல்வனாகிய அர்ச்சுனனுக்குப் பின்வருமாறு கூறினார். "அர்ச்சுனா! முன்பு புண்ணிய நதிகளின் சிறப்புகள் அனைத்தையும் உனக்குத் தெளிவாகக் கூறினேன். அவற்றில் கங்கை நதியுடன் யமுனை நதியும் சேரும் சங்கமத்தானத்து மகிமையைக் காட்டிலும், உயர்ந்த கதியைத் தருவதாகவும் விளங்கும் ஸ்வர்ணமுகி ஆற்றுடன் சங்கமமாகும் கல்பியை என்ற ஆற்றுச் சங்கமத்தின் கரையில் சக்கரபாணியின் திருவடிகளை மனத்தில் தியானித்து, மூழ்குபவர்களின் பாவங்கள் எல்லாம் அவர்களைவிட்டு நீங்கிவிடும்.

Koviloor Digital Library

72.திருவிழாக்களும் பிரார்த்தனைகளும்

திருமலைதிருப்பதியில் நடக்கும் திருவிழாக்களில் புரட்டாசித் திருநாளை முதன் முதலாகப் பிரமதேவன் துவங்கியதாகப் புராணங்கள் சொல்கின்றன. திருவேங்கடமுடையானாகிய மூலமூர்த்தி தானாகவே தோன்றியவர் என்று நூல்கள் கூறுகின்றன. பல்லவர் காலத்துக்கு முன்பு, திருவேங்கடம் உடையான் திருக்கோயில் சிறிய அளவுடையதாகத்தான் இருந்தது. ஊரும் விரிவாக இல்லை. அந்தக் காலத்தில் பிரம்மோற்சவம் எவ்வாறு நிகழ்ந்து வந்தது என்று அறிவதற்கு ஆதாரமில்லை. கி.பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் சாமவை என்ற பல்லவஅரசி, ஒரு வெள்ளி விக்கிரகம் அமைத்துப் புரட்டாசித் திருவிழாவுக்காகத் திருச்சுகனூரில் உள்ள நிலங்களை அளித்தாள். அதற்குப் பிறகு புரட்டாசித் திருவிழா சிறப்பாக நடைபெற்று வரலாயிற்று. திருமலை ஒழுகின்படி, இவ்விழா சில காலம் திருச்சுகனூரில் நடந்திருக்கவேண்டும். இராமானுஜர் காலத்தில் திருமலையில் நிகழலாயிற்று.

புரட்டாசி மாதத்தைத் தவிர வைகாசி, மார்கழி மாதங்கள் நீங்கலாக மற்றைய மாதங்களிலும், ஒவ்வொருவரால் இந்தத் திருவிழா நடத்தப்பெற்று வந்ததாகத் தெரிகிறது. ஆயினும் திருமலை புரட்டாசித் திருவிழாவே மிகமுக்கியமான விழாவாகும். புரட்டாசி மாதச் சனிக்கிழமைகள் தோறும் மக்கள், பல பகுதிகளில் இருந்தும் வேண்டுதலுக்காகவும், பிரார்த்தனைகளை நிறைவேற்று வதற்காகவும் உரிய நாளாகக் கருதுவதால் திருமலையில் உலகின் பல பகுதி மக்கள் அங்கு குழுமுகின்றனர். திருமலைக் கல்வெட்டுக்களில் இந்தத்

Koviloor Digital Library

திருவிழாக்களை திருக்கொடித்திருநாள் எனக் குறிக்கப்பெற்றுள்ளன."...தம்முடைய உபயமாக ஆனி மாதத்தில் திருவோண நட்சத்திரம் அங்குரார்ப்பணமும், சதயம் திருமுளையும் தம்முடைய நட்சத்திரம் மிருகசீரஷம் தீர்த்தவாரியுமாக விடையாற்றுவரைக்கு நாள்13க்குத் திருக்கொடித்திருநாள்" என்று கல்வெட்டில் காணப்படுவதால் புரட்டாசி மாதத்தை தவிர மற்றைய மாதங்களில் திருவோணத்தில் தான் தீர்த்தவாரி நடத்தவேண்டும் என்பதல்ல என்றாலும் ஒன்றுக்கு வகுத்த விதியே மற்றதற்கும் பொருந்தும் என்பது கல்வெட்டுப் பொறித்தவர்களின் கருத்து

ஊஞ்சல் விழா, கோடைத்திருநாள், திருப்பள்ளி ஓடத்திருநாள் போன்ற பலதிருவிழாக்கள் முன்பெல்லாம் நடந்துவந்தன. அத்யயனோத்சவமும் அதன் முடிவில் தண்ணீரமுது வழி திருத்து விழாவும் இப்போது போலவே அப்போதும் நடைபெற்று வந்தன. கடைகொழி நாச்சியார் திருவத்யயனம் என்ற ஒரு திருவிழா அத்யயனோத்காலத்தில் முன்பு நடந்து வந்தது.

கட்டியம் யாதவராயன், அனந்தாழ்வார் கூறியபடி திருமாலை தொடுப்பதற்காக மண்டபம் ஒன்றைக் கட்டினான். அதற்கு யமுனைத் துறை என்று பெயர். இப்போதும் அங்கே தான் பூ மாலைக் கட்டித் தொடுத்துப் பெருமாளுக்குச் சாத்துகிறார்கள். திருமலைக் கோயிலில் அமைந்துள்ள இராமானுஜரது திருவுருவம் அவருடைய நாற்பதாவது வயதிலே செய்யப்பட்டது. அவர் அதை நோக்கித் தழுவிக் கொண்டு தம் மாணவரான அனந்தாழ்வாரிடம் தந்தார். பிறகு அவர் அதனைத் திருக்கோயிலில் யாதவராயனின் துணையோடு நிறுவித்தார்.

Koviloor Digital Library

புனுகு காப்பு

திருவேங்கடமுடையானுக்குப் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை புனுகு காப்புமுறை கி.பி.1496ல் நடந்து வந்தது. பிறகு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அதனை செய்ய வேண்டும் என்று கி.பி.1534ல் ஏற்பாடு செய்யப்பெற்றது. புனுகு என்ற வாசனைத் திரவியத்தால், பெருமானுக்குக் காப்பிடும் முறையைத்தான் 'புளிக்காப்பு' என்று தவறாக வழங்கப் பெறுகிறது.

சாளுவநரசிம்மன் காலத்தில் முகம்மதியர் கலகம் நேரிட்டது. அப்போது, கோவிந்தராசர், ஆழ்வார், எம்பெருமானர்களோடு, திருவேங்கடமுடையானும், பாபவிநாச தீர்த்தத்துக்கு அருகே இருக்கும் ஒரு குகையில் வைக்கப்பெற்று, அங்கேயே ஓராண்டு திருவநாதனம் கொண்டருளினார்கள். பாமினி சுல்தான் மூன்றாவது முகம்மது ஷானா விஜயநகரத்தின் மீது படையெடுத்து வந்தபொழுது இவ்வாறு நிகழ்ந்திருக்க வேண்டும். அப்போது சாளுவ நரசிம்மன் பெரிய பெருமாளின் பாதுகாப்புக்காகக் கல்வேலியொன்று கட்டி வைத்தான்.

ஜீயர்கள்

இராமானுஜர் காலத்தில் திருமலையில் நந்தவன கைங்கரியத்தைத் திருப்பணியாக அனந்தாழ்வார் மேற்கொண்டதைப்போல, அவருக்குப் பின்னும் பலர் நந்தவன கைங்கரியங்களைச் செய்து வந்தார்கள். இராமானுஜர், திருவேங்கடச் செல்வத்துக்கும் திருப்பணிகளுக்குக் குறைவு ஏற்படாமலிருக்க சந்நியாசிகளாகிய ஜீயர்களை இந்தத் திருத்தொண்டில் ஈடுபட்டிருக்க நியமித்தார். இப்போது, திருமலையிலுள்ள

Koviloor Digital Library

பெரியஜீயர் மடத்தில், கி.பி.1053ல் இராமானுஜரே எழுந்தருளியிருந்து, தமது பதவியில் அப்பன் சடகோபராமானுஜ ஜீயரை நியமித்தருளினார். அவருக்குப் பிறகு பலர் ஜீயராயினர். அவர்களுடைய வழிமுறைப் பெயர்களும், அவர்களுடைய காலமும் பெரியஜீயர் மடத்திலுள்ள ஜீயர் பரம்பரைப் பட்டயத்தால் விளங்கும்.

தலைமுடி பிரார்த்தனை

திருமலையில் பக்தர்கள் தங்கள் தலைமுடியை மொட்டையடித்துக் கொள்ளுகிறார்கள். இது எதற்காக ஏற்பட்டது? எப்போது ஏற்பட்டது என்பது சரிவரத் தெரியவில்லை. ஆனால் திருவேங்கட உலாவில்,

"......வந்தவரை

தன்னடிமையாக்கித்தலைமயிரைக் கண்டிப்பான்" *(390)*

என்று கூறும் சொற்றொடர் காணப்படுகிறது. இதிலிருந்து திருவேங்கடவன் தன் இடத்திற்கு வருபவர்களைத் தனக்கு அடிமையாக்கிக் கொண்டு, அதற்கு அடையாளமாக அவர்கள் தலைமயிரை போக்குவிக்கிறான் என்று கருதப்படுகிறது. முற்காலத்தில் ஒருவனை அடிமையாக்கி கொண்டதற்கு அறிகுறியாக அவனுக்கு மொட்டை அடிப்பது வழக்கம். சிலர், பெருமாளுக்குத் தங்கள் தலைமுடியைத் தந்தால், அது தங்கள் தலையையே கொடுத்தது போலவாகும் என்று தாம் செய்து கொண்ட பிரார்த்தனையால், தங்கள் உயிர்காப்புக்காக இதைச் செய்வதாகச் சொல்கிறார்கள். இந்த வழக்கம் 500 ஆண்டுகளுக்கு முன்பே, நடைமுறையில் இருந்து வந்ததாகத் தெரிகிறது.

Koviloor Digital Library

73. சிங்கமுறை

திருமலை திருவேங்கடமுடையான் மடைப் பள்ளிக்கு(எரிகரும்பு) முறை செய்பவனுக்குச் சிங்கமுறையான் என்றே கல்வெட்டுகளில் காணப்பெறுகிறது.

தேவையாள் என்பவர் கோயில்மடைப்பள்ளிப் பரிசாரகர் என்று கல்வெட்டுகளை மொழிபெயர்த்தவர் குறிப்பிட்டுள்ளார். தேவியின் ஆட்கள் என்பதே பிழையற்ற தென்றும் தேவயாள், தேவையாள் என்பவை தவறான சொற்கள் என்றும் கூறப்படுகின்றன. திருமலைக் கோயிலில் உள்ள முன் கோபுர வாயிற்படிக்கு அவாவறச் சூழ்ந்தான் திருவாயில் எனவும் துவார பாலகர் மண்டபத்திற்கு, வென்று மாலையிட்டான் திருமண்டபம் என்றும் பெயர்கள் வழங்கி வந்தன.

இந்தத் திருக்கோயிலில் ஐந்து பேரங்கள் உள்ளன. ஒன்று மூலபேரமாகிய திரு வேங்கடமுடையான். இவருக்குப் பெரியபெருமாள் என்றும் பெயர் உண்டு. இரண்டாவது வேங்கடத்துறைவராகிய ஸ்ரீநிவாசன் திருவுரு. மூன்றாவது உருவம் மணவாளப் பெருமாளாகிய போக ஸ்ரீநிவாசருடையது. நான்காவது மலைகுனிய நின்றாராகிய உற்சவமூர்த்தி. ஐந்தாவது மூர்த்தி பலி பேரமாகிய கொலு ஸ்ரீநிவாசன் என்பவராகும். இவ்வைந்து பேரங்களும் மிகச் சிறந்தவை.

பிரம்ம புராணத்திலே ஸப்தமாத்யாயத்தில் இருக்கிறப்படி கலியுகாதியிலே இருந்த ஸ்வாமியானவர், தம்முடைய பக்தனைத் தொண்டைமான் சக்கரவர்த்திக்குச் சத்ரு சம்ஹாரத்திற்காகச் சங்கு சக்கரங்களைக் கொடுத்தாரென்று தொடங்கி, திருவாழி திருச்சங்கு இன்றியே இருக்கின்றார் என்று விசேஷித்துப் புராண

Koviloor Digital Library

அர்த்தத்தை அருளிச் செய்ய, அதனாலும் ராஜாவுக்கு நிர்த்தாரஸம் பிறவாமலிருக்க அப்போது எம்பெருமானார் பிரத்யக்ஷமாகவே ஒரு நிச்சயம் பிறக்கும்படி ஒரு வார்த்தை சொல்கிறேன் என்றார். அதாவது "நான் மஹாவிஷ்ணு என்று சொன்னேன். சைவர்கள் சுப்பிரமணியன் என்றார்கள்.இந்த ஸம்சயம் போகைக்கு நான் விஷ்ணுவுக்கு அசாதாரணமான சங்கு சக்கரங்களைப் பண்ணிக் கொண்டுவந்து, ஸ்வாமி சந்நிதியிலே வைக்கிறேன். சைவர்கள் சுப்பிரமணியருக்கு அசாதாரணமான பாசாங்குசங்களைப் பண்ணி வைக்கக் கடவார்கள். எந்த ஆயுதங்களை எடுத்துத் தரித்தாரோ அந்த ஆயுததரரான தேவராகக் கடவர்" என்றார்.

ராஜாவும் அதைக் கேட்டு "அப்படிச் செய்யுங்கள்" என்று சொல்ல, இரண்டு வாதிகளும் அந்தந்த ஆயுதங்களைப் பண்ணிக் கொண்டு, ராஜாவையும் கூட்டிக் கொண்டு திருமலை ஏறி, ராத்திரியிலே ஸ்வாமி கர்ப்பக்கிரகத்திலே வைத்து, ராஜ முத்திரையும் பண்ணுவித்துக் காவலாக இருக்க, அதிகாலையில் கதவைத்திறந்து பார்க்கும்போது, ஸ்வாமியானவர், சங்கு சக்கரங்களைத் தரித்துக் கொண்டிருந்தார். அதைக் கண்ட அரசனும், ஸந்துஷ்டனாய் எம்பெருமானார் திருவடிகளிலே பிரதி பஞ்ஞனாகி இவர் சொற்படிக்கு அந்தச் சைவர்களை அவர்கள் சொன்னதை அஸத்யானுகுணமாக நிக்ரஹித்து, தேசத்துக்குப் புறம்பாகத் துரத்திவிட்டு எம்பெருமானார் திருவடிகளிலே ஆச்ரியித்து க்ருதார்த்தனாக இருந்து வந்தான்.

பிறகு எம்பெருமானாரும், இந்தத் திருமலையிலே எழுந்தருளியிருக்கும் அவரே ஸ்ரீ வைகுண்டநாதனாய் ஸ்ரீய:பதியான ஸ்ரீ மஹாவிஷ்ணு வென்று, சகல தேசங்களிலும் அறியும்படி நிர்வகித்து, ஸ்ரீ வைகாநச

Koviloor Digital Library

ஆகமத்தாலே சம்ப்ரோக்ஷணமும் பண்ணுவித்து நித்யாராதனமும் கண்டருளும்படி சங்கல்பித்து, ஸ்ரீ விஷ்ணு தத்வ ப்ரதிஷ்பிப தாசார்யராய் இருக்கிறவர், ஸ்ரீய:பதிக்கு அசாதாரணமான திருவாழி திருச்சங்கு சாத்தி வைத்தது மல்லாமல் பூர்வம் உயர்ந்த திவ்ய விமானத்திலே ஸ்ரீ வைகாநச சாஸ்திர முறைப்படி நான்கு



திசைகளிலும் வராக, நரசிம்ம, வைகுண்டநாத, ஸ்ரீ வேங்கடேச தேவதைகளையும் ஏறியருளப் பண்ணுவித்தும், விஷ்ணு பரிகரங்களான சேஷாசன, கருட, துவார பாலகர்களையும் தத்தமது ஸ்தானங்களிலே பிரதிஷ்டை பண்ணுவித்தும் சந்நிதியிலே திவ்ய ஐஸ்வரியம் உண்டாகும்படிக்குத் திருமார்பு நாச்சியாரான அலர்மேல்மங்கையை இருகைகளை உடையவளான வியூகலக்ஷ்மியாக சேவை பிரசாதிக்கும்படிச் சங்கல்பித்து, சுக்ல துவாதபியும் சுக்ரவாரமும், உத்தரபல்குனி நட்சத்திரமும் கூடிய ரத்னமஞ்சரிகா யோகத்திலே திருமார்பிலே சாத்துவித்தும், திருவேங்கடமுடையானுக்கு ஆதிகாலமாரப்ய நித்ய

Koviloor Digital Library

திருமஞ்சனம் கொண்டருளும் படியைக் கேட்டருளி, இப்படி நடந்தால் திருமேனிக்கு உசிதவுபசாரங்கள் பூரணமாக உண்டாக மாட்டாது என்று வைகாநஸ ஆகமத்தில் ஆனந்த ஸம்ஹிதையில் இருக்கிறபடியே சுக்ரவாரத்தில் அலர்மேல்மங்கை நாச்சியார் திருமார்பினின்று எழுந்தருளித் திருமஞ்சனம் கொண்டருளுவதற்கு முன்பாக ஸ்வாமியும் திருமஞ்சனம் கொண்டருளும்படிக் கட்டளையிட்டார்.

74. திருவேங்கடமுடையானின் திருமண்காப்பு !

ஸ்ரீ வைகாநஸ சாஸ்திரப்படி ஸ்ரீய:பதிக்கு அசாதாரணமாய் இருகோடுகளின் வடிவமான திருமண்காப்பை மூக்கு முதல் தலைவரை சாத்துவித்து, இப்படிக் கட்டளையிட்ட மறுநாள், சுக்ரவாரம் அன்று திருமஞ்சனம் செய்யும் போது, திருநெற்றியிலே சாத்திய ஊர்த்துவ புண்ட்ர ரேகையானது அழிந்து, அந்த ரேகைக்கு மூலமான மூக்கு ஆரம்பத்தில் சாத்திய பாதிச் சந்திர வடிவான திருமண் காப்பு அழியாமலிருக்க, அந்தப்பிறைத் திருமண்காப்பை எம்பெருமானார் கடாக்ஷித்தருளி, பூர்வம் ஜகன்மோகினியான அவதார காலத்தில் திருநெற்றியிலிருந்த பிறைத்திருமண் காப்பு.

அங்கே இருந்த தேவாசுரர்களுக்கு மோஹமாக இருந்தாற்போல, இந்த ஜகன்மோகனமாயிருக்கிற திவ்ய மங்கள விக்ரகத்திலே நாசாதியிலே காண்பிக்கிற பிறைத்திருமண்காப்பும், ஸ்வாமி திருமுக மண்டலத்துக்குச் சோபையாகவும் ஆச்ரிதர்களுக்கு கண்ணையும் மனதையும் கவரத்தக்கதாக இருப்பதால், சில நாள் அவ்வாறே சாத்தியருள வேண்டும் என்று திருவுள்ளத்தில்

Koviloor Digital Library

எண்ணிக்கொண்டிருக்க அப்படி பகவதனுக்ரகமும் அர்ச்சித முகத்தாலே உண்டாக எம்பெருமானாரும் பின்பு திருவேங்கடமுடையான் சுக்ர வாரத்திலே திருமஞ்சனங் கொண்டருளிய பின்பு, கர்ப்பூரப் பொடிகளாலே திரு நெற்றியிலே ரேகாத்வய ரூபமாக சாத்தியருளிய திருமண் காப்பை மூன்று நாள் தரித்துக் கொண்டிருக்கச் செய்யவும், சோமவாரத்திலே, தாம் எண்ணியபடி பகவதனுக்கிரகமுண்டானபடியால் நாசாதியிலே பிறைத்திரு மண்காப்பாக சாத்திக் கொள்ளும்படிக்கும், திருநெற்றியிலே ரேகாத்வயரூபமாக முத்துத் திருமண்காப்பும், திருக்கண்மலருக்குச் சீதளத்ரவ்ய விசேஷத்தாலே அஞ்சனக் காப்பும் சாத்திக் கொண்டு சேஷ தனமெல்லம் எல்லோருக்கும் ஸேவை பிரசாதித்தருளும்படிச் செய்யக் கட்டளையிட்டார்.

75. நாச்சியார் திருமொழியை ஓதுவித்தல்

சுக்ரவாரந்தோறும் திருவேங்கட முடையான் திருமஞ்சனம் கொண்டருளும் போது, "இறையுமகலகில்லேன்" என்று எப்போதும் பிரியாதவளாக வலமார்பில் வாழ்கின்ற மங்கையான அலர்மேல்மங்கை நாச்சியார், திருமார்பிலிருந்து இறங்கியருளும்போது தத்கால மாத்ரமானபிரிவைச் சகிக்கமாட்டாமலிருக்கும் ப்ரகிருதியை எம்பெருமானார் சிந்தித்து, தத்பிராண சகியாய்ப் பூமியம்சையாய்த் திருவவதரித்தருளின ஆழ்வார்.

திருமகளானவர் திருத்துழாய் பரிமளத்தோடே முளைக்குமாப் போலே பகவத்பிரேமத்தோடு, அவதரித்தருளினது தொடங்கி எம்பெருமானை

Koviloor Digital Library

அநுபவிக்கைக்கு ஆசைப்பட்டு அது கிடையாமையாலே, அவனைப் பெறுகைக்கு உபாய விசேஷங்களிலே கை வைத்தபடியையும் அவன் பக்கம் தூது விட்டபடியையும் அவனுடைய ஸ்துதி, கமந, சயநாதிகளுக்கு யோக்யமான திருப்பதிகளை அநுபவித்தபடியையும் இப்படி அநேக விரகதசையை அநுசந்திதப் படியையும் பிரகாவிப்பிக்கிற நாச்சியார் திருமொழியைத் திருவேங்கடமுடையான் புருஷ ஸூக்தாத்யநேக ஸூக்தபாராயணத்துடனே திருமஞ்சனம் கொண்டருளின வனந்தரும் அலர்மேல் மங்கை நாச்சியார் திருமஞ்சனம் கொண்டருளும் போதும் (இந்தப் பிரபஞ்சத்தை, அநுசந்திக்கும்படிக்கும் ஏற்பாடு செய்தார்.

செங்களிவாயன் திருவம்சத்திலே பிறந்த பரம பாகவதர்கள் திருக்கைகளாலே திருவேங்கடமுடையான் திரு மஞ்சனம் கொண்டருளும்படி ஏற்பாடு செய்தார். அவருடைய திருநட்சத்திரமான ஐப்பசி மாதத்து சரவண நட்சத்திரத்தில் ஸ்ரீவராக ஜயந்தியை விசேஷ உத்சவமாகக் கொண்டாடச் செய்தார்.

76. அழகர்பிரானும் பூமிதேவிப் பிரதிஷ்டையும்

தொண்டைமான் சக்ரவர்த்தி, திருவேங்கடமுடையான் உடைய திருவடிகளில் பூரண பக்திமானாய்த் திகழ்ந்து வந்தான். அவன் தினந்தோறும் அவனது அரண்மனையிலிருந்து திருமலைக்கு வரும்படியாக சுவாமியானவர் ஒரு பிலத்தைக் காட்ட அதில் பிரவேசித்து சந்நிதியிலே போய் பெருமானைச் சேவித்து வந்தான். இப்படியிருக்க, ஸாமந்த ராஜாக்கள் அவனது பட்டணத்தைச் சூழ்ந்து கொண்டனர். அப்போது சக்கரவர்த்தியும் அவர்களைத் துரத்திக் கொண்டு யுத்தம்

Koviloor Digital Library

செய்தபோது தோல்வியடைந்தார்.அதனால் அவன் தன். தேசத்துக்கு ஓடிவந்து திருவேங்கட முடையான் பக்தனாகையால், பிலத்துவாரத்தின் வழியாக அகாலத்திலே சந்நிதியிலே வந்துநிற்க, அப்போது அந்தரங்க தசையிலே சேவித்துக் கொண்டிருக்கிற ஸ்ரீமகள் பூமகள் ஆகிய இரண்டு தேவிகளும் மறைந்து, அந்தப் புரத்திலே பரபுருஷன் வந்தான் என்ற ங்கோசப்பட்டு ஸ்ரீதேவியானவள் தமக்கு நித்ய வாசஸ்தலமான திருவேங்கடமுடையான் திருமார்பிலே ஏறியருள, பூமிதேவியானவள் வெளிப்பட்டு, பூர்வகாலத்திலே ரங்கதாசன் திருநந்தவன கைங்கரியத்துக்காக வெட்டிய கிணற்றிலே குதித்தாள்" என்ற கதை அந்த ஸ்தலத்தில் சொல்லப்பட்டு வந்ததால். அந்தப்பூமிப் பிராட்டியை அர்ச்சாரூபமாக எழுந்தருளப்பண்ணி, அந்தக் கிணற்றிலே சேர்த்தியாக எழுந்தருளப்பண்ணுவித்து, அவர்களுக்கு நித்யரகத் தளிகைகள் அமுது செய்யப்பண்ணும்படிக் கட்டளையிட்டார்.

ஒரு சமயம் ஆளவந்தார், திருவேங்கட யாத்திரை செய்தருளி, மங்களாசாசனம் செய்தருளியபோது, ஒரு நாள் அதிகாலையில், அழகப்பிரானர் திருமஞ்சனத்துக்கு உதவும்படி திருமலை நம்பி பாபவிநாசத்திலேயிருந்து திருமஞ்சனம் கொண்டுவருவதற்கு இடையூராக மழைபெய்து கொண்டிருந்ததால் திருமஞ்சனம் கொண்டு வரமுடியவில்லை.

ஆளவந்தார், ரங்கதாசன் கைங்கரியமான கிணற்றிலிருந்து திருமஞ்சனம் எடுத்து சமர்ப்பித்துத் திருமஞ்சனம் கோண்டருளச் செய்து அந்தக் கிணற்றுக்கு அழகப்பிரானர் என்றழைக்கக் கட்டளையிட்டார்.

Koviloor Digital Library

77. ஹுங்கரபுளியும் செண்பகமும்

ரங்கதாசன் என்ற ஒரு பரமபாகவதன், தட்சினா தேசத்திலிருந்து திருமலைக்கு வந்து நித்யவாசம் பண்ணிக் கொண்டு எம்பெருமான் திருமேனிப் பரிவாலே ஒரு திருக்கோயில் கட்ட எண்ணினான். அப்போது ஸ்வாமியின் பின்னேயிருந்த புளியமரமானது ஹுங்காப்புளியாக ஒரு கொம்பு தளிரும், ஒரு கொம்பு காயும், ஒரு கொம்பு பூவும் ஒரு கொம்பு இலையும் ஒரு கொம்பு பழமுமாய் இப்படி விசித்திரமாக, குடை பிடித்தாற்போலத் தழைத்திருப்பதைக் கண்டு என்ன செய்வது என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். அன்று இரவில் அந்தப்புளியமரம் அந்த இடத்தை விட்டு ஸ்வாமிக்கு ஈசான்யபாகத்திலே அம்பு செல்லும் தூரத்தில் எழுந்தருளியிருக்க, அதைக் கண்ட ரங்கதாசன் ஆச்சரியமடைந்து இந்தமரம் திருவனந்தாழ்வான் அம்சம் என்று ப்ரதிபத்து பண்ணிக் கொண்டு ஒரு திருக்கோயில் கட்டினான்.

இப்போதும் எல்லோருக்கும் பிரத்யட்சமாகவே வருவுச் சாயையானது விருட்சமுள்ள விஸ்தாரமட்டும் காண்பித்துக் கொண்டு, சூர்யகதியாலே கிழக்கு மேற்காக போகாமையாலும் அந்த விருட்சம் திருவனந்தாழ்வான் அம்சம் என்று நிச்சயித்தனர். அலர்மேலுமங்கை நாச்சியார் தாமே அத்தாணிப்புளிக்கு நைருநிதி பாகத்திலே ஸ்வாமிக்கு வலதுபக்கத்திலே பின்பக்கம் அடைந்து கொண்டு நிற்கும் ஒரு சம்பக மரத்தின் கீழிருந்து அருள் செய்து வந்ததால் அந்த இரண்டையும் சேதிக்க வேண்டாமென்று கட்டளையிட்டு, அந்த இரண்டு விருட்சங்களுக்கும் நித்யாராதனம் நடக்கும்படிச் செய்தான்.

Koviloor Digital Library

78. ஆதிசேஷன் நாகாபரணமான கதை!

இது இப்படியிருக்க வீரநரசிம்ம தேவன் என்ற அரசர் கஜபதியவம்சத்தைச் சேர்ந்தவன். அவன் தீர்த்த யாத்திரைக்காக சேதுதரிசனம் செய்ய வேண்டும் என்று தட்சிணதேசத்திற்கு வரும்போது, மார்க்கமத்யத்திலே ஸ்ரீவேங்கடாசல வைபவத்தைக் கேட்டு, திருமலையேறி, ஸ்வாமி புஷ்கரணியில் நீராடி, ஞானப்பிரானையும் வேங்கடாத்திரியையும் தரிசித்துப் பின்னர் திருவேங்கடமுடையானையும் சேவித்து ஷேத்ரோபவாசம் முதலிய நியமங்களுடன் இருந்து வேங்கடநாயக: பிரபாவத்தைக் கேட்டு, ஏதாகிலும் ஸ்வாமிக்குக் கைங்கரியம் பண்ணவேண்டும் என்று விரும்பி வித்வான்களைக் கேட்டான்.

அவர்கள், "ஆகம சாஸ்திரங்களில் ஆபரணங்களில் கிரீடமே சிறந்தது. வாகனங்களில் ரதமே சிறந்தது. கோபுரத்தில் விமானமே சிறந்தது. ரத்னங்களில் வைரமே சிறந்தது வர்ணங்களில் பிராமணவர்ணமே சிறந்தது. ஆஸ்ரமவாழ்க்கையே சிறந்தது என்று சொல்லப் பட்டுள்ளன. இவைகளில் உன்மனதிற்கு இஷ்டமானதைச் செய்வீராக" என்றார்கள். அதைக்கேட்டு மகிழ்ந்த அந்த அரசன், ஒரு திருக்கோபுரத்தைக் கட்டவேண்டும் என்று நிச்சயித்து, அதற்குச் சாதகர்களான மனுஷ்யர்களையும் திரவியங்களையும் கொடுத்து நிர்ணயம் செய்து, உத்யோகம் பண்ணுவித்து, திருமலையிலிருந்து காசி, காஞ்சி போன்ற க்ஷேத்திரங்களுக்கு சென்று, சேதுதரிசனம் செய்து மீளவும் திருமலையேறி ஸ்வாமியைச் சேவித்து, கட்டுகிற கோபுரத்தைக் கண்டு மகிழ்ந்து தானதர்மாதிகளைச் செய்து பூரண திருப்தியுடன் இருந்தான்.

Koviloor Digital Library

அப்போது அந்த இரவில், அந்தக் கஜபதியின் கனவிலே ஒரு சர்ப்பம் தோன்றி, "கஜபதியே! இந்தத் திருமலை என் சரீரம். இதிலே நீ கோபுரத்தைக் கட்டுவதால், என் தேகத்தின்மீது அதிகபாரம் ஏற்பட்டு பீடையும் அதிகமாக இருக்கிறது. ஆகையால் என் ஸ்வாமீயானவர் சந்நிதியில் போனால்தான் என் பீடைபோகும்" என்று சொல்லி கோயிலிலே புகுந்து சந்நிதியிலே போய்த் திருவேங்கடமுடையான் வைகுண்ட ஹஸ்தத்திலே சுற்றிக்கொண்டிருக்க, ராஜாவும் இப்படிப்பட்ட கனவைக் கண்டு, விழித்தெழுந்து, அச்சமுடையவனாய் வித்வத் ஜனங்களிடம் தனது கனவைச் சொல்லி இந்தக் கனவுக்கு பலன் என்ன? என்று கேட்க, அவர்கள் "இந்தப் பர்வதம் சேக்ஷாசலம் என்று வராஹ வாமனாதி புராணங்களிலே முனிவர்கள் சொன்னார்களே;

இப்படிச் சேஷாகாரமான இந்தப் பர்வதத்தை வெட்டவும் இதன் மீது கற்களைக் குவிப்பதுமாகிய இந்தச் செய்கையால் ஆதிசேஷனுக்கு பீடையும் பாரமும் அதிகமாகியிருக்கும் என்று சொல்ல அதைக்கேட்ட அரசன் பயப்பட்டு, கோபுரத்தை அதற்கு மேல் கட்டவேண்டாம் என்று அறைகுறையாய் நிறுத்தி திருவேங்கடமுடையானுக்கு இவ்வளவு கைங்கரியமே திருவுள்ளத்திற்கு உகப்பாக இருந்ததென்று மகிழ்ந்து சேஷனிடத்திலே அபசாரப்பட்டோமே என்று பயந்து இதற்காக திருவேங்கடமுடையானுக்கு ஒரு நாகாபரணத்தை செய்வித்து சந்நிதியிலே சமர்ப்பித்து இதைச் சாத்தியருளவேண்டு மென்ற பின்பு சந்நிதியில் பேரானவர்கள்.

எங்கே அந்த ஆபரணத்தைச் சாத்துவது என்று யோசிக்க, அப்போது திருவேங்கட முடையானும் ஒரு

Koviloor Digital Library



பக்தன்மேல் ஆவேசித்து, முன்பு ஒரு காலத்திலே சேஷனுக்கும் வாயுவுக்கும் ஸம்வாதம் உண்டானபோது, சேஷனுக்கு துக்கமுண்டாயிற்று. பிறகு பகவானே, "தந்தையானவன் தன் மகனைக் கையாலெடுத்து கொஞ்சுவதைப் போல, நாமும் கையிலே தரிக்கிறோம்" என்ற பிறகு சந்நிதியிலிருந்தவர்கள் எல்லோரும் சந்தோஷப்பட்டு, வைகுண்ட ஹஸ்தத்திலே சாத்துகிறார்கள்.

அன்று தொடங்கி எம்பெருமானர் மங்களாசாசன பர்யந்தம் ஒரு திருக்கையிலே தானே நாகாபரணமாய் இருக்க இதை எம்பெருமானர், அரசன் கண்ட கனவுப்படியே கடாக்ஷித்து அருளி, மற்றைய

Koviloor Digital Library

திருக்கைக்கும் ஒரு நாகாபரணத்தைப் பண்ணுவித்து, சுற்றிக் கொண்டிருக்கிறதாய், அவயங்களோடே ஒன்றாக்கி பக்தர்களின் தரிசனத்தின்போது அவர்களுடைய மனோநயனங்களுக்கு யோக்யமாகும்படிச் சாத்துவித்தார்.

79. ஏழாந்திருவிழாவில் ஓர் அதிசயம்

இராமானுஜர் ராமாயணம் கேட்ட இடம்

இதுபோலவே அனந்தாழ்வான் மலர்களை எடுத்துத் தொடுத்தும் தினந்தோறும் திருமாலை சேர்த்தும் ஸ்வாமிக்குச் சமர்ப்பித்துக் கொண்டும் இருந்தான். திருவேங்கடமுடையானும் அனந்தாழ்வான் பண்ணுங் கைங்கர்யத்திலே தாம் உகந்ததையும் அவனது தூய எண்ணத்தையும் யாவரும் அறியச் செய்யவேண்டும் என்ற திருவுள்ளத்தால் ஒரு புரட்டாசி மாதத்தில் ப்ரஹ்ம உத்சவ ஏழாந்திருநாள் இரவு நேரத்தில், தாமும் அலர்மேல்மங்கையுமாக, அரசகுமாரனும் அரசகுமாரியும் போல அவரது நந்தஃபனத்திலே எழுந்தருளி பூக்களைப் பறித்துக் கொண்டு, வெளியே புறப்படுகிற வேளையில் அனந்தாழ்வான் அதைக்கண்டு, கள்ளன் வந்து புஷ்பங்களைப்பறித்துக் கொண்டு போகிறான் என்று எண்ணி அவனைப் பிடிக்க வேண்டும் என்று துரத்த, அரசகுமாரனும் அப்பிரதக்ஷிணமாகவே கோயிலைச்சுற்றி, மீளவும் திருநந்தவன வாசலிலே காண்பித்து மறைந்துபோக அனந்தாழ்வானும் பின்தொடர்ந்து போய், திருநந்தவன வாசலிலே காணாமற் போனார் என்று ஐதிஹ்யமானது திருவேங்கடமுடையானுக்கு ஒவ்வொரு ஆண்டும் அனுஷ்டேயம் ஆகவேண்டும் என்று ஏழாந்திருநாளில் உத்தியான நந்தவனத்தில் உலாவுவதற்காக எழுந்தருளும்போது கோயில்

Koviloor Digital Library

அப்பிரதக்ஷிணமாக எழுந்தருளுவதற்குக் கட்டளையிட்டார். திருமலை நம்பி, தாமும் ஆளவந்தார் நியமனப்படியே திருமலையிலேயே நித்யவாசம் பண்ணிக்கொண்டு, மூன்று சன்னதிகளிலும் திருவேங்கடமுடையானைச் சேவித்துக் கொண்டு நித்யம் ஆகாச கங்கை தீர்த்தத்திலிருந்து, திருமஞ்சன கைங்கரியத்தையும் செய்து கொண்டு, மங்களாசாசனபரராக இருந்து வருங்காலத்தில், எம்பெருமானார் ஆளவந்தார் நியமனப்படியே ஸ்ரீ ராமாயண பாடர்த்தமாகத் திருக்கோயிலிலிருந்து திருமலை அடிவாரத்தில் எழுந்தருள நம்பியும் இவருக்காக ஓராண்டுக்காலம் தினமும் அதிகாலையிலேயே எழுந்து திருமஞ்சன கைங்கரியத்தையும் செய்து ஸ்வாமியையும் சேவித்து, மஹாப்நபிரசாதமும் கொண்டு, எம்பெருமானாருக்குச் சமர்ப்பித்து திருமலை அடிவாரத்திலே ஓர் உறங்காப்புளிய மரத்தின் கீழாக ஒரு குண்டுக் கல்லின் அருகில் பாடத்தையும் பிரசாதித்து, மத்யாஹ்ந காலத்திலே யாகாது யாகங்களையும் செய்தருளி சாயங்கால சேவைக்கு மீளவும் எழுந்தருளுவர். அந்த இடம் இன்னும் இராமானுஜர், இராமாயண பாடம் கேட்ட இடமாகச் சுட்டிக் காட்டப்பெறுகிறது.

80. கோவிந்தா, கோவிந்தா !

திருமலை மீது கால்நடையாகச் செல்பவர்களும், திருமலைக்கு செல்பவர்களும் வழி நெடுக கோவிந்தா, கோவிந்தா, என்று கூவிச் செல்வதற்குக் கீழ்க்காணும் வரலாற்றுக் குறிப்பு காணப்பெறுகிறது.நைமிசாரண்ய வாசிகளான சில முனிவர்கள், சூதபுராணிகர் மூலம், ஸ்ரீ சீனிவாச மஹாத்மியத்தைக் கேட்டு, திருவேங்கட

Koviloor Digital Library

யாத்திரை செய்யும்போது, ஸதா கோவிந்த நாம சங்கீர்த்தனம் என்றபடி கோவிந்தா! என்ற திருநாமத்தையே உச்சஸ்வரமாக அடிக்கடி கூவிக்கொண்டு, ஸ்ரீ வெங்கடேச யாத்திரை செய்தார்கள் என்று ஸ்ரீவராஹ புராணத்திலிருக்கிற அர்த்த விசேஷத்தைத் திருவுள்ளத்தில் கொண்டு, இந்த ஸ்ரீவெங்கடேசலயாத்திரை செய்யும் பரமபாகவதர்களும் அந்த முனிவர்களைப் போல அடிக்கடி கோவிந்த நாமோச் சரணம் பண்ணிக் கொண்டு யாத்திரை செய்யும்படிச் செய்தார்.

அதுபோலவே திருமலையிலேயுள்ள மிருகங்கள், பறவைகள் யாவுமே மகாத்ஸ்வரூபங்களாகையால் அவைகளை ஒரு தாமஸ புருஷர்களும் இம்சிக்கலாகாது என்று உத்ஸவகாலங்களில் திவ்ய நகர வீதியிலே பாதுகை வாகனங்களில் ஏறிச் செல்லுதல் கூடாது என்றும் வாமனாதி புராணங்களில் கூறியுள்ளதால் ப்ரம்மஹத்யாதி பாபநிவ்ருத்திக்கும் பகவத் பிராப்திக்கும் சாதனமாகச் சொன்ன திருவேங்கட யாத்திரையிலே தேஹயாத்ரா சேஷமான வாஹனத்யாரோ ஹனம் அநுசிதமாகையாலும் விசேஷித்து, திருமலை ஏறும்போது பாதுகா வாகனங்கள் ஆகாது.

81. திருமலையிலே திருப்பாவை!

மார்கழிமாதம் முப்பது நாட்களிலும் விடியற் காலையில் திருக்காப்பு நீக்கும்போது, முதல் தேதிமாத்திரம் திருவராதனங்கொண்டருளி அமுது செய்தருளிய பிறகு, திருப்பாவை, திருப்பள்ளி எழுச்சி அநுசந்தான ஆரம்பம். மறுநாள் முதல் திருவராதன காலத்தில் அநுசந்தானம் மத்தியானத்தில் உபதேச

Koviloor Digital Library

ரத்னமாலை; சாயங்காலத்தில் திருவாய்மொழி நூற்றந்தாதி அநுசந்தானம் திருக் கார்த்திகை தொடங்கி அத்யயனோத்ஸம் கொண்டருளுமளவும் உபதேச ரத்னமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி அநுசந்தானம், மற்றைய மாதங்களில் அதிகாலையில் திருமாலை சாத்தியருளும்போது திருப்பாவை திருப்பள்ளி எழுச்சியனுசந்தானம்; நடுப்பகலில் திருமாலை சாத்தியருளும்போது சிறிய திருமடல் அநுசந்தானம், மாலையில் நித்யாநு சந்தானம் அநுசந்தேயம் அந்தவகைகளில் வேற்றுமை பிரதமம் திருப்பல்லாண்டு, பூச்சூடல் காப்பிடல், சென்னியோங்கு வெண்ணலே மேலாப்பு, ஊனேறு செல்வத்து, அங்கணெடுமதில், தாயேதந்தை, ஊன்வாட உண்ணாது வாட மருந்திடை, ஒழிவில்காலம், உலகமுண்ட பெருவாய தங்களும் பகலும், ஆழி எழ, அமலனாதிபிரான், கண்ணிநுண் சிறுதாம்பு ஆகிய அநுஸந்தேயங்கள், நாச்சியார் திருமொழி பெருமாள் திருமொழி, பெரியதிருமொழி திருவாய்மொழி இவைகளில் திருமொழிகள் அரி சந்திக்கும் போது அந்தந்த ப்ரபந்தங்களின் தனியன்கள் வேண்டா: ஏக தேசத்திலே திருமொழிகளை அநுசந்திக்கையாலே, அமலனாது பிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு ஆகிய பிரபந்தங்கள் இரண்டையும் பூரணமாக அநுசந்திக்கையாலே, தனியன் அது காலம் உண்டு இது பூர்வாசாரியர்களின் கட்டளையாகும்.

82. திருமலைத்திருவிழாவில் தமிழ்!

திருமலைத்திருநாளின் முதல் நாள் அதிகாலையில் அநுசந்தானம் இல்லை. இரவு முதல் திருவந்தாதி; இரண்டாம் திருநாளில் பிராதஸ் சாயங்காலங்களிலே இரண்டாம் திருவந்தாதி மூன்றாம் நாளில் பிராதஸ்ரயம்

Koviloor Digital Library

மூன்றாம் திருவந்தாதி, நாலாம் திருநாளிலே பிராதஸ் ஸாயம் நான்முகன் திருவந்தாதி, ஐந்தாம் திருநாளில் ப்ராத:திருவிருத்தம் அநுசந்தீயம், பிறகு முதலாயிரம் தொடங்க வேண்டும். இரவும் திருவிருத்தம் ஒருரு அநுசந்திர முதலாயிரம் சேஷம் அநுசந்தேயம். ஆறாம் திருநாள் ப்ராதஸ் சாயங்காலங்களில் பெரிய திருவந்தாதி ஒருரு அநுசந்தேயம். பிறகு முதலாயிரம் சேதம் அநுசந்தேயம் ஏழாந்திரு நாளில் ப்ராத: திருமொழி தொடக்கம் திருத்தோப்பு சஞ்சார காலத்திலும் இரவு காலத்திலேயும் திருமொழி தானே அநுசந்தயம் எட்டாம் திருநாளிலே திருத்தோடியிலும் திருமொழிதானே இரண்டாவது முறை சொல்லுதல், நிலையில் திருத்தோடியில் எழுந்தருளியிருக்கும் போது பெரியாழ்வார் திருமொழியும் பெரிய திருமொழியும் சாற்றவேண்டும்.

திருமொழி சாற்றிய பிறகு திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல் பெரிய திருமடல் மூன்றும் அநுசந்தேயம், திருத்தேரிலிருந்து இறக்கி யருளித் திருக்கோயிலுக்கு எழுந்தருளுகிற போது திருவாசிரியம்; ராத்ரி முதலாயிரம் சேவும்; ஒன்பதாம் திருநாள் ப்ராத; முதலாயிரம் சேஷயம் திருக்குறுந் தாண்டகமும் திருநெடுந் தாண்டகமும், நடுப்பகலில் சூர்ணாபிஷேக காலத்திலும் திருவீதியியலில் திருச்சந்த விருத்தம்;

இரவு நூற்றந்தாதி; அதுகரசமுண்டானால் ஆங்குத்தி பிறகு எம்பெருமானர் திருமுன்பே சாற்றுரை, பத்தாம் நாளிலே ஸ்ரீ புஷ்பயாககாலத்திலே த்வாதச ஆராதன காலத்தில் திருவாய்மொழி அநுசந்தேயம் ஆறாம் திருநாளில் சாயங்காலத்தி வஸந்தோத்ரா வார்த்தமாக சூர்ணாபிஷேகம் கொண்டருளித் திருவீதி யெழுந்தருளுகிறபோது அநுசந்தானம் இல்லை.

Koviloor Digital Library

திருமலையில் இயற்பா மொழிந்த மூவாயிரத்திலும் திருவேங்கடமுடையான் விஷயமான பாடல்களை இருமுறை பாடுகின்றனர்.

83. வென்று மாலையிட்டான் கதை

வென்று மாலையிட்டான் திருமண்டபத்தின் சொற்பொருள் பின்வருமாறு. சிசுபாலனை வென்று, மாலையிட்டான் என்பது ருக்மணி பிராட்டிக்குத் தோளிலே மாலையைப் போட்டான் என்ற ஸ்ரீ கிருஷ்ணனின் திருப் பெயராகும். ஆகையால் வென்று மாலையிட்ட பெருமாள் என்பதற்கு ஸ்ரீகிருஷ்ணசர்மா என்றும் ராமானுஜதாசன் என்றும் வழங்கும் திருநாமம் தென்னாட்டில் பிரசித்தம். முன்பொரு காலத்திலே வென்று மாலையிட்ட பெருமாள் என்ற பிராமணன் ஒருவன், மத்யராஷ்டிரம் நகரத்து பிரபுவாக இருந்தவன்,

திருமலையிலே திருவேங்கடமுடையானுக்குத் திருமண்டபம் கட்டுவித்த படியால், அவன் பெயராலேயே திருமண்டபத்துக்குத் திருநாமம் பிரசித்தமாயிற்று என்று பெரியோர்கள் அருளிச் சொல்வார்கள். மலைகுனியப் பெருமாள் என்பதற்குச் சொற்பொருள் மலை திருமலையை குனிய-பூரணமாக, நின்று-நின்றாடுகையாலே, நிலையா- நின்றான் என்று ஆழ்வாரும் அருளிச் செய்தனர்.

84. ஸ்ரீநிவாசனும் கோவிந்தராஜனும்

ஒருசமயம் காசிர்ராஜன் அநபத்யனாய் ஸந்தானர்த்தமாக ஸகுடும்பனாய் திருமலையிலே திருவேங்கடமுடையானை பிரார்த்தனை செய்ய வந்து

Koviloor Digital Library

அங்கேயே தங்கியிருந்தான். அப்போது அவனது மனைவியின் கனவில் திருவேங்கடமுடையான், "நான் உனக்கு ஸந்தானம் தருகிறேன். எனக்கு உன் ரஸாமணியைத்தா?" என்றுகேட்க அதற்கு அந்த அரசி, "நான் கணவன் வழிநிற்பவள் ஆகையால் என் கணவரின் அனுமதியைக் கேட்கவேண்டும்" என்றாள். அவ்வளவில் திருவேங்கடமுடையானும், உனக்கு அப்படி எண்ணம் உண்டானால், எனக்கும் என் அண்ணா கோவிந்தராஜன் அனுமதி வேண்டும் என்று சொல்லிவிட்டார். இதனால் கோவிந்தராஜனுக்கும் திருவேங்கடமுடையானுக்கும் அண்ணாதம்பி என்ற திருநாமப் பிரசித்தம் உண்டாயிற்று.

ஸ்ரீநிவாசன் திருவடிகளே சரணம்.


அலர்மேல் மங்கை நாச்சியார் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆசாரியன் திருவடிகளே சரணம்.

திருமலை திருப்பதி புராணம் முற்றிற்று.



Koviloor Digital Library

ஸ்ரீகுலசேகரப் பெருமாளருளிச் செய்த பெருமாள் திருமொழி

உயர்வானதாயினும் ஆசாபாசங்கள் நிறைந்த இந்த மனிதப் பிறவியல்லாது வேறு பிறவியோ அல்லது தாவர, ஜடமாகவாது திருமலையில் பிறந்து ஸ்ரீநிவாசனின் தரிசனம் நித்தம் பெற வேண்டுகிறார்

திருமலை ஏரியில் பறவையாக பிறக்க வேண்டும்

ஊனேறு செல்வத் துடற்பிறவி யான்வேண்டேன்,
ஆனேறேழ் வென்றா னடிமைத் திறமல்லால்,
கூனேறு சங்க மிடத்தான்தன் வேங்கடத்து,
கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே.

திருமலை சுனையில் மீனாக பிறக்க வண்டும்

ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ,
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்,
தேனார்பூஞ் சோலைத் திருவேங்க டச்சுனையில்,
மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே.

பொன்வட்டில் பிடிக்கும் பேறு வேண்டும்

பின்னிட்ட சடையானும் பிரமனு மிந்திரனும்,
துன்னிட்டுப் புகலரிய வைகுந்த நீள்வாசல்,
மின்வட்டச் சுடராழி வேங்கடக்கோன் தானுமிழும்,
பொன்வட்டில் பிடித்துடனே புகப்பெறுவே னாவேனே.

ஒரு செண்பக மரமாக நிற்க வேண்டும்

ஒண்பவள வேலை யுலவுதண் பாற்கடலுள்,
கண்துயில் மாயோன் கழலிணைகள் காண்பதற்கு,
பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து,
செண்பகமாய் நிற்கும் திருவுடையே னாவேனே.

Koviloor Digital Library

ஒரு புதராக வளரும் வரம் வேண்டும்

கம்பமத யானைக் கழுத்தகத்தின் மேலிருந்து,
இன்பமரும் செல்வமு மிவ்வரசும் யான்வேண்டேன்,
எம்பெருமா னீச னெழில்வேங் கடமலைமேல்,
தம்பகமாய் நிற்கும் தவமுடையே னாவேனே.

ஒரு பொற்குன்றாக அமைய வேண்டும்

மின்னனைய நுண்ணிடையா ருருப்பசியும் மேனகையும்,
அன்னவர்தம் பாடலொடு மாடலவை யாதரியேன்,
தென்னவென வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துள்,
அன்னனைய பொற்குவடா மருந்தவத்த னாவேனே.

ஒரு ஆறாக தோன்ற வேண்டும்

வானாளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ், மன்னவர்தம்
கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்,
தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடமலைமேல்,
கானாறாய்ப் பாயும் கருத்துடையே னாவேனே.

பக்தர் நடக்கும் வழியாக கிடக்க வேண்டும்

பிறையேறு சடையானும் பிரமனு மிந்திரனும்,
முறையாய பெருவேள்விக் குறைமுடிப்பான் மறையானான்,
வெறியார்தண் சோலைத் திருவேங் கடமலைமேல்,
நெறியாய்க் கிடக்கும் நிலையுடையே னாவேனே.

படியாகி உன் பவளவாய் காண வேண்டும்

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே,
நெடியானே வேங்கடவா நின்கோயி லின்வாசல்,
அடியாரும் வானவரு மரம்பையரும் கிடந்தியங்கும்,
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே.

Koviloor Digital Library

ஏதேனும் ஒரு ஜடமாவது ஆக வேண்டும்

உம்ப ருலகாண் டொருகுடைக்கீழ் உருப்பசிதன்,
அம்பொற் கலையல்குல் பெற்றாலு மாதரியேன்,
செம்பவள வாயான் திருவேங் கடமென்னும்,
எம்பெருமான் பொன்மலைமே லேதேனு மாவேனே.

திருமலை வாசன் அடியார்களே

மன்னியதண் சாரல் வடவேங் கடத்தான்றன்,
பொன்னியலும் சேவடிகள் காண்பான் புரிந்திறைஞ்சி,
கொன்னவிலும் கூர்வேல் குலசே கரன்சொன்ன,
பன்னியநூல் தமிழ்வல்லார் பாங்காய பத்தர்களே.

- நாலாயிர திவ்வியப் பிரபந்தம் (677 - 687)

ஸ்ரீ திருமங்கை யாழ்வார் அருளிய பெரிய திருமொழி

ஸ்ரீநிவாசன் எழுந்தருளியிருக்கும் திருமலையின் சிறப்பு

கொங்க லர்ந்த மலர்க்கு ருந்த
மொசித்த கோவல னெம்பிரான்,
சங்கு தங்கு தடங்க டல்துயில்
கொண்ட தாமரைக் கண்ணினன்,
பொங்கு புள்ளினை வாய்பி ளந்தபு
ராணர் தம்மிடம், பொங்குநீர்
செங்க யல்திளைக் கும்சு னைத்திரு
வேங்க டமடை நெஞ்சமே! 1

Koviloor Digital Library

பள்ளி யாவது பாற்க டலரங்
கம்இ ரங்கவன் பேய்முலை,
பிள்ளை யாயுயி ருண்ட வெந்தைபி
ரான வன்பெரு குமிடம்,
வெள்ளி யான்கரி யான்ம ணிநிற
வண்ண னென்றெண்ணி, நாடொறும்
தெள்ளி யார்வணங் கும்ம லைத்திரு
வேங்க டமடை நெஞ்சமே! 2

நின்ற மாமரு திற்று வீழந
டந்த நின்மலன் நேமியான்,
என்றும் வானவர் கைதொ ழுமிணைத்
தாம ரையடி யெம்பிரான்,
கன்றி மாரி பொழிந்தி டக்கடி
தாநி ரைக்கிடர் நீக்குவான்,
சென்று குன்ற மெடுத்த வன்திரு
வேங்க டமடை நெஞ்சமே! 3

பார்த்தற் காயன்று பார தங்கைசெய்
திட்டு வென்ற பரஞ்சுடர்,
கோத்தங் காயர்தம் பாடி யில்குர
வைபி ணைந்தஎம் கோவலன்,
ஏத்து வார்தம் மனத்துள் ளான்இட
வெந்தை மேவிய வெம்பிரான்,
தீர்த்த நீர்த்தடஞ் சோலை சூழ்திரு
வேங்க டமடை நெஞ்சமே! 4

வண்கை யானவு ணர்க்கு நாயகன்
வேள்வி யில்சென்று மாணியாய்,
மண்கை யாலிரந் தான்ம ராமர
மேழு மெய்த வலத்தினான்,

Koviloor Digital Library

எண்கை யானிம யத்துள் ளானிருஞ்
சோலை மேவிய எம்பிரான்,
திண்கைம் மாதுயர் தீர்த்த வன்திரு
வேங்க டமடை நெஞ்சமே! 5

எண்டி சைகளு மேழு லகமும்
வாங்கிப் பொன்வயிற் றில்பெய்து,
பண்டொ ராலிலைப் பள்ளி கொண்டவன்
பான்ம திக்கிடர் தீர்த்தவன்,
ஒண்டி றலவு ணன்னு ரத்துகிர்
வைத்த வனொள்ளெ யிற்றொடு,
திண்டி றலரி யாய வன்திரு
வேங்க டமடை நெஞ்சமே! 6

பாரு நீரெரி காற்றி னோடா
காச முமிவை யாயினான்,
பேரு மாயிரம் பேச நின்றபி
றப்பி லிபெரு குமிடம்,
காரும் வார்பனி நீள்வி சும்பிடைச்
சோரு மாமுகில் தோய்தர,
சேரும் வார்பொழில் சூழெ ழில்திரு
வேங்க டமடை நெஞ்சமே! 7

அம்ப ரமனல் கால்நி லம்சல
மாகி நின்றஅ மரர்கோன்,
வம்பு லாமலர் மேல்ம லிமட
மங்கை தன்கொழு நனவன்,
கொம்பி னன்னவி டைம டக்குற
மாதர் நீளித ணந்தொறும்,
செம்பு னமவை காவல் கொள்திரு
வேங்க டமடை நெஞ்சமே! 8

Koviloor Digital Library

பேசு மின்திரு நாம மெட்டெழுத்
தும்சொல் லிநின்று பின்னரும்,
பேசு வார்தமை யுய்ய வாங்கிப்பி
றப்ப றுக்கும் பிரானிடம்,
வாச மாமலர் நாறு வார்பொழில்
சூழ்த ருமுல குக்கெல்லாம்,
தேச மாய்த்திக ழும்ம லைத்திரு
வேங்க டமடை நெஞ்சமே! 9

செங்க யல்திளைக் குஞ்சு னைத்திரு
வேங்க டத்துறை செல்வனை,
மங்கை யர்தலை வன்க லிகன்றி
வண்ட மிழ்ச்செஞ்சொல் மாலைகள்,
சங்கை யின்றித் தரித்து ரைக்கவல்
லார்கள் தஞ்சம தாகவே,
வங்க மாகடல் வையங் காவலர்
ஆகிவானுல காள்வரே. 10

(*பெரியதிருமொழி-முதற்பத்து*: 1018 -1027)

திருவேங்கடவனே உனை சரணடைந்தேன் ஆட்கொள்வாயே !

தாயே தந்தையென்றும் தாரமேகிளை மக்கௌன்றும்,
நோயே பட்டொழிந்தேன் நுனைக்காண்பதோ ராசையினால்,
வேயேய் பூம்பொழில்சூழ் விரையார்திரு வேங்கடவா,
நாயேன் வந்தடைந்தேன் நல்கியாளென்னைக்கொண் டருளே.1

மானேய் கண்மடவார் மயக்கிற்பட்டு, மாநிலத்து
நானே நானாவித நரகம்புகும் பாவஞ்செய்தேன்,

Koviloor Digital Library

தேனேய் பூம்பொழில்சூழ் திருவேங்கட மாமலை, என்
ஆனாய்! வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே. 2

கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோளொன் றிலாமையினால்,
என்றே னுமிரந்தார்க் கினிதாகவு ரைத்தறியேன்,
குன்றேய் மேகமதிர் குளிர்மாமலை வேங்கடவா,
அன்றே வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே. 3

குலந்தா னெத்தனையும் பிறந்தேயிறந் தெய்த்தொழிந்தேன்,
நலந்தா னொன்றுமிலேன் நல்லதோரறஞ் செய்துமிலேன்,
நிலந்தோய் நீள்முகில்சேர் நெறியார்திரு வேங்கடவா,
அலந்தேன் வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே. 4

எப்பா வம்பலவு மிவையேசெய் தினைத்தொழிந்தேன்,
துப்பா நின்னடியே தொடர்ந்தேத்தவுங் கிற்கின்றிலேன்,
செப்பார் திண்வரைசூழ் திருவேங்கட மாமலை,என்
அப்பா! வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே. 5

மண்ணாய் நீரெரிகால் மஞ்சுலாவுமா காசமுமாம்,
புண்ணா ராக்கைதன்னுள் புலம்பித்தளர்ந் தெய்த்தொழிந்தேன்,
விண்ணார் நீள்சிகர விரையார்திரு வேங்கடவா,
அண்ணா! வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே. 6

தெரியேன் பாலகனாய்ப் பலதீமைகள் செய்துமிட்டேன்,
பெரியே னாயினபின் பிறர்க்கேயுழைத் தேழையானேன்,
கரிசேர் பூம்பொழில்சூழ் கனமாமலை வேங்கடவா,
அரியே! வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே. 7

நோற்றேன் பல்பிறவி நுனைக்காண்பதோ ராசையினால்,
ஏற்றேன் இப்பிறப்பே இடருற்றன னெம்பெருமான்,
கோற்றேன் பாய்ந்தொழுகும் குளிர்சோலைசூழ் வேங்கடவா,
ஆற்றேன் வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே 8.

Koviloor Digital Library
LIBRARY KOVILOOR 26437

பற்றே லொன்றுமிலேன் பாவமேசெய்து பாவியானேன்,
மற்றே லொன்றறியேன் மாயனே! எங்கள் மாதவனே,
கற்றேன் பாய்ந்தொழுகும் கமலச்சுனை வேங்கடவா,
அற்றேன் வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே. 9

கண்ணா யேழுலகுக் குயிராயவெங் கார்வண்ணனை,
விண்ணோர் தாம்பரவும் பொழில்வேங்கட வேதியனை,
திண்ணார் மாடங்கள்சூழ் திருமங்கையர் கோன்கலியன்,
பண்ணார் பாடல்பத்தும் பயில்வார்க்கில்லை பாவங்களே. 10

(*பெரியதிருமொழி-முதற்பத்து*: 1028 -1037)

திருவேங்கடவனே அருள் புரிவாயே !

கண்ணார் கடல் சூழிலங்கைக் கிறைவன்றன்,
திண்ணாகம் பிளக்கச் சரஞ்செல வுய்த்தாய்,
விண்ணோர் தொழும்வேங் கடமா மலைமேய
அண்ணா, அடியே னிடரைக் களையாயே. 1

இலங்கைப் பதிக்கன் றிறையாய, அரக்கர்
குலங்கெட் டவர்மாளக் கொடிப்புள் திரித்தாய்,
விலங்கல் குடுமித் திருவேங் கடம்மேய,
அலங்கல் துளப முடியாய்! அருளாயே. 2

நீரார் கடலும் நிலனும் முழுதுண்டு,
ஏரா லமிளந் தளிர்மேல் துயிலெந்தாய்,
சீரார் திருவேங்க டமா மலைமேய,
ஆரா அமுதே! அடியேற் கருளாயே. 3

உண்டா யுறிமேல் நறுநெய் யமுதாக,
கொண்டாய் குறளாய் நிலமீ ரடியாலே,
விண்டோய் சிகரத் திருவேங் கடம்மேய,
அண்டா! அடியே னுக்கருள் புரியாயே. 4

Koviloor Digital Library

தூணா யதனூ டரியாய் வந்துதோன்றி,
பேணா அவுண னுடலம் பிளந்திட்டாய்,
சேணார் திருவேங் கடமா மலைமேய
கோணா கணையாய், குறிக்கொள் ளெனைநீயே. 5

மன்னா இம்மனி சப்பிற வியைநீக்கி,
தன்னாக்கித் தன்னின் னருள்செய் யும்தலைவன்,
மின்னார் முகில்சேர் திருவேங் கடம்மேய,
என்னானை யென்னப்ப னென்நெஞ்சி லுளானே. 6

மானேய் மடநோக் கிதிறத் தெதிர்வந்த,
ஆனேய் விடைசெற்ற அணிவரைத் தோளா,
தேனே! திருவேங் கடமா மலைமேய,
கோனே! என்மனம் குடிகொண் டிருந்தாயே. 7

சேய னணிய னென்சிந் தையுள்நின்ற,
மாயன், மணிவா ளொளிவெண் தரளங்கள்,
வேய்விண் டுதிர்வேங் கடமா மலைமேய,
ஆய னடியல் லதுமற் றறியேனே. 8

வந்தா யென்மனம் புகுந்தாய் மன்னிநின்றாய்,
நந்தா தகொழுஞ் சுடரே எங்கள்நம்பீ,
சிந்தா மணியே! திருவேங் கடம்மேய,
எந்தாய் இனியா னுன்னையென் றும்விடேனே . 9

வில்லார் மலிவேங் கடமா மலைமேய,
மல்லார் திரடோள் மணிவண்ண னம்மானை,
கல்லார் திரடோள் கலியன் சொன்னமாலை,
வல்லா ரவர்வா னவரா குவர்தாமே. 10

சுபம்

Koviloor Digital Library

பிரேமா பிரசுர வெளியீடுகள்

ஸ்ரீ தேவி பாகவதம்

நெஞ்சை மலர்விக்கும் கதைகளும் அறிவை புதுப்பிக்கும் ஆத்ம ரகசியங்களும் நிறைந்தது. கண்கவர் சித்திரங்களுடன் பன்னிரண்டு ஸ்கந்தங்களும் மூன்று பாகங்களில் தரப்பட்டுள்ளது.

மொத்த பக்கங்கள் 1352 மூன்று பாகங்கள் விலை ரூ. **350.–**
மூன்று பாகங்கள் இணைந்த ஒரே நூல் விலை ரூ. **480.-**

ஸ்ரீ சிவமகா புராணம்

சூதமா முனிவர் அருளிய சிவ தத்துவம் சிவ புராணக் கதைகள், பூஜை முறைகள் விரிவாக சித்திரங்களுடன் மூன்று பாகங்களில் தரப்பட்டுள்ளது.

மொத்த பக்கங்கள் 1208 மூன்று பாகங்கள் விலை ரூ. **340–**
மூன்று பாகங்கள் இணைந்த ஒரே நூல் விலை ரூ. **470.-**

ஸ்ரீ விநாயகர் புராணம்

இதுவரை தமிழில் வெளிவராத விநாயகர் புராணக் கதைகளும், விநாயகர் அவதாரங்களும் சுவையான வசன வடிவில் கண்கவர் சித்திரங்களுடன் தரப்பட்டுள்ளன.

பக்கங்கள் 568-Crown Size-Paper Back விலை ரூ. **150-00**
பக்கங்கள் 615-Demmy Size-Hard Bound விலை ரூ. **240-00**

ஸ்ரீ கந்த புராணம்

சம்பவ, அசுர, வீரமாகேந்திர, யுத்த, தேவ, தக்ஷ, உபதேச காண்டங்கள் அழகிய சித்திரங்களுடன் வசன வடிவில் இரண்டு பாகங்களில் தரப் பட்டுள்ளது.

மொத்த பக்கங்கள் 1048 இரண்டு பாகங்கள் விலை ரூ. **260.-**
இரண்டு பாகங்கள் இணைந்த ஒரே நூல் விலை ரூ. **320.-**

ஸ்ரீ விஷ்ணு புராணம்

நடை வளமும், பொருள் வளமும் வசீகரிப்பதுடன் சிந்தனையைத் தூண்டும் சித்திரங்களையும் கொண்டுள்ளது. சமஸ்க்ருத மூலத்தை அனுசரித்து ஆறு அம்சங்களும் எளிய நடையில் அமைந்துள்ளது.

பக்கங்கள் 536 Crown Size-Paper Back விலை ரூ. **140.-**
பக்கங்கள் 536 **Demmy Size -Hard Bound** விலை ரூ, **210.-**

ஸ்ரீ அறுபத்து மூவர் கதைகள் (பெரிய புராணம் வசனம்)

சமயம், வரலாறு, இலக்கியம் நிறைந்த இந்த இனிய நூலை அறுபத்து மூவர் கதைகள் என்னும் தலைப்பில் வசன வடிவில் இன்றியமையாத அடிக்குறிப்புகளுடன் அழகிய ஓவியங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

பக்கங்கள் 592 (Paper Pack Edition) விலை ரூ. **140-00**
பக்கங்கள் 592 (Hard Bound Edition) விலை ரூ. **180-00**

ஸ்ரீ கருட புராணம்

உலகில் உயிரினங்களுக்குப் பிறப்பும், இறப்பும், எந்தக் காரணத்தால் உண்டாகின்றன? எதனால் முக்தி மோட்சம் கிடைக்கும் என்று நைமிசாரண்ய வாசிகள் கேட்டதற்கு சூதமா முனிவர் கூறிய புராணம். இது வாழ்விற்கு அப்பால் ஜீவன் செல்லும் வழிவகைகளை விளக்கும் நூல்.

பக்கங்கள் 173 (Paper Pack Edition) விலை ரூ. **60.-**
(Hard Bound Edition) விலை ரூ. **90.-**

Koviloor Digital Library

ஸ்ரீ வன்னிய புராணம்

சிவபெருமானின் அருள் பெற்ற வாதாபியின் காலத்தில் வாழ்ந்த வீரவன்னியன் மற்றும் அவனது புதல்வர்களின் வெற்றி வரலாற்றையும், வீர சாகஸங்களையும் விளக்கும் அற்புதமான நூல்.

பக்கங்கள் 160 — விலை ரூ. 55-00

ஸ்ரீ வசவ புராணம்

சிவனடியார்கள் கதைகள் (நந்தி தேவர் கதைகள்)

பக்கங்கள் 224 — விலை ரூ. 100-00

ஸ்ரீ நாரதர் புராணம்

குண சிகிச்சை செய்யும் குணசித்திர சூத்ரதாரி தான் நாரதர். ஞானம் போதிக்கும் கதைகள் நிறைந்தது.

பக்கங்கள் 216 — விலை ரூ. 90-00

ஸ்ரீ பன்னிரு ஆழ்வார்கள் கதைகள்

பன்னிரு ஆழ்வார்களின் வாழ்க்கை வரலாற்றினையும் அவர்களுக்கு இறைவன் அருள்புரிந்த சம்பவங்களையும் பக்தி மணம் கமழும் விதத்தில் எழுதப்பட்டுள்ளது.

பக்கங்கள் 160 — விலை ரூ. 45-00

ஸ்ரீமத் பாண்டுரங்க பக்த விஜயம்

பக்தர்களின் பகவந்நாம சங்கீர்த்தனத்தினால் ஈர்க்கப்பட்டு, அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு பகவான் விஜயம் செய்ததை விளக்கும் பக்தி நூல்.

பக்கங்கள் 672 Demmy Size-Hard Bound — விலை ரூ. 250-00

ஸ்ரீ ஆதிசங்கரர்

பக்கங்கள் 120 — விலை ரூ. 30-00

ஸ்ரீ ராமானுஜர்

பக்கங்கள் 136 — விலை ரூ. 50-00

ஸ்ரீரமண மகரிஷி (வாழ்க்கை வரலாறும் ஆன்ம விசாரமும்)

மகரிஷியின் ஆன்மிகத் தத்துவ நோக்கில் விளைந்த சிந்தனைகள் நூல் முழுக்க உள்ளன.

பக்கங்கள் 478 Crown Size-Hard Bound — விலை ரூ. 150-00

ஸ்ரீ சுவாமியே சரணம் ஐயப்பா

பக்கங்கள் 112 — விலை ரூ.30-00

பன்னிரு ஜோதிலிங்க தல புராணம்

இமயமலையிலிருந்து தெற்கே இந்து மகாசமுத்திரம் வரை பரவியுள்ள பன்னிரண்டு ஜோதிலிங்கத் தலங்களின் புராண வரலாறு மற்றும் பயணக் குறிப்புகள் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

பக்கங்கள் 192 — விலை ரூ. 60-00

பஞ்ச பூதலிங்கத் தல புராணம்

திருத்தலங்களின் அருமை பெருமையெல்லாம் உணர்ந்து உள்ளம் உருகி வழிபடுவதற்கு இந்த நூல் பெரிதும் துணைபுரியும்.

பக்கங்கள் 168 — விலை ரூ. 55-00

திருக்கயிலாயம் மானசரோவர் தரிசனம்

திருக்கயிலாய பெருமையும், மானசரோவர் தடாகத்தின் புராண வரலாறும் யாத்திரை சென்று வந்த ஆசிரியரின் அனுபவங்களுடன்

Koviloor Digital Library

விவரிக்கப்பட்டுள்ளது. திருக்கயிலாயத்தின் வண்ணப் படங்களும், பயணக்குறிப்புகளும் திருக்கயிலாய யாத்திரையை தூண்டும்.

பக்கங்கள் 192 விலை ரு. 80-00

ஸ்ரீ நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

936 பக்கங்கள் (மூலம் மட்டும்) விலை ரு.260-00

ஸ்ரீ வைஷ்ணவமும் ஆசார்யர்களும்

பக்கங்கள் 176 விலை ரு. 55-00

ஸ்ரீ ராமனுஜ நூற்றந்தாதி

ஸ்ரீ ராமாநுஜ நூற்றந்தாதி, ஸ்ரீ ராமாநுஜ அஷ்டபதீ, ஸ்ரீ ராமாநுஜ ஸுப்ரபாதம், எம்பெருமானார் திருமஞ்சன கட்டியம், ஸ்ரீ ராமாநுஜாஷ்டோத்தர ஶதநாம ஸ்தோத்ரம், ஸ்ரீராமாநுஜ அஷ்டோத்தர ஶதநாமாவளி தரப்பட்டுள்ளது.

பக்கங்கள் 78 விலை ரு. 25-00

சித்தர் பாடல்கள் ஞானக் கோவை.

பக்கங்கள் 776 விலை ரு. 180.00

சாணக்கியரும் அர்த்தசாத்திரமும்

சாணக்கியரின் சரிதம் முதற் பகுதியிலும், அர்த்தசாத்திரத்தின் விளக்கங்கள் தலைப்புவாரியாக இரண்டாவது பகுதியிலும், அர்த்தசாத்திரதின் 18 ஆத்தியாபங்கள் மூன்றாவது பகுதியிலும் தரப்பட்டுள்ளது.

பக்கங்கள் 232 விலை ரு. 65-00

இதிகாசங்கள்

ஸ்ரீவில்லிபுத்தூரரின் மகாபாரதம்

பக்கங்கள் 780 விலை ரு. 160-00

கம்ப ராமாயணம் (முழு உரைநடை)

கம்பர் இயற்றிய ராமாயணத்தின் பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் ஆகிய ஆறு காண்டங்களின் விளக்க உரை சொற்சுவையுடன் பொருட்சுவையும் ஒரு சேர எளிய நடையில் படைக்கப்பட்டுள்ளது.

பக்கங்கள் 1231 Demmy Size-Hard Bound விலை ரு. 390-00

சுந்தர காண்டம்

வாழ்வில் துன்பம் எனும் இருளை அகற்ற நம்பிக்கை எனும் ஒளியை தருகின்றது.

பக்கங்கள் 232 விலை ரு. 50-00

ஸ்ரீமத் பகவத்கீதை

சமஸ்க்ருத ஸ்லோக மூலமும் அதற்கான உரை எளிய தமிழிலும் .

பக்கங்கள் 158 விலை ரு. 40-00

மற்றும் கதைகள், வரலாற்று நூல்கள், சுயமுன்னேற்ற நூல்கள், சமுக சரித்திர நாவல்கள், ஜோதிட நூல்கள், சிந்தனையாளர் நூல் வரிசை, பொன்மொழிகள் நூல் வரிசை ஆகியவற்றின் விவரங்கள் கொண்ட இலவச விலைப் பட்டியலுக்குத் தொடர்பு கொள்க.

பிரேமா பிரசுரம்

59, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை - 24.

✆ : 24800325, 24833180, 24811755.

Koviloor Digital Library

Koviloor Digital Library

